# அழகிரிசாமி கதைகள்



சக்தி காரியாலயம்

# அழகிரிசாமி
# கதைகள்

சக்தி

1952

# அழகிரிசாமி கதைகள்

சக்தி காரியாலயம்
ராயப்பேட்டை :: சென்னை

முதற் பதிப்பு : ஜூன், 1959

உரிமைகள் யாவும்
பதிவு செய்யப் பெற்றவை

விலை ரூபாய் மூன்றே முக்கால்
(தபால் செலவு தனி)

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை - 14

# முன்னுரை

ஒருவன் நம்பத்தகாத நிகழ்ச்சி எதையேனும் கூறினால், "என்னப்பா கதை சொல்லுகிறாயே?" என்கிறோம். "இதென்ன கதையா இருக்கிறதே" "என்னடா, கதை அளக்கிறாய்?" என்றெல்லாம் அடிக்கடி காதில் விழக் கேட்டிருக்கிறோம். இவற்றிலிருந்து, "கதை என்றால் எளிதில் நம்ப முடியாத அபூர்வமான நிகழ்ச்சிகளடங்கியதாக இருக்கும்" என்று எதிர்பார்க்கத் தோன்றுகிறது.

அதே சமயத்தில், கதைகளைப்பற்றி விமர்சனம் எழுதும் பொல்லாத மனிதர்கள் இருக்கிறார்களே, அவர்கள் கதையில் வரும் ஒவ்வொரு சம்பவமும் வாழ்க்கையில் நடைபெறக் கூடியதாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள்.

"அது அப்படி நடந்திருக்க முடியாது." "இது இவ்வாறு ஒரு நாளும் நடந்திராது." "இந்தச் சம்பவம் இயற்கையோடு பொருந்தியதில்லை." "அந்த நிகழ்ச்சி நம்பக் கூடியதன்று" என்றெல்லாம் எடுத்துக் காட்டி, "ஆகையால் கதை சுத்த அபத்தம்! தள்ளு குப்பையில்!" என்று ஒரே போடாய் போட்டு விடுகிறார்கள்.

விமரிசகர்கள் இப்படிச் சொல்கிறார்களே என்பதற்காகக் கதை ஆசிரியர் வாழ்க்கையில் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளையே அப்பட்டமாக எழுதிக்கொண்டு போனால், படிக்கும் ரஸிகர்கள் "நடை நன்றாய்த்தானிருக்கிறது. போக்கும் சரியாகத்தானிருக்கிறது. ஆனால் கதை ஒன்றுமேயில்லையே?" என்று ஏமாற்ற மடைகிறார்கள். முன்னால் அவ்விதம் சொன்ன விமர்சகர்களும் ரஸிகர்களுடன் சேர்ந்துகொண்டு, "உப்பு சப்பு இல்லை. விறுவிறுப்பு இல்லை. இதற்குக் கதை என்று பெயர் என்ன கேடு? தள்ளு குப்பையில்!" என்று சொல்லி விடுகிறார்கள்.

என் சொந்த அநுபவத்தில் நான் கண்டும் கேட்டும் தெரிந்து கொண்டிருப்பது என்னவென்றால், வாழ்க்கையில் உண்மையாக

நிகழும் பல சம்பவங்கள் கதை ஆசிரியர்கள் புனையும் அபூர்வ கற்பனைகளைக் காட்டிலும் மிக அதிசயமானவை என்பதுதான். ஒரு சாதாரண உதாரணத்தைச் சொல்லுகிறேன் :—

"இராமச்சந்திரன் தன் தோழன் முத்துசாமியைத் தேடிக்கொண்டு மயிலாப்பூருக்குப் புறப்பட்டான். முத்துச்சாமி மயிலாப்பூரில் ஏதோ ஒரு சந்தில் வாடகை வீட்டில் இருக்கிறான் என்று மட்டும் அவனுக்குத் தெரியுமே தவிர, சரியான விலாசம் தெரியாது. அன்றைக்கு மயிலாப்பூரில் அறுபத்து மூவர் உற்சவம் என்பதும் இராமச்சந்திரனுக்குத் தெரியாது. மயிலாப்பூரில் நாலு மாடவீதிகளிலும் ஒரு லட்சம் ஜனங்கள் அன்று கூடி இருந்தார்கள். இராமச்சந்திரன் "இன்றைக்குப் பார்த்து வந்தோமே? என்ன அறிவீனம்! முத்துச்சாமியையாவது இந்தக் கூட்டத்தில் இன்று கண்டுபிடிக்கவாவது?" என்று எண்ணிக்கொண்டு வந்தவழியே திரும்பிப் போகத் தீர்மானித்தான். கூட்டத்தில் புகுந்து முண்டியடித்து அவன் போய்க்கொண்டிருந்தபோது, யாரோ ஒருவன் மேலில் தடால் என்று மூட்டிக்கொண்டான். "அடா ராமச்சந்திரா! என்று குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தால் அங்கே சாக்ஷாத் முத்துச்சாமி நின்றுகொண்டு பல்லை இளித்தான்!"

இவ்வாறு ஒரு கதையில் எழுதினால் விமர்சகர்கள் பிய்த்து வாங்கி விடுவார்கள். "ஒரு லட்சம் ஜனங்கள் இருந்த கூட்டத்தில் இராமச்சந்திரன் முத்துசாமியின் மேலேதானா மூட்டிக்கொள்ள வேண்டும்? அது எப்படிச் சாத்தியம்? நம்பக்கூடியதாயில்லை என்று ஒரேயடியாய்ச் சாதிப்பார்கள். ஆனால் மேற்கூறியது என் சொந்த அநுபவத்திலேயே நடந்திருக்கிறது. அதைக் காட்டிலும் பன்மடங்கு வியப்பளிக்கக் கூடிய அபூர்வ சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன. நீங்கள் ஞாபகப்படுத்திக் கொண்டு பார்த்தால் உங்கள் ஒவ்வொருவருடைய அநுபவத்திலும் இம்மாதிரி எத்தனையோ நிகழ்ந்திருக்கும். ஆனாலும் அவற்றையெல்லாம் கதைகளில் அப்படியே எழுதினால், "ஒருநாளும் நடந்திருக்க முடியாத சம்பவங்கள்" என்று விமர்சகர்கள் சொல்லுவார்கள். நீங்களும் நானும் அவர்களை ஆமோதித்து "கதை இயற்கையாக இல்லை!" என்று சொல்லிவிடுவோம்.

ஆகவே கதை எழுதும் ஆசிரியர் கத்தியின் விளிம்பின் மேலே நடப்பதைக் காட்டிலும் கடினமான வித்தையைக் கையாள வேண்டியவராகிறார்.

கதையில் உள்ளத்தைக் கவரும் நிகழ்ச்சிகளும் வரவேண்டும். அதே சமயத்தில் "இப்படி நடந்திருக்க முடியுமா?" என்ற சந்தேகத்தை எழுப்பக்கூடிய நிகழ்ச்சிகளை விலக்கவேண்டும்.

பிரத்தியட்சமாகப் பார்த்த உண்மையான நிகழ்ச்சிகளாயிருக்கலாம். ஆனால் படிக்கும்போது, "இது நம்பக் கூடியதா?" என்று தோன்றுமானால், கதை பயனற்றதாகி விடுகிறது.

சுருக்கச் சொன்னால், கதையில் கதையும் இருக்கவேண்டும். அதே சமயத்தில் அது கதையாகவும் தோன்றக் கூடாது!

இம்மாதிரி கதைகள் புனைவது எவ்வளவு கடினமான கலை என்பதைக் கதை எழுதும் துறையில் இறங்கி வெற்றியோ தோல்வியோ அடைந்தவர்கள்தான் உணரமுடியும்.

இந்த நூலின் ஆசிரியர் ஸ்ரீ. கு. அழகிரிசாமி அத்தகைய கடினமான கலையில் அபூர்வமான வெற்றி அடைந்திருக்கிறார். மிக மிகச் சாதாரணமான வாழ்க்கைச் சம்பவங்களையும் குடும்ப நிகழ்ச்சிகளையும் வைத்துக்கொண்டு கதைகள் புனைந்திருக்கிறார். படிக்கும்போது இது கதை என்ற உணர்ச்சியே ஏற்படுவதில்லை. நம் நண்பர்கள், நம் பந்துக்கள், நமக்கு அக்கம் பக்கத்திலுள்ளவர்கள், நமக்குச் சற்றுத் தூரத்தில் உள்ளவர்கள், நாம் நன்றாகக் கேள்விப்பட்டு அறிந்திருப்பவர்கள் ஆகியவர்களைப்பற்றியே படித்ததாகத் தோன்றுகிறது. ஓரிடத்திலாவது "இப்படி நடந்திருக்குமா! இது நம்பத் தக்கதா?" என்று ஐயம் தோன்றுவதில்லை. ஆனாலும் கதை என்னவோ நம் கவனத்தைக் கவர்ந்து இழுத்துச் செல்லுகிறது. கதாபாத்திரங்கள் நம் உள்ளத்தை அடியோடு கவர்ந்து விடுகிறார்கள்.

இந்நூலில் உள்ள கதைகளில் நாம் தினந்தோறும் பார்த்துப் பழகியவர்களையே பார்க்கிறோம்; அவர்களுடைய பேச்சுக்களைக் கேட்கிறோம்; அவர்களுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொள்கிறோம்; அவர்களுடைய பெருமிதத்தில் நாமும் பெருமிதமடைகிறோம்; அவர்களுடைய ஆசாபங்கத்தில் நம் நெஞ்சையும் நெகிழவிடுகிறோம்.

இந்தக் கதைகளில் வருகிறவர்கள் எல்லாரும் சாதாரண மனிதர்களும் ஸ்திரீகளும் குழந்தைகளும்தான். ஆயினும் அவர்களைக் கதை ஆசிரியர் ஏதோ ஜால வித்தையினால் அபூர்வமான கதாபாத்திரங்களாகத் திகழும்படி செய்திருக்கிறார். அவர்கள் நம்மைவிட்டுப் போகாமல் சுற்றித் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும்படியும் செய்துவிட்டிருக்கிறார்.

குழந்தை சாரங்கராஜன் நம் கண்ணினும் இனிய கண்மணியாகிவிடுகிறான். அவனை அழைத்து வந்து ஏதேனும் ஒரு புத்தகத்தில் 'அன்பளிப்பு' என்று எழுதிக் கொடுக்க நம் உள்ளம் துடி துடிக்கிறது.

மங்கம்மாள் ஒரு அரை அடி முன்னால் நகர்ந்து வந்து நின்று "எங்க வீட்டுக்குத்தான் ராஜா வந்திருக்கிறான். வேணும்னு வந்துபாரு" என்று சொல்லும் காட்சி மனதிலிருந்து அகலுவதில்லை. அவனைத் தொடர்ந்து சென்று அந்த ராஜாவை நாமும் பார்க்க வேண்டுமென்று ஆசை உண்டாகிறது,

கல்யாண கிருஷ்ணனைத் தொடர்ந்து அந்தமான் தீவு வரைக்கும் போக நாமும் தயாராகிறோம். ஆனால் அங்கே திருந்தும் அவன் டிமிக்கி கொடுத்துவிட்டானே? ஒருவேளை காஞ்சீபுரம் கருடசேவைக்குப் போனால் அவனைக் கண்டுபிடிக்கலாமோ!

நிருபமாவும் கோவிந்தராஜனும் கலியாணம் செய்துகொண்ட பிறகு கட்டாயம் ஒரு தடவை மாமல்லபுரத்துக்குப் போகத்தான் செய்வார்கள். அவர்களுடன் சேர்ந்து நாமும் போனால் என்ன!

ஐயோ! அழகம்மாள் எதற்காக அப்படிப் பிலாக்கணம் பாடி அழுகிறாள்? அவள் புருஷன் எதற்காக விம்முகிறான்? இரண்டு பேருக்கும் நடுவில் அகப்பட்டு அவர்களுடைய புதல்வன் கோபாலு அப்படித் தவிக்கிறானே! அவனுக்கு எவ்வாறு ஆறுதல் சொல்லித் தேற்றுவது?

இவ்விதமெல்லாம் கதாபாத்திரங்களின் உணர்ச்சி வெள்ளத்தில் நம்மையும் இழுத்தடித்துத் தத்தளிக்கும்படி செய்திருக்கிறார்.

ஸ்ரீ கு. அழகிரிசாமிக்குக் கதை புனையும் கலை அற்புதமாக வந்திருக்கிறது. சாதாரண புருஷர்களும் ஸ்திரீகளும் குழந்தைகளும் அவருக்குக் கைகொடுத்து உதவி இருக்கிறார்கள்.

கதை ஆசிரியர் எதற்காக கதை எழுதுகிறார்? கடவுள் எதற்காக இந்த உலகத்தைப் படைக்கிறாரோ, அதே காரணத்துக்காகத் தான். இந்த உலகத்தில் எத்தனையோ குறைபாடுகள் இருக்கின்றன. இலக்கிய விமரிசகரை இந்த உலகத்தைப் பற்றிய விமரிசனம் எழுதச்சொன்னால் இதில் உள்ள குற்றங் குறைகளை எடுத்துக் கொண்டு வெளுத்து வாங்கிவிடுவார்! ஆனாலும் இவ்வளவு குறைபாடுகளை உடைய உலகத்தைச் சிருஷ்டி செய்வதில் கடவுள் ஆனந்தம் அடைகிறார். இல்லாவிடில் இவ்வளவு சிரமமான சிருஷ்டித் தொழிலில் பிடிவாதமாக ஈடுபட்டிருக்க மாட்டார் அல்லவா? அது போலவே கதை ஆசிரியர்களும் கதை புனைவதில் ஏற்படும் ஆனந்தம் காரணமாகவே கதை எழுதுகிறார்கள். தாங்கள் எழுதும் கதைகளை யாராவது படித்தாலும் படிக்காவிட்டாலும் பாராட்டினாலும் பாராட்டாவிட்டாலும் அதனால் ஊதியம் ஏதேனும் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கதை ஆசிரியர்கள் கதை எழுதிக்கொண்டு தானிருப்பார்கள்.

ஆனாலும் பிறர் படிக்கிறார்கள் என்றும் படித்துப் பாராட்டுகிறார்கள் என்றும் அறிந்தால் கதை ஆசிரியர்களுக்கு உற்சாகம் உண்டாகச் செய்கிறது.

இன்ப துன்பங்களைக் கலந்து நிற்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கே அவருடைய சிருஷ்டியைக் குறித்துப் பக்தர்கள் பாராட்டிப் புகழ்வதில் விசேஷ ஆனந்தம் ஏற்படுவதாக இதிகாச புராணங்களிலிருந்து அறிகிறோம்.

அப்படியிருக்க சாதாரண இன்ப துன்பங்களுக்கு உரிய மனிதர்களான ஆசிரியர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

ஸ்ரீ கு. அழகிரிசாமி அவர்களின் இந்த அருமையான கதைத் தொகுதியைத் தமிழ்நாட்டுச் சிறுகதை ரசிகர்கள் படித்துப் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன். அதன் பயனாக ஸ்ரீ கு. அழகிரிசாமி அவர்கள் மேலும், மேலும் இத்தகைய அற்புத சிருஷ்டிகளைத் தந்து புதுத் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்துவார் என்று எதிர்பார்க்கிறேன்.

கல்கி நகர், அடையாறு
23—1—53

ரா. கிருஷ்ணமூர்த்தி,
ஆசிரியர், 'கல்கி'

# பதிப்புரை

சிறு கதை இலக்கியத்தை நன்குணர்ந்த விற்பன்னர்கள் வியந்து வியந்து பாராட்டும் சிறு கதைகளைச் சிருஷ்டிக்கும் சிறந்த கதாசிரியர் கு. அழகிரிசாமி. இவருடைய ஒவ்வொரு கதையும் ஒரு மகத்தான கலைக்களஞ்சியம். மறக்க முடியாத கதா பாத்திரங்களைச் சிருஷ்டித்து நம்முடன் பழகும்படி செய்யக்கூடிய இந்த ஆசிரியரின் கதைகளில் சில, உள்ளத்தை உருக்குகின்றன; சில, சுவாரஸ்யத்தை உண்டு பண்ணுகின்றன; சில கதைகளோ ஹாஸ்யக் கலக்கல்களாக விளங்குகின்றன. இந்த நூலில் மொத்தம் பத்துக் கதைகள் அடங்கியுள்ளன. தமக்கு மிகமிகப் பிடித்த கதைகள் என்று ஆசிரியரே தேர்ந்தெடுத்த கதைகள் இவை. கருத்தாழமும், உன்னதமான இலக்கியப் பண்பும் கொண்ட இந்தக் கதைகள் பலமுறை படித்து இன்புறத் தக்கவை. இந்தக் கதைகளில் வரும் சாரங்கராஜன், தாயம்மாள், அழகம்மாள் முதலியவர்களையும், சேமநிதிநாயகம், கல்யாண கிருஷ்ணன், மயிலாப்பூரை விட்டுத் திருவல்லிக்கேணிக்கு ஓடிய பிரமச்சாரி, பட்டணத்துச் சிப்பாய் ஆகியவர்களையும் நாம் எந்தக் காலத்திலும் மறக்க முடியாது.

பெருமகிழ்ச்சியோடு தமிழ்ப் பெருமக்களின் முன் இந்நூலைச் சமர்ப்பிக்கிறோம்.

**சக்தி காரியாலயம்**

## ஆசிரியரின் பிற நூல்கள்

சிரிக்கவில்லை (கதைகள்)
காதல் போட்டி (கதை)
டாக்டரா, விபசாரியா ? (நாவல்)

## அடுத்து வெளிவருவன :

வைரக்கல் (நாவல்)
புதிய வாழ்க்கை (,,)
கண்ணனும் காளனும் (கட்டுரைகள்)
கருப்புக்கன்னி (கவிதைகள்)
குட்டிக் கதைகள் (தொகுப்பு)
உலகக் கதைகள் (தொகுப்பு)
அண்ணாமலை செட்டியார்
காவடிச்சிந்து (பதிப்பு)

## நன்றியுரை

இந்தத் தொகுதியில் இடம் பெற்றுள்ள கதைகள், "சக்தி", "காண்டீபம்", "தினசரி மடல்", "கலைக்கதிர்", "மஞ்சரி", "பொன்னி" ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவை. என் கதைகளை வெளியிட்டு உதவிய பத்திராசிரியர்களுக்கு என் நன்றி.

கு. அழகிரிசாமி

# அட்டவணை


| | | |
|---|---|---|
| அன்பளிப்பு | ... | 1 |
| வைராக்கியம் | ... | 21 |
| "ராஜா வந்திருக்கிறார்" | ... | 28 |
| இரண்டு பெண்கள் | ... | 46 |
| இரண்டு ஆண்கள் | ... | 65 |
| சாப்பிட்ட கடன் | ... | 76 |
| கல்யாணகிருஷ்ணன் | ... | 88 |
| ஞாபகார்த்தம் | ... | 97 |
| அழகம்மாள் | ... | 110 |
| திரிவேணி | ... | 129 |

# அன்பளிப்பு

மறுநாள் ஞாயிற்றுக்கிழமைதானே என்று, இரவு வெகு நேரம் வரையில் கண்விழித்துப் படித்துக் கொண்டிருந்துவிட்டேன். சனிக்கிழமை இரவு படுத்துக் கொள்ளும்போது மணி இரண்டிருக்கும். எவ்வளவு காலதாமதமாகித் தூங்கப் போனாலும், தூக்கம் வருவதற்கு மேற்கொண்டு ஒரு அரை மணி நேரமாவது எனக்கு ஆகும். ஆகவே இரண்டரைக்குத்தான் தூங்க ஆரம்பித்திருப்பேன். சுகமாகத் தூங்கிக்கொண்டிருக்கும்போது, முதுகில் நாலைந்து கைகள் வந்து பலமாக அடிக்க ஆரம்பித்துவிட்டன. அடிகளால் ஏற்பட்ட வலியைவிட, அவற்றால் ஏற்பட்ட நகை மிகப் பெரியதாக இருந்தது. தூக்கம் கலைந்து கண் விழிப்பதற்குள், வலது கைப் புஜத்தில் எறும்பு கடிப்பது போல இருந்தது.

“ தூங்கு மூஞ்சி மாமா !...”

“ மணி ஏழரையாகி விட்டது...”

“ எழுந்திருக்கிறீர்களா, பலமாகக் கிள்ளவா ?”

“ முகத்தில் ஜலத்தைக் கொண்டு வந்து தெளித்துவிடுவோம். இன்னும் இரண்டு நிமிஷத்துக்குள் எழுந்துவிட வேண்டும்....”

இப்படியே பல குரல்கள் பேசிக்கொண்டிருந்தன. பேச்சின் நடுவே இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்து ‘ கிரிடா கிரி ’ என்று சிரித்தார்கள். கண் விழித்துவிட்டேன்.

“ யார் அது ? உம் ! இதோ வருகிறேன். தூக்கத்திலே வந்து.......” என்று அதட்டிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தேன். ஒரு பையனைத் தவிர, அதாவது சாரங்கராஜனைத் தவிர, மற்ற

எல்லாக் குழந்தைகளும் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

“கடிகாரத்தைப் பாருங்கோ மாமா! மணி எட்டு ஆகப் போகிறது! இன்னும் தூங்குமூஞ்சி மாதிரி தூங்கிக் கொண்டு...” என்று சொல்லிவிட்டுச் சிரித்தாள் சித்ரா.

“அது இருக்கட்டும், விடிந்ததும் எங்கே இப்படிப் பட்டாளம், ‘மார்ச்’ பண்ண ஆரம்பித்து விட்டது?” என்று கேட்டேன்.

“இரவில் வெகு நேரம் கண் விழித்தால் உடம்புக்குக் கெடுதல் என்று எங்கள் பாடப் புத்தகத்தில் போட்டிருக்கிறது, மாமா” என்றான் இதுவரையிலும் மௌனமாக இருந்த சாரங்கபாணி.

“நான் படித்த பாடப்புத்தகத்திலும் அப்படித்தான் போட்டிருந்தது! என்ன செய்வது?” என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன். ஆனால் சிறுவன் சாரங்கனிடம் அவ்விதம் சொல்லாமல், “நாளை முதல் சீக்கிரமாகவே தூங்கிவிடுகிறேன். கண் விழிக்கவில்லை” என்றேன். அவனுக்குப் பரம சந்தோஷம்—அவன் சொன்னதை அப்படியே ஏற்றுக் கொண்டதற்காக.

மறு நிமிஷத்தில், எல்லோருமாகச் சேர்ந்து ஒருமிக்க, “என்ன புஸ்தகம் கொண்டு வந்திருக்கிறீர்கள்?” என்று கேட்டார்கள்.

“ஒரு புஸ்தகமும் கொண்டு வரவில்லை!”

“பொய், பொய். சும்மா சொல்கிறீர்கள்!”

“நிஜமாக, ஒரு புஸ்தகமும் கொண்டு வரவில்லை.”

“நேற்று புஸ்தகம் கொண்டு வருவதாகச் சொன்னீர்களே!”

“நேற்றுச் சொன்னேன்...”

“அப்புறம் ஏன் கொண்டுவரவில்லை?”

“புஸ்தகங்கள் ஒன்றும் வரவில்லை. வந்திருந்தால்தான் கொண்டு வந்திருப்பேனே.”

“பிருந்தா! மாமா பொய் சொல்கிறார். கொண்டு வந்து எங்கேயாவது ஒளித்து வைத்திருப்பார். வாருங்கள், தேடிப் பார்க்கலாம்” என்றாள் சித்ரா.

அவ்வளவுதான், என்னுடைய அறை முழுவதும் இபிலோகப் பட்டது. ஒரே களேபரம். சித்ரா மேஜையைத் திறந்து உள்ளே கிடக்கும் பெரிய காகிதங்களையும், துண்டுக் காகிதங்களையும், கடிதங்களையும் எடுத்து வெளியே எறிந்தாள். துழாவித் துழாவிப் பார்த்தாள். மேஜையில் புத்தகம் எதுவும் இல்லாது போகவே, அதிலிருந்து சாவிக் கொத்தை எடுத்துப் பெட்டியைத் திறந்து தேட ஆரம்பித்து விட்டாள்.

பிருந்தாவும், சுந்தரராஜனும் பீரோவைத் திறந்து புத்தகங்களை எடுத்துக் கண்டபடி கீழே போட்டார்கள்.

சின்னஞ் சிறு குழந்தையான கீதா கீழே உட்கார்ந்து, இறைந்து கிடக்கும் ஆங்கிலப் புத்தகங்களை அர்த்தமில்லாமல் திறந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

சித்ரா பெட்டியில் உள்ள சலவைத் துணிகளை எடுத்து வெளியே போட்டாள். என்னுடைய பழைய டைரிகள், எனக்கு வந்த பழைய கடிதங்கள், இரண்டொரு புத்தகங்கள்—எல்லாம் ஒரே குப்பையாக வந்து வெளியே விழுந்தன.

பீரோவைச் சோதனை போட்ட பிருந்தாவும் சுந்தரராஜனும் ஜன்னல்களில் அடுக்கியிருந்த புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கீழே போட்டார்கள்.

சாரங்கன் ஒருவன்தான் என்னோடு அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் எப்பொழுதுமே குறும்பு பண்ண மாட்டான்; விளையாடமாட்டான். மற்றக் குழந்தைகள் எல்லோரும் ஒரு விதம்; அவன் ஒரு விதம். என்னிடத்தில் பய பக்தியோடு நடந்து கொள்ளும் சிறுவன் அவன் ஒருவன்தான்.

ஜன்னலில் இருந்த புஸ்தகங்கள் ஒவ்வொன்றாக வந்து விழும் போது, ஒரே சந்தடியும் இரைச்சலுமாய்ப் போய்விடவே, சமையற் கட்டிலிருந்து என் தாயார் ஓடிவந்தாள். வந்து பார்த்தால் எல்லாம் ஒரே கந்தர்கோளமாகக் கிடந்தது.

"என்னடா இது, இந்தக் குழந்தைகள் இப்படி அமர்க்களம் பண்ணுகிறார்கள், நீ பேசாமல் பார்த்துக் கொண்டிருக்கிறாயே!" என்று என்னைப் பார்த்துக் கோபித்துக் கொண்டாள்.

"நீ வீட்டுக்குள் போ அம்மா. இது எங்கள் விவகாரம். நீ எதற்கு வேலையைப் போட்டுவிட்டு இங்கே வந்து நின்று கொண்டிருக்கிறாய்?" என்று சொல்லி விட்டுச் சிரித்தேன்.

"இவ்வளவு வயசாகியும் இன்னும் குழந்தைகளோடு குழந்தையாய் விளையாடிக் கொண்டிருப்பது ரொம்ப அழகாகத்தான் இருக்கிறது!" என்று சொல்லிக் கொண்டே அம்மா உள்ளே போய்விட்டாள். பாதி தூரம் போனதும் அங்கே நின்ற வாக்கிலேயே, "ஏண்டா, நீ எப்போது ஸ்நானம் பண்ணப் போகிறாய்?" என்று இரைந்து சொன்னாள்.

"இரண்டு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்" என்று அம்மாவுக்குப் பதில் குரல் கொடுத்துவிட்டு இந்தப் பக்கம் திரும்பும் போது, ஜன்னலிலிருந்து பத்துப் பதினைந்து கனமான புத்தகங்கள்

'தட்தட' வென்று அருவிமாதிரி கீழே விழுந்தன. ஒரு பழைய தமிழ் அகராதி அட்டைவேறு புத்தகம்வேறாகப் போய் விழுந்தது. குப்புற விழுந்த சில புத்தகங்கள் மீது சில கனமான புத்தகங்கள் விழுந்து அமுக்கவே, கீழே அகப்பட்ட புத்தகங்கள் வளைந்து, ஒடிந்து, உருக்குலைந்து விட்டன. புத்தகங்கள் ஒரே மொத்தமாகக் கீழே விழுந்து விட்டதைக் கண்டு எல்லாக் குழந்தைகளும் பயந்து விட்டார்கள். கீழே கிடக்கும் புத்தகங்களையும் என்னையும் திரும்பத் திரும்பப் பார்த்தார்கள். கீழே விழுந்தவை மொத்தம் அறுபது புத்தகங்களாவது இருக்கும். குழந்தைகளின் முகத்தில் பயத்தின் சாயல் படர ஆரம்பித்துவிட்டது. நான் என்ன சொல்லப் போகிறேனோ என்று எதிர்பார்த்துக் கொண்டு கண்ணிமைக்காமல் என் முகத்தையே பார்த்தார்கள். மற்றக் குழந்தைகளின் பயத்தைப் பார்த்த ஐந்து வயது நிரம்பாத கிரேஸும் பயந்து போய் என்னைப் பார்த்தாள். நான் வேண்டுமென்றே மௌனமாக இருந்தேன். புத்தகங்களையும் குழந்தைகளையும் வெறித்த பார்வையோடு பார்த்தேன். மௌனம் நீடித்தது. ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷம், மூன்று நிமிஷம்...குழந்தைகளுக்கு என் மௌனம் சித்திரவதையாக இருந்தது. ஒவ்வொரு குழந்தையும் மூச்சுப் பேச்சிழந்துவிட்டது. சித்ராவின் முகத்தில் வியர்க்க ஆரம்பித்து விட்டது. பயம் அறியாத சித்ராவே பயந்து விட்டாள். என்னை ஒட்டி உட்கார்ந்து கொண்டிருந்த சாரங்கன் நாலு அங்குலம் நகர்ந்து உட்கார்ந்து கொண்டான். என்னைத் தொடவே அவனுக்குப் பயமாகிவிட்டது. அவனுடைய சலனத்தால் தூண்டப்பெற்று, "நான் வீட்டுக்குப் போகிறேன்" என்று கிளம்பி விட்டாள் பிருந்தா.

"பிருந்தா! இங்கேவா" என்று யாதொரு உணர்ச்சிப் பிரதிபலிப்பும் இல்லாமல் சொன்னேன்.

நான் சொன்னபடி அவள் உள்ளே வந்தாள். இதற்குமேல் குழந்தைகளைப் பயமுறுத்த நான் விரும்பவில்லை.

எழுந்து நின்றேன். என் அறையின் மற்றொரு ஜன்னல் பக்கம் சென்றேன். அங்குள்ள புத்தகங்களில் கை வைத்தேன். என் ஒவ்வொரு அசைவையும் குழந்தைகளின் கண்கள் சர்வ ஜாக்கிரதையுடன் கவனித்துக் கொண்டிருந்தன. புத்தகங்களின் நடுவில் பெரிய புத்தகங்களுக்குக் கீழே இருந்த பதின்மூன்று கதைப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு திரும்பினேன். கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டு, "தோற்றுப் போய்விட்டீர்களா? நீங்கள் தேடு தேடு என்று தேடினீர்களே, புஸ்தகங்கள் உங்களுக்குத் தட்டுப்

பட்டதா? வாருங்கள், வாருங்கள்" என்று ஒரே உற்சாகத்துடன் சொன்னேன். குழந்தைகளுக்கு உயிர் வந்துவிட்டது. என்னைப் பார்த்து ஓடோடியும் வந்தன. சாரங்கன் என் பக்கம் நெருங்கி உட்கார்ந்தான். என் இடது கையில் சாய்ந்தும் உட்கார்ந்து கொண்டான். சித்ராவுக்கு ஏனோ என்மேல் கோபம் வந்துவிட்டது. வெகு நேரம் மௌனமாக இருந்து அவர்களைப் பயத்தில் ஆழ்த்தி வைத்ததை எண்ணிக் கோபப்பட்டாளோ? அல்லது தான் பயந்ததற்காக வெட்கப்பட்டு, தான் பயப்படவில்லை என்பதாகக் காட்டிக் கொள்ளுவதற்கும், அதன்மூலம் வெட்கத்தை மறைப்பதற்குமாகக் கோபப் பட்டாளோ? 'விறுவிறு' என்று கட்டிலில் ஏறினாள். எனக்குப் பின்புறமாக வந்து, "பொய் தானே சொன்னீர்கள், புத்தகங்கள் கொண்டு வரவில்லை என்று? உம், இனிமேல் பொய் சொல்லாதீர்கள். சொல்லவில்லை என்று சொல்லுங்கள்" என்று சொல்லிவிட்டு, "சொல்லுங்கள், சொல்லுங்கள்" என்று எச்சரித்துக் கொண்டே முதுகில் தன் பலம் கொண்டமட்டும் அடித்தாள்.

"ஐயோ! ஐயோ! பொய் சொல்லவில்லை! இனிமேல் பொய் சொல்லவில்லை!" என்று வேதனையோடு சொல்லுகிறவன் மாதிரி சொன்னேன். குழந்தைகள் எல்லோரும் சிரித்தார்கள்.

சுந்தரராஜன் வந்து, "சாரங்கா, அந்தப் பக்கம் நகர்ந்துக்கோடா" என்று சொல்லி அவனைத் தள்ளிவிட்டு எனக்கும் அவனுக்கும் நடுவில் வந்து உட்கார்ந்தான். என் கையிலுள்ள அத்தனை புத்தகங்களையும் 'வெடுக்'கென்று பிடுங்கிக் கொண்டு 'விறுவிறு' என்று ஒவ்வொன்றின் பெயரையும் உரக்க வாசித்தான். கடைசிப் புத்தகத்தின் பெயரை வாசித்ததும் 'பளிச்'சென்று எழுந்து "இத்தனையும் எனக்குத்தான்" என்று சொல்லிக் கொண்டே வெளியே கிளம்பிவிட்டான்.

குழந்தைகள் உடனே அழுவதற்கு ஆயத்தமாகி விட்டன. அப்பொழுது மௌனமாக இருந்தவன் சாரங்கன் தான்.

"சுந்தர்! இதோ பார், இந்தப் புத்தகங்களை எடுத்துக்கொண்டு ஓடினால் அப்புறம் உனக்குப் புத்தகங்களே கொண்டு வரமாட்டேன்" என்றேன்.

அவன் 'கடகட' வென்று சிரித்துக் கொண்டே, "பாவம், மாமா பயந்துவிட்டார்!" என்று கூறிக்கொண்டு உள்ளே வந்தான்.

புத்தகங்களை என் கையில் வாங்கி ஏழு புத்தகங்களில், "என் பிரியமுள்ள சித்ராவுக்கு அன்பளிப்பு" என்று எழுதி என் கையெழுத்தையும் போட்டுச் சித்ராவிடம் கொடுத்தேன். மீதியுள்ள

ஆறு புத்தகங்களிலும், "என் பிரியமுள்ள சுந்தரராஜனுக்கு அன்பளிப்பு" என்று எழுதி அவ்விதமாகவே கையெழுத்திட்டுச் சுந்தரராஜனிடம் கொடுத்தேன்.

பிருந்தாவும் தேவகியும், "எனக்கு?" என்று ஏக காலத்தில் கேட்டனர்.

"சித்ராவிடமும் சுந்தரிடமும் வாங்கிப் படித்துக் கொள்ளுங்கள். இதுவரையிலும் நீங்கள் மற்றப் புத்தகங்களை எப்படி வாங்கிப் படித்தீர்களோ, அப்படியே இப்பொழுதும் வாங்கிப் படித்துக் கொள்ளுங்கள்" என்றேன்.

அந்த இரண்டு பெண்களும் நான் சொன்னதை ஆட்சேபணையின்றி ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

"மத்தியானத்துக்குள் இந்த ஏழு புத்தகங்களையும் படித்து விடுவேன். படித்து முடித்த பிறகு வருகிறேன், மாமா" என்று கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டாள் சித்ரா. அவளைத் தொடர்ந்து, சாரங்கனைத் தவிர எல்லோரும் எழுந்து தத்தம் வீடுகளுக்குக் கிளம்பினார்கள். சாரங்கன் இரண்டொரு தடவை என் முகத்தையே ஏறிட்டுப் பார்த்தான். அவன் ஒன்றும் பேசவில்லை. அவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பதை அறிவிக்கும் சலனமும் முகத்தில் இல்லை. அப்பொழுது அவன் அவ்வாறு பார்த்ததற்கு ஒரு முக்கியத்துவமோ, ஒரு அர்த்தமோ இருந்ததாக நான் கருதவும் இல்லை. நான் எழுந்து குப்பையாகக் கிடக்கும் புத்தகங்களையும் துணிமணிகளையும் எடுத்து அவையவை இருக்க வேண்டிய இடத்தில் வைக்க ஆரம்பித்தேன். சுருண்டு கசங்கிக் கிடந்த புத்தகங்களை நிமிர்த்திச் சரிபண்ணினேன். அவற்றின் மீது பெரிய புத்தகங்களைப் பாரமாகத் தூக்கி வைத்தேன். இந்த வேலைகளைச் செய்யும் போது சாரங்கன் நான் எதிர்பாராமலே எனக்கு உதவி செய்து கொண்டிருந்தான்.

"எந்த வகுப்பு பாஸ் பண்ணினால் இந்தப் புத்தகத்தைக் கஷ்டமில்லாமல் படிக்கலாம்?" என்று ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு கேட்டான் சாரங்கன். அவன் குரலில், மூச்சைத் திணறவைக்கும் சங்கோஜம் நிறைந்திருந்தது; அதுமட்டுமின்றி, பயந்தவனைப் போல, முயற்சியில் தோல்வியடைந்து புண்பட்டவனைப் போல, அவன் பேசினான்.

"சாரங்கா! நீ கெட்டிக்காரப் பையன். உன் வயதில் நான் இவ்வளவு கெட்டிக்காரனாக இருந்ததில்லை. அதனால் நீ எஸ். எஸ். எல். ஸி. வகுப்புக்கு வந்ததும் இந்தப் புத்தகத்தைச் சிரமமில்லாமல் படித்துப் புரிந்து கொள்ளலாம்" என்று பரிவோடு சொன்னேன்.

அவன் கையில் வைத்துக் கொண்டிருந்தது வால்ட் விட்மனின் கவித் தொகுதி.

"அப்படியானால் இன்னும் இரண்டு வருஷம் இருக்கிறது" என்று அவன் தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். பிறகு கையிலுள்ள புத்தகத்தை ஜன்னலில் கொண்டுபோய் வைத்துவிட்டு வந்து உட்கார்ந்தான்.

என் தாயார் கோபமாக என்னென்னவோ சொல்லிக் கொண்டு அங்கே வந்தாள். "ஏண்டா, நான் எத்தனை தடவை உனக்குச் சொல்லுகிறது? வெந்நீர் ஆறி அவர்ந்து ஜில்லிட்டுப் போய் விட்டது" என்று சொல்லிவிட்டு, "இந்தப் பொல்லாத குட்டிகளை இப்படி அமர்க்களம் பண்ணவிடலாமா? என்ன பிரியமோ இது! ஊரார் குழந்தைகளுக்கு இத்தனை சலுகை காட்டுகிறவர்களை நான் பார்த்ததில்லை... நீ ஸ்நானம் பண்ணப் போடா, நான் எடுத்துவைக் கிறேன்" என்று வந்தாள் அம்மா.

"அம்மா! உனக்குப் புத்தகங்களை இனம் பிரித்து அடுக்கத் தெரியாது. நீ போ, நான் ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன்."

"இன்றைக்கு அடுக்கி வைக்க வேண்டியது; நாளைக்கு அவர்கள் வந்து குப்பையாக்க வேண்டியது; அப்புறம் பழையபடியும் அடுக்கி வைக்க வேண்டியது. உனக்கு வேறு வேலை என்ன?" என்று சொல்லிவிட்டு, சமையற் கூடத்துக்குச் சென்று விட்டாள்.

நானும் வெகு சீக்கிரத்திலேயே ஸ்நானம் பண்ணக் கிளம்பிவிட் டேன். அப்பொழுது என்னோடு நடுக்கூடம் வரையில் நடந்து வந்தான் சாரங்கன். அப்புறம் பளிச்சென்று மறு பக்கமாகத் திரும்பி, "போய்விட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப்போய் விட்டான்.

"அம்மா! குழந்தைகளை இப்படிக் கோபித்துக் கொள்ளுகி றாயே! அதுகள் ஒவ்வொன்றும் ஒரு பொக்கிஷம்!" என்று சொல்லி விட்டு ஸ்நான அறைக்குள் சென்றேன். நான் சொன்னது புகை மூட்டிய அடுப்பங்கரையில் திக்குமுக்காடும் அம்மாவுக்குக் கேட் டதோ என்னவோ?

•   •   •

ஒவ்வொரு குழந்தையும் ஒரு பொக்கிஷந்தான். மாம்பலத்துக்கு வீடு மாற்றி வந்ததை என் பாக்கியம் என்றே நான் கருதினேன். இங்கே வந்திராவிட்டால் இந்தப் பொக்கிஷங்களை நான் சந்தித்திருக்க முடியுமா? இன்று வந்து நான்கு வருஷங்களாகின்றன. வீட்டில் நானும் என் தாயாருந்தான். ஒரு பெரிய வீட்டின் ஒரு பகுதியிலே

தான் எங்கள் குடித்தனம். வந்து ஆறு மாதங்களாகும் வரையில் இந்தக் குழந்தைகளின் நட்பு எனக்கு ஏற்படவே இல்லை. ஒரு நாள் திடீரென்று இரண்டு குழந்தைகள்—சுந்தரராஜனும் சித்ராவும் வந்தார்கள். அன்று வந்தது போலவே தினமும் வந்தார்கள். சில நாட்களுக்குள் சம்பிரதாய மரியாதைகள், நாசூக்குகள் எல்லாம் மறைந்தன. உண்மையான மனப்பாசம் கொள்ளத் தொடங்கினோம். ஒன்றாக உட்கார்ந்து கதைகள் படிப்பது, பத்திரிகைகள் வாசிப்பது, கதைகள் சொல்லுவது, செஸ் விளையாடுவது-இப்படியே பொழுது போக்கினோம். நான் வேலை செய்யும் பத்திரிகாலயத்துக்கு மதிப்புரைக்கு வரும் புத்தகங்கள் சிலவற்றை எடுத்து விமர்சனம் எழுதும்படி தலைமையாசிரியர் என்னிடம் கொடுப்பார். அப்படி மதிப்புரைக்காக வந்த புத்தகங்கள் என்னிடம் ஏராளமாக இருந்தன. குழந்தைகளுக்கு அவை நல் விருந்தாக இருந்தன. ஒரே ஆவலோடு ஒரு சில தினங்களுக்குள் அத்தனை புத்தகங்களையும் சுந்தரராஜனும் சித்ராவும் படித்துத் தீர்த்து விட்டார்கள். அவர்களுடைய புத்தகத் தேவையை என் மதிப்புரைப் புத்தகங்களைக் கொண்டு ஈடு செய்ய முடியவில்லை. இதனால் அவ்வப்போது சில குழந்தைப் புத்தகங்களை விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பேன். அதனால், அவர்கள் தினந்தோறும் நான் காரியாலயம் போகும்போது, "இன்று ஞாபகமாகப் புத்தகங்கள் கொண்டுவர வேண்டும்" என்று சொல்லி யனுப்புவார்கள். சாயங்காலத்தில் வெறுங்கையோடு வீடு திரும்பினால் ஒரே கலாட்டாதான்.

சுந்தரராஜனும் சித்ராவும் நான் குடியிருக்கும் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக் குழந்தைகள். பணக்காரக் குழந்தைகள். குழந்தை என்று சொன்னாலும் சுந்தரராஜனுக்குப் பதின்மூன்று வயது; சித்ராவுக்கு ஒன்பது வயது. இந்த இருவரின் புத்திசாலித்தனம், களை நிறைந்த தோற்றம், எல்லாவற்றையும் விட சிறிய மனப் பண்பாடு - எல்லாம் சேர்ந்து என்னை வசீகரித்தன; என்னை ஆட்கொண்டு விட்டன. அவர்கள்மேல் நான் வைத்திருக்கும் அன்பு இம்மட்டு அம்மட்டு என்றில்லை. தினந்தோறும் அவர்களுக்கு ஏதேனும் ஒரு பரிசு கொடுக்கவேண்டும், தினந்தோறும் அவர்களுக்குப் புதியதொரு மகிழ்ச்சியை உண்டாக்கவேண்டும் என்றெல்லாம் என் மனம் துடித்துக் கொண்டிருக்கும். இவர்களுடைய நட்பு தொடங்கி சில வாரங்கள் ஆவதற்குள்ளாக மற்றக் குழந்தைகளின் பரிச்சயமும் எனக்கு ஏற்பட்டது. பிருந்தா, தேவகி, சீதா, சாரங்கராஜன் எல்லோரும் வர ஆரம்பித்தார்கள். பிருந்தாவும், தேவகியும் சித்ராவுடன் ஒரு வகுப்பில் படிக்கும் சம வயதுக் குழந்தைகள். சீதா, தேவகியின் தங்கை. சாரங்கராஜன் சுந்தரராஜனுடைய பள்ளித் தோழன்.

எல்லோருடைய வீடுகளும் ஒன்றை யடுத்து ஒன்றாக இருந்தன. இவர்களில் சாரங்கனுடைய வீட்டார்தான் வாடகை வீட்டில் குடியிருப்பவர்கள். மற்றக் குழந்தைகள் சொந்த வீடு உள்ள பணக்காரக் குழந்தைகள்.

எல்லோரிடத்திலும் நான் ஒன்றுபோலவே அன்பாக இருந்தேன். சுந்தரராஜனும் சித்ராவும் எனக்கு முதலில் பரிச்சயமானவர்கள் என்பதற்காகவோ என்னவோ அவர்களிடத்தில் எனக்கு ஒரு அலாதிப் பிரியம் இருந்தது. ஆனால் வெளிப்படையான பேச்சிலும், நடவடிக்கைகளிலும் ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் நான் வித்தியாசம் காட்டி நடந்து கொள்ளவில்லை. உள்ளன்பிலும் வேற்றுமை காட்டவில்லை. முன்னால் சொன்னதுபோல ஏதோ ஒரு அலாதிப் பிரியம் சித்ராவிடமும் அவளுடைய அண்ணனிடமும் ஏற்பட்டிருந்தது. ஆனால் குழந்தைகளோ என்னை ஒரேமாதிரி நேசித்தன. அவர்களுடைய பிரியத்தில் வேற்றுமை இல்லை. ஒவ்வொரு குழந்தையும் தனக்காகவே இந்த உலகத்தில் பிறந்த நண்பன் என்று என்னை நினைத்தது. ஒவ்வொன்றும், ஒரு மகத்தான நம்பிக்கையாக, ஒரு பெரிய ஆதரவாக, ஒரு நல்ல வழிகாட்டியாக என்னைக் கருதியது. எந்த விதத்திலும் தனக்குச் சமதையான ஜீவன் என்று என்னைக் கருதியது. குழந்தைகள் என்னைப் பெரிய மனித பீடத்தில் தூக்கி வைக்காமல், நட்பு முறையில் கைகோத்துக் கொள்ள வந்தார்கள். இவர்கள் என்னோடு விளையாடினார்கள்; என்னோடு சண்டை போட்டார்கள். என்னை அடித்தார்கள்; என்னைக் கண்டித்தார்கள்; என்னை மன்னித்தார்கள்; என்னை நேசித்தார்கள்.

உலகத்தில், எல்லோரும் குழந்தைகளைக் கண்டால் பிரியமாக நடந்து கொள்ளுவதும், அல்லது விளையாடுவதுமாக இருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய அன்பில் ஒரு விளையாட்டுணர்ச்சியும், ஒரு நடிப்பும் கலந்திருக்கின்றன. குழந்தையைப் போலப் பேசி, குழந்தையைப்போல ஆடிப்பாடி, குழந்தையை விளையாட்டுப் பொம்மையாகக் கருதி அதற்குத் தக்கவாறு நடந்து கொள்ளுகிறார்கள். ஆனால் அந்த சூதுவாதறியாத குழந்தைகளோ அப்படி நடிப்பதில்லை; அவர்களுடைய அன்பில் அந்த விளையாட்டுணர்ச்சி கலக்கவில்லை. அவர்கள் உண்மையிலேயே அன்பு காட்டுகிறார்கள். இந்த உண்மை எனக்கு என்றோ, ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் மனதில் தைத்தது. அன்று முதல் நான் அவர்களைக் குழந்தைகளாக நடத்தவில்லை; நண்பர்களாக நேசித்தேன். உற்ற துணைவர்களாக மதித்தேன். உள்ளன்பு என்ற அந்தஸ்தில் அவர்களும் நானும் சம உயிர்களாக மாறினோம். மாம்பலத்தில் எனக்கு இவர்கள்தான் நண்பர்கள். குழந்தைகளுடன் இம்மாதிரிப் பழகுவதும் இம்மாதிரி

விளையாடுவதும் அம்மாவுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஐம்பது வயதுத் தாயாருக்குத் தன் மகனை மனைவி மக்களுடன் குடித்தனம் செய்யும் தகப்பனாகக் காணத்தான் பிடிக்குமே தவிர, குழந்தைகளுடன் குழந்தையாக விளையாடிக் கொண்டும் சண்டைபோட்டுக் கொண்டும் இருப்பதைக் காணப் பிடிக்குமா ?

## 2

பதின்மூன்று புத்தகங்களை எடுத்துக் கொடுத்த அந்தத் தினம்.

அந்த ஞாயிற்றுக்கிழமை, கழிந்து இரண்டு வாரங்கள் ஆகியிருக்கும். பிருந்தா ஜுரத்தோடு படுத்து விட்டாள். அவளுடைய பெற்றோர்களை எனக்கு நேரில் தெரியாது. அதனால் அவளைப் போய்ப் பார்த்துவிட்டு வர எனக்கு சங்கோஜமாக இருந்தது. ஆனால் மற்றக் குழந்தைகளிடத்தில், "பிருந்தாவின் உடம்பு எப்படி இருக்கிறது ?" என்று தினமும் விசாரித்துக் கொண்டிருந்தேன். குழந்தைகள் அதற்கு எப்படிப் பதில் சொல்லும்! ஜுரம் அதிகமாகி இருக்கிறதா, குறைந்திருக்கிறதா என்று அவர்களுக்குச் சொல்லத் தெரியவில்லை. "பிருந்தா எப்போது பார்த்தாலும் படுத்துக் கொண்டே இருக்கிறாள்" என்று மட்டும் தெரிவித்தார்கள்.

ஒருநாள் இரவு எட்டுமணி இருக்கும். வீட்டு முற்றத்தில் ஈஸிச்சேரைப் போட்டுக் காற்றுட நிலா வெளிச்சத்தில் படுத்துக் கொண்டிருந்தேன். அப்போது தெரு வழியாகப் போய்க் கொண்டிருந்த பிருந்தாவின் வீட்டு வேலைக்காரனை அழைத்து, "பிருந்தாவின் உடம்பு எப்படி இருக்கிறது? ஜுரம் குறைந்திருக்கிறதா ?" என்று கேட்டேன்.

"இல்லை ஸார், நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டுதான் இருக்கிறது. எதுவும் சாப்பிடுவதில்லை. இந்த நான்கு நாட்களில் குழந்தை துரும்பாக மெலிந்துபோய்விட்டது. தூக்கத்தில் உங்களை நினைத்துத்தான் என்னென்னவோ புலம்பிக்கொண்டிருக்கிறாள்" என்றான் வேலைக்காரன்.

"என்னை நினைத்துப் புலம்புகிறாளா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆமாம் ஸார். நேற்று ராத்திரிகூட 'மாமா புத்தகம், மாமா புத்தகம்' என்று என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்தாள்" என்றான்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இந்தக் குழந்தையைப் போய்ப் பார்க்காமல் இருந்ததற்காக மிகவும் வருத்தப்பட்டேன். என் சங்கோஜத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு மறுநாள் காலையில் அவசியம் போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று தீர்மானம் செய்துகொண்டேன். "போய் வா" என்று வேலைக்காரனை அனுப்பிவிட்டு, தனியாகப் படுத்து என்னென்னவோ யோசித்துக் கொண்டிருந்தேன். சிறிது நேரத்தில் என் மனம் அவசரப்பட ஆரம்பித்துவிட்டது. மறுநாள் காலைவரையில் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது என்ற நிலைமை வந்துவிட்டது. அவ்வளவுதான், உடனே எழுந்து வீட்டுக்குள் போய் சட்டையை மாட்டிக்கொண்டு 'விறுவிறு' என்று பிருந்தாவின் வீட்டுக்குச் சென்றேன். அவளுடைய பெற்றோர்கள் என்னை உள்ளே வரும்படி சொன்னார்கள். பிருந்தா படுத்துக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். அவள் கண்களை வெறுமனே மூடிக்கொண்டிருந்தாள்.

"பிருந்தா!" என்றேன்.

கண் விழித்து என்னைப் பார்த்தாள். அப்போது அவளுடைய முகத்தில் யாதொரு மாறுதலும் ஏற்படவில்லை. அப்புறம் ஒரு முறை கண்களை மூடித் திறந்து நன்றாக என்னை உற்றுப் பார்த்தாள். ஒரு நிமிஷம் இப்படியே பார்த்துவிட்டு, திடீரென்று, 'மாமா!' என்று உரக்கக் கூவினாள்; அப்படியே எழுந்து உட்கார்ந்து விட்டாள்.

"பிருந்தா! படுத்துக்கொள் அம்மா" என்று சொன்னேன்.

அவள் கேட்கவில்லை. எழுந்து என் பக்கம் வந்தாள். என்னைக் கட்டிக்கொண்டு, என் தோள்மீது முகத்தைப் புதைத்துக்கொண்டாள். அவளுடைய உடம்பு அனலாகச் சுட்டது. அவளைத் தட்டிக் கொடுத்து, படுக்கையில் கொண்டு போய்ப் படுக்க வைத்தேன்.

"எந்நேரமும் உங்கள் நினைப்புத்தான்" என்றாள் பிருந்தாவின் தாயார்.

என்னால் ஒன்றும் பேச முடியவில்லை. வாய் அடைத்துவிட்டது. மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். சுமார் ஒரு மணிநேரம் அவள் பக்கத்தில் உட்கார்ந்திருந்துவிட்டு, வீட்டுக்கு வருவதற்காகப் புறப்பட்டு விட்டேன்.

"போகவேண்டாம். இங்கேயே இருங்கள் மாமா!" என்று பிடிவாதம் பிடித்தாள் பிருந்தா. அப்புறம் அவளைப் பலவிதமாகச் சமாதானப் படுத்தி, "நாளைக் காலையில் வருகிறேன்" என்று சொல்லி விட்டு வந்தேன்.

அவ்விதமே மறுநாள் காலையில் சென்றேன். வெகுநேரம் அங்கேயே இருந்தேன். அவள் ஜுரத்தினால் கஷ்டப்படுகிறவள் மாதிரியே இல்லை. என்னோடு பேசிக்கொண்டுதான் இருந்தாள். ஆபீசுக்கு நேரமாகி விட்டதென்று அவளிடம் கூறிவிட்டு, வெளியே எழுந்து வந்தேன். தெருவோடு வந்து கொண்டிருக்கும்போது சாரங்கன் தன் வீட்டு ஜன்னல் வழியாக என்னைப் பார்த்துக்கொண்டான். அங்கிருந்த வாக்கிலேயே, "மாமா" என்று கூப்பிட்டான். நான் திரும்பிப் பார்ப்பதற்குள்ளாகத் தெருவுக்கு ஓடிவந்துவிட்டான்.

"எங்கள் வீட்டுக்கும் வாருங்கள்" என்று கையைப் பிடித்து இழுத்தான்.

"உங்கள் வீட்டுக்கு எதற்கு?"

"பிருந்தா வீட்டுக்கு மட்டும்..."

"பிருந்தாவுக்கு ஜுரம். அதனால் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன்."

"ஊஹூம், எங்கள் வீட்டுக்கும் வரவேண்டும். ஆமாம்."

"சாரங்கா! இன்னொரு நாளைக்கு வருகிறேன். கையை விடு. எனக்கு ஆபீசுக்கு நேரமாகிவிட்டது."

நான் சொன்னபடியே கையை விட்டுவிட்டான். தன் இடது கையில் வைத்திருந்த இரண்டு நெல்லிக்காய்களில் ஒன்றை எடுத்து, "இந்தாருங்கள்" என்று எனக்குக் கொடுத்தான். நான் சிரித்து விட்டேன். "வேண்டாம், நீயே வைத்துக்கொள்" என்றேன். அவனோ கட்டாயப்படுத்தி என்னிடம் கொடுத்தான். நான் என்ன சொல்லியும் கேட்கவில்லை. அந்த நெல்லிக்காயை வாங்கிக் கொள்ளாவிட்டால் அவன் என் சிநேகிதத்தையே உதறித் தள்ளி விடுவான் போல இருந்தது. அதனால் ஒன்றும் சொல்லாமல் வாங்கிக் கொண்டேன். அவனுக்கு அப்பொழுது சொல்ல முடியாத ஆனந்தம்.

நான் புறப்படும்போது, "எப்போது எங்கள் வீட்டுக்கு வருவீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே என்னைத் தொடர்ந்து நடந்து வந்தான்.

"அடுத்த ஞாயிற்றுக்கிழமை" என்று பேச்சுக்குச் சொல்லி வைத்தேன்.

"கட்டாயம் வரவேண்டும்."

"சரி."

அவன் வீட்டுக்குப் போய்விட்டான்.

அதற்குப் பிறகு நான் பிருந்தாவின் வீட்டுக்குப் போகும்போதெல்லாம், "ஞாயிற்றுக்கிழமை வரவேண்டும், கட்டாயம் வரவேண்டும்" என்று எனக்கு ஞாபகமூட்டிக்கொண்டே இருந்தாள்.

பிருந்தாவுக்கு மூன்று நாட்களில் ஜுரம் குணமாகி விட்டது. இது ஒர் ஆச்சரியமாகவே இருந்தது. நான் தினமும் அவள் வீட்டுக்குப் போய் வந்ததுதான் அவளுக்கு மருந்தாக இருந்தது என்று அவளுடைய தகப்பனார் என்னிடம் கூறினார். நான் போய்வந்ததன் காரணமாக ஒரு குழந்தையின் நோய் குணமாகி விட்டது என்று அவர் சொன்னதைக் கேட்க எனக்கு எப்படியோ இருந்தது. "எப்படியாவது உடம்பு குணமாயிற்றே, அதுபோதும்" என்றேன். அப்புறம், அவர் சொன்னது ஒருவேளை உண்மையாக இருக்கலாமோ என்று கூட எனக்குத் தோன்றியது.

சனிக்கிழமையன்று குழந்தைகளுக்கு விடுமுறை. பிருந்தா உட்பட எல்லாக் குழந்தைகளும் என் வீட்டுக்கு வந்துவிட்டார்கள். புது வருஷம் பிறந்து இரண்டு மூன்று தினங்களே ஆகியிருந்தன. நான் வாக்களித்திருந்தபடி சுந்தரராஜனுக்கும், சித்ராவுக்கும் இரண்டு டைரிகள் வாங்கிக்கொண்டு வந்திருந்தேன். அவற்றில் வழக்கம் போல "அன்பளிப்பு" என்று எழுதி அந்த இருவர் கையிலும் கொடுத்தேன். மற்றக் குழந்தைகள் தமக்கு டைரி வேண்டுமென்று என்னிடம் கேட்கவில்லை. நான் எத்தனை புத்தகங்கள் கொண்டு வந்தாலும், என்ன பரிசு கொடுத்தாலும் சுந்தரராஜனுக்கும், சித்ராவுக்கும்தான் கொடுப்பேன் என்று ஒவ்வொரு குழந்தைக்கும் தெரியும். அவர்கள் இருவர்தான் இப்படிப்பட்ட அன்பளிப்புகளுக்குத் தகுதியானவர்கள், அவர்களுக்குக் கொடுப்பதுதான் நியாயம் என்று எல்லாக் குழந்தைகளும் ஒப்புக்கொண்டுவிட்ட பாவனையில் பேசாமல் இருந்தன. முதல் நட்பு என்ற காரணத்தினால் தானோ என்னவோ, ஒரு அலாதிப் பிரியத்துடன் அவர்களுக்குமட்டும் நான் புத்தகங்களைக் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. இந்த நெடு நாளைய வழக்கம் மற்றக் குழந்தைகளுக்கும் பழகிப்போய்விட்டது.

டைரிகளை வாங்கிக்கொண்டு அந்த இருவரும் சாப்பிடப் போய் விட்டார்கள். அவர்கள் போன பிறகு மற்றவர்களும் புறப்பட்டார்கள். ஆனால் அன்று சாரங்கன் மட்டும் போகவில்லை. எல்லோரும் போனபிறகுகூட அவன் உட்கார்ந்துகொண்டுதான் இருந்தான். என்னிடத்தில் அந்தரங்கமாக, "மாமா! நாளைக்கு எங்கள் வீட்டுக்கு வருவீர்களா? நாளைக்குத்தான் ஞாயிற்றுக்கிழமை" என்றான்.

"சரி சாரங்கா, எத்தனை தடவை சொல்லுகிறது? ஒரு தடவை சொன்னால் ஞாபகமிருக்காதா?" என்றேன்.

அவன் எழுந்து, வால்ட் விட்மனின் கவித் தொகுதியைக் கையில் எடுத்தான்.

"இந்தப் புத்தகத்தை எனக்குத் தருவீர்களா?" என்று கெஞ்சுதலாகக் கேட்டான். எனக்கு அது வேடிக்கையாக இருந்தது. சிரித்துக்கொண்டே, "இந்தப் புத்தகம் உனக்கு எதற்கு? அது உனக்கு இப்பொழுது புரியாது. நான் அன்றைக்கே சொல்லவில்லையா? நீ எஸ். எஸ். எல். ஸி. வகுப்புக்கு வந்ததும் கேள்; தருகிறேன்" என்றேன்.

நான் சொன்னதை அவன் கேட்கவில்லை. பதின்மூன்று வயதுப் பையன் ஐந்து வயதுக் குழந்தையைப் போல முரண்டு பண்ணிக்கொண்டு, அந்தப் புத்தகத்தை அவனிடம் கொடுத்தாக வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தான்.

"பைத்தியம்! உனக்குப் புரியாது. சொன்னால் கேள்" என்று சொன்னேன். அப்புறம் அவன் கையிலிருந்து புத்தகத்தை வாங்கி ஜன்னலில் கொண்டுபோய் வைத்தேன்.

சாரங்கனின் முகம் ஏமாற்றத்தினால் வெளிறிப் போய்விட்டது. வறண்ட பார்வையோடு என்னைப் பார்த்தான். ஒன்றுமே சொல்லாமல் எழுந்து வாசல் பக்கம் போனான். சரி, வீட்டுக்குப் போகிறான் என்று நினைத்து, நான் என் வேலையைக் கவனிக்கலானேன். இரண்டு நிமிஷ நேரத்துக்குப் பிறகு, திடீரென்று ஒரு அழுகைக் குரல் கேட்டது. அழுதது சாரங்கன்தான். "சாரங்கா! ஏன் அழுகிறாய்? சேச்சே, அழாதே ராஜா" என்று சொல்லிக்கொண்டே அவன் பக்கத்தில் எழுந்து சென்றேன். ஆனால், நான் போகும் வரையில் அவன் அங்கே நிற்கவில்லை. அழுகையை நிறுத்தினான். என்னைத் திரும்பிப் பார்த்துப் பெருமூச்சு விட்டான். அவனுடைய வயிறு அசாதாரணமாகக் குழிந்து புடைத்தது. அப்பொழுது முகம் ரத்தம்போலச் சிவந்து விட்டது. இதெல்லாம் எதற்கென்றே எனக்குப் புரியவில்லை. அவன் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தேன். என்னைப் பார்க்கவே அவனுக்கு வெட்கமாகப் போய்விட்டது. நான் போய் கையை எட்டிப் பிடிப்பதற்குள் ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்.

"சாரங்கா!......சாரங்கா!"

அவன் ஓடியே விட்டான். அன்று அவன் நடந்துகொண்ட விதம் எனக்கு ஒரு புதிராக இருந்தது. எப்பொழுதும் அவன் பிடிவாதம் பண்ணமாட்டான். என்னிடத்தில் பேசுவதற்கே கூசுவான். அப்படிப்பட்ட பையன் எதற்காகப் பிடிவாதம் பிடித்தான்? எதற்காக அப்படி அழுதான்? எதற்காகத்தான் அழுதானோ? அவனைப்

பின்தொடர்ந்து சென்று, அழுத காரணத்தைக் கேட்காவிட்டால் என் நெஞ்சு வெடித்துவிடும்போல இருந்தது. ஆனால், அவன் வீட்டுக்குப்போகவும் என்னால் இயலவில்லை. அவனுடைய பெற்றோர்கள், பிற பெற்றோர்களைப்போலவே எனக்குப் பரிச்சயமில்லாதவர்கள்.

பாவம்! ஏங்கி ஏங்கி அழுதான். அவமானப் பட்டவன்போல அழுதான். பிற்பகலில் குழந்தைகள் என் அறைக்கு வந்தால், அவர்களை அனுப்பி அவனை அழைத்து வர வேண்டுமென்று தீர்மானித்தேன். மூன்று மணிக்கெல்லாம் முதல் ஆளாக சுந்தரராஜன் வந்து சேர்ந்தான். அவனைச் சாரங்கனிடம் அனுப்பிவைத்தேன். சாரங்கன் தூங்கிக்கொண்டிருப்பதாக சுந்தரராஜன் என்னிடம் வந்து தெரிவித்தான். அதற்குப் பிறகு அவனை வரவழைக்கும் முயற்சியை நிறுத்தினேன். மறுநாள் காலையில் அவன் வந்தால் பார்க்கிறது, இல்லையென்றால் நானே அவன் வீட்டுக்குப் போவது — இதே தீர்மானத்துடன் மற்றக் குழந்தைகளுடன் அன்றைய மாலைப் பொழுதைப் போக்கினேன்.

இரவில் சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டபிறகுதான் என் மனம் மிகமிகக் கஷ்டப்பட்டது. பக்கத்தில் யாருமில்லாத அந்தத் தனிமையில் மனத்துயரம் பெரிதாகிக்கொண்டே இருந்தது. உள்ளத்தில் எத்தனையோ துயரம்படிந்த சிந்தனைகள்: 'ஏன் அழுதான்? நான் அவனை ஒன்றும் சொல்லவில்லையே! எல்லாக் குழந்தைகளையும் போலவே அவனையும் என் கண்ணுக்குக் கண்ணாக வைத்துக் கொண்டிருக்கிறேன். வால்ட் விட்மன் கவித்தொகுதியைக் கேட்டான். அது அவனுக்குப் புரியாது என்று வாங்கி வைத்துவிட்டேன். இதற்காகவா அவன் அழுதிருப்பான்? அவன் விபரம் தெரிந்த பையன். எப்போதும் நான் சொல்லுவதை மறுதலிக்காமல் ஏற்றுக் கொள்ளுபவன். அப்படிப்பட்ட பையன் புத்தகத்தை நான் திருப்பி வாங்கிக் கொண்டதற்காக இப்படி அழுதிருக்க முடியாது. நான் திருப்பி வாங்கிக் கொண்ட காரியம், விம்மி விம்மி அழத்தக்க மனவேதனையைத் தர நியாயமில்லையே! சாரங்கா! எதற்காக அழுதாய்? எதற்காக அழுதாயடா?'

3

ஞாயிற்றுக் கிழமை........

நேற்று பிற்பகலில் அவன் வராமல் இருந்து விட்டதால் இன்றும் வரமாட்டான் என்றே எண்ணியிருந்தேன். சப்தரிஷி மண்ட-

லம் போன்ற எங்கள் கூட்டத்தில் இருந்த ஒரு நக்ஷத்திரம் மறைந்து நிற்பதை மற்றக் குழந்தைகள் பொருட்படுத்தவில்லை. அத்துடன் அவர்கள் கவலைப் படுவதற்கும் இங்கே என்ன இருக்கிறது? ஒரு நாள் பிற்பகலில் அவன் வராமல் இருந்தது அவர்களுக்கு ஒரு பிரிவாகத் தோன்ற நியாயமில்லை. எனக்கும் மற்றச் சமயங்களில் இது கவனத்தைக் கவரத்தக்க விஷயமாக இல்லாமல், சகஜமான காரியமாக இருந்திருக்கும். ஆனால், அவன் நேற்று எந்த நிலையில் என்னைப் பிரிந்து சென்றான், எந்த நிலையில் என்னை விட்டுவிட்டுச் சென்றான் என்ற விபரங்கள் எனக்கல்லவா தெரியும்?

காலை பத்து மணி இருக்கும். ஞாயிற்றுக் கிழமையானதால் சாப்பாட்டைப் பகல் ஒருமணிக்கு ஒத்திப் போட்டு விட்டு, காலையில் பலகாரம் பண்ணி நானும் என் தாயாரும் சாப்பிட்டோம். அப்புறம் நான் என் அறைக்கு வந்து ஏதாவது படிக்கலாம் என்று உட்கார்ந்தேன். மனம் என்னவோ அந்த வால்ட் விட்மனின் கவித் தொகுதியைத்தான் படிக்க விரும்பியது. அதைக் கையில் எடுத்து விரித்ததும் என் கண்களுக்குக் கவிதா வாசகங்கள் தென்படவில்லை; சாரங்கன்தான் காட்சியளித்தான்; அவனுடைய கண்ணீரும் ஏக்கமும் தான் காட்சியளித்தன. 'இது சோதனையாக இருக்கிறதே! அவனாவது இன்று வரக் கூடாதா? அல்லது வேறு குழந்தைகளாவது வரக்கூடாதா?" என்று மறுகிக் கொண்டு கிடந்தேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு பிருந்தா வந்தாள். பாக்கிய தேவதை என ஒரு தெய்வ மகள் உண்மையிலேயே இருந்து, ஒரு தரித்திரனின் வீட்டில் அடி யெடுத்து வைத்ததுபோல இருந்தது பிருந்தாவின் வரவு.

“ வா பிருந்தா! பிருந்தா என்ற பெயரை மாற்றி ‘ பிரியதர்சினி’ என்று பெயர் வைத்தால் உனக்குப் பொருத்தமாக இருக்கும் பிருந்தா!” என்றேன்.

என் பரவசம் அவள் உள்ளத்தைத் தொடவில்லை. என் சொற்கள் அவள் செவிக்கு எட்டவும் இல்லை.

“ சுந்தரராஜனும் சித்ராவும் சினிமாவுக்குப் போய்விட்டார்கள் ” என்று காரண காரியமில்லாமல் சொன்னாள் பிருந்தா.

“ சாரங்கன்?” என்று ஆவலோடு கேட்டேன்.

“ நான் பார்க்கவில்லை ” என்று சொல்லிவிட்டாள்.

மேற்கொண்டு நான் சாரங்கனைப் பற்றி விசாரிக்கத் தொடங்கும்போது, பிருந்தாவின் வீட்டுவேலைக்காரன் வந்து, “ அம்மா கூப்பிடுகிறாங்க ” என்று சொல்லி அவளை அழைத்தான். பிருந்தா உடனே,

"போய் வருகிறேன்" என்று சொல்லிக் கிளம்பி விட்டாள். அவள் போன பிறகு பழையபடியும் அந்தக் கவித்தொகுதியை எடுத்து விரித்தேன். அப்போது பிருந்தா வெகு வேகமாக ஓடிவந்தாள். வந்து, "சாரங்கன் வருகிறான்" என்று சொல்லிவிட்டு அந்த க்ஷணத்திலேயே தன் வீட்டை நோக்கி ஓடிவிட்டாள்.

என் இதயம் 'படபட' வென்று அடித்துக் கொண்டது. அதி வேகமாக வால்ட் விட்மனின் புத்தகத்தை மறைத்து வைத்து விட்டேன். அதைப் பார்த்தால் சாரங்கனுக்குப் பழையபடியும் அழுகை வந்து விடுமோ என்று எனக்குப் பயம்.

சாரங்கன் வந்துவிட்டான்.

"சாரங்கா!......"

"உம்."

"நீ ஏன் இவ்வளவு நேரமும் வரவில்லை? நேற்றும் வரவில்லை?"

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. அவன் முகத்தில் துயரமோ, வேறு விதமான ஆழ்ந்த உணர்ச்சிகளோ பிரதிபலிக்கவில்லை. ஒரே சந்தோஷமாகத்தான் இருந்தான். இது மகிழ்ச்சிக்குரிய மாறுதல்தான் என்று நான் நினைத்துக் கொண்டேன்.

"எங்கள் வீட்டுக்குப் போவோமா?"

"உங்கள் வீட்டுக்கா?"

"ஆம். நீங்கள் வருவதாக அன்றே சொல்லவில்லையா?"

"சும்மா வேடிக்கைக்குச் சொன்னேன், சாரங்கா! உங்கள் வீட்டுக்கு எதற்கு?"

"எதற்கோ? நீங்கள் வாருங்கள்" என்று இரண்டு கைகளாலும் என் கையைப் பிடித்து இழுத்தான்.

அவனுடைய வேண்டுகோள் எனக்கு ஒரு பிரச்னையாக மாறி விட்டது. அன்று பிருந்தாவின் வீட்டிலிருந்து வரும்போது அவனுடைய கட்டாயத்தைப் பார்த்து, "ஞாயிற்றுக்கிழமை வருகிறேன்" என்று சொல்லி வைத்தேன். அந்த விஷயத்தை அவன் இவ்வளவு தூரம் வற்புறுத்துவான் என்று தெரிந்திருந்தால் அப்படிச் சொல்லியிருக்கவே மாட்டேன். இந்தச் சிறுவனின் வேண்டுகோளுக்காக வேற்றார் வீட்டுக்குப் போவது எப்படி? போவதற்குக் காரணமும் வேண்டுமே! பிருந்தா வீட்டுக்குப் போனதற்காவது அவளுடைய தேக அசௌக்கியம் காரணமாக இருந்தது. இங்கே போவது எதற்காக? இவனுடைய அப்பாவை வீதியிலும் பஸ் ஸ்டாண்டிலும் ஆயிரம் தடவைகள் பார்த்திருக்கிறேன். ஒருதடவைகூட நாங்கள் பேசிக் கொண்டதில்லை. ஒருவருக்கு ஒருவர் அறிமுகமானவர்கள்

என்று எவ்வித சைகை ஜாடையின் மூலமாகக்கூடக் காட்டிக் கொண்டதில்லை. அப்படியிருக்க அங்கு நான் எப்படிப் போவது?

சாரங்கன் மிகவும் அதிகமாக வற்புறுத்தத் தொடங்கினான். அவ சரப்படவும் ஆரம்பித்தான். எனக்கு அது ஒரு தொந்தரவாகவே மாறிவிட்டது. ‘இத்தனை நாளும் இவன் வாய் மூடி மௌனியாக இருந்ததும் போதும், இன்று பாடாய்ப் படுத்துவதும் போதும்’ என்று சலித்துக் கொண்டேன்.

“வாருங்கள் மாமா. சொல்லிவிட்டு மாட்டேன் என்கிறீர்களே!” என்று கெஞ்சினான்.

“சாரங்கா! நீ சிறு பிள்ளை. உன் பேச்சைக் கேட்டுக்கொண்டு நான் வருவது எப்படி? இந்த நாளுக்கு எல்லாம் உனக்குப் புரியாது. என்னை விட்டு விடு” என்று பொறுமை இழந்து சொன்னேன்.

“ஏன் வரமாட்டேன் என்கிறீர்கள்?” என்று என் முகத்தைக் கூர்ந்து பார்த்துக்கொண்டு ஏக்கத்துடன் கேட்டான்.

“அங்கே எதற்கு?”

“அதென்னமோ, கட்டாயம் வரத்தான் வேண்டும்.”

நான் கோபப்பட்டவன்போல் நடித்து, “என்னால் வரமுடியாது. எனக்கு அவசரமான வேலை இருக்கிறது. இன்னொரு நாளைக்கு வேண்டுமானால் பார்த்துக் கொள்ளுவோம்” என்று சொல்லி விட்டு மறுபுறம் திரும்பிக் கொண்டேன். ஏதோ ஒரு புத்தகத்தைத் தேடு பவன்போல் மேஜையைத் துழாவிக்கொண்டிருந்தேன்.

சாரங்கன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருந்தான்.

ஒரு நிமிஷம் கழிந்திருக்கும். அவனை ஒரு முறை திரும்பிப் பார்த்தேன். நான் பார்த்த மாத்திரத்தில் அவன் ஒரு முறை பெரு மூச்சு விட்டுக்கொண்டு, “வரமாட்டீர்களா?” என்று தடுமாறும் குர லில் கேட்டான்.

அவனுடைய இந்தக் கடைசி முயற்சியைத் தகர்த்துவிட்டால், பழையபடியும் அழ ஆரம்பித்து விடுவான் என்பதற்குரிய அடை யாளம் அவன் முகத்தில் தென்பட்டது. சாரங்கனைத் திரும்பத் திரும்ப அழவைத்துப் பார்க்க எனக்கு இஷ்டமில்லை. ‘தங்கமான பையனை ஏன் இப்படிக் கஷ்டத்துக்கு ஆளாக்க வேண்டும்? போய் விட்டுத்தான் வருவோமே! நம்மை வரவேண்டாமென்றா சொல்லப் போகிறார்கள்? அப்படியிருக்க ஒருமுறை போய் வருவதில் என்ன கஷ்டம்?’ என்று அதிசீக்கிரமாக யோசித்து முடிவு கட்டினேன். அவன் கண்ணீர் சொரிவதற்குள் என் சம்மதத்தைத் தெரிவித்து விட்டேன்.

"சாரங்கா! வா! உன் வீட்டுக்கே போகலாம்."

இருவரும் கை கோத்துக்கொண்டே சென்றோம். அவன் வீட்டுக்கு முன்னால் போனதும், என் கையை விட்டுவிட்டு வீட்டுக்குள்ளே வேகமாக ஓடினான். அப்புறம் வெளியில் வந்து வாசல் பக்கத்திலுள்ள அறையைத் திறந்து, "வாருங்கள், வாருங்கள்" என்று படபடப்பாக இரைந்து சொன்னான். என்னுடைய தயக்கத்தையும், என்னுடைய சங்கோஜத்தையும் அளவிட்டுச் சொல்ல முடியாது. வேறு வழியில்லாமல் அந்த அறைக்குள் சென்றேன். அறையின் சூழ்நிலையைக் கொண்டே சாரங்கனின் பெற்றோர்கள் ஏழைகள் என்று எளிதில் தீர்மானிக்க முடிந்தது. நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, பக்கத்தில் கிடந்த அவனுடைய சரித்திரப் புத்தகத்தை எடுத்துப் புரட்டிக் கொண்டிருந்தேன். சாரங்கன் வீட்டுக்குள்ளே ஓடிவிட்டான். அப்போது வெளியிலிருந்து வந்த அவனுடைய தகப்பனார், அறைக்குள் எட்டிப் பார்த்தார். என்னைப் பார்த்து "வாருங்கள்" என்று சொல்லிவிட்டு, உள்ளே போய் விட்டார். "என்ன விசேஷம்?" என்று என்னை அவர் விசாரிக்காமல் இருந்தது எனக்கு ராஜமரியாதை செய்ததுபோல இருந்தது.

சாரங்கன் திரும்பி வரும்போது, ஒரு தட்டில் உப்புமாவும், ஒரு டம்ளரில் காப்பியுமாக வந்து சேர்ந்தான். நான் திடுக்கிட்டு விட்டேன்; என் சுவாசம் அப்படியே நின்று விட்டது.

"ஐயோ! இதெல்லாம் எதற்கு? நான் இப்போதுதானே சாப்பிட்டேன்!"

சந்தோஷப் படபடப்பில் ஒன்றுமே சொல்லாமல், அவன் என் வலது கையைப் பிடித்து இழுத்து உப்புமாத் தட்டில்கொண்டுபோய் ஒட்ட வைத்தான். 'சாரங்கன் ரொம்பவும் சிறு பிள்ளையாக இருக்கிறான். இனிமேல் இவனிடம் கொஞ்சம் கண்டிப்பாகத்தான் நடந்து கொள்ள வேண்டும். இன்றுமட்டும் ஏதோ 'கசப்பு மருந்'தைச் சாப்பிடுவோம். வேறு வழியில்லை' என்று எண்ணிக் கொண்டே சாப்பிட ஆரம்பித்தேன். சிறு பையன் பேச்சைக் கேட்டு விருந்தாட வந்த என்னைப்பற்றி அவனுடைய பெற்றோர்கள் என்ன நினைப்பார்களோ என்ற பயம் ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு அதிர்ச்சி கொடுத்த வண்ணமாக இருந்தது.

ஒரு வழியாகச் சாப்பிட்டு முடிந்தது. தட்டையும் டம்ளரையும் உள்ளே கொண்டுபோய் வைக்கப் போனான் சாரங்கன்.

'இந்தப் பையனுக்கு எதற்கு என்மேல் இவ்வளவு அன்பு? இவன் அன்பு என்னைத் திணற அடிக்கிறதே! இது தாங்க முடியாத அன்பு! தாங்கமுடியாத பேதைமை! இரண்டும் சேர்ந்து என்னைக்

குரங்காட்டம் ஆட்டுகின்றனை......ஆனால் இவனைக் கோபிக்கக் கூடாது. இவன் இப்போது எனக்குக் கொடுக்கும் தொந்தரவே இவனுடைய அன்பை அளந்து காட்டுகிறது. ஏதோ ஒருநாள் என்னைக் கஷ்டப் படுத்துவதனாலாவது, இவன் திருப்தி யடையட்டும். என்னுடைய முயற்சி எதுவும் இல்லாமல், என்னால் மட்டுமே ஓர் உயிர் சந்தோஷமும் திருப்தியும் கொள்ள முடிகிறது என்றால், அதை எந்தச் சமயத்திலும் தடுக்கக் கூடாது; தடுக்க முயலுவது அமானுஷிகத் தனம்' என்று எண்ணித் தேற்றிக் கொண்டேன்.

சாரங்கன் வெளியே வந்தான். மேஜையைத்திறந்து ஒரு பவுன்டன் பேனாவை எடுத்தான். என் முகத்துக்கு எதிரில் நிற்காமல் என் முதுகுப்புறமாக வந்து நின்று கொண்டான். அங்கே நின்ற வாக்கிலேயே, நான் கையில் வைத்திருந்த சரித்திரப் புத்தகத்தை மெதுவாகப் பிடித்து இழுத்துத் தூரத்தில் வைத்தான். தூங்கும் குழந்தையின் கையிலிருக்கும் கிலு கிலுப்பையை எவ்வளவு ஜாக்கிரதையாகத் தனியே எடுத்து அப்புறப்படுத்துகிறோமோ, அது போல அதை அப்புறப்படுத்தினான். பிறகு அவன் வலது கையால் தன் கால் சட்டையின் பையில் கையை விட்டு எதையோ எடுப்பது போல் எனக்கு ஜாடையாகத் தெரிந்தது. அதை என் முன்பாக மேஜைமேல் வைத்தான்.

அது ஒரு டைரி. நான் சுந்தரராஜனுக்கும் சித்ராவுக்கும் அன்பளிப்பாகக் கொடுத்த டைரிகளைப் போன்ற ஒரு டைரி. அதே கம்பெனியில் செய்தது; அதே நிற முடையது. அப்புறம் பேனாவை என் கையில் கொடுத்து, "எழுதுங்கள்" என்றான்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. "என்ன எழுத?" என்று கேட்டேன்.

"'என் பிரியமுள்ள சாரங்கனுக்கு அன்பளிப்பு' என்று எழுதுங்கள்."

# ஏமாற்றம்

கல்யாணமான எட்டாவது மாதத்திலேயே சட்டக் கல்வி படிப்பதற்காகக் கிருஷ்ணமூர்த்தி சென்னைக்குப்போக வேண்டியிருந்தது. முதல் முதலில் மனைவியை விட்டுப் பிரிந்து சென்னைக்குப் போன பின், தசரா விடுமுறையில் ஒரு தடவை ஊருக்கு வந்திருக்கிறான். இப்படி வந்துவிட்டுப் போனபோது, கழுத்தோடு கழுத்தைப் பின்னிய அன்றில்—பிணைப்பை நெகிழ்த்துக் கொண்டு, மிகவும் மனவேதனையோடுதான் அவன் சென்னைக்குப் புறப்பட்டான். ஊருக்கு வந்தவுடன் எப்படி விண்ணை அளாவும்படி சந்தோஷம் பொங்கி எழுமோ, அப்படியே ஊரை விட்டுப் புறப்படும்போது அதற்குச் சரியான எதிர்மறை போல மனத் துயரம் பாதாளத்தைத் தாண்டிச் செல்லும்.

இப்போது கிறிஸ்துமஸ் விடுமுறைக்கு வந்திருக்கிறான். விடுமுறை நாட்களும் கழிந்துவிட்டன. நாளைக் காலை ஏழுமணிக்கெல்லாம் சென்னைக்கு ரயில் ஏறிவிட வேண்டும். இந்த நினைப்பினால், கண் விழித்திருப்பதற்கு முப்பது நாழிகையே உள்ள இராக்காலம் போதாதே என்று இருவரும்—கிருஷ்ணமூர்த்தியும் லக்ஷ்மியும்—ஏங்கினர்.

இரவு சாப்பாடானது. ஒன்பது ஒன்பதரை மணிக்கெல்லாம், பகல் முழுவதும் ஒரே மனிதனைப்போலப் பேசியும் சிரித்தும் கலகலப்புடன் இருந்து வந்த குடும்பத்தினர் அத்தனை பேரையும் தனித் தனி மனிதர்களாகப் பிரிக்க வந்தது நித்திரை. இதில் ஒரு சிறு விதி விலக்காக கிருஷ்ணமூர்த்தியும் லக்ஷ்மியும் மட்டும் ஒரே ஜீவனைப் போல மேல்மாடிக்குப் போனார்கள். லக்ஷ்மி படுக்கையைப் போடும்போது அவன் ஜன்னலின் பக்கத்தில் நின்று அவளைப்

பார்த்துக்கொண்டே இருந்தான். வழக்கம் போல அன்றிரவிலும், இருவருடைய பழங்கால நிகழ்ச்சிகளை, குழந்தைப் பருவத்தில் நடந்த மறக்க முடியாத சில சம்பவங்களை இருவரும் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளத்தான் காத்திருந்தார்கள். ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கு முன், தனித்தனியாக ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் நிகழ்ந்த செய்திகளை அறிந்துகொள்ளுவதன் மூலமாகத் தங்கள் உறவும் அன்பும் விசாலமடைவதாகத் தோன்றியது இருவருக்கும். இல்லாவிட்டால் அந்தச் செய்திகளைக் கேட்பதில் அப்படி மோகம் பிறக்கக் காரணமில்லை. கிருஷ்ணமூர்த்தியின் பழைய டைரிகள்கூட அபூர்வ பொக்கிஷங்களாக லக்ஷ்மியினிடத்தில் இருந்து வந்தன.

சிறிது நேரத்திற்குப்பின், பின்னால் திரும்பி ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான் கிருஷ்ணமூர்த்தி. மேற்கே அடிவானத்தை நோக்கி நழுவும் ஐந்தாம் நாள் பிறை, சிக்கும் முடிச்சுமாகப் பின்னி வளர்ந்த தூங்கில் மரங்களின் வேலியைக் கடக்கத் தயங்குவது போலக் காணப்பட்டது. நல்ல இருள். அதைத் தன் பலவீனமான சக்தியைப் பிரயோகித்துப் பிறை நிலவு போக்கடிக்க முயன்றதில் கிடைத்த வெற்றியையும் தோல்வியையும் ஒருங்கே புலப்படுத்துவது போன்ற மங்கலான, இருள் - கலப்படமான, வெளிச்சம் எல்லாவிடங்களிலும் பரவியிருந்தது. இதனால் கண்ணுக்குத் தெரியும் வஸ்துக்களும் தெளிவாகப் புலப்படாமல் இருந்தன. தெரிந்தும் தெரியாமலும் இருக்கும் இந்த மயக்க நிலையினால் அடுத்த வீட்டுப் புகைப் போக்கிக் குழாய் கூட எங்கோ தூரத்தே உள்ள நகரொன்றில் மாடகூடங்களின் நடுவில் தோற்றும் கோபுர கலசம் போலத் தோற்றமளித்தது. எதைப் பார்த்தாலும் கிருஷ்ணமூர்த்திக்குக் கனவும், கற்பனையுமாக இருந்தது. அவனுடைய உள்ளம் தன் தீராத பசிக்கு விருந்தாக, ஒரு நட்சத்திரத்தையோ, ஒரு ஒளிப் புள்ளியையோ பார்த்தமாத்திரத்தில் இரை தேடும் மீனைப் போல தாவிச் சென்று அதை நோக்கிப் பாயும்; அப்புறம் எங்கோ ஓர் ஆழம் காணாத அகட்டில் சென்று உலாவிக்கொண்டிருக்கும். உலகத்து நடப்புகளுக்கு இத்தனை மோகனமும், இத்தனை ஆழமும் இதற்குமுன் என்றும் இருந்திருக்க முடியாது என்று தோன்றியது கிருஷ்ணமூர்த்திக்கு. காரணம், மறு நாளைய பிரிவு; அடுத்த சந்திப்பை வேறு யுகத்துக்கே மாற்றிப் போடுவது போன்ற ஒரு நீண்ட பிரிவு.

இருவரும் படுத்துக் கொண்டார்கள். மன மயக்கத்திலே, சம்பாஷணையின் முதல் தொடக்கம் முற்றுப் பெறாத வார்த்தைகளாகவே வெளி வந்தன. ஒரு சொல்லாவது ஒருவரைப் பார்த்து ஒருவர் காரண காரியத்துடன் சொன்ன சொல்லாக இல்லை. யாரோ

யாரையோ பார்த்துப் பேசிக்கொண்டிருக்கும் பாவனையிலே பேசிக் கொண்டிருந்தனர். அப்புறம் இருவரும் சுயப்பிரக்ஞை என்ற மிதப்புக் கட்டையின் நுனியை மெல்ல மெல்லப் பற்றிக் கொண்டதால் அதன் ஆதாரவில் தத்தளித்துத் தடுமாறியாவது சொற்களைத் தெளிவாக உச்சரிக்க முடிந்தது. இந்தத் தளுதளுத்த குரல்களும், நாணம் வெட்கங்களும் மறைந்து ஒரு வழியாக மனத்தெளிவு பெற்ற மாத்திரத்தில், இருவரும் தர்க்க சாஸ்திரிகளைப்போல அவ்வளவு விளக்கமாகத் தத்தம் பழைய நாட்களைப் பற்றியும், அடுத்த தடவை இருவரும் சந்திக்கப் போவதைப் பற்றியும் பேசத் தொடங்கினர். இந்தச் சந்தர்ப்பத்தில் சம்பந்தமில்லாத ஏதோ ஒன்றை லக்ஷ்மி கேட்கத் தொடங்கியதும், கிருஷ்ணமூர்த்தி,

"அது இருக்கட்டும். கும்பாபிஷேகத்துக்கு நான் அவசியம் லீவ் எடுத்துக் கொண்டு வருவேன். வரட்டுமா?" என்று கேட்டான்.

"லீவ் கிடைத்தால் வாருங்களேன்!"—இது லக்ஷ்மி.

"கிடைக்காவிட்டால்?"

"கிடைக்காவிட்டாலும் வாருங்கள்!"

"அப்படியானால் 'கிடைத்தால் வாருங்கள்' என்று சொல்லுவானேன்?"

"'வரட்டுமா?' என்று கேட்டால்? அது என்ன கேள்வி?"

இருவரும் சிரித்தனர்.

பிறகு கிருஷ்ணமூர்த்தி கேட்டான்:

"மூன்று வருஷம் கோவிலின் மேலப் பிரகாரத்தில் எல்லோரும் போனபின், நாம் தனித்திருந்த அந்த இரவு நினைவிருக்கிறதா?"

"இராமல் எங்கே போகும்? அன்றுதானே பரிபூரணமாக இந்த உள்ளம் கொள்ளை போனது!" என்றாள் லக்ஷ்மி. சுதந்திரமும், நிதானமும், விளையாட்டும் அவள் சொற்களில் பிரதிபலித்தன.

"அப்படியானால் அதற்கு முன்பெல்லாம் கொள்ளை போகவில்லையா 'இந்த உள்ளம்'?"

"உண்மையைச் சொல்லுகிறேன். அன்றுதான் பரிபூரணமாக நான் அடிமையானது. அதற்கு முன்பெல்லாம் அப்படிப்பட்ட 'அடிமை' உணர்ச்சி ஏகதேசமாகத் தங்கள் கடிதங்கள் வரும் சந்தர்ப்பங்களில் தான் ஏற்படும். பிறகு எப்படியோ மறைந்து போகும். ஆனால், அப்போதும், அதற்கு முன்பும் நீங்கள் மட்டும் எப்படி ஒரே படியாக என்மேல் உயிராக இருந்தீர்கள் என்று எனக்குத் தெளி

வாகத் தெரியும். திருநெல்வேலிக்கு நீங்கள் படிக்க வந்து, என்னை முதல் முதலாகச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்த போதே உங்களுடைய மனப் பரவசம் எனக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. ஆனால்,—இதையும் சங்கோஜப் படாமல் சொல்லுகிறேன்—வீட்டுக்கு அப்பாவையோ, அண்ணனையோ தேடிக்கொண்டு வருபவர்களுக்கு நான் பதில் சொல்ல நேரிடும்போது, வரக் கூடியவர்களெல்லாம் உங்களைப் போல மனப் பரவசத்துடன்தான் பேசுவார்கள். ஒரு பெண்ணை முதல் முதலாகப் பார்க்கும் வாலிபர்களின் பரவசங்களுக்குள் வித்தியாசம் ஏது?......"

கிருஷ்ணமூர்த்தி சிரித்தான்.

"......ஆனாலும், உங்களுடைய தனிப் பண்பு எனக்குக் கொஞ்ச காலத்தில் தெரிந்துவிட்டது. நம்மிடத்தில் மட்டற்ற அன்பு கொண்டுதான் இப்படி விடுமுறை நாட்களிலும் கூட ஊருக்குப் போகாமல் இவர் வலிய வலிய வருகிறார் என்று திட்டமாக நினைத்தேன். எத்தனையோ குடும்ப நெருக்கடிகளையும் அலட்சியம் செய்து விட்டுத் திருநெல்வேலியை விட்டுப் போகாமல் என் சின்னஞ் சிறு கவலைகளையும் போக்க நீங்கள் எடுத்துக் கொண்ட சிரமங்களை நான் மறக்க முடியாது. என் உள்ளம் அப்போது உங்களைச் சோதித்துக் கொண்டிருக்க வில்லை. ஆனால் நீங்கள் என்ன உபகாரம் செய்தாலும், மாதக் கணக்காக நான் மௌனம் சாதித்து வந்ததற்குக் காரணம், உங்கள் அன்பு ஆரம்பத்தில் என் உள்ளத்தைப் பரிபூரணமாக ஆகர்ஷிக்காமல் இருந்ததுதான். அப்போது நடு நடுவே உங்களுக்கு எழுதிய கடிதங்களில் நான் கொட்டிய வாசகங்கள் சில சமயங்களில் உயர்வு நவிற்சியாகவும், சில சமயங்களில் உங்கள் திருப்தியைப் பூர்த்தி செய்வதற்கென்றும் கூட எழுதப் பட்டிருக்கும். ஆனால், உங்களைத் தவிர்த்து வேறு யாருடனும் இவ்வளவு அன்போடு நான் பழகியதில்லை என்பது மட்டும் உண்மை. கடைசியில் கோவிலுக்குள்ளே நாம் சந்திக்கும் வரைக்கும் ஏதோ ஓர் அரை குறையான நிலையிலேயே இருந்தது நம் அன்பு—இல்லை என் அன்பு!"

கிருஷ்ணமூர்த்தி சிரித்து மழுப்பினான். தன் பள்ளிநாட்களில் லக்ஷ்மியைப் பற்றி அவன் நினைத்துக் கொண்டிருந்ததும், லக்ஷ்மியின் செயல்களைப் புரிந்து கொண்டதும் எவ்வளவு அபத்தம் என்பதை நினைத்தவுடன் அவனுக்கு எதையோ இழந்துவிட்டது போல இருந்தது. எதிரே திரை கட்டாமல் சினிமா ப்ரொஜக்டரை ஓட்டிப் படம் காட்டுவது போலவே, தான் நடந்து கொண்டதாகத் தோன்றியது அவனுக்கு. இப்பொழுது உயிரோடு உயிர் கலந்த சேர்க்கை

விட்டிய பின்னும், பழைய அனுபவத்தின் பொய் வேடத்தில் மயங்கி தான் மிகவும் ஏமாந்து விட்டதாக நினைப்பது அறிவீனம் என்றும் பைத்தியக்காரத்தனம் என்றும் அவன் கருதினாலும் அவனுக்கு ஏமாற்றமாகவே தான் இருந்தது. அரை குறையாகவாவது தன்னைத் தானே அவள் லட்சிய புருஷனாகக் கொண்டாள் என்ற ஒரே ஒரு திருப்திதான் அவன் உள்ளத்தில் அப்போது ஆறுதலாக எஞ்சி நின்றது.

அப்புறம் இரவு கழிந்தது. மறுநாள் பொழுது விடிந்து சிறிது நேரத்திற்கெல்லாம் கிருஷ்ணமூர்த்தி சென்னைக்குப் புறப்பட்டு விட்டான்.

• • •

சென்னைக்கு வந்ததும் அவன் பிரிவின் வேதனைக்குச் சாந்தி தேடும் முறையில் லக்ஷ்மிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினான். வழக்கம் போல அவன் எழுதும் கடிதங்களின் பாணியை ஒட்டியே இருந்தது இந்தக் கடிதமும். மனநிலையும் முன்னால் சென்னைக்கு வரும்போது எப்படி இருக்குமோ அப்படியேதான் இப்போதும் இருந்தது.

ஆனால், இரண்டொரு நாட்கள் சென்றதும் அவனிடம் ஒரு புதிய மாறுதல் தோன்ற ஆரம்பித்தது. லக்ஷ்மிக்குக் கடிதமே எழுதியிருக்கக் கூடாது என்றும், எழுதியிருந்தாலும் அப்படி நிறைந்த மனதோடு எழுதிவிடாமல், சற்று 'பிகு'ப் பண்ணி, வேண்டா விருப்பாக எழுதியது போல எழுதியிருக்க வேண்டும் என்றும் அவனுக்குப் பட்டது. இப்படி மன விகாரம் ஏற்படுவதற்குக் காரணபூதமாக இருந்தது, சென்னைக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் கிருஷ்ணமூர்த்திக்கும் லக்ஷ்மிக்கும் இடையே இரவில் நடந்த சம்பாஷணைதான். அவளால் இவன் என்றோ ஏமாற்றப்பட்டதற்கு இப்போது பழி வாங்க நினைத்தான். பழிவாங்கும்படியாகத் தூண்டியது கோபமோ அகங்காரமோ அல்ல. பலவீனமடைந்த தன் உள்ளத்தை, குறைப்பட்டது போலத் தோன்றும் தன் புருஷத்துவத்தைப் பரிபூரணமாக்குவதற்கு, குற்றமில்லாத எளிய உபாயமாகப் பட்டது இந்தப் பழிவாங்கும் முறைதான்—அதாவது கடிதம் எழுதாமல் சில நாட்கள் மௌனம் சாதித்து, அப்புறம் லக்ஷ்மியிடமிருந்து ஓலமும் கூக்குரலுமாக அலறிப் புடைத்துக்கொண்டு வரும் ஒரு கடிதத்தைப் பெறும் நோக்கம்தான்!

ஆனால், நான்காம் நாள் வந்தது. அன்று இரவு அவனுக்குப் பிரிவின் வேதனை சற்று மட்டுப்பட்டது. சிறு சிறு குற்றங்களையும்

பெரிதாக்கும் பயங்கரமான சந்தேக நிலை மறைந் தொழிந்தது. களங்கத்தைக் கண்டு குறை சொல்லாமல் நிலவை அனுபவிக்கும் பக்குவ நிலை எய்தியதும், சென்னைக்கு வந்தவுடன் லக்ஷ்மிக்குக் கடிதம் எழுதியது சரிதான் என்று அவன் மனம் ஆமோதித்ததுடன், அதற்கு அப்புறம்கூட மற்றொரு கடிதம் எழுதியிருக்கவேண்டும் என்று தவறை எடுத்துக் காண்பிக்கவும் செய்தது. அவ்வளவுதான், உள்ளத்திலே சொல்லொணாத உற்சாகம். எல்லை கடந்த குதூகலத்துடன் எழுந்து லக்ஷ்மிக்குக் கடிதம் எழுத உட்கார்ந்துவிட்டான். எழுத எழுத, கடிதம் பாராயணமாகி விடுமோ என்று நிலைக்கு வளர்ந்து கொண்டே வந்தது. கடைசியில் ஒருவாறாக, கீழ்க்கண்ட வாசகங்களுடன் கடிதத்தை எப்படியோ முடித்து விட்டான் :

"......மற்றொரு வேடிக்கையான விஷயம் : கேட்கிறாயா? கடந்த நான்கு நாட்களாக என்னைப் பைத்தியக்காரனாகவே மாற்றி விட்ட விஷயம் இது ! மூன்றாம் மனிதனைப் போல என்னையே நான் கேலி செய்துவிட்டு எழுதும் இந்த வரிகளை வாசித்து நீ கொஞ்சம் கூட மனக்கஷ்டம் அடையக் கூடாது. அதற்குப் பதிலாக நீ மனம் விட்டுச் சிரிக்கவேண்டும். தெரிகிறதா ?

"நான் சென்னைக்கு வருவதற்கு முதல் நாள் இரவு, நாம் பேசிக் கொண்டிருந்த ஒவ்வொரு விஷயமும் உனக்கு நன்றாக நினைவிருக்கும். இதற்குள் நீ மறந்திருக்க நியாயமில்லை. அப்போது நீ சொன்னாயல்லவா, திருநெல்வேலிக்கு நான் படிக்க வந்த நாள் முதல் நெல்லையப்பர் கோவிலில் நாம் சந்திக்கும் வரையிலும் என்னிடம் நீ அன்பு காட்டியதிலும், பக்கம் பக்கமாகக் கடிதம் எழுதியதிலும் அளவுக்கு உயர்வு நவிற்சியும் ஒப்பனையும் கலந்திருந்தன என்று ? அதைக் கேட்டபின், ஒரு காலத்தில் என்னைப் பைத்தியக்காரனாக்கி நீ வேடிக்கை பார்த்ததாக எனக்குத் தோன்றிவிடவே, உன்மேல் கொஞ்சம் கோபம் கூட வந்தது. சென்ற காரியத்தை நினைத்து இப்படியெல்லாம் கோபமும் வருத்தமும் ஏற்படுவானேன் என்று கேட்பாய். அடுத்தவன் இப்படிக் கோபப்பட்டால் நானும் தான் அவனைக் கேட்டிருப்பேன். ஆனால், கடந்த காலச் செய்தியாகிய அது, இப்போது நடந்தால் எப்படிப்பட்ட வேதனை ஏற்படுமோ அப்படி வேதனை ஏற்பட்டது எனக்கு. பரிபூரணமாக உன்னை என்னிடம் ஒப்படைத்து விட்டாய் என்று நிதரிசனமாகத் தெரிந்த போதிலும், இந்தப் பிரமை என்னவோ உதறித்தள்ள முடியாதது போலப் பிடித்துக் கொண்டது. இன்றுதான் எல்லாவித மயக்கங்களும் தீர்ந்து நிம்மதியுடன் உனக்கு எழுதுகிறேன்.

"லக்ஷ்மி ! உண்மையில் அன்புக்கு எதிர்காலம் என்றும் கடந்த காலம் என்றும் காலவேறுபாடுகள் கிடையாதுதான்! இங்கே, கடந்த

காலத்தை நிகழ் காலமாக்குவதும், நிகழ்காலத்தைக் கடந்த காலமாக்குவதும் சர்வ சகஜம். எத்தனை தடவைகள் நாம், பிரிந்திருந்த நாளின் பழைய அநுபவங்களை நினைத்துப் பார்த்துப் பூரிப்பும் புளகமும் எய்தி இருக்கிறோம்? பழைய அநுபவம் நிகழ்காலச் சம்பவமாக அப்போது மாறிக் கொள்ளும். இதே போல எதிர்காலத்தில், குறிப்பிட்ட நாளில் பிரிந்துசெல்ல வேண்டியதை நினைத்து, இரண்டு பேரும் ஓரிடத்தில் இருக்கும்போதே மனம் வருந்துவோம். இதற்கெல்லாம் என்ன அர்த்தம்? இந்தத் திருவிளையாடல்களின் மர்மத்தைப் புரியாமலேயே உன் பால்யப் பருவத்தின் கதைகளை இரவெல்லாம் விழித்திருந்து நாள் தோறும் கேட்பேன். அப்போது உன் பிள்ளைப் பிராயத்தில் உனக்கு ஏற்பட்ட கஷ்டங்களைக் கேட்டு வருந்துவேன். சிறு பிராயத்திலேயே நாலு பேராலும் நீ 'சமர்த்து' என்ற நற்பெயர் வாங்கியதைக் கேட்டு நான் மனம் மகிழ்வேன். பிறந்தது முதல் நீ செய்த ஒவ்வொரு செயலும், உனக்குப் பிறர் செய்த உபசாரணைகளும் என்னை மதித்து எனக்காகச் செய்யும் காரியங்களாகவே தோன்றுகின்றன. என்னைத் தெரிந்த நாளிலும், தெரியாத நாளிலும் உன் வாழ்க்கையில் நிகழ்ந்த ருசிகரமான செய்திகளை எல்லாம் ஏதோ ஓர் அதிசயமான சக்தி திரட்டிக் கொண்டு வந்து, என்னிடத்தில் ஒப்படைத்து, அவற்றை என் உடைமைகளாக்கிக் கொண்டிருக்கும்போது, அதற்கு ஒரு சிறு மறுப்பைப் போல, ஆரம்பத்தில் 'பாசாங்கு' பண்ணியதாக நீ சொன்னாய். எனக்கு அது ஏமாற்றம் அளிக்காதா என்ன? உண்மையில் நாம் சந்தித்தது ஒரு சில வருஷங்களுக்கு முன்னேதான் என்றாலும், நாம் குழந்தைப் பருவத்தில் தவழ்ந்த திண்ணையையும், உறங்கிய தொட்டிலையும் கூட இப்போது ஒன்றாக்கிவிட்டோம் அல்லவா?

"ஆகவே, மறுபடியும் சொல்லுகிறேன்: நீ வருத்தப்படக் கூடாது! எனக்கு இன்று அந்த 'ஏமாற்றம்' போய்விட்டது. ஆனால் இனிமேல் அந்த 'ஏமாற்றம்' நம் உறவும் அன்பும் கொழுந்து விட்டுத் தழைத்துக் கொண்டே இருக்க உரமிட்டு ஊட்டமளிக்கப் போகிறது என்பதை நினைத்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். பதில் எழுது.

உன்னுடைய

எம். கிருஷ்ணமூர்த்தி."

# “ராஜா வந்திருக்கிறார்”

“எனக்கு சில்க் சட்டை இருக்கே! உனக்கு இருக்கா?” என்று கெட்டிக்காரத்தனமாகக் கேட்டான் ராமசாமி.

செல்லையா பதில் சொல்லத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தான்; தம்பையா ஆகாயத்தைப் பார்த்து யோசனை செய்தான்; மங்கம்மாள் மூக்கின்மேல் ஆள்காட்டி விரலை வைத்துக்கொண்டும், கண்ணை இலேசாக மூடிக்கொண்டும் யோசனை செய்தாள். அந்த மூவரும் ராமசாமியின் கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள் மற்றப் பிள்ளைகள்.

அன்று பள்ளிக்கூடத்தி லிருக்கும்போது ராமசாமிக்கும் செல்லையாவுக்கும் இடையே ஒரு போட்டி நடந்தது. ராமசாமி தன் ‘ஐந்தாம் வகுப்புக்குரிய இந்திய தேச சரித்திரப்’ புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டான். செல்லையா அந்த வருஷம் இந்திய தேச சரித்திரம் வாங்க வில்லை; அதனால் தன்னிடமுள்ள ஒரு இங்கிலீஷ் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டான். இருவரும் ‘படப் போட்டி’யை ஆரம்பித்து விட்டார்கள்.

ராமசாமி தன் புத்தகத்தை முதலிலிருந்து ஒவ்வொரு தாளாகத் திருப்புவான்; படம் இருக்கும் பக்கத்தைச் செல்லையாவுக்குக் காட்டி, “இதோ, இந்தப் படத்துக்குப் பதில் படம் காட்டு” என்பான். செல்லையா தன் புத்தகத்தைத் திறந்து அதில் உள்ள ஒரு படத்தைக் காட்டுவான். பிறகு, இருவருமே புத்தகத்தைப் பக்கம் பக்கமாகப் புரட்டுவார்கள். யாராவது ஒருவருடைய புத்தகத்தில் அடுத்தபடியாகப் படம் வரும்; உடனே, அந்தப் படத்

னுக்கு அடுத்தவன் பதில் படம் காட்டவேண்டும். இவ்விதமாகப் பதிலுக்குப் பதில் படம் காட்டிய வண்ணம் புத்தகம் முழுவதையுமே புரட்டுவார்கள். எவன் புத்தகத்தில் அதிகப் படங்கள் இருக்கின்றனவோ, அவன் ஜெயித்துவிடுவான்; மற்றவன் தோற்றுப்போவான். உடனே ஜெயித்தவன், "எனக்குப் படம் காட்ட முடியல்லே! தோத்துப் போயிட்டயா!" என்று பரிகாசம் செய்வான். இந்த மாதிரியான படப் போட்டிதான் அன்றும் நடந்து கொண்டிருந்தது.

போட்டி பாதியில் நிற்கிறது. அந்தச் சமயத்தில் ஐந்தாம் வகுப்புக்குக் கணக்கு வாத்தியார் வந்துவிட்டார். அந்தக் கணக்கு வாத்தியார் மிகவும் கெடுபிடியானவர். அவர் வகுப்பில் பையன்கள், வெளியே தெரியாமல் விளையாடிக் கொண்டிருக்க முடியாது. தவிரவும் கணக்குப் போடும்போது, பென்சிலும் கையுமாக இருக்க வேண்டும். இதில், "படப் போட்டி" நடத்துவது எப்படி ?

வாத்தியார் வந்ததும் இருவருடைய போட்டியும் நின்றுவிட்டது.

கடைசியில், சாயங்காலம் பள்ளிக்கூடம் விட்டு வெளியே வந்த பிறகு, ஒரு வேப்பமரத்தின் அடியில் நின்று இருவரும் அந்தப் போட்டியை நடத்தினார்கள்.

ராமசாமியின் சரித்திரப் புத்தகத்தில் பாதிதான் தாண்டியிருக்கும்; ஆனால், செல்லையாவின் சிவிக்ஸ் புத்தகம் முடிந்துவிட்டது. செல்லையா தோற்றுப்போய்விட்டான். பக்கத்தில் நின்ற பிள்ளைகள் அவனைக் கேலி செய்தார்கள். தங்கள் அண்ணன் தோற்றுப்போனதைக் கண்டு, தம்பையாவுக்கும் மங்கம்மாளுக்கும் சொல்லமுடியாத வருத்தம்.

அந்த இடத்தைவிட்டு எல்லோரும் வீட்டுக்குப் போகப் புறப்பட்டார்கள். நடந்து செல்லும்போதே, படப் போட்டி வேறொரு அவதாரம் எடுக்கத் தொடங்கியது. "எங்கள் வீட்டில் அது இருக்கே, உங்கள் வீட்டில் இருக்கா ?" என்று இருவரும் ஒருவரிடம் ஒருவர் கேட்க ஆரம்பித்தனர். இந்தப் புதுப் போட்டியின் கடைசிப் பகுதியில்தான் ராமசாமி, "எனக்கு சில்க் சட்டை இருக்கே, உனக்கு இருக்கா ?" என்று கேட்டான்.

வேப்ப மரத்தை விட்டு, அரை பர்லாங் தூரத்திலுள்ள பார்வதியம்மன்கோவில் பக்கமாக வந்தாய்விட்டது. இன்னும் செல்லையாவோ, தம்பையாவோ ராமசாமிக்குப் பதில் சொல்லவில்லை. ஆனால், மங்கம்மாள் திடீரென்று எல்லோரையும் இடித்துத் தள்ளிக்கொண்டு, ராமசாமியின் முன்னால் வந்து நின்றாள். குழந்தைகள் எல்லோரும் மங்கம்மாளையே கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அவன், ரேகை சாஸ்திரியிடம் காட்டுவதுபோலக் கையை வைத்துக்கொண்டு, "ஐயோ! சில்க் சட்டை எதுக்காம்? ஹூம், லேசாச் சருகு மாதிரி இருக்கும். சீக்கிரம் கிழிஞ்சு போகும். (செல்லையாவின் சட்டையைக் காட்டி) இதுதான் கனமா யிருக்கு. ரொம்ப நாளைக்குக் கிழியாமெ இருக்கும், நல்லாப் பாரு!" என்று மிகமிகப் பரிகாசமாகச் சொல்லிவிட்டு செல்லையாவின் பக்கத்தில் வந்து நின்றான்.

ராமசாமி பிரமித்துவிட்டான். முதல் வகுப்பில் படிக்கும் மங்கம்மாள், ஐந்தாம் வகுப்பில் படிக்கும் தன்னை இப்படித் தோற்கடித்துவிட்டாளே என்று மிகவும் சங்கடப் பட்டான். பிள்ளைகள் ராமசாமியைப் பார்த்து, "தோத்துப் போயிட்டயா?" என்று ஏளனம் பண்ணினார்கள்.

மங்கம்மாள் செல்லையாவின் சட்டையைப் பிடித்துக் கொண்டு, அவனை ஒட்டி உரசி நின்றுகொண்டாள். நடக்கும்போதும் அப்படியே நடந்து வந்தாள். அவள் மனதிற்குள்ளே ஒரு பெருமிதம்!

ராமசாமி அடுத்த கேள்வியைப் போட்டான்: "எங்கள் வீட்டிலே ஆறு பசு இருக்கு, உங்கள் வீட்டிலே இருக்கா?"

இதற்குச் செல்லையா பதில் சொல்லவில்லை; மங்கம்மாளும் பதில் சொல்லவில்லை. தம்பையா, "இவுருதான் பணக்காரராம். அதுதான் ரொம்பப் பெருமை... ஹூம்... பெருமை பீத்தக் கலயம்......!" என்று சொல்லி, நிலைமையைச் சமாளிக்க முயன்றான்; அது முடியவில்லை. அந்த சமயத்தில் செல்லையா, "அதுசரி, எங்க வீட்டிலே ஒன்பது கோழி இருக்கு, உங்க வீட்டிலே இருக்கா?" என்று ஒரு போடு போட்டான்.

ராமசாமியும் தயங்கவில்லை: "நாங்கள் உங்களைப் போலக் கோழி அடிச்சுச் சாப்பிட மாட்டோம். நாங்க எதுக்குக் கோழி வளக்கணும்? அதுதான் எங்க வீட்டிலே கோழி இல்லே" என்றான்.

"அதெல்லாம் சும்மா. ஒன்பது கோழி இருக்கா, இல்லையா?" என்று ஒரே பிடிவாதமாகக் கேட்டான் செல்லையா.

ராமசாமிக்குப் பதில் சொல்ல முடியவில்லையே என்றுகூட வருத்தமில்லை. மற்றப் பிள்ளைகள் எல்லோரும் ஒன்று கூடிக்கொண்டு, அவனைப் பரிகாசம் செய்ததை அவனால் தாங்க முடியவில்லை. அழுகை வரும்போல இருந்தது. அதனால், எல்லோரையும்விட வேகமாக நடக்க ஆரம்பித்தான். மற்றப் பிள்ளைகளும் அதே வேகத்தில் நடந்தார்கள். சிறு குழந்தையாக இருக்கும் மங்கம்மாளால் அதே வேகத்தில் நடக்க முடியாது; அதனால் ஓடினாள்.

சிற்சில குழந்தைகள் தங்கள் தங்கள் வீட்டுக்கு நேராக வந்த மாத்திரத்தில் கூட்டத்திலிருந்து விலகி வீட்டுக்குப் போய்விட்டார்கள். கூட்டம் குறையக் குறைய ராமசாமியின் அவமானமும் குறைந்துகொண்டு வந்தது.

மேலத் தெருவுக்குள் நுழையும்போது, ராமசாமியும் அவனுடைய எதிர்கட்சியைச் சேர்ந்த மூவரும்தான் மிஞ்சினார்கள். ஏனென்றால், அந்தக் குக்கிராமத்துப் பள்ளிப் பிள்ளைகளில், இவர்களுடைய வீடுகள்தான் மேலத் தெருவில் இருந்தன.

ராமசாமியின் வீடு முதலாவதாக 'வந்தது'. 'தப்பினோம் பிழைத்தோம்' என்று வீட்டுக்குள்ளே பாய்ந்தான் ராமசாமி. உடனே, வீதியில் நின்ற அந்த மூவரும், "தோத்தோ காயே!" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டும், கையால் சொடக்குப் போட்டுக்கொண்டும் நின்றார்கள்.

அப்போது வீட்டுக்குள்ளிருந்து ஒரு மீசைக்காரன், தலைப்பாக் கட்டுடன் வெளியே வந்தான். அவன், ராமசாமியின் வீட்டு வேலைக்காரர்களில் ஒருவன். குழந்தைகள் மூவரும் கிழிந்துபோன அழுக்குத் துணியுடனும், பரட்டைத் தலையுடனும் தெருவில் நின்று, ஒரே குரலில், "தோத்தோ காயே!" என்று சொல்லுவதைப் பார்த்து, "சீ, கழுதைகளா! போறீங்களா, என்னமும் வேணுமா?" என்று சீறினான். மூன்று பேரும் நாலுகால்ப் பாய்ச்சலில் ஓடிவிட்டார்கள். அவர்கள் போன பிறகு, "பிச்சைக்காரக் கழுதைகள்! 'தோத்தோ! ...காயே!' ......கழுதைகள்!" என்று தனக்குத்தானே ஏகத்தாளமாகச் சொல்லிக் கொண்டு, தன் வேலையைக் கவனிக்கப் போனான்.

செல்லையா, தம்பையா, மங்கம்மாள்—மூன்று பேரும் நெஞ்சோடு புத்தகக் கட்டுகளை அணைத்துக்கொண்டு வீடு சேரும்போது, அவர்களுடைய தாயார் தாயம்மாள், வாசல் பெருக்கித் தண்ணீர் தெளித்துக்கொண்டிருந்தாள்.

மங்கம்மாள் ஒரே ஓட்டமாக ஓடி, "அம்மா......!" என்று தாயம்மாளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டாள். குனிந்து வாசல் தெளித்துக்கொண்டிருந்த தாய், செல்லமாக "ஐயோ!......இதென்னடா இது!" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு அழுவது போலச் சிரித்தாள்! அம்மா 'அழுவ'தைக் கண்டு மங்கம்மாளுக்கு அடக்க முடியாதபடி சிரிப்பு வந்தது!

"ஐயா வந்துட்டாரா அம்மா?" என்று தம்பையா கேட்டான். அப்பாவைத்தான் ஐயா என்று அந்தக் கிராமத்துப் பிள்ளைகள் குறிப்பிடுவார்கள்.

"வரலையே !" என்று பொய் சொல்லிவிட்டு, பொய்ச் சிரிப்பும் சிரித்தாள் தாயம்மாள்.

"நிஜம்மா ?" என்று கேட்டான் தம்பையா.

"நிஜம்ம்ம்மாத்தான் !" என்று சொன்னாள் தாயம்மாள். அப்புறம் சிரித்தாள்.

மங்கம்மாள் விறுவிறு என்று அம்மாவுக்கு முன்னால் வந்து நின்றாள். வலது கையிலிருந்த புத்தகக்கட்டை இடது கையில் இடுக்கிக்கொண்டாள். வலது கையின் ஆள்காட்டி விரலை மூக்கின் மேலும், புருவங்களுக்கு மத்தியிலும் வைத்துக்கொண்டு, முகத்தையும் ஒரு பக்கமாகத் திருப்பிக்கொண்டு, "அம்மா !......எனக்குத் தெரிஞ்சு போச்சு !.......நீ பொய் சொல்றே !...... ஐயா வந்துட்டாரு !" என்று நீட்டி நீட்டிச் சொன்னாள்.

தாயம்மாளுக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. பல்லை இறுகக் கடித்துக்கொண்டு, "போக்கிரிப் பொண்ணு !" என்று மங்கம்மாளின் கன்னத்தைக் கிள்ளினாள்.

செல்லையா மிகவும் ஆழமான குரலில், "ஐயா வரல்லையாம்மா?" என்று கேட்டான். அவன் குரலில் சோகம் ததும்பி, ஏமாற்றம் இழையோடியிருந்தது.

தாயம்மாள் வீட்டுக்குள் நுழைந்தாள். மூலையிலிருந்த ஒரு ஜாதிக்காய்ப் பெட்டியைச் சுட்டிக்காட்டி, "அந்தப் பெட்டியைத் திறந்து பாரு, மங்கம்மா" என்றாள்.

மூவருமே ஓடிப்போய் பெட்டியைத் திறந்தனர்.

பெட்டிக்குள்ளே இருந்த ஜவுளிப் பொட்டணத்தை வெளியே எடுத்து அவிழ்த்துப் பார்த்தனர். மறுநாள் விடிந்த பிறகு ஆரம்பமாகும் தீபாவளி, குழந்தைகளுக்கு அப்பொழுதே ஆரம்பித்துவிட்டது. ஒரே குதூகலம்! ஒவ்வொரு துணியாக எடுத்து 'இது யாருக்கு, இது யாருக்கு' என்று இனம் பிரித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

பொட்டணத்தில் இரண்டு மல் பனியன்களும், இரண்டு கால் சட்டைகளும், ஒரு பாவாடையும், ஒரு பச்சை நிறமான சட்டையும், ஒரு நான்கு முழ சரிகைச் சிட்டைத் துண்டும் இருந்தன.

துண்டைத் தவிர மற்ற உருப்படிகள் இன்னின்னாருக்குத்தான் என்று குழந்தைகளே பங்கு போட்டுவிட்டார்கள். துண்டு யாரைச் சேருவது என்று தெரியவில்லை. உடனே செல்லையா கேட்டான்: "துண்டு யாருக்கம்மா ?"

"ஐயாவுக்கு" என்றாள் தாயம்மாள்.

"அப்பாவன்று உனக்கு?" என்று மங்கம்மாள் கேட்டாள்.

தாயம்மாள் சிரித்துக்கொண்டு, "எனக்குத்தான் ரெண்டு சேலை இருக்கே, இன்னும் எதுக்கு? எல்லாருக்கும் புதுத் துணி எடுக்க நாம என்ன பணக்காரரா?"

"ஐயாவுக்கு மட்டும் பிறகு புதுத்துண்டு எதுக்காம்?" என்றாள் மங்கம்மாள்.

"வாயாடி! வாயாடி!...ஐயாவுக்கு ஒரு துண்டுகூட இல்லை. துண்டு இல்லாமலே எத்தனை நாளைக்குப் பழைய வேட்டியை உடம்பிலே போட்டுட்டு அலையறது?" என்று சொல்லிவிட்டு, மங்கம்மாளைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டாள் தாய்.

அந்தி மயங்கி, இருட்டத் தொடங்கியது. விளக்கேற்றுவதற்காகத் தாயம்மாள் எழுந்தாள்.

## 2

விளக்கேற்றி விட்டுக் குழந்தைகளை வெந்நீரில் குளிப்பாட்டிவிட்டாள். ஐப்பசி மாதமானதால் அநேகமாக நாள் தவறாமல் மழை பெய்திருந்தது. பூமி குளிர்ந்து ஜில்லிட்டுவிட்டது; காற்றும் ஈரக்காற்று. இதனால் வெந்நீரில் குளித்துவிட்டு வந்த குழந்தைகளை ஈரவாடை அதிக வேகத்துடன் தாக்கியது. எல்லோரும் 'குடுகுடு' என்று முற்றத்திலிருந்து வீட்டுக்குள்ளே ஓடிவந்துவிட்டார்கள்.

குழந்தைகள் சாப்பிடும்போதுதான், அவர்களுடைய அப்பா பக்கத்துக் கிராமத்துக்கு ஒரு தூரபந்துவின் திடீர் மரணத்தை முன்னிட்டுச் சென்றிருப்பதாகவும், மறுநாள் மத்தியானத்துக்குள் வந்துவிடுவார் என்றும், வரும்வரை காத்திருக்காமல் குழந்தைகளோடு தீபாவளி கொண்டாடிவிட வேண்டும் என்று அவர் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் என்றும் தாய் தெரிவித்தாள்.

சாப்பாடு முடிந்தது; சாப் பாடம் படிக்க மாடக் குழியில் இருந்த அகல் விளக்கைத் தூண்டிவிட்டுக்கொண்டு அதன் முன்னால் மூன்று பேரும் உட்கார்ந்தார்கள்.

தாயம்மாள் சாப்பிட்டுவிட்டு, எச்சில் கும்பாக்களைக் கழுவ முற்றத்துக்கு வந்தாள். முற்றத்தின் மூலையில், கொஞ்ச தூரத்துக்கு அப்பால் ஒரு முருங்கைமரம் உண்டு. அதன் நிழலில் கறுப்பாக ஓர் உருவம் தெரிந்தது. பக்கத்து வீட்டு நாயாக இருக்கும் என்று நினைத்து உள்ளே வந்துவிட்டாள்.

மண் தரையில் முந்தானையை விரித்து ஒருக்களித்துப் படுத்துக்கொண்டு, குழந்தைகள் உரக்கச் சத்தம் போட்டுப் பாடம் படிப்பதைக் கேட்டுக்கொண்டிருந்தாள் தாய். சிறிது நேரத்தில், "தரை என்னமாக் குளிருது! ராத்திரி எப்படிப் படுத்துக்கிறது?" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டே எழுந்து உட்கார்ந்தாள். அவளுடைய உடம்பு அவளுடைய ஸ்பரிசத்துக்கே 'ஜில்'லென்றிருந்தது.

தம்பையா, அண்ணனைப் பார்த்து, "துணைக்கு வர்றயா?" என்று கூப்பிட்டான். இருட்டானதால் வீட்டு முற்றத்துக்குப்போய் ஒன்றுக்குப் போய்விட்டுவர அவனுக்குப் பயம். செல்லையா துணைக்குப் போனான். இந்தச் சிறுவர்களின் கண்ணிலும் முருங்கைமரத்தடியில் இருந்த கருப்பு உருவம் தென்பட்டது. அதைப் பார்த்துப் பயந்து போகாமல் இவர்கள் தைரியமாக நின்றதற்குக் காரணம், ராமசாமியின் வீட்டை நோக்கிப்போகும் இரண்டுபேர் இரண்டு 'பெட்ரோமாக்ஸ்' விளக்குகளைக் கையில் எடுத்துக்கொண்டு போனதுதான். ஆள் நடமாட்டமும், விளக்கு வெளிச்சமும் சேர்ந்து தைரியம் கொடுத்தன. இருவரும் கருப்பு உருவத்தைக் கூர்ந்து பார்த்தார்கள்.

அது இவர்களைப்போன்ற ஒரு சிறுவனுடைய உருவம்தான்.

உடனே, இருவரும் பக்கத்தில் போனார்கள். அப்பொழுது மழை லேசாகத் தூற ஆரம்பித்தது. அதனால், முருங்கை மரத்துக்குக் கீழாகப்போய் நின்றுகொண்டு, அந்தச் சிறுவனுடைய நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

அவனுக்கு வயது எட்டு அல்லது ஒன்பது இருக்கும். அவன் உடம்பில் அழுக்கடைந்த கௌபீனம் ஒன்றைத் தவிர, வேறு உடைகள் கிடையாது. தரையில் உட்கார்ந்தால் குளிரும் என்று, பாதங்கள் மட்டும் தரையில் படும்படியாக அவன் குந்திக்கொண்டிருந்தான். அவனுக்கு முன்னால் மூன்று எச்சில் இலைகள். கிராமத்தில் வெண்கலக் கும்பாவில் சாப்பிடாமல், இலைபோட்டுச் சாப்பிடுகிற வீடு ராமசாமியின் வீடுதான். அந்த வீட்டின் வாசலிலிருந்துதான் அந்த எச்சில் இலைகளை எடுத்துக்கொண்டு வந்து, அவற்றில் ஒட்டிக்கொண்டிருந்த பருக்கைகளையும், கறி வகைகளையும் எடுத்து வாயில் போட்டுக்கொண்டிருந்தான்.

செல்லையாவோ, தம்பையாவோ ஒன்றும் சொல்லாமல், வெறுமனே பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

ஏற்கனவே யாரோ கடித்துச் சவைத்துத் துப்பிய முருங்கைக் காய்த் துண்டுகளில் ஒன்றை இலையிலிருந்து எடுத்தான் சிறுவன். அதை இரண்டாம் தடவையாகக் கடிக்க ஆரம்பித்தான்.

"ஓ! எச்சி!......தூப்!......" என்று சொல்லிவிட்டுக் கீழே 'தூ' என்று துப்பினான் தம்பையா.

சிறுவன் ஏறிட்டுப் பார்த்துவிட்டுப் பழையபடியும் குனிந்து கொண்டான். செல்லையாவுக்குத் திடீரென்று ஏதோ உதயமானது போல், "டேய்! ஏண்டா எங்க வீட்டு வாசலிலே உட்கார்ந்திருக்கே? போடா ......" என்று அதட்டினான்.

சிறுவன் போகாவிட்டாலும் பயந்துவிட்டான்; அதனால் இடது கையால் தலையைச் சொறிந்துகொண்டு, அதிவேகமாக இலையை வழித்தான்.

"உங்க வீட்டுக்குப் போயேன்" என்றான் தம்பையா.

மழை பலமாகப் பிடித்து விடும்போல இருந்தது. அதற்குள்ளாக அவனை விரட்டிவிட்டு, வீட்டுக்குள் ஓடி விடவேண்டும் என்று செல்லையாவும் தம்பையாவும் முடிவு கட்டினார்கள்.

"போடா......இல்லாட்டி உன்மேலே துப்புவேன்" என்றான் தம்பையா.

சிறுவன் எழுந்திருக்கும் வழியைக் காணோம்.

அவனைக் காலால் மிதிக்க வேண்டுமென்று தம்பையா தீர்மானித்தான்.

மழை 'சடசட'வென்று பெய்ய ஆரம்பித்துவிட்டது.

வெளியே போன குழந்தைகள் மழையில் என்ன செய்துகொண்டிருக்கின்றார்கள் என்ற நினைப்புடன் தாயம்மாள் வெளியே ஓடி வந்து, "செல்லையா!......" என்று கூப்பிட்டாள்.

"ம்ம்" என்று பதில் வந்தது.

"இருட்டிலே அங்கே என்ன பண்றீங்க?" என்று சொல்லிக் கொண்டே மரத்தின் பக்கமாக வந்துவிட்டாள். அங்கே வந்து, நின்று யோசிப்பதற்கு நேரமில்லை. மழை. ஆகவே, மூன்று பேரையும் அவசர அவசரமாக வீட்டுக்குள்ளே அழைத்துக் கொண்டு ஓடி வந்தாள்.

சிறுவன் விளக்கு வெளிச்சத்தில் வந்து நின்றான். அவனுடைய உடம்பெல்லாம் ஒரே சிரங்கு. தலையில் பொடுகு வெடித்து, பாம்புச் சட்டை மாதிரி தோல் பெயர்ந்திருந்தது. பக்கத்தில் வந்து நின்றால், ஒரு மாதிரி நார்வாடை. இந்தக் கோலத்தில் நின்றான் சிறுவன்.

"இது யாரம்மா?" என்று மங்கம்மாள் திகைப்போடு கேட்டாள்.

"யாரோ ? யார் பெத்த பிள்ளையோ ?" என்று சொல்லிவிட்டு, மழையில் நனைந்த குழந்தைகளைத் துவட்டப் பழைய துணியை எடுக்கப்போனாள். அவள் மறுபக்கம் திரும்பியதும், தம்பையா அம்மாவுக்குக் கேட்காமல், வாய்க்குள்ளேயே "போடா" என்று பயமுறுத்தினான்.

செல்லையா, 'போ' என்று அவனைப் பிடித்துத் தள்ளினான்.

இவர்கள் இருவரையும் பார்த்து மங்கம்மாளும் அர்த்தமில்லாமல் 'போயேன்' என்று சிணுங்கிக்கொண்டே சொன்னாள்.

அவ்வளவுதான், திடீரென்று மடை திறந்தமாதிரி, 'கோ'வென்று அழுதுவிட்டான் சிறுவன். விஷயம் என்னவென்று தெரியாமல் பதைபதைப்புடன் ஓடிவந்தாள் தாயம்மாள்.

"ஏண்டா அழுகிறே ? சும்மா இரு. அவனை என்ன சொன்னீங்க ?" என்று தன் குழந்தைகளைக் கேட்டாள்.

"அவன் போ'ன்னு, போகமாட்டேங்கிறான்" என்று புகார் பண்ணுவதைப்போலச் சொன்னாள் மங்கம்மாள்.

"சீ, அப்படி எல்லாம் சொல்லக்கூடாது !......நீ சும்மா இரு. அழாதேப்பா" என்று சொல்லிச் சிறுவனைத் தேற்றினாள்.

சிறுவன் அழுகையை அப்படியே நிறுத்திவிட்டான். ஆனால், பெருமூச்சு விடுவதை மட்டும் அவனால் நிறுத்தமுடியவில்லை.

"சும்மா இரு தம்பி !......அழாதே !" என்று இரண்டாவது தடவையும் தாயம்மாள் சொன்னாள்.

பழைய துணியைக் கொண்டு செல்லையாவும், தம்பையாவும் உடம்பைத் துடைத்துக்கொண்டார்கள். உடனே மங்கம்மாள் தம்பையாவைப் பார்த்து, "பாவம்! அவனுக்கும் குடு!" என்றாள்.

தம்பையா துணியைக் கொடுத்தான்.

"நீ சாப்பிட்டாயா ?" என்று தாயம்மாள் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"அவன் எச்சிலைச் சாப்பிடுகிறான், அம்மா. ராமசாமி வீட்டிலிருந்து எச்சிலையை எடுத்துவந்து சாப்பிடுறான். அசிங்கம் !" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு சொன்னான் தம்பையா. குழந்தைகள் எல்லோரும் சிரித்தார்கள்.

"இந்தா தம்பையா ! இனிமே அப்படிச் சொல்லாதே !......" என்று அதட்டிவிட்டு, "நீ யாரப்பா ? உனக்கு எந்த ஊரு ?" என்று தாயம்மாள் சிறுவனை விசாரித்தாள்.

"விளாத்திகுளம்" என்றான் சிறுவன்.

" உனக்குத் தாய் தகப்பன் இல்லையா ?"

" இல்லை."

" இல்லையா ?" என்று அழுத்திக் கேட்டாள் தாயம்மாள்.

" உம்......செத்துப்போயிட்டாக."

" எப்போ, தம்பி ?"

" போன வருசம் அம்மா செத்துப் போயிட்டா. ஐயா, நான் சின்னப்பிள்ளையா யிருக்கும்போதே செத்துப் போயிட்டாராம்."

" உனக்கு அண்ணன் தம்பி ஒருத்தரும் இல்லையா ?"

" இல்லை."

உடனே தம்பையா கேட்டான் :

" தங்கச்சியும் இல்லையா ?"

" இல்லை."

" பாவம் " என்று சொல்லிவிட்டுத் தம்பையா நிறுத்திக் கொண்டான்.

" இங்கே எதுக்கு வந்தே ?" என்று தாயம்மாள் கேட்டாள்.

" கழுகுமலைக்குப் போறேன்."

" அங்கே ஆரு இருக்கா ?"

" அத்தை" என்று பதில்சொன்னான் சிறுவன். அவன்விளாத்தி குளத்திலிருந்து கால்நடையாகவே நடந்து அந்தக் கிராமம் வரையிலும் வந்திருக்கிறான். இந்த இருபதுமைல் பிரயாணத்துக்கு நான்கு நாட்கள் ஆகிவிட்டன. நான்காவது தினத்தில்தான் இந்தக்கிராமத்தில் வந்து தங்க நேர்ந்தது. அதுவும் பொழுது இருட்டிவிட்டதனாலும் பசியாக இருந்ததனாலும்தான். மறுநாள் விடிந்தபிறகு, எட்டுமைல் தூரம் நடந்து கழுகுமலைக்குப் போனால், அவனுடைய அத்தை தன் வீட்டில் அவனை வைத்துக்கொள்ளுவாளா விரட்டிவிடுவாளா என்பதும் அவனுக்குத் தெரியாது. அத்தையையும் அவன் பார்த்ததில்லை. எப்படியோ ஒரு வழியில் அவனுக்கு அவன் அத்தை என்றும், ' அங்கே போ ' என்றும் யாரோ சொல்ல, அதை நம்பிக் கொண்டு அந்தச் சிறுவன் விளாத்திகுளத்திலிருந்து கால்நடையாக நடந்து வந்திருக்கிறான்.

மேற்கண்ட விவரங்களை எல்லாம் சிறுவனுடைய வாய்மொழி மூலமாகவே தாயம்மாள் அறிந்துகொண்டாள்.

" உன் பேரு என்ன ?" என்று கடைசியாகக் கேட்டாள் தாயம்மாள்.

" ராஜா " என்றான் சிறுவன்.

அப்புறம் அவனுக்குச் சாப்பாடு போட்டாள். அவன் சாப்பிட்ட பிறகு, குழந்தைகளுக்குப் படுக்கையை எடுத்து விரித்தாள். மண் தரை ஈரச் சதசதப்புடன் இருந்ததால், வெறும் ஓலைப்பாயை விரித்துப் படுப்பதற்கு இயலாமல் இருந்தது. அதனால், கிழிந்துபோய்க் கிடந்த மூன்று கோணிப் பைகளை எடுத்து உதறி விரித்து அதன் மேல், வீட்டிலிருந்த இரண்டு ஓலைப் பாய்களையும் பக்கம் பக்கமாக விரித்தாள். ராஜு தெற்குக் கோடியில் படுத்துக்கொண்டான். அவனுக்குப் பக்கமாக செல்லையாவும், அப்புறம் தம்பையாவும் படுத்துக்கொண்டார்கள். தம்பையாவின் உடம்பு இரண்டு பாய்களிலுமே பாதி பாதி படிந்திருந்தது. வடகோடியில் தாயம்மாளும் மங்கம்மாளும் படுத்துக்கொண்டார்கள்.

எங்கோ தூரத்தில், ஒரு வீட்டில் சீனிவெடி வெடிக்கும் சப்தம் கேட்டது. தீபாவளி மறு நாளானாலும், யாரோ ஒரு அதிருஷ்டக்கார பையன் அப்பொழுதே வேட்டுப் போட ஆரம்பித்துவிட்டான்.

வேட்டுச் சப்தம் கேட்டதும், "எனக்கு மத்தாப்பு......" என்றாள் மங்கம்மாள்.

"எனக்கும்......" என்றான் தம்பையா.

"கம்மனிட்டே அதுக்கெல்லாம் பணம் ஏது, மங்கம்மா? ராமசாமி பணக்காரன். அவனுக்குச் சரி, எவ்வளவு வேட்டுன்னாலும் போடுவான்......"

"ஊஹூம். எனக்கு மத்தாப்பு......" என்று முரண்டு பண்ணினாள் மங்கம்மாள்.

"வம்பு பண்ணாதே, சொன்னாக் கேளு. மத்தாப்பு கொளுத்தினா வயிறு நிறையுதா? காலையிலே உனக்கு தோசை சுட்டுத் தாரேன். நிறையச் சாப்பிடு. மத்தாப்பு எதுக்கு?"

மங்கம்மாள் தன் முரண்டை நிறுத்தவில்லை; அழுவதுபோல சிணுங்க ஆரம்பித்தாள்.

செல்லையா தூங்கிவிட்டான்.

அப்போது, தெருவில் ஆட்கள் நடந்துசெல்லும் சந்தடி கேட்டது.

'சமீன் வந்து இறங்குறதுன்னு லேசா?' என்று தாயம்மாள் தனக்குள்ளாகவே நினைத்துக்கொண்டு, "மங்கம்மா! நீ நல்ல பிள்ளை! பிடிவாதம் பண்ணாதே. அடுத்த வருசம் நிறைய மத்தாப்பு வாங்குவோம். இந்த வருசம் நாம் எவ்வளவு சங்கடப் பட்டோம்'னு உனக்குத் தெரியாதா?" என்றாள். அப்புறம் அவளால் சரியாகப் பேசமுடியவில்லை. வாய் குளறியது. மங்கம்மாளைப் பார்த்துத்

தான் அவள் பேசினாள். ஆனால், அவள் உண்மையில் தன்னுடைய தாயாரிடத்திலோ, தன்னை உயிருக்கு உயிராகப் பேணி வளர்த்த ஒரு கிழவியிடத்திலோ, தான் வருஷக் கணக்கில் அனுபவித்த துயரங்களைக் கண்ணீரும் கம்பலையுமாகச் சொல்லுவது போலவே பேசினாள். ஒரு நீண்ட பெருமூச்சுடன், " மங்கம்மா !... நீ கூட ஒருநாள் சாப்பாடு இல்லாமே பள்ளிக்கூடம் போனியே, கண்ணு. உன் வயித்துக்குக் கூட அன்னிக்கு ஒருவாய் கூழு கெடைக்கல்லியே ! (அவளுக்குக் கண்ணீர் வந்துவிட்டது) சாப்பாட்டுக்கே கஷ்டப்படும்போது நீ மத்தாப்புக் கேக்கலாமா, கண்ணு ? பேசாமப் படுத்துத் தூங்கு " என்று தேற்றினாள். மங்கம்மாளைப் பரிவோடு தடவிக் கொடுத்தாள்.

" ஒரு மத்தாப்பாவது வாங்கித் தா " என்றாள் மங்கம்மாள்.

அழுகையுடனும், துயரச் சிரிப்புடனும் தாயம்மாள் சொன்னாள் : " நீதானே இப்படிப் பிடிவாதம் பண்றே ? அந்தப் பையனைப் பாரு, அவன் மத்தாப்பு கேக்கறானா ?...... சோறு கிடைக்காமே, எச்சிலையைக்கூட எடுத்துத் தின்கிறான்...அவன் சோறு வேணும்'னு கூட அழல்லே, நீ மத்தாப்பு வேணும்'னு அழுறே மங்கம்மா !......"

மங்கம்மாளுக்கு அவன்மேல் கோபம் வந்துவிட்டது. அவனைப் புகழ்ந்து, தன் கோரிக்கையைத் தாயார் புறக்கணித்துக்கொண்டு வருவது அவளுக்குப் பிடிக்கவில்லை. உடனே, " அவனுக்கு ஒரே திமிரு !" என்று இட்டுவது போலக் கடுமையாகச் சொன்னாள்.

" அவனுக்குத் தாய், தகப்பன் இருந்தா அப்படி இருப்பானா ? தாயில்லாப் பிள்ளைன்னு யாரு கவனிப்பா ? அவனோட அம்மா, முன்னாலே, அவனுக்குத் தீபாவளிக்குப் புதுவேட்டி, புதுச்சட்டை எல்லாம் வாங்கிக் குடுத்திருப்பா ! மத்தாப்பும் வாங்கிக் குடுத்திருப்பா. இப்போ, அவன் அதை எல்லாம் நினைச்சுக் கேக்கிறானா, பாரு."

" இப்போ அவன் தூங்கிட்டான். காலையிலே கேப்பான் " என்று சொல்லிவிட்டு மங்கம்மாள் சிணுங்கினாள்.

தாயம்மாளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. " வாயாடி !" என்று சொல்லி மங்கம்மாளின் கன்னத்தைச் செல்லமாகக் கிள்ளினாள்.

சீனிவெடிச் சப்தம் பழையபடியும் கேட்டது.

" வாடையடிக்கம்மா " என்று அரைத் தூக்கத்திலேயே சொன்னான் தம்பையா.

தாயம்மாளுக்குத் திகைப்பாக இருந்தது. " எதை மூடிக்கிறது ? உம்... " என்று ஒருகணம் யோசித்தாள். அப்புறம், " என்

பிள்ளைகளை விடவா அந்தப் பித்தல் பெரிசு?" என்று சொல்லிக் கொண்டே எழுந்துபோய், மறுநாள் கட்டிக்கொள்ளுவதற்காகத் துவைத்து உலர்த்தி மடித்து வைத்திருந்த—உண்மையில் 'பித்தல்' இல்லாத—காட்டுச் சேலையை எடுத்துக்கொண்டு வந்து ராஜா உட்பட எல்லோருக்கும் சேர்த்துப் போர்த்தினாள்.

மங்கம்மாளைப் பார்த்து, "சரி, படுத்துக்கோ. காலையிலே எப்படியும் வாங்கித் தாரேன்" என்று சொல்லி அவளை உறங்கப் பண்ணுவதற்கு முயன்றாள்.

மூன்றாவது தடவையாகவும் சீனிவெடியின் சப்தம் கேட்டது.

தாயம்மாள் தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்: "இன்னிக்கி யாரும் அங்கே தூங்கமாட்டாங்க போலிருக்கு! உம், அரமனைக் காரியம்! ஆளு போறதும் வாரதுமாக இருக்கு. ராமசாமியும் தூங்காம வேட்டுப் போடுறான்!"

ராமசாமியின் அக்காளைக் கல்யாணம் பண்ணிக்கொண்டவன் ஒரு ஜமீன்தாரின் மகன். அந்த வருஷம் தலைதீபாவளிக்காக அவனை அன்று மாலையில் அழைத்து வந்திருந்தார் ராமசாமியின் தகப்பனார். அந்த ஊரில் மட்டுமல்லாமல் அந்த வட்டாரத்திலேயே அவர்தான் பெரிய மிராசுதார். ஜமீன்தார் வீட்டு மாப்பிள்ளையை, எதிர்கால ஜமீன்தாரை, மிகவும் கோலாகலமாக அழைத்து வந்து தீபாவளி நடத்த அநேக தினங்களாகவே அவர் வீட்டில் ஏற்பாடுகள் நடந்து வந்தன. தீபாவளிக்கு முதல்நாள்தான் மாப்பிள்ளை வந்து இறங்கினான். அதற்கு முன் பத்துப் பதினைந்து நாட்களாக, ஒரு நிமிஷத்திற்கு ஒன்பது தடவை, "ராஜா வர்ரார், சிறப்பாச் செய்யணும்; ராஜா வர்ரார், சிறப்பாச் செய்யணும்" என்று அவர் சொல்லிக்கொண்டே இருந்தார். உண்மையில் வெகு சிறப்பாகத்தான் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன......

"மங்கம்மா!"

பதில் இல்லை; தூங்கிவிட்டாள்.

தாயம்மாளும் அகல் விளக்கை அணைத்துவிட்டுத் தலையைச் சாய்த்தாள்.

## 3

முதல் கோழி கூப்பிட்டதும் தாயம்மாள் கண்விழித்துவிட்டாள்.

அப்போது மணி நாலு ஆகவில்லை. நல்ல வேளையாக மழை அப்போதுதான் நின்றிருந்தது. சிறு தூவானம் மட்டும், ஓலைக்

கூரையில் விழுவது, ஒரே சீரான தாளத்துடன், சோளம் பொரிவது போலக் கேட்டுக் கொண்டிருந்தது. அந்தத் தெருவில் வேறு சில வீடுகளில் ஏற்கெனவே எழுந்து, தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடத் தொடங்கிவிட்டதற்கு அடையாளமாக வேட்டுச் சப்தமும், வேட்டுச் சப்தத்தைக் கேட்டுப் பயந்து, நாய்கள் குரைக்கும் சப்தமும் கேட்டுக்கொண்டிருந்தன.

தாயம்மாள் எழுந்து விளக்கை ஏற்றினாள். பழையபடியும் மழை பிடித்துவிடக்கூடாதே என்று அவளுக்குப் பயம். அதனால் குழந்தைகளை எழுப்பி, விறுவிறு என்று குளிப்பாட்டிவிட்டு, மற்ற வேலைகளைக் கவனிக்கலாம் என்று திட்டம் செய்தாள். குழந்தைகளுக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்க மனமில்லை. கடைசியில் முனகிக்கொண்டும், புரண்டு படுத்துக்கொண்டும் ஒருவழியாக எழுந்துவிட்டார்கள். அவள் ஒவ்வொரு குழந்தையாக எண்ணெய் தேய்த்துவிட்டாள். ஆனால், ராஜா மட்டும் எண்ணெய் தேய்த்துக் கொள்ள முடியாது என்று சொல்லித் தூரத்தில் போய் உட்கார்ந்து கொண்டான். தீபாவளிக்கு எண்ணெய் தேய்த்துக் குளிக்காவிட்டால் தோஷம் என்று சொன்னாள் தாயம்மாள். ராஜாவுக்கோ, என்ன சொன்னாலும் காதில் ஏறவில்லை.

“ அரப்பு காந்தும்; நான் மாட்டேன்” என்று பிடிவாதமாகச் சொன்னான் ராஜா.

“ அரப்புப் போடல்லே; சீயக்காய் போட்டுக் குளிப்பாட்டுறேன். குளிர்ச்சியா யிருக்கும்.”

“ ஊஹூம்.”

“ தம்பி, சொன்னாக் கேளுடா. என்னை உன் அம்மான்னு நெனைச்சுக்கோ. உனக்குக் காந்தும்படியா நான் தேய்ப்பனா ?.....வா, எண்ணெய் தேய்ச்சுக் குளி. இந்தத் தீபாவளியோடே பீடை எல்லாம் விட்டுப்போகும். குளிக்காம இருக்கக்கூடாதப்பா.”—இப்படி வெகுநேரம் கெஞ்சிய பிறகுதான் அவன் வேறு வழி இல்லாமல் சம்மதித்தான்.

ராஜா எழுந்து வந்து மணையில் உட்கார்ந்தான். “ அதுதான் நல்ல பிள்ளைக்கு அடையாளம். ஒரு பிள்ளைக்குத் தேச்சு, ஒரு பிள்ளைக்குத் தேய்க்காமல் விடலாமா ? என் பிள்ளைகுட்டியும் நல்லா இருக்கணுமில்லையப்பா !......” என்று மற்றவர்களுக்குச் சொல்லுவது போலத் தனக்குத்தானே சொல்லிக்கொண்டே எண்ணெய் தேய்த்தாள். ‘ தாயில்லாக் குழந்தைன்னு இந்தக் கோலம்தான். நான் மூணும் வருசம் காய்ச்சலோடே படுத்திருக்கேனே, அப்போ கண்ணை மூடியிருந்தா என் குழந்தைகளுக்கும் இந்தக் கதிதானே ? அதுகளும்

தெருவிலேதானே நிக்கும்......' — இப்படி என்னென்னவோ மனதுக்குள் நினைத்துக்கொண்டு அவசர அவசரமாகக் குழந்தைகளைக் குளிப்பாட்டினாள். ஆனால், தாயம்மாள் பயபத்திரமாகச் சீயக்காய்த் தூளைப்போட்டுத் தேய்த்தபோதிலும், ராஜா பலதடவைகள் 'ஐயோ, ஐயோ' என்று அழுதுவிட்டான். அவன் அழும்போதெல்லாம் அவள், 'இன்னிக்கோடே உன் சிரங்கு குணமாயிடும்' என்று மட்டும் மாறி மாறிச் சொல்லிக்கொண்டே இருந்தாள்.

'யாரோ எவரோ? மழைன்னு வந்து வீட்டிலே ஒதுங்கிட்டான். அவனைப் போகச் சொல்ல முடியுமா? அவன் வந்த நேரம், தீபாவளியாய்ப் போச்சு. குழந்தைகளுக்குள்ளே வஞ்சகம் செய்யலாமா? பார்க்கிறவனுக்கு நான் செய்ததெல்லாம் கேலியாயிருக்கும். அவுங்க கேலி செய்தாச் செய்துட்டுப் போகட்டும். எனக்கும் என் குழந்தைகளுக்கும் பகவான் துணை செய்வான்......'

அவள், தோசை சுட்டுக் கொடுத்தாள். அவளுடைய குழந்தைகள் புதுத் துணி உடுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஆவலினால் அவசர அவசரமாகச் சாப்பிட்டார்கள். தம்பையா கடைசி தோசையைப் பாதியிலேயே வைத்துவிட்டு எழுந்துவிட்டான். அவனால் மேற்கொண்டும் இரண்டு தோசை சாப்பிட முடியும்; இருந்தாலும் அவசரம்.

தெருவில் ஜன நடமாட்டம் துவங்கிவிட்டது. மழையும் பரிபூரணமாக நின்றுவிட்டது. உதயத்தின் ஒளி சல்லாத் துணியைப்போல அவ்வளவு மெல்லியதாக ஊரையும் உலகத்தையும் போர்த்தியது.

புதுத் துணிகளுக்கு மஞ்சள் வைத்து, செல்லையாவும் உடுத்திக்கொண்டான்; தம்பையாவும் உடுத்திக்கொண்டான்; மங்கம்மாளும் பாவாடையையும் சட்டையையும் போட்டுக்கொண்டாள்.

ராஜா......

அவன் மௌனத்தோடுதான் நின்றான்.

தாயம்மாளுக்குப் 'பகீர்' என்றது. இத்தனையும் செய்தும் புண்ணியமில்லாமல் போய்விட்டதே என்று கலங்கினாள். இந்த மாதிரியான ஒரு கட்டத்தை அவள் எதிர்பார்க்கவே இல்லை. சிட்டைத் துண்டை எடுத்துக் கொடுப்பதா, கொடுக்காமல் இருப்பதா? அவள் மனதுக்குள்ளே வேதனை மிக்க போராட்டம். மாதக் கணக்கில் ஒரு ரூபாய்த் துண்டு இல்லாமல் அவளுடைய கணவன் பட்ட கஷ்டத்தையும், வீதிவழி போவதற்குக் கூசியதையும், "ஒரு துண்டு வாங்க வழியில்லையே!" என்று கணவன் துயரத்துடன் வாய்விட்டுப்

புலம்பியதையும் நினைத்துப் பார்த்தாள். இந்தத் துயரத்தின் எதிர்ப் புறத்தில், ஒன்றும் சொல்லாமல், ஒன்றும் செய்யாமல், மௌனமாக நின்றுகொண்டிருந்தான் ராஜா.

தாயம்மாளுக்குத் திக்குத் திசை தெரியவில்லை; ராஜாவின் முகத்தை எதற்கோ ஒருமுறை ஏறிட்டுப் பார்த்தாள். ராஜாவோ, வெறுமையாகக் கண்கொட்டாமல் அவளையே பார்த்த வண்ணம் நின்றுகொண்டிருந்தான்.

“என்னைச் சோதிக்கத்தான் வந்திருக்கேடா நீ!” என்று மனக்கசப்புடன் சொல்லுவதுபோலச் சொன்னாள் தாயம்மாள். ஆனால், அவளுக்கும் மனக்கசப்புக்கும் வெகு தூரம். மனதுக்குள் ஏற்பட்ட சிக்கலை விடுவிக்கவே இப்படிப்பட்ட வாசகத்தை அவள் தூக்கிப் போட்டாளே ஒழிய, அவள் சொற்களில் மனக் கசப்பின் நிழல்கூடப் படியவில்லை.

அப்போது, மங்கம்மாள் எழுந்துவந்து அம்மாவின் கன்னங்களில் தன் உள்ளங்கைகளை வைத்து, தன் முகத்துக்கு நேராக அவளுடைய முகத்தைத் திருப்பினாள்; அப்புறம் ஏதோ ரகசியத்தைச் சொல்லுவதுபோலச் சொன்னாள்:

“பாவம்! அவனுக்கு அந்தத் துண்டைக் குடு அம்மா!”

குழந்தை இந்த வார்த்தைகளைச் சொல்லி நிறுத்தினாள். ஒரு நிமிஷம் மௌனம் நிலவியது. பிறகு, திடீரென்று, தாயம்மாளின் முகம் கோரமாக மாறியது. முந்தானையால் முகத்தை மூடிக்கொண்டு, தேம்பித் தேம்பி அழுதாள். அவளுடைய பெருமூச்சும், விம்மலும் வீட்டை அடைத்துக்கொண்டு கேட்டன.

குழந்தைகளுக்கு விஷயம் விளங்கவில்லை. மங்கம்மாள், தான் அப்படிச் சொன்னதற்காகத்தான் அம்மா அழுகிறாள் என்று பயந்து விட்டாள்.

தாய், தன் பலத்தை எல்லாம் பிரயோகித்து அழுகையைத் தொண்டைக்குழியில் அழுத்தினாள்; அவள் நெஞ்சு வெடித்து விடுவதுபோல விம்மியது. கூரையும் அந்த ஒரு நிமிஷத்தில் ஜுர தோஷம் பிடித்ததுபோலக் கம்பலாகிவிட்டது.

பிறகு, தழுதழுத்துக்கொண்டே சொன்னாள்:

“தம்பையா!”

“என்னம்மா?”

“ஊம். ராஜாவுக்கு அந்தத் துண்டை எடுத்துக் குடு.”

## 4

வீட்டு முற்றத்தில் காலை வெயில் அடித்துக்கொண்டிருந்தது.

அந்தப் பொன்னொளியில், மஞ்சள் பூசிய முகத்துடன் புத்தாடை தரித்துக்கொண்டு நிற்கும் மங்கம்மாள், அப்போது எதையோ பார்த்துக் கொண்டிருந்தாள். ஈரம் காய்வதற்காக இறுக்கமின்றி 'தொள தொள' என்று சடை போடப்பட்டிருந்த நால், கூந்தல், இரண்டு காதுகளையும், கன்னங்களில் பாதியையும் மறைத்துக் கொண்டிருந்தது. பரவலாகக் கிடக்கும் கூந்தலின் நடுவே இளங்காற்றுப் புகுந்து கிளுகிளுக்கும்போது, சுகமும் கூச்சமும் தாங்க முடியாமல் சிரித்துக்கொண்டே இமைகளைக் குவித்தாள் மங்கம்மாள்.

வெகு நேரமாக, தாயம்மாள் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். சந்தர்ப்பவசமாக, அவளுக்கு நேராக மங்கம்மாள் முகத்தைத் திருப்பினாள்.

"என் ராஜாத்தி, மகாலக்ஷ்மி மாதிரி இருக்கா!" என்று தன்னை மறந்த இன்பத்துடன் சொல்லிவிட்டாள் தாய். அவ்வளவுதான், குழந்தையின் கையைப் பிடித்து வெகு வேகமாக வீட்டுக்குள்ளே இழுத்துக்கொண்டு வந்து, திருஷ்டி பரிகாரமாக அவளுடைய கன்னத்தில் துலாம்பரமாகச் சாந்துப்பொட்டை எடுத்து வைத்தாள்.

அப்புறம் மங்கம்மாள் வீதிக்கு ஓடிவிட்டாள். ராமசாமியின் வீட்டுப் பக்கம் எச்சில் இலைகள் ஏராளமாகக் கிடந்தன. அங்கே நாலைந்து பேர் நின்று பேசிக்கொண்டும், வெற்றிலை பாக்குப் போட்டுத் துப்பிக்கொண்டும் இருந்தார்கள். ராமசாமி நீலநிறமான கால் சட்டையும், அந்த ஊருக்கே புதிய புஷ்கோட்டும் போட்டுக்கொண்டு நின்றான். மங்கம்மாளைப் பார்த்ததும் அவன் பக்கத்தில் ஓடி வந்தான்; மங்கம்மாளும் அவனைப் பார்த்து நடந்தாள். இருவரும் பாதி வழியில் சந்தித்துக்கொண்டனர். சந்தித்த மாத்திரத்தில், மிகவும் சந்தோஷத்துடன் ராமசாமி சொன்னான்:

"எங்க வீட்டுக்கு ராஜா வந்திருக்கிறார்!"

ஊர்க்காரர்களைப்போல அவனும் தன் அக்காள் புருஷனை ராஜா என்று சொன்னான். ஆனால், அவன் சொன்னதற்குக் காரணம் சந்தோஷம்தானே ஒழிய, மங்கம்மாளைப் போட்டிக்கு அழைப்பதற்காக அல்ல. ஆனால், அவளோ வேறுவிதமாக நினைத்துவிட்டாள். முதல் நாள் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த

போது நடந்த போட்டிதான் அவன் ஞாபகத்தில் இருந்தது. அவன் சொன்னதற்குப் பதில் சொல்லி அவனுடைய ‘பெருமை’யை மட்டம் தட்ட வேண்டும் என்று அவன் மனம் துடித்தது. அதனால், ஒரு அரை அடி முன்னால் நகர்ந்து வந்து நின்றான். யாதொரு நினைப்பும், தயக்கமும் இல்லாமல் சாமசாமியைப் பார்த்து, சேகை சாஸ்திரியிடம் காட்டுவதுபோலக் கையை வைத்துக் கொண்டு, மிக மிக ஏளனமாகச் சொன்னான் :

“ஐயோ ! உங்க வீட்டுக்குத்தானா ராஜா வந்திருக்கிறார் ? எங்க வீட்டுக்கும்தான் ராஜா வந்திருக்கிறான். வேணும்'னா வந்து பாரு.”

# இரண்டு பெண்கள்

எனக்குக் கல்யாணமாகாதிருந்த சமயத்தில் நடந்த பல ரசமான நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. பிரமச்சாரியின் வாழ்க்கையில் ரசமான நிகழ்ச்சி என்றால், அது ஒரு பெண்ணைப்பற்றிய நிகழ்ச்சியாகத்தான் இருக்கும் என்று இதற்குள் நீங்கள் ஊகித்திருக்கலாம். ஆனால், உங்கள் ஊகத்தில் உண்மை பாதிதான் இருக்கிறது. ஏனென்றால் இது ஒரு பெண்ணைப்பற்றிய ரசமான நிகழ்ச்சியல்ல; இரண்டு பெண்களைப்பற்றிய ரசமான நிகழ்ச்சியாகும்.

மதுரையிலிருந்து திடீரென்று என்னைச் சென்னைக்கு மாற்றி விட்டார்கள். மனித வாழ்க்கைக்கு மதுரையென்றாலும் ஒன்றுதான்; சென்னையென்றாலும் ஒன்றுதான். இரண்டும் ஒன்று போலவே மோசமாக இருக்கும்போது எங்கே இருந்தால் என்ன? மதுரையிலும் வீட்டு வாடகை அதிகம்; சென்னையிலும் வீட்டு வாடகை அதிகம். மதுரையிலும் பொறுமைக்காரர்கள் உண்டு; சென்னையிலும் பொறுமைக்காரர்கள் உண்டு. மதுரையிலும் அயல் வீட்டுப் பெண்களோடு பிரமச்சாரிகள் பேசக்கூடாது; சென்னையிலும் அயல் வீட்டுப் பெண்களோடு பிரமச்சாரிகள் பேசக்கூடாது. அதே சமயத்தில், மதுரையிலும் காதலிக்க வேண்டுமென்று விரும்பாத ஆண்கள் இல்லை; சென்னையிலும் காதலிக்க வேண்டுமென்று விரும்பாத ஆண்கள் இல்லை. ஆகவே மதுரையைப் போலவே பல வகைகளிலும் மோசமாக இலங்கும் சென்னைக்கு வந்து, சிரமத்துக்கு மேல் சிரமப்பட்டு, சிபாரிசுக்கு மேல் சிபாரிசு வைத்து, அப்புறம் சிபாரிசு செய்தவர்களினால் ஏற்பட்ட சிரமங்களையும் சகித்துக் கொண்டு, எப்படியோ மயிலாப்பூரில் ஓர் அறையை வாடகைக்குப் பிடித்து விட்டேன். நல்ல அறைதான். அந்த அறையை ஒரு

பகுதியாகக் கொண்ட அந்த வீடு ஒரு தனி வீடாகும்; ஒரு வளைவுக்குள்ளே ஒரே ஒரு குழாய், ஒரே ஒரு முற்றம், ஒரே ஒரு வாசல், ஆனால் பத்து வீடுகள், நூறு ஆட்கள், ஆயிரம் சண்டைகள் என்ற கணக்கில் கட்டப்பட்ட இருட்டுக் கொட்டடிகளில் ஒன்றல்ல அந்த வீடு. வீட்டுக்காரர் தங்கமானவர். சென்னைக்கு வந்து வெகுகாலம் வரையிலும் எனக்கும் அவருக்கும் பேச்சுவார்த்தையும் கிடையாது; சண்டையும் கிடையாது. இதிலிருந்து, அடுத்தவர்கள் விவகாரத்தில் அவர் தலையிடுவதில்லை என்பது தெளிவு. இதற்கு உதாரணமாக மற்றொரு நிகழ்ச்சியைச் சொல்லி, கதையை மேற்கொண்டு சொல்லத் தொடங்கலாம். அதாவது, நான் போய்க் குடியேறுவதற்குச் சுமார் ஏழு வருஷங்களுக்கு முன், இதே அறையையும், இதற்குப் பக்கத்து அறையையும் சேர்த்து ஒருவர் வாடகைக்குப் பிடித்துத் தானும் தம் மனைவியுமாக வந்து குடியேறி வசித்து வந்தாராம். அப்புறம் சில மாதங்களுக்குப்பின் அந்தக் குடித்தனக்காரர் இரவு பத்து மணிக்குத் திடீரென்று செத்துப் போய்விடவே, அவருடைய மனைவி வேறு துணையின்றி அழுது கொண்டே இரவைக் கழித்தாளாம். ஆனால், அழுகைச் சத்தம் காதில் விழுந்தும், வேலைக்காரன் வந்து மரணச் செய்தியை அறிவித்தும்கூட, வீட்டுக்காரர் தம் குடும்ப சகிதமாக மாடியிலேயே உட்கார்ந்து ரேடியோவில் இந்துஸ்தானி இசைத்தட்டுகளைத் தான் கேட்டுக் கொண்டிருந்தாரே ஒழிய, 'என்ன? ஏது?' என்று விசாரித்துக்கொண்டு கீழே இறங்கிவரவில்லையாம். அடுத்தவர்கள் விஷயத்தில் அவர் தலையிடாததற்கு இதையே நான் தக்க உதாரணமாகப் பலரிடமும் கூறி வந்திருக்கிறேன். இப்படிப்பட்ட வீட்டுக்காரர் கிடைத்தது ஒரு வகையில் மகிழ்ச்சிக்குரிய விஷயமேயானாலும், வேறொரு வகையில் அவ்வளவாக விரும்பத்தக்கதொரு விஷயமாக எனக்குத் தோன்றவில்லை. நான் தனிக்கட்டை; பேச்சுத் துணைக்கு ஆளில்லை. அந்தத் தெருவில் எதிர் வரிசை வீடுகளிலும், பக்கத்து வீடுகளிலும் உள்ள வாலிபர்கள் என் சிநேகிதத்தையே விரும்பாதவர்கள் போல என்னைக் கண்டதும் முகத்தை மறுபக்கமாகத் திருப்பிக் கொள்ளுவார்கள். நானும் உடனே இந்தப் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொள்ளுவேன். வாலிபர்களை விட்டால் அப்புறம் இரண்டொரு கிழவர்கள். இவர்கள் என் சிநேகிதத்தை விரும்பினாலும் நான் அவர்கள் சிநேகிதத்தை விரும்பவில்லை. அவர்களோடு சிநேகம் பண்ணிக் கொண்டால் அதனால் ஏற்படும் முதல் அபாயம், எனக்குக் கல்யாணமாகாதிருக்கும் காரணத்தைச் சொல்லித் தீர்க்கவேண்டிய நிர்ப்பந்தமே. இரண்டாவது அபாயம் என்னவென்றால், என் பூர்வோத்தரங்களையெல்லாம் நான் ஞாபகப்படுத்திச்

சொல்லும்படி மனப்பாடப் பயிற்சி கொடுத்து விடுவார்கள். கிழவர்களை விட்டுவிட்டால், எஞ்சியவர்கள் கிழவிகளும், வாலிபப் பெண்களும்தான். பிரமச்சாரி, கிழவியோடு பேசினாலும், வாலிபப் பெண்ணோடு பேசினாலும் இந்த உலகம் ஒன்று போலவே சந்தேகப்படும் என்பதை நான் என் மதுரை யனுபவத்திலிருந்து (அது ஒரு ரசமான அனுபவம்) அறிந்து கொண்டிருப்பதால், கிழவிகளையும் ஒதுக்கித் தள்ளினேன்; வாலிபப் பெண்களையும் ஒதுக்கித் தள்ளினேன். அத்துடன் நிற்காமல், அயல் வீட்டுச் சிறுவர்களைக்கூட என் அறைக்கு வரவிடவில்லை. அவர்கள் வந்து போய்க் கொண்டிருந்தால், ஊர்க்காரர்கள் என்னை உடனே யாரென்று விசாரிப்பார்கள். ஆசாமி கல்யாணமாகாதவன் என்று தெரிந்து கொண்டால், என் வீட்டுக்கு வரும் ஒவ்வொரு சிறுவனும் தன் தன் அக்காளுடைய காதல் கடிதத்தைக் கொண்டு வருவதாகவே உறுதியோடு கருதி மேல் நடவடிக்கை எடுக்க ஆரம்பிப்பார்கள். அந்த நடவடிக்கை குடியைக் கெடுப்பதிலோ, அல்லது பலவந்தக் கல்யாணத்திலோ, அல்லது இந்த இரண்டையும் விடக் குறைந்த அபாயத்திலோ முடியும் என்பதை நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

நான் இப்படியாக ஆறுமாதகாலத்தை ஏகாந்த வாழ்வில் கழித்தேன். ஆறு மாதங்களுக்குப்பிறகு, அந்தத் தெருவில் வசிப்பவர்களில் ஒருவர் முதல் முதலாக என்னிடம் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள ஆரம்பித்தார். அவர்தான் என் எதிர் வீட்டுக்காரர். ஒருநாள் மாலையில் மழை பலமாகப் பிடித்துக் கொண்டது. அது இருக்க இருக்க அதிகமாகிக் கொண்டிருந்ததே ஒழியக் குறையும் வழியைக் காணோம். மணி எட்டாயிற்று; ஒன்பதாயிற்று...... இனி எத்தனை மணியானால் என்ன? ஒன்பது மணிக்கெல்லாம் சாப்பாட்டுக் கடை நாற்காலிகள் மேஜை யேறி விடும். அதனால் ஒன்பது மணிக்கு அப்பால் பெய்த மழையை நான் பொருட்படுத்தவில்லை. என்னிடம் குடை இல்லாததால் வெளியே போகமுடியவில்லை. அன்று இரவு பட்டினியோடு படுத்துக்கொண்டேன். மறுநாள் காலையில் எழுந்து நான் வாசல் பக்கம் வந்து நின்றபோது, எதிர் வீட்டுக்காரர், தம் வீட்டு வாசலுக்கு வந்தார். அப்புறம் பேசவும் ஆரம்பித்தார். சென்னைப் "படிப்பாளி"களைப்போலவே முக்கால் வாசித் தப்பு ஆங்கிலத்தைக் கலந்தே பேசினார். அதை "என் பாஷை"யில் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

"என்ன ஸார்! ராத்திரி ஒரே மழை! நீங்கள் சாப்பிடக் கூடப் போகவில்லை போலிருக்கிறதே!"

"ஆமாம்......போயிருப்பேன். ஆனால் பசியில்லை. சாயங்காலம் ஏராளமாகப் பலகாரம் சாப்பிட்டு விட்டேன். அதனால்......"

“என்ன இருந்தாலும் சாப்பாட்டினி கூடாது ஸார். கொஞ்சம் நனைந்தாலும் பரவாயில்லையென்று குடையை எடுத்துக் கொண்டு கிளம்பி விடவேண்டும். மறைக்காகப் பார்த்தோமானால்......”

நான் முட்டாள்தனமாகக் ‘குடை என்னிடம் கிடையாது’ என்று சொல்லும் நோக்கத்துடன், “குடை” என்ற சொல்லை உச்சரித்து விட்டேன். பிறகு எப்படியோ அதை மறைத்து, “குடை இந்த மழையைத் தாங்குமா?” என்று சொல்லி மழுப்பி விட்டுத் தெருவோடு வந்து கொண்டிருந்த பத்திரிகைப் பையனை ஏறிட்டுப் பார்த்தேன். அவன் காலைப் பத்திரிகையை என்னிடம் கொடுத்து விட்டுப் போனான். அதை வாங்கிக் கொண்டு அறையை நோக்கி நடக்கலானேன். அதற்குள் எதிர்வீட்டுக்காரர், “சாத்திரியே உங்களைக் கூப்பிட்டு, ‘போய்ச் சாப்பிட்டு வாருங்கள்’ என்று சொல்லலாம் என்று இருந்தேன்......” என்றார். ஆனால், அவர் ஆரம்பித்த தோரணை, “சாத்திரியே உங்களைக் கூப்பிட்டுச் சாப்பிடச் சொல்லலாம் என்று இருந்தேன்” என்று சொல்ல வருவது போல இருந்தது. நான் எதிர்பார்த்தது, வேறு விதமாக மாறி விடவே அவரை மனதிற்குள் கோபித்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தேன். அவரோ என்னைப் பின்தொடர்ந்து வந்து விட்டார். “அறை சௌகரியமாக இருக்கிறதா?”, “வாடகை என்ன?” என்று இரண்டு கேள்விகள் கேட்டார். நான் தக்க பதில்களைக் கூறினேன். அப்புறம் என் அறையில் குப்பையாகக் கிடக்கும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் பார்த்து, “அடே! எவ்வளவு புத்தகங்கள் வைத்திருக்கிறீர்கள்?” என்று ஒரு போாச்சரியத்தைத் தெரிவித்துக் கொண்டார். அப்புறம், “உங்களிடம் வந்து பத்திரிகை வாங்கிப்படிக்க வேண்டுமென்று நம் பையனுக்கு மிகவும் ஆசை. ஆனால், வருவதற்கு சங்கோஜம்” என்றார். நான் மறுகணமே பின்வரும் கேள்வியைக் கேட்டேன் :

“என்னிடம் பத்திரிகைகள் இருக்கின்றனவென்று உங்கள் பையனுக்கு எப்படித் தெரியும்?”

“எப்படியோ தெரிந்துகொண்டிருக்கிறான்! நம் வீட்டு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்திருப்பான்......”

அப்புறம் என்னென்னவோ பேசிக்கொண்டிருந்துவிட்டு, ஒரு கட்டுப் பத்திரிகைகளுடன் கிளம்பினார் எதிர் வீட்டுக்காரர். நான் கையிலிருந்த தினசரிப் பத்திரிகையைக் கீழே போட்டு விட்டுச் சிந்தனையில் ஆழ்ந்தேன்:

‘ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறானும் பையன். ஆனால், பையன் எட்டிப் பார்ப்பதை நான் பார்த்ததே இல்லை. சுமார்

பதினேழு வயதுள்ள ஒரு பெண் எட்டிப் பார்ப்பதையே நான் பார்த்திருக்கிறேன். அவள் தான் என் அறையில் பத்திரிகைகள் இருப்பதைப் பார்த்து, அவற்றைப்படிக்க விரும்பித் தம்பி மூலமாகத் தகப்பனாரை ஏவி விட்டிருக்கிறாள். பையனுக்கு என் அறைக்கு வர சங்கோஜமாவது பின்னென்றாவது! பெண்ணுக்குத்தான் சங்கோஜம் என்பதில் அணுக்கூட சந்தேகம் கிடையாது. மொத்தத்தில் ஜன்னல் வழியாக அவள் என் அறையைப் பார்க்கிறாள் என்று ஆகிறது; பார்க்கா விட்டாலும் பார்க்கச் சாத்தியம் இருக்கிறது என்று ஆகிறது. இப்படி ஒரு பெண்ணின் கவனத்திற்கு ஆளாகியிருக்கிறோம் என்பதை முட்டாள் தனமாகக் கவனிக்காமல் இருந்து விட்டோமே! ஐயோ, நான் தலைவாரிக் கொள்ளாமலும், முகக்ஷவரம் செய்து கொள்ளாமலும் தெருவழியாக சில தடவைகள் நடந்து வந்ததை அவள் பார்த்திருப்பாள் அல்லவா? இதற்கு என்ன செய்யலாம்?" என்று எண்ணி மறுகி, இனிமேல் அழகாகக் காட்சியளிக்க வேண்டுமென்று தீர்மானித்தேன். அன்று மாலையிலேயே குடை வாங்கி விட்டேன். பழைய செருப்பைக் கழற்றி அறைக்குள் எறிந்துவிட்டு, புதுச்செருப்பு வாங்கினேன். முகப் பவுடர், ஸ்னோ, கிரீம், செண்ட் முதலியவையும் வாங்கிக் கொண்டேன். அதன் பிறகு தினந்தோறும் எதிர்வீட்டுப் பெண்ணுக்கும், எந்த வீட்டுப் பெண்ணுக்கும் நான் சுந்தர புருஷனாகக் காட்சியளிப்பதில் பெரிதும் கவனம் செலுத்திவரலானேன்.

சுமார் ஒரு மாதம் கழிந்தது. இந்த ஒரு மாதகாலத்தில் எத்தனையோ முறை எதிர் வீட்டுக்காரர் என் அறைக்கு வந்து இரவலாகப் புத்தகங்களும், பத்திரிகைகளும் வாங்கிச் சென்றார்; எதிர் வீட்டுச் சிறுவன் காரண காரியமில்லாமல் வருவதும் போவதுமாக இருந்தான். அவனால் எனக்கு ஏற்பட்ட ஒரே ஒரு பிரயோஜனம் என்னவென்றால், என் புத்தகங்களும் பத்திரிகைகளும் அந்தத் தெருவில் பல வீடுகளையும் சுற்றிவிட்டே என் கைக்குத் திரும்புகின்றன என்ற விவரம் எனக்குத் தெரியவந்ததுதான். இதைக் கேட்டதும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. எப்படியும் நம் பெயர் பிரபலமடையட்டும் என்றிருந்தேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று திடீரென்று என்னுடைய அறைக்கதவை ஒருவர் தட்டினார். திறந்து பார்த்தேன். வந்து நின்றவர் எங்கள் ஊர்க்காரர். அவருக்குச் சுமார் மூன்று வருஷகாலமாகச் சென்னையில் உத்தியோகம்; ஒரு பத்திரிகையில் உதவியாசிரியர் வேலை. ஊரில் எங்கள் இருவருக்கும் நெருங்கிய நட்பும் கிடையாது; சாதாரண நட்பும் கிடையாது. ஒருவரை ஒருவர்

பார்த்தால் அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய அளவில்தான் தொடர்பு உண்டு. அதனால் அவர் வந்தது எனக்கு ஆச்சரியத்தையே உண்டு பண்ணியது.

உள்ளே வந்தார். அவரும் எதிர் வீட்டுக்காரரைப் போல என்னிடம் ஏராளமாக இருக்கும் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் கண்டு பிரமித்தார். இவ்வளவு படித்திருக்கும் நான் கதை எழுதாமல் இருப்பதைக்கண்டு அதிகமாகப் பிரமித்தார். பைத்தியக்காரர்! நான் புத்தகம் படிப்பது துணைக்கு ஆளில்லாத காரணத்தினாலும் விரைவில் தூக்கம் வருவதற்காகவும் என்பதும், கதை எழுதுவதற்கு இந்தக் காலத்தில் எவ்விதப் படிப்பும் தேவையில்லை என்பதும் அவருக்குத் தெரியாத சமாச்சாரங்கள்......

என் தகப்பனார் சமீபத்தில் இந்த ஆசிரிய நண்பருக்கு ஒரு கடிதத்தின் மூலம் என் விலாசத்தைத் தெரிவித்து, என்னை வந்து பார்க்கும்படி எழுதியிருந்ததாகச் சொன்னார் ஆசிரிய நண்பர். நான் சந்தோஷத்தை வாய்மொழி மூலமாகவும், ஒரு வெள்ளைச் சிற்றுண்டி மூலமாகவும் தெரிவித்து அவருடைய விலாசத்தை வாங்கிக் கொண்டு வழியனுப்பி வைத்தேன். அப்புறம் நான் காசு செலவழித்துப் புத்தகங்களோ பத்திரிகைகளோ வாங்குவதை நிறுத்தி, என் ஆசிரிய நண்பர் வீட்டில் போய், தேவையான புத்தகங்களை இரவல் வாங்கிக் கொண்டு வந்து, நான் படித்தாலும் படிக்காவிட்டாலும் எதிர் வீட்டுக்காரர்களுக்கும், அவர்கள் மூலம் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் இரவல் கொடுத்து வந்தேன். எனக்கு ஒரு பத்திரிகை ஆசிரியருடைய நட்பு உண்டு என்பது சில நாட்களுக்குள் வீதியில் பிரசித்தமாகி விட்டது. என் நண்பரும் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார். என் "பெருமை"யைத் தடவைக்குத் தடவை அதிகப்படுத்திக் கொண்டிருந்தது என் நண்பரின் வரவு.

நான் எண்ணில் அடங்காத புத்தகங்களை இரவல் வாங்கி இரவல் கொடுத்தும், அதிகப்படியான பிரயோஜனம் எதையும் காணவில்லை. எதிர் வீட்டு நபர்களைத் தவிர, வேறு எந்த வீட்டு நபர்களும் என்னிடம் புத்தகங்களோ பத்திரிகைகளோ கேட்க வரவில்லை. அதே சமயத்தில் பக்கத்து வீட்டுக்காரர்கள் எதிர் வீட்டுக்குப் போய் தவறாமல் என் புத்தகங்களை வாங்கிச் சென்று கொண்டிருந்தார்கள். சிரமப்படுவதெல்லாம் நான்; பெருமையைத் தட்டிக் கொள்ளுவதெல்லாம் எதிர் வீட்டு இரவல் பேர்வழிகள்! எனக்குக் கோபம் வந்து விட்டது. அதே தெருவில் உள்ள கோடி வீட்டுப் பையன் ஒருவன் எதிர் வீட்டுக்குப் போய் என் புத்தகங்களை வாங்கிச் செல்லும்போது எனக்கு வரும் கோபம் இம்மட்டு அம்மட்டு என்றில்லை.

கோடி வீட்டில் ஓர் அழகான பெண் இருந்தாள். அவளுடைய தம்பிதான் எதிர் வீட்டுக்கு வந்து போகிறவன். அந்தப்பெண்ணைப் போன்ற அழகிகள், பதினொன்று லக்ஷம் ஜனத்தொகை உள்ள சென்னையில் மொத்தம் பத்துப்பேர் இருந்தால் அதுவே ஜாஸ்தி. என் வாழ்நாளில் அப்படிப்பட்ட சௌந்தர்யவதியை நான் பார்த்ததே இல்லை. நம்மைப்பற்றி அவள் ஒருமுறை மனதில் நினைத்து விட்டாலே போதும், நாமும் அவளைப் போல அழகின் லட்சியங்களாக மாறிவிடுவோம். அப்பேர்ப்பட்ட தெய்வ கன்னிகை அந்தக் கோடி வீட்டுக் கனக விக்கிரகம். அவள்......அவள் கண்கள்...... அவள் மலர் வதனம்......ஐயோ......அவள் சாயல்......அவள் நடையழகு......அவள் மேனியின் கனக வர்ணம்......

கனக விக்கிரகத்தின் தம்பியை ஒருநாள் நான் வாய்விட்டு அழைத்தேன்; கெஞ்சினேன்; கும்பிடாத குறையாக வேண்டினேன். ஆனால் அவனோ என் அறைக்கு வரவே இல்லை. அவன் என் இருப்பிடத்திற்கு வந்தால், என் கனக விக்கிரகம் ஏதோ ஒரு ரூபத்தில் என்னிடம் வந்து சென்றதற்குச் சமானம் எனவும் கருதினேன். ஆனால் அவன் வரவில்லை. அவன் வராமல் நழுவிவிட்டது, எதிர் வீட்டுக்காரர்களின்மீது எனக்கிருந்த கோபத்தை அதிகப் படுத்தியது. அப்புறம் மனமில்லாமல் தான் அவர்களுக்குப் புத்தகங்கள் கொடுத்து வந்தேன். எதிர்வீட்டுப் பெண்ணைப்பற்றிய நினைவோ என் உள்ளத்தை விட்டே அகன்றுவிட்டது. 'ஆரமுது உண்ணுதற்கு ஆசை கொண்டார் கள்ளில் அறிவைச் செலுத்துவாரோ?'

புது வருஷம் பிறந்தது. இந்த வருஷத் தொடக்கத்தில்தான் நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட சமமான நிகழ்ச்சி நடைபெற்றது.

எதிர் வீட்டுப் பெண்ணுக்கு ஒரு வியாபார நிலையத்தில் 'டைப்பிஸ்ட்' வேலை கிடைத்தது. அவளுடைய காரியாலயமும் என்னுடைய காரியாலயமும் பக்கம் பக்கமாக இல்லாவிட்டாலும், ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்துதான் இரண்டுக்கும் போக முடியும். காலையில் பத்துமணிக்கெல்லாம் அவள் காரியாலயத்துக்குக் கிளம்பி விடுவாள். நான் அப்பொழுது பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்கும் அவளுக்குமாகக் காத்துக் கொண்டிருப்பேன். அவளைப் பார்க்காதவன் மாதிரி பஸ்ஸில் ஏறிக்கொள்ளுவேன். பிறகு அவளைப் பார்க்காதவன் மாதிரியே என் காரியாலயத்திற்கு முன்பாகப் பஸ்ஸை விட்டு இறங்கிக் கொள்ளுவேன். திரும்பி வரும்போது மட்டும் ஒரே பஸ்ஸில் வருவது சாத்தியப்படவில்லை. ஏதோ வாரத்துக்கு ஒருநாள் தான் இவ்விதம் ஒரு பஸ்ஸில் சந்தர்ப்பமாகச் சந்தித்துக்

கொள்ளுவோம். நான் அவள் சம்பந்தப்பட்ட மட்டில் எப்படி நடந்துகொள்ளுகிறேன் என்று எனக்கும் தெரியாது; அவளுக்கும் தெரியாது. ஏதோ, தெரிந்த பெண்ணும் நாமும் ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்கிறோம் என்று எனக்கு ஒரு மகிழ்ச்சி. அவ்வளவு தான். மனம் எல்லாம் அந்தக் கோடி வீட்டுக் கனக விக்கிரகத்தின் காலடியில்தான் தவம் கிடந்தது. இந்த எதிர் வீட்டுப் பெண்ணுக்காகப் பஸ் ஸ்டாண்டில் நான் காத்திருந்தபோதிலும், இவளை உத்தேசித்தே நான் பவுடருக்கும் ஸ்நோவுக்கும் பணம் செலவழித்து வந்தபோதிலும், இவள் என் உள்ளத்தைக் கவரவில்லை. ஒரு வேளை கோடி வீட்டுப்பெண் இல்லாதிருந்தால் இவளே என் இதய ராணியாகி யிருப்பாள். இவளை அவளோடு ஒப்பிடாமல், தனியாக நிறுத்திப் பார்த்தாலும் இவள் அழகான பெண் அல்ல. வீட்டுக்குள்ளேயிருந்து ஜன்னல் வழியாகக் காட்சிதரும்போது ஏதோ அழகாகத் தான் எனக்குத் தோன்றியது. ஆனால் வீதியில், வெளிச்சத்தில், பக்கத்தில் நின்று பார்க்கும்போது கேவலம் என்னைப் போன்றவர்களின் காதலைப் பெறுவதற்குக் கூடத் தகுதியில்லாதவளாகத்தான் இருந்தாள். பவுடர் பூச்சையும் மீறிக் கொண்டு தெரியும்படியான கருப்பு மேனி; குறு விழிகள்; உயரமும் உடல் மெலிவும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் வேறு இருந்தன. இப்படியே பலவிதமான குறைபாடுகள் என்னை அவள்மீது ஈடுபாடு கொள்ள விடாமல் தடுத்தன. ஆனாலும் அவள் ஒரு பெண் என்ற காரணமும், நான் ஒரு பிரமச்சாரி என்ற காரணமும் சேர்ந்து மணிக்கணக்கில் அவளுக்காக என்னை பஸ் ஸ்டாண்டில் காத்திருக்கும்படி செய்தன.

காரியாலயத்திலிருந்து ஒருநாள் மாலை நான் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அவளும் அதே பஸ்ஸில் வந்து கொண்டிருந்தாள். அவள் உட்கார்ந்திருந்த இடத்தின் பக்கம் ஓர் ஆள் உட்காரப் போதுமான இடம் இருந்தது. கண்டக்டர் என்னை அங்கே உட்காரச் சொன்னான். உட்கார்ந்தேன். முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டு, அவள் எந்தப் பக்கமாக முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிறாள் என்பதைக் கடைக் கண்களால் கவனித்துக் கொண்டிருந்தேன். அவள் இதை எப்படியோ பார்த்துக்கொண்டாள். அதனால் பளிச்சென்று முகத்தை மறுபக்கமாகத் திருப்பிக் கொண்டாள். மயிலாப்பூர் குளத்தருகில் இருவரும் இறங்கினோம். நான் வேகமாக முன்னால் நடந்தேன். அவள் உடனே பேச ஆரம்பித்தாள்.

"நேற்றுச் சாயங்காலம் உங்களைக் காணவில்லையே!" என்று பிள்ளையார் சுழி போட்டாள்.

நான் ஒன்றும் அறியாதவன் போல மேலே நடந்தேன்.

"நேற்றுச் சாயங்காலம்........"

"ஓ! நீங்களா!" என்று சொல்லிக் கொண்டே திரும்பினேன்.

"அப்பா உங்களைப் பார்க்க வேண்டுமென்று சொன்னார்" என்றாள்.

"ஏன்? என்ன விசேஷம்?" என்று புன்னகையோடு கேட்டேன்.

"தெரியவில்லை. இன்று உங்களிடம் வருவார்" என்று சொல்லிவிட்டு என் முகத்தையே பார்த்தாள். அப்புறம், "ஏன், நீங்களே வீட்டுக்கு வாருங்களேன்!" என்றாள். நான் மனமகிழ்ச்சியை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், "அவசியமானால் வருகிறேன்" என்றேன். மேற்கொண்டு அவளோடு பேசுவதற்கு இல்லாமல், அசந்தர்ப்பம் குறுக்கிட்டது. எங்கள் தெருவைச் சேர்ந்த ஒரு வாலிபன் அங்கே ஒரு வெற்றிலை பாக்குக் கடை முன்னால் நின்று கொண்டிருந்தான். அதனால், நான் தன்னந்தனியாகத் தெருவோடு நடந்து செல்லுபவனைப்போல நடித்து, அபாய கட்டத்தைத் தாண்டினேன். சித்திரகுளம் பக்கத்தில் வரும்போது இருவரும் மிகவும் நெருங்கி நடந்துவந்தோம்.

"நீங்களே இன்று வீட்டுக்கு வாருங்கள். அப்பாவும் வீட்டில் இருப்பார்" என்று கனிவாகச் சொன்னாள்.

"நீங்கள் சொல்லும் தோரணையைப் பார்த்தால், என்னை அழைக்கும் காரியம் என்ன என்று உங்களுக்கும் தெரியும் என்றே தோன்றுகிறது!" என்று கூறிவிட்டுச் சிரித்தேன். அவளும் சிரித்தாள். அழகில்லாவிட்டாலும், ஒரு கன்னிப் பெண்ணோடு தெருவில் சிரித்துப் பேசிக்கொண்டு வருவது ஒரு சுகமான அனுபவம் என்பது எனக்கு அன்றுதான் தெரிந்தது. வீடு நெருங்கி விட்டது. இனியும் ஜோடி போட்டுச் செல்லுவது தப்பு என்று உஷாராகி, "நீங்கள் போங்கள். நான் கடைக்குப் போய் வரவேண்டும்" என்று சாக்குச் சொல்லித் தப்பித்தேன்.

"அப்படியானால் நீங்கள் கட்டாயம் வருவீர்கள்?"

"ஓ!"

பதினைந்து நிமிஷங்கள் இங்கும் அங்கும் உலவிவிட்டு அறைக்குப் போனேன். ஐந்து நிமிஷ நேரத்திற்குள் முகம் கழுவி, தலை வாரி, பவுடர் போட்டுத் தயாராக இருந்தேன். எதிர் வீட்டுப் பையன் வந்தான். அவன் முன்னே செல்ல, நான் பின்னே சென்

றேன். தயாராகப் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தேன். சம்பிரதாயப் பேச்சுக்கள் முடிந்தபின், எதிர் வீட்டுக்காரர் விஷயத்தைச் சொல்லத் தொடங்கினார். அவர் சொன்னதன் சாராம்சம் என்னவென்றால், என்னுடன் ஒரே பஸ்ஸில் பிரயாணம் செய்யும் அந்தப் பெண் சில கதைகள் எழுதி வைத்திருக்கிறாளாம்! என் ஆசிரிய நண்பரிடம் சொல்லி அவற்றை வெளியிட வேண்டுமாம். இந்த விஷயத்தை என்னிடம் வந்து சொல்லும்படி பல நாட்களாக அவள் அவரை வற்புறுத்திக் கொண்டிருந்தாளாம். பற்பல வேலைகளினால் அவருக்கு அவகாசம் கிடைக்கவில்லையாம்!

நான் கதைகளை வாங்கிக் கொண்டேன். அப்புறம் முடிந்தமட்டும் பேச்சை வளர்த்துக் கொண்டு அங்கேயே உட்கார்ந்திருந்தேன். பெண் ஏதோ வேலையாக வீட்டுக்குள் போகவே, நானும் "ஏதோ வேலையாக" என் அறைக்கு வந்துவிட்டேன்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை என் ஆசிரிய நண்பரைச் சந்தித்து, அழுத்தமான சிபாரிசுடன் கதைகளை ஒப்படைத்தேன். "கதை எழுத விரும்பாத பெண் கிடையாது போலிருக்கிறதே!" என்று சொல்லிவிட்டு, "பார்க்கிறேன்" என்றார் நண்பர். "நாங்களும் பார்க்கிறோம், அதாவது கதை வெளிவரும் பத்திரிகையை" என்று சிரித்துக்கொண்டே நான் சொன்னேன்.

"பிரமச்சாரியாக இருந்து கொண்டு, பெண்களின் முன்னேற்றத்துக்கு இப்படிப் பாடுபடக்கூடாது, ஸார்" என்று சொல்லிவிட்டு, விடை கொடுத்தனுப்பினார் ஆசிரிய நண்பர்.

மறு மாதத்தில் கதை வெளி வந்துவிட்டது. எதிர் வீடு திமிலோகப்பட்டது. வீட்டு வாசலில் வாழை கட்டு, தோரணம் கட்டாத குறைதான். எனக்கு நான்கு நாட்களுக்கு முன்பே கதை வெளிவரப் போகிறது என்று தெரிந்திருந்தும், வெளியே சொல்லிவிடவில்லை. திடீரென்று அவர்களை ஆச்சரியத்தில் மூழ்கடிக்க விரும்பினேன். என் ஆவல் நிறைவேறிவிட்டது. எதிர்வீட்டுக்காரர் பத்திரிகையும் கையுமாக வந்து, "பார்த்தீர்களா ஸார்?" என்று சொல்லி என்னிடம் பத்திரிகையைக் கொடுத்தார். நானும் ஒன்றும் அறியாதவன் போல் அதை வாங்கிப் பார்த்து "ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டேன்!" அதற்குப் பிறகு என் அறையும் எதிர்வீடும், சண்டை போடாத சம்பந்தி வீடுகளாகிவிட்டன. அவ்வளவு உறவு; அவ்வளவு அந்யோன்யம். இனி என்ன ஆனாலும் சரிதான் என்ற துணிவோடு சர்வ சாதாரணமாக எதிர்வீட்டுக்குப் போவேன்; வருவேன். கடிகாரத்தில் மணி பார்ப்பதிலிருந்து எத்தனையோ அற்ப காரியங்களையும் எதிர் வீட்டுக்குப் போயே சாதித்துக் கொண்டு வந்தேன்.

தைரியமாக அவளும் நானும் ஒன்றாகக் காரியாலயத்திலிருந்து திரும்பி வருவோம். ஆனால் வீட்டை நெருங்கும்போது மட்டும் நாங்கள் பேசிக்கொள்ள மாட்டோம். அந்நியர்களைப்போல நடந்து வருவோம். இது நித்தியானுஷ்டானமாகப் போனதுடன் நிற்காமல், தெருவுக்கெல்லாம் வேறு பிரசித்தமாகிவிட்டது. நான் எதிர் வீட்டுக்குப் போய்ப் பேசிக் கொண்டிருந்துவிட்டு வருவதைக் கண்ணால் பார்க்காதவர்கள் அந்தத் தெருவில் கிடையாது. எதிர்வீட்டுப் பையன் பரீக்ஷைக்குப் படிக்கும்போது சுமார் ஐந்து நாட்கள் அவனுக்கு ராப்பாடம் சொல்லித் தரப் போனேன். இரவு பத்துமணி வரையிலும் அங்கே நான் பாடம் சொல்லிக்கொடுப்பதும் வீதியில் உள்ளவர்களுக்குத் தெரியாத விஷயமல்ல. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல, ஒருநாள் காரியாலயத்திலிருந்து திரும்பும்போது பலமாக மழை பிடித்துக் கொண்டு விடவே என்னுடைய குடையின் கீழ் அவளுக்குப் பாதுகாப்பளித்து வீட்டு வரையிலும் கொண்டு வந்துவிட்டேன். இதை யாரும் பார்க்கவில்லை. ஆனால், என் வீட்டுச் சொந்தக்காரர் பார்த்துக் கொண்டார். அவர் என்னை அன்றுதான் முதல் முதலாகத் தனியாக அழைத்து, "ஸார்! உங்களைப் பற்றி எங்களுக்கு நல்ல அபிப்பிராயந்தான். தெருவிலுள்ளவர்கள் எல்லாம் விசேஷமாகச் சொல்லுகிறார்கள். ஏதோ மழை என்றுதான் அந்தப் பெண்ணை அழைத்துக்கொண்டு வந்தீர்கள். ஆபத்துக்குப் பாவமில்லை. இருந்தாலும் பார்க்கிறவர்களுக்கு ஒரு மாதிரி இருக்கக் கூடாது. அவ்வளவுதான் உங்களுக்குச் சொல்லுவேன்" என்று இனிமையாகச் சொன்னார். அவர் சொன்னதில் தப்பு எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அதனால் ஒருவகையாகச் சமாளித்துக்கொண்டு அவர்மீது கோபப்படாமல் என் அறைக்கு வந்தேன்.

மறுநாள் விடிந்த பிறகுதான் நான் செய்தது எவ்வளவு பயங்கரமான தவறு என்பதை உணர்ந்தேன். இதைக் கண்ணாரக் கண்டும் கூட, என் நடத்தையைப் பற்றிச் சந்தேகிக்காமல், பெருந்தன்மையாகக் கூப்பிட்டுப் புத்தி சொன்னதற்காக வீட்டுக்காரரை மனதிற்குள்ளேயே எவ்வளவோ புகழ்ந்தேன்.

ஒரு குடைக்கீழ் இருவர் நடந்து வந்த அந்த நாள் முதல், காதல் என்ற தொடர்பு மட்டும் இல்லாமல், என் அறைக்கும் எதிர் வீட்டுக்கும் வழக்கம்போல உறவு இருந்து வந்தது.

அந்தத் தெருவில் பேரன் பேத்தி எடுத்த கிழவர்கள் இருந்தார்கள்; கிழவிகளும் இருந்தார்கள்; வாலிபப் பெண்களைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று விரும்பிய குடுகுடு கிழவர்

களும் இருந்தார்கள்; உடைகளில் எல்லாம் சென்ட்டைக் கொட்டிக் கொள்ளும் ஐம்பது வயதுத் தாய்மார்களும் இருந்தார்கள். சினிமா வில் சேரவேண்டுமென்று ஆசைப்படும் கௌரவமான குடும்பப் பெண்களும் இருந்தார்கள். கதை எழுத விரும்பி, இல்லாத பொல்லாத காதல் கற்பனைகளை எல்லாம் கட்டிவிட்டு எழுதும் ஆற்றல் வாய்ந்த வாலிபப் பெண்களும் இருந்தார்கள். இவர்கள் போக, மற்றும் உலக இயற்கையோடு ஒட்டி ஒழுகும் முதியோரும், நடுத்தர வயதினரும், வாலிபர்களும், பாலர்களும் இருந்தார்கள். இத்தனை பேரில் ஒருவராவது என்னைப்பற்றியோ எதிர்வீட்டுப் பெண்ணைப் பற்றியோ யாதொரு சந்தேகமும் கொள்ளவில்லை. அல்லது சந்தேகம் கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. இது உலகத்தில் காணமுடியாத ஒரு அதிசயமாகக்கூட இருந்தது. சமூகம் இவ்வளவு சுதந்திரம் கொடுத்துங்கூட, நாங்கள் மட்டும் எல்லை கடந்து விடவில்லை. இருவரும் ஒன்றாகக் காரியாலயத்திலிருந்து வருவதுபோல வீட்டிலிருந்து ஒன்றாகக் காரியாலயத்துக்குப் புறப்படத் துணியவில்லை. எந்த ஓர் அவசியத்தை முன்னிட்டும் எதிர்வீட்டுப் பெண் என் இருப்பிடத்துக்கு வரவுமில்லை. ஆனால்...நான் மட்டும், யாராவது ஒருவர் என் அறையின் கதவைத் தட்டினால், எதிர்வீட்டுப் பெண் தான் வந்து தட்டுகிறாளோ என்று நினைத்து, கதவைத் திறந்து, அப்புறம் ஏமாற்றத்திற்கு ஆளானது உண்டு.

இப்படி இருக்கும்போது, எதிர்வீட்டுப் பெண்ணின் இரண்டாவது கதை என் நண்பருடைய பத்திரிகையில் வெளி வந்தது. இது வெளிவந்து ஒரு வாரம் கழியும் முன்பே, முதலில் குறிப்பிட்ட ரசமான நிகழ்ச்சி நிகழ்ந்துவிட்டது.

ஒரு நாள்; அன்று விடுமுறை. சாப்பிட்டு வந்து என் அறைக்குள் உட்கார்ந்து நாவல் படித்துக் கொண்டிருந்தேன். சுமார் மூன்று மணி யிருக்கும். இலேசாகத் தூக்கம் வந்தது. ஈஸிச் சேரிலேயே அரைத்துயிலில் ஆழ்ந்தபோது, என் அறைக் கதவை யாரோ தட்டினார்கள். வழக்கம்போல, "அந்த மாதிரி" எதிர் பார்த்துக் கொண்டே கதவைத் திறந்தேன். ஆனால் வந்து நின்றவன் கோடி வீட்டுக் கனக விக்கிரகத்தின் தம்பி.

"வா தம்பி."

இந்த இரண்டு சொற்களைச் சொல்லும்போது என் நாக்குத் தழு தழுத்தது; பேச முடியாமல் திக்கு முக்காடினேன்.

"உட்கார் ராஜா."

ஏதோ ஓர் அழகான பறவை மரக் கொம்பில் உட்கார்ந்து வசைவடாமல் குப்பைமேட்டில் போய்ப்படுத்துக்கொள்ளுவதுபோல,

நாற்காலியில் உட்காராமல் பத்திரிகைக் குவியலின் பக்கம் போய் உட்கார்ந்தான். நான் உடனே எழுந்து, அவனை இழுத்துக்கொண்டு வந்து நாற்காலியில் உட்காரவைத்தேன். மிகமிக நாசூக்கான பதப் பிரயோகத்துடனும், பணிவு நிறைந்த குரலிலும் அவன் சொன்னான்:

"உங்கள் டைப் ரைட்டிங் மிஷினைக் கொஞ்சம் கொடுத்து உதவ முடியுமா? கொஞ்சம் அவசரமாக வேண்டியிருக்கிறது."

"பேஷாகத் தருகிறேன். யாருக்கு? உனக்கா? உங்கள்...... உங்கள் அப்பாவுக்கா?"

"அப்பாதான் கேட்டுவிட்டு வரச் சொன்னார். சிரமத்திற்கு மன்னிக்கவேண்டும்."

"இதில் என்ன சிரமம்? தருகிறேன். உங்கள் அப்பா கேட்டு விட வேண்டுமென்ற அவசியம்கூட இல்லை. "நீ" கேட்டாலும் தருகிறேன், ராஜா."

பையனால் டைப் ரைட்டரைத் தூக்க முடியாமல் போனது, ஒரு சுகாப்தத்தையே ஆரம்பித்து வைக்கக்கூடிய பெரிய காரியம் போல எனக்குத் தோன்றியது. நானே முன் வந்து, "அவனுக்காக" டைப் ரைட்டரைத் தூக்கிக்கொண்டு, அரை பர்லாங் தூரத்திற்கு அப்பால் உள்ள சேடி வீட்டுக்குப் போனேன். ஐயோ! அன்று என்ன மரியாதை! என்ன சுகமான சூழ்நிலை! வீட்டுக்குள்ளே போகும்போது ரோஜாச் செடியின் குச்சியைப்போலப் போனேன். வெளியே வரும்போது பூத்துக் குலுங்கும் ரோஜாச் செடியாக வந்தேன்.

"நாளைக்கு வந்து வாங்கிக் கொள்ளுகிறேன். நான் போய் வரட்டுமா?"

இந்த வார்த்தைகளைச் சொல்லிவிட்டு வெளியே வந்தேன்.

மறுநாள் அவரே என்னிடம் டைப் ரைட்டரைக் கொண்டுவந்து கொடுத்து விடுவாரோ என்று பயந்து, நானே அதிசீக்கிரத்தில் சேடி வீட்டுக்குப் போய் விட்டேன். நான் அந்த வீட்டில் நுழையும் போது, என்னைப் பார்த்த ஒரு சிலரில் என் வீட்டுச் சொந்தக்காரரும் ஒருவர். அத்துடன் எதிர் வீட்டுக்காரரும் பார்த்துக் கொண்டார். நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தாத, அந்தத் தெருவாசிகளில் சிலரும் பார்த்தனர். அங்கு போனவன் ஒரு மணி நேரத்திற்குப் பிறகுதான் திரும்பினேன். அது வரையிலும் தன் அப்பாவுக்காக வேண்டி அந்தக் கனக விக்கிரகம் என் யந்திரத்தில், தன் கைகளால், தன் மலர்க்கைகளால், தன் கைவிரல்களால் டைப் அடித்துக் கொண்டிருந்தாள். அப்பா பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். அப்புறம் தூங்கிவிட்டார். தூங்காமல் இருந்தவர்கள் நான்,

கனக விக்கிரகம், அவள் தம்பி ஆகிய ரூபமே. டைப் அடித்து முடித்ததும் பிரதியை எடுத்து என்னிடம் கொடுத்தவள் என் இதய ராணியே. நான் தட்டுத் தடங்கல் இல்லாமல் வெளியே வருவதற்குச் சௌகரியமாக இருக்கும் பொருட்டு, வாசல் கதவை அவளே ஓடிவந்து திறந்தாள். இதுபோல, நான் உள்ளே வருவதற்கும் அவளே ஓடிவந்து கதவைத் திறக்கும் இன்பகரமான காட்சியைக் கற்பனை பண்ணிக் கொண்டே வெளியே வந்தேன். ஆனால், அந்தத் தெருவில் இருந்த அற்ப புத்திக்காரர்களால், அந்தக் கனவு இன்று வரையும் நிறைவேறாமலே போய்விட்டது.

என் அறைக்கு வந்தேன். டைப்ரைட்டிங் மிஷினை மூடி வைக்காமல், ஒரு வெள்ளைக்காகிதத்தை அதில் வைத்து என் பெயரையே மாறி மாறி டைப் அடித்துக் கொண்டிருந்தேன். யந்திரத்தில் புதிதாக ஒரு காந்த சக்தி குடியேறி விட்டது போலத் தோன்றியது. அப்புறம் காரியாலயத்துக்குப் போக நேரமாகி விட்டதென்று அதி வேகமாகத் தலையை ஒரு முறை வாரிக்கொண்டு, அதற்கேற்ற உடையும் அணிந்து கிளம்பினேன். அன்று பஸ் ஸ்டாண்டில் எதிர் வீட்டுப் பெண்ணுக்காகக் காத்திருக்கவில்லை. அவள் ஞாபகமே அப்போது தலைகாட்டவில்லை. சாயங்காலமானதும் நேரே என் இருப்பிடத்தை நோக்கித் திரும்பினேன். சினிமாவுக்குப் போக வேண்டுமென்று, என் நண்பர்கள் வற்புறுத்தியதையும் நான் மறுத்துவிட்டேன். ஏனோ, என் அறைக்கு வரவேண்டும் போல இருந்தது. வந்து, உடை மாற்றி, முகம் கழுவி, பவுடர் போட்டுக் கொண்டிருந்தபோது என் வீட்டுச் சொந்தக்காரர் வந்தார்.

“வாருங்கள்” என்றேன். வந்தவர் உட்காராமலே கடுகடுப்பாகப் பேச ஆரம்பித்துவிட்டார். அவர் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

“ஸார்! தயவு செய்து அறையை காலி பண்ணிவிடுங்கள். போதும் உங்கள் குடித்தனம்” என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. பவுடரைத் துடைத்துக்கொண்டு, அவரைப் பார்த்துத் திரும்பினேன்.

“என்ன? ஏன் இப்படி?......” என்று நான் விசாரிக்கும் போதே அவர் இடைமறித்து, “உங்களை ஏதோ நல்லவர் என்று நினைத்துத்தான் அறையை வாடகைக்கு விட்டேன். இப்படிப்பட்டவர் என்று எனக்கு அப்பொழுதே தெரியாமல் போய் விட்டது” என்றார்.

நான் பயந்து நடுங்கினாலும், எப்படியோ சமாளித்துக் கொண்டு, “விஷயம் என்னவென்று சொல்லுங்கள்” என்றேன்.

“ ஸார்! அதிகமாகப் பேச்சு வேண்டாம். உங்கள் நடத்தை எனக்குப் பிடிக்கவில்லை.”

எனக்குக் கோபம் வந்துவிட்டது.

“ ஏன் பிடிக்கவில்லை?”

“ கோடி வீட்டில் உங்களுக்கு என்ன வேலை?”

“ டைப் ரைட்டிங் மிஷின்......”

“ எல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் நாளைக் காலையிலேயே வீட்டைக் காலிபண்ணினால் நல்லது. இல்லாவிட்டால், இந்தத் தெருவுக்கே நான் ஆகாதவனாகப் போய் விடுவேன்.”

“ நீங்கள் சந்தேகப்படுவது தப்பு. தப்பாக ஒன்றும் இங்கே நடந்துவிடவில்லை.”

“நான் மட்டுமா சந்தேகப்படுகிறேன்? எழுந்துபோய்ப் பக்கத்து வீட்டுக்காரர்களிடம் கேட்டுப் பாருங்கள். எல்லோரும் என்னைத் திட்டுகிறார்கள். ‘இப்படிப்பட்டவருக்கா வீட்டை விட்டாய்?’ என்று கேட்கிறார்கள். எதிர் வீட்டுக்காரர் என்னோடு சண்டைக்கே வந்து விட்டார். அடுத்த வீட்டுப் பிள்ளையாண்டான் (அவனுக்கு வயது இருபத்தாறு) இவ்வளவு நேரம் வரை என்னிடம் புகார் பண்ணிவிட்டுப் போனான்.”

“ என்மேல் தப்பு ஏதுவும் இல்லை. வீண் சந்தேகங்களுக்கு நான் என்ன செய்வது? நான் செய்த தப்பு என்னவென்றாவது சொல்லவேண்டும்.”

“ என்ன ஸார், ஒன்றும் தெரியாதவர் மாதிரிப் பேசுகிறீர்கள்? இளம்பெண் இருக்கும் வீட்டுக்கு உங்களுக்கு என்ன போக்கு வரத்து? உங்கள் வீட்டில் இப்படித்தான் ஊர்ப் பயல்களை வர விடுவீர்களோ?”

.......நான் ‘ஊர்ப்பயல்’ ஆகிவிட்டேன்.

வீட்டுக்காரர் மேலும் சொன்னார்: “நீங்கள் கோடி வீட்டுக்குப் போவது யாருக்கும் பிடிக்கவில்லை. உங்களிடம் அந்நியோன்யமாக இருந்த எதிர் வீட்டுக்காரருக்கே பிடிக்கவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இது கௌரவமானவர்கள் வசிக்கும் வீதி. அதனால் உங்களை இங்கே வைத்துக் கொண்டிருப்பது சரிப்படாது. கோடி வீடு எப்பேர்ப்பட்ட பெரிய மனிதர்களின் வீடு என்று உங்களுக்குத் தெரியாது. என் தாக்ஷண்யம் இல்லாவிட்டால், இதற்குள் இந்தத் தெருப் பையன்கள் உங்களை என்னவெல்லாமோ செய்திருப்பார்கள். அதனால், உள்ள மரியாதையைக் காப்பாற்றிக் கொண்டு கிளம்பி விடுங்கள்.”

இவ்வாறு கூறிவிட்டு, ஒரு நிமிஷம்கூடத் தாமதிக்காமல் அவர் மாடிக்குப் போய்விட்டார். அவர் போன சிறிது நேரத்திற்கெல்லாம், எதிர் வீட்டுப் பையன் வந்தான். சுமக்க முடியாமல் புத்தகங்களைச் சுமந்துகொண்டு வந்தான். அவ்வளவும் என்னிடம் இரவலாக வாங்கிச் சென்ற புத்தகங்கள்.

"இந்தாருங்கள், உங்கள் புத்தகங்கள் எல்லாவற்றையும் கொடுத்தாய்விட்டது" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான். எனக்கு முகத்தில் அறைந்ததுபோல் இருந்தது.

"எல்லாவற்றையும் படித்தாயிற்றா?" என்று ஒரு கேள்வியைப் போட்டேன்.

"அதன்னவோ, எங்கள் அப்பா கொடுத்துவிட்டுவரச் சொன்னார்" என்று சொல்லிவிட்டு அறைக்கு வெளியே போய்விட்டான் பையன். நான் ஒரு புதுப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு பின்னாலேயே சென்று, "தம்பி! இந்தா, இந்தப் புத்தகத்தைக் கொண்டு போ" என்று வேண்டிக் கொண்டேன். அவனோ வேகமாக ஓடி எதிர் வீட்டுப் படியில் ஏறிவிட்டான். அங்கே நின்ற அவனுடைய தகப்பனார், "ஸார்! நீங்கள் புத்தகம் கொடுத்ததும் போதும், நாங்கள் படித்ததும் போதும்" என்று என்னிடம் சொல்லிவிட்டு, தம் மகனைப் பார்த்து, "போடா வீட்டுக்குள்ளே! முட்டாள் பயல்! அங்கே போகாதே, போகாதே என்று ஆயிரம் தடவை செருப்பால் அடித்தாலும், நாய் மாதிரி நுழைகிறான். போ வீட்டுக்குள்ளே!" என்று அதட்டினார்.

'முட்டாள் பயல்!'

'செருப்பால் அடித்தாலும்!'

'நாய் மாதிரி!'

அவமானம் தாங்காமல் அறைக்குள் வந்தேன். அவ்வளவு தான், இனிமேல் அந்தத் தெருவில் குடியிருக்க முடியாது என்று மூட்டை முடிச்சுகளைக் கட்ட ஆரம்பித்தேன்.

அன்றிரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. எத்தனையோ சிந்தனைகள்:

'எதிர் வீட்டுக் கறுப்புப் பெண்ணுடன் சகஜமாகப் பழகினேன். மாதக் கணக்கில் பழகினேன். இது தெருவறிந்த செய்தி. இரவு தவறாமல் எதிர் வீட்டுக்குப் போய்ப் பேசிக் கொண்டிருந்து விட்டும் வந்தேன். ஒரு பஸ்ஸில் அவளோடு பிரயாணம் செய்தேன். என் சிபாரிசினால் அவளுடைய சிறு கதைகள் பத்திரிகையில் வெளியாயின. இந்த விஷயங்கள் எல்லோருக்கும் தெரியும். கடைசியில்,

ஒரு குடையின்கீழ் அவளை இரவு நேரத்தில் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தேன். இது என் வீட்டுச் சொந்தக்காரருக்குத் தெரியும். இவ்வளவு நெருக்கமாக அவளோடு, அந்தக் கருப்புப் பெண்ணோடு நான் பழகியதைப் பார்த்தும், ஒருவர் கூட, ஏன் அந்தப் பெண்ணின் தகப்பனார் கூட, என்னைக் கண்டிக்கவில்லை. ஆனால்......

'கோடி வீட்டுக்கு இரண்டு நாட்கள் போய் வந்தது பெரிய குற்றமாகப் போவானேன்? இரண்டும் கௌரவமான வீடுகளே. எந்த ஓர் அந்தஸ்திலும் ஒன்றுக்கொன்று உயர்ந்ததவை அல்ல. ஆனால் ஊர்க்காரர்கள் இப்பொழுது தடி எடுத்துக்கொண்டு வருவானேன்? கருப்புப் பெண்ணின் வீட்டுக்குப் போய்க் குலாவிவிட்டு வந்தது தப்பில்லை; அழகான பெண்ணின் வீட்டுக்கு வெறுமனே போய் வந்தது பெரும் குற்றம். இது என்ன விசித்திரமடா! எதிர் வீட்டுக்காரரும் என்னைத் திட்டுகிறார். தம்முடைய மகளுடன் நெருங்கிப் பழகியதைக்கூடக் கண்டிக்காத மனிதர், கோடி வீட்டுக்கு ஏதோ இரண்டு நாட்கள் நான் போய் வந்ததைக் கண்டு என்னைத் திட்டுவானேன்? என் வீட்டுக்காரர் என்னைக் காலிபண்ணச் சொல்லுவானேன்? தெருவிலுள்ள வாலிபப் பையன்கள் என்னை என்ன வெல்லாமோ செய்ய நினைப்பானேன்? மொத்தத்தில் தெருவாசிகள் யாவரும் ஒன்றுகூடிக் கொண்டு என்னைப் பழிப்பானேன்? இரண்டு வீடுகளுக்கும் வித்தியாசம் எதுவும் இல்லையே! ஒரு வீட்டுப் பெண் அழகில்லை; மற்றொரு வீட்டுப் பெண் அழகி. இதுதானே வித்தியாசம்......'

மேற்கொண்டும் பல விதமாக மூளையைக் குழப்பிக் கொண்டே படுத்திருந்தேன். பிறகு தூங்கிவிட்டேன். மறுநாள் விடிந்து சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு ரிக்ஷாவை அழைத்து வந்து, வீட்டுக்காரரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன். மயிலாப்பூர் வாசம் முடிந்தது. என் ஆசிரிய நண்பர் குடியிருக்கும் வீட்டுக்குப் போக வேண்டுமென்று திருவல்லிக்கேணியை நோக்கிச் சென்றேன். எதிர்பாராத விதமாக நான் மூட்டை முடிச்சுகளுடன் போய் நிற்பதைக் கண்ட என் நண்பர் ஒரேயடியாகத் திகைத்துவிட்டார். கதை முழுவதையும் அவரிடம் சொன்னேன். அவர் சுடுகிலேயே, "நான் அப்பொழுதே சொன்னேன் அல்லவா? பெண்களுக்காகப் பிரமச்சாரிகள் பாடுபடுவது தப்பு என்று நான் சொன்னது ஞாபகம் இருக்கிறதா?" என்றார்.

"அப்படிப் பாடுபட்டதில் தப்பு ஒன்றும் வரவில்லையே! எதிர் வீட்டுப் பெண்ணுக்காக நான் பாடுபட்டதால், இந்த அனர்த்தம் விளையவில்லையே! வெறுமனே ஒருவர் வீட்டுக்குப் போய் வந்தது

தானே குடியைக் கிளப்பி விட்டது" என்று சொல்லிவிட்டு என் கதையைக் கடைசி வரை சொல்லி முடித்தேன். அங்கங்கே விளக்கத்திற்காகச் சில கேள்விகள் கேட்டுக் கொண்டே, என் கதை முழுவதையும் நண்பர் காது கொடுத்துக் கேட்டார். அவருக்கு அடக்க முடியாதபடி சிரிப்பு வந்து விட்டது. என் பரிதாபக் கதையைக் கேட்டுவிட்டு அவர் சிரிப்பது எனக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை.

"எனக்குச் சீக்கிரமாக ஓர் அறை பாருங்கள்" என்று கூறி அவர் சிரிப்பை நிறுத்தினேன். அப்புறம் எனக்கும் சிரிப்பு வந்தது. "ஒரு வீட்டுக்குப் போவதை யார் தப்பாக நினைக்கவில்லை; ஆனால் மற்றொரு வீட்டுக்குப் போவதைக்கண்டு ஏன் இப்படிக் குற்றம் சாட்டவேண்டும்? இது விசித்திரமாக இல்லையா?" என்றேன்.

"விசித்திரம் என்றால் இது சாமான்யப்பட்ட விசித்திரமா? நீங்கள் என்னைப் போலக் கதாசிரியராக இருந்தால், இந்த விசித்திரத்தின் உட்பொருள் என்னவென்று தெரிந்திருக்கும்" என்று நண்பர் மேதாவித்தனத்துடன் சொன்னார்.

"என்னவென்றுதான் சொல்லுங்களேன்."

"ஸார்! நீங்கள் இருந்த அந்தத் தெருவில் உள்ள அத்தனை பேருக்கும் உங்கள்மீது பொறாமை ஸார், பொறாமை!"

"அது எப்படி?"

"எப்படியா? அழகில்லாத பெண்ணை ஒரு பயலும் விரும்பவில்லை. அதனால் அவளோடு நீங்கள் கும்மாளம் போடுவதைக்கூட அவர்கள் பொருட்படுத்தவில்லை. ஆனால் அழகான பெண்ணின்மீது எல்லோருக்கும் கண். அப்படியிருக்கும்போது அவள் வீட்டுக்கு நீங்கள் போய் வருவதை அவர்களால் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அதனால்தான் எதிர் வீட்டுப் பெண்ணுடன் குலாவியும் கூட நீங்கள் ஒழுக்க சீலராக இருக்க முடிந்தது; கோடி வீட்டுக்குப் போன மாத்திரத்தில் ஒழுக்கம் கெட்டவராக மாறும்படி நேர்ந்தது."

"தன் மனம் களங்கத்தோடு இருக்கும்போது அடுத்தவனைக் குற்றம் சாட்டலாமா?" என்று கேட்டேன்.

"களங்கமில்லையென்றால் குற்றம் சாட்டத் தோன்றுமே ஸார்! நீங்கள் குடியிருந்த வீட்டுக்காரரும், உங்கள் எதிர்வீட்டுக்காரரும், அந்தத் தெருவில் இருக்கும் அத்தனைபேரும் அந்த அழகான பெண் மீது ஒரே வெறியோடு இருக்கிறார்கள் என்று நான் உறுதியாகச் சொல்லுவேன். சந்தர்ப்பம் கிடைத்தால், எவனுமே அந்தப் பெண்ணைக் கெடுக்கத் தயங்கமாட்டான்" என்று கூறினார் ஆசிரிய நண்பர்.

"அட அயோக்கியப் பயல்களா! இந்த லக்ஷணத்திலா அடுத்தவனைக் குறை சொன்னீர்கள்?" என்று நான் சொன்னதும், நண்பர் சிரித்துக் கொண்டே என்னை ஸ்நானம் பண்ணச் சொன்னார். அத்துடன், "இனிமேலாவது கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுங்கள்" என்று எச்சரித்தார்.

மறு வருஷமே எனக்குக் கல்யாணமாகிவிட்டது. இனிமேல் ஜாக்கிரதை எதற்கு? இந்த உலகத்தில் நல்லொழுக்கம் சம்பந்தமான தடையுத்தரவுகளெல்லாம் பிரமச்சாரிக்குத்தானே! இப்போது மூன்று குழந்தைகளும் இருக்கிறார்கள். என்றாலும், அந்தப் பழைய நிகழ்ச்சி என் மனத்தை விட்டு அகலவே இல்லை. நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. உற்ற நண்பர்களிடமெல்லாம் அந்த நிகழ்ச்சியைச் சொல்லி, "சுத்த பொறாமைக்காரப் பயல்கள் ஸார்" என்று முத்தாய்ப்புடன் முடிக்கிறேன்.

# இரண்டு ஆண்கள்

என் மாமா ஒரு 'அக்கா'ப் பேர்வழி. சோம்பேறித்தனம், போக்கிரித்தனம், அயோக்யத்தனம் என்பன போன்ற குணங்களெல்லாம் அவரிடம் வகைக்குக் கொஞ்சம் உண்டு. காரணகாரியமில்லாமலே, தம்முடைய மோசமான குணங்களில் ஒன்றைக் காட்ட ஆரம்பித்துவிடுவார். எவனாவது ஒருவனுடன் வீண் சண்டை போடாவிட்டால் அன்று அவருக்கு என்னவோபோல் இருக்கும்.

மாமாவுக்கு வயது இருபத்தெட்டு; என்னைவிட நான்கு வயது மூத்தவர். அவருக்கு ஏதோ கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரியும். வேலை எதுவும் கிடையாது. சாப்பிடவேண்டியது, ஊர்சுற்ற வேண்டியது, மடத்தில் துண்டை விரித்துத் தூங்கவேண்டியது, இவரைப் போன்ற ஒரு வேலையற்றவனோடு உட்கார்ந்து தாயம் விளையாட வேண்டியது—இப்படியாக அவர் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார். ஆனால் இந்த மாதிரி வாழ்க்கை நடத்துவதற்குப் பெற்ற தகப்பனோ, அல்லது முப்பாட்டனோ கப்பல் வியாபாரிகளாக இருந்திருக்க வேண்டும். ஆனால் என் மாமாவின் தகப்பனாரோ கப்பல் வியாபாரியுமல்ல; கத்தரிக்காய் வியாபாரியுமல்ல; எட்டு ஏக்கர் கரிசல் மண்ணுக்கு அதிபதி. அவ்வளவுதான். இந்த மாதிரியான மகனை வைத்துக் காப்பாற்ற அவரால் முடியவில்லை. அவன் தவமிருந்து பெற்ற ஏக புத்திரன்தான் என்றாலும், தண்டச்சோறு போடுவது கையைக் கடித்துவிட்டது. ஒருநாள் அவர் மிகுந்த கோபாவேசத்துடன் அடிக்கக் கூடாத ஒரு சாமானை எடுத்து என் மாமாவின் முகத்தில் எறிந்துவிட்டார். அதனால் வலி ஏற்படாவிட்டாலும் நிச்சயம் அவமானம் ஏற்படும். ஆனால், என் மாமாவுக்கோ இரண்டுமே ஏற்படவில்லை. பெரியவர் பார்த்தார். அதற்கு மறுநாளே சாப்பாடு போட

முடியாதென்று, பிடரியைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார். உடனே மாமா தம் தங்கை வீட்டுக்கு, அதாவது எங்கள் வீட்டுக்கு, வந்து சேர்ந்தார். என் தாயார் ஒரு பைத்தியம்; தகப்பனுரோ, ஆஸ்பத்திரியில் சேர்க்கவேண்டிய பைத்தியம். அதனுல், "ஐயோ பாவம்!" என்று என் மாமாமீது இரக்கம் காட்டி சாப்பாடு போட்டுக்கொண்டிருந்தார்கள். மாமா எங்கள் வீட்டில் எழுந்தருளியிருந்த இந்தச் சந்தர்ப்பத்தில்தான், நான் ஆத்துக்குடியிலிருந்து வந்து சேர்ந்தேன். ஒரு கலியாணத்துக்காக நான் ஆத்துக்குடிக்குப் போயிருந்தேன்.

மாமா எங்கள் வீட்டில் வந்து மாதக் கணக்கில் முகாம்போட்ட பிறகுதான், என் தகப்பனுருக்கு ஞானோதயம் பிறந்தது. ஒருநாள் பக்கத்துவீட்டுக் கிழவருடன் பேசிக் கொண்டிருந்தபோது, என் தகப்பனுர், "எனக்கு மகன் பிறந்ததற்குப் பதிலாக, மகள் பிறந்திருக்கக் கூடாதா? என் வீட்டில் இருந்து சாப்பிடும் மைத்துனனுக்குக் கட்டிக்கொடுத்து அவனை வீட்டோடு வைத்துக்கொள்ளுவேனே. அப்புறம் மைத்துனப் பிள்ளை மாதக்கணக்கில் அல்ல, வருஷக் கணக்கிலேயே என் வீட்டில் இருக்கலாமே! ஆனுல், எனக்குப் பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகப் போய்விட்டதே!" என்றுர்.

இந்தச் சொற்கள் காதில் விழுந்தால் மற்றவர்கள் உயிர்வைத்துக் கொண்டிருக்கமாட்டார்கள். ஆனுல் என் மாமாவுக்கோ, இந்தச் சொற்களால் ஒரு பெரிய உண்மைமட்டும் புலப்படலாயிற்று. அதாவது, இனிமேல் எங்கள் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு ஊர் சுற்றுவது நடக்காத காரியம் என்று கண்டு பிடித்துக்கொண்டார். அதனுல் அன்று முதல், என் தாயாரின் கையால் சாதம் வாங்கிச் சாப்பிட வெட்கப்பட்டு, வீட்டில் என்னைத் தவிர வேறு யாரும் இல்லாத சமயம் பார்த்து, தமக்குத் தாமே சாதத்தை எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிடத் தொடங்கினுர். நான் அவரை ஒன்றும் சொல்லமாட்டேன். எனக்கு அவர்மீது ஏதோ ஒரு பிரியம். என் மீதும் அவருக்கு உண்மையிலேயே அளவுகடந்த அன்பு. அவர் வேடிக்கையாகப் பேசுவதும், வேடிக்கை என்று நினைத்துக் கொண்டு அசட்டுத் தனமாக உளறுவதும், மணிக்கு ஒரு தினுசாகக் கோணிக் கோணி நடப்பதும், பெரிய மனிதனைப் போல எனக்குப் புத்திமதி சொல்லுவதும் எனக்குப் பிடித்துப்போய்விட்டன.

சில நாட்களாயிற்று. ஒருநாள் எங்கள் ஊரில் உள்ள ஒரு கன்னிப் பெண்ணைப் பார்த்து, "உனக்கும் கலியாணமாகவில்லை. எனக்கும் கலியாணம் ஆகவில்லை. நம் இரண்டுபேருக்கும் எப்

பொழுது கலியாணம் ஆகப் போகிறதோ !" என்று சிலேடைப் பொருளில் சொல்லியிருக்கிறார். இது ஒரு பெரிய சண்டையையே இழுத்துக்கொண்டு வந்துவிட்டது. பெண்ணின் தாயார், ஆவுடையம்மாள் என்ற பெயருடையவள், எங்கள் வீட்டு முற்றத்தில் வந்து நின்று உடம்பெல்லாம் வாயாகக் கத்தினாள். என் மாமாவோ மிகவும் கம்பீரமாக எழுந்து வந்து, " ஏய் பெரிய மனுஷி ! வாயை மூடு. உன் மகளைப் பார்த்து நான் என்ன சொன்னேன் ? நம் இரண்டு பேருக்கும் எப்பொழுது கலியாணம் ஆகப்போகிறதோ என்றுதானே சொன்னேன் ? இரண்டு தனித் தனிக் கலியாணங்களைத்தான் நான் சொன்னேனே தவிர ஒரு கலியாணத்தைச் சொல்லவில்லை " என்று சொல்லிவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல், " அப்படியே சொன்னேன் என்று வைத்துக்கொள்வோம். என்னைவிட உயர்ந்த மாப்பிள்ளை உன் மகளுக்கு வந்துவிடப் போகிறானா ? நானும் பார்க்கத்தானே போகிறேன் " என்று அழுத்திச்சொன்னார்.

பெண்ணைப் பெற்ற வயிற்றில் தீப்பிடித்துக்கொண்டது. ஆவுடையம்மாள் கோபத்தினால் பேசிய பேச்சை இம்மட்டு அம்மட்டு என்று சொல்ல முடியாது. அன்று எப்படியோ சண்டை ஓய்ந்தது.

இரவு படுத்துக்கொள்ளப் போகும்போது மாமா என்னை ரகசியமாக அழைத்து, " ஏண்டா, நான் இன்று போட்ட போடு எப்படி !" என்றார்.

" ஆஹா !" என்றேன் நான். நான் பாராட்டுகிறேன் என்று நினைத்து அவர் பூரித்துப் போனார்.

மறுநாள் விடிந்ததும், என் தகப்பனார் மாமாவை அழைத்து, " ஐயா ! நீ மகாராசனாய் இருப்பாய் ! என் மேலே கொஞ்சம் இரக்கம் வைத்து, என் வீட்டை விட்டுக் கிளம்பிவிடு அப்பா !" என்று சொல்லிக் கையெடுத்துக் கும்பிட்டார். அம்மா என்னவோ சொல்லிக்கொண்டு குறுக்கிட்டாள். நானும்கூட அப்பாவைத் தடுத்தேன். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை,

மாமா வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டார். அப்புறம் அவர் ஊரைவிட்டே கிளம்பிவிட்டார் என்று மாலையில் தெரியவந்தது. நான் மிகவும் வருத்தப்பட்டேன். அவர் எங்கே போனார் என்று தெரியவில்லை. அவருடைய பிரிவுக்காக நானும் என் தாயாரும் வருந்தாமல் இருக்க அவர் ஒரு தந்திரம் செய்துவிட்டுப் போய்விட்டார். அது என்னவென்றால் பக்கத்து ஊரில் எங்களுக்கு ஒருவர் ஆறுரூபாய் கடன் தரவேண்டும். அங்கே போய் என் தாயார் கேட்டதாகச் சொல்லி, பணத்தைக் கேட்டு வாங்கிக்கொண்டு, மாமா கம்பி

நீட்டிவிட்டார். இந்தக் காரியத்தைச் செய்த பிறகு அவர் பிரிவுக்காக நானும் என் தாயாரும் வருந்துவதற்கு வழியில்லாமல் போய் விட்டது.

## 2

மூன்று மாதங்களாகிவிட்டன, ஒருநாள் எனக்கு ஒரு கவர் வந்தது. வாங்கி உடைத்துப் பார்த்தேன். மாமா எழுதிய கடிதம்தான் அது. அதில் அவர் எழுதியிருந்ததில் சில பகுதிகளை அப்படியே இங்கே கொடுத்திருக்கிறேன் :

"என் அருமை மருமகனுகிய செல்லையாவுக்கு, நானுகிய மாமா எழுதிக்கொள்வது என்னவென்ருல்......

நான் இப்போ மிலிட்டரியில் சேர்ந்திட்டேன். மாசம் சோறு துணி மணி போக 18 ரூவாய் சம்பளம்......

மாசாமாசம் உன் தாயார் பேருக்கு ரூவாய் அனுப்புகிறேன். சேர்த்து வைக்கவும். எனக்கும் கலியாணம் காச்சி என்று ஆகணுமல்லோவோ?......

எனக்கு நம் தமிளப்பெண் பிடித்தமில்லே. எதுக்கும் நான் வந்த பெறகு கலியாணத்தை ஒசித்துக்கொள்வோம். அடிக்கடி கடிதம் போடு. நான் மூணுமாசத்துக்கப்பிறம் லீவில்வருவேன்..."

நான் பதில் கடிதம் போட்டேன். அவரும் கடிதம் போட்டார். இப்படியே கடிதப்போக்குவரத்து ஒழுங்காக நடந்துகொண்டுவந்தது.

மூன்று மாதத்துக்குப் பிறகு அவர் எழுதியிருந்த ஒரு கடிதத்தில், "நான் அடுத்த வாரம் வருகிறேன்" என்று எழுதியிருந்தார்.

நான் அவர் வருகையை ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

## 3

அன்று ஏதோ ஒரு கிழமை. உத்தியோகம் பார்க்காமல் காட்டுப் புறத்தில் இருப்பவனுக்குக் கிழமையைப்பற்றிக் கவலை எதற்கு? நல்ல வெயில். நான் வாசல் திண்ணையில் படுத்துக்கொண்டு பத்திரிகை படித்துக்கொண்டிருந்தேன். திடீரென்று வீதி முனையில்

சிறுவர்களின் ஆரவாரம் கேட்டது. ஒரு நாலைந்து நாய்கள் சேர்ந்து 'கன்னு பின்னு' என்று குரைக்கத் தொடங்கிவிட்டன. ஊருக்குள் காடியோ புலியோ நுழைந்து விட்டதுபோல ஒரே கூப்பாடு. நான் திண்ணையை விட்டுக் கீழே குதித்து எட்டிப் பார்த்தேன். வீதியின் இருபுறங்களிலுமுள்ள வீட்டு வாசல்களில் ஆண்களும் பெண்களுமாக நின்று வீதி மூலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் பின்னே வர, நாய்கள் முன்னே குரைக்க, இரண்டு சிறுவர்கள் ஆசையின் காரணமாகப் பெட்டி படுக்கைகளைத் தங்கள் தலைமேல் சுமந்து வர, என் மாமா காக்கி உடையோடு, வலது கையில் சிகரெட் டப்பாவும், இடது கையில் கொளுத்திய சிகரெட்டுமாக புகை ஊதிக்கொண்டு, ராஜநடை போட்டு இருபுறமும் பார்த்துக் கொண்டே நடந்துவந்தார். நான் எதிர்கொண்டழைக்கச் சென்றேன்.

என்னைப் பார்த்ததும் "க்யாரே, கைஸத்தேரா ஹை? க்யா கர்ரேஹே ஹோ?" என்று கேட்டார்.

அவர் பேசியது எனக்கு விளங்கவில்லை. "என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"சௌக்கியமாக இருக்கிறாயா என்று கேட்டேன். நீ பி.ஏ. படித்தும் இந்துஸ்தானி தெரியவில்லையே! மூஜே தேக்கோ, மைம் ஹிந்தாஸ்தா போல்தா ஹூம்!" என்று மிடுக்காகச் சொன்னார்.

"கர்மே அம்மா சௌக்கியமா! எனக்குத் தமிழ் மறந்து போச்சு!" என்று சிரித்துக்கொண்டே பெருமையோடு சொன்னார்.

தெருவில் உள்ளவர்களில் பாதிப்பேர், நின்ற இடத்தில் நின்று இந்தக் கண்காட்சியை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். மீதியுள்ளவர்கள் வேடிக்கை பார்ப்பதற்காக எங்கள் வீட்டுக்கே வந்து விட்டார்கள். மொத்தத்தில் வீடு பிடிக்காத கூட்டம். முதல் முதலில் எங்கள் ஊரில் ராணுவத்துக்குப் போய்த் திரும்பியவர் இவர்தான். அதனால் ஒவ்வொருவரும் குழந்தைகளைத் தூக்கிக் கொண்டுவந்து என் மாமாவைப் பார்த்த வண்ணம் நின்றுகொண்டிருந்தார்கள். சிலர் குடும்ப சகிதமாகவே வந்து விட்டார்கள். அநேக சிறுவர்கள் அன்று மத்தியானம் பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லை.

ஒரு கிழவர் வந்து என் மாமாவிடம், "தம்பி இப்போது எந்த ஊரிலிருந்து வருகிறது?" என்று கேட்டார். 'வருகிறாய்' என்று கேட்க அவருக்கு வாய் வரவில்லை.

"சிட்டகாங்கிலிருந்து வருகிறேன், தாத்தா."

"அது எங்கே இருக்கிறது? மதுரைக்கு வடக்கே தானே?" என்றார் கிழவர்.

என் மாமா அமர்க்களமாகச் சிரித்துக்கொண்டு, "மதுரையா? பழையகாலத்துப் பைத்தியங்கள்! பிட்டகாங் இங்கிருந்து இருபதினாயிரத்து முன்னூறு மைல்" என்று ஒரு போடு போட்டார்.

"அடேயப்பா!" என்று ஏக காலத்தில் சுமார் பத்துப்பேர் வரை பிரமித்தார்கள்.

அந்தக் கிழவர், "தம்பி மதுரைக்கு வடக்கேயெல்லாம் போய்ப் பார்த்துவிட்டு வந்துவிட்டதே!" என்று பல தடவைகள் திரும்பத் திரும்பச் சொல்லி ஆச்சரியப்பட்டார்.

மாமா ஒரு சிகரெட்டை எடுத்துக் கொளுத்தினர்.

ஒரு பெண், "பிட்டகாங்கிலிருந்து இங்கே வர எத்தனை நாள் பிடிக்கும்?" என்று கேட்டாள்.

"ஒன்றரை மாதம்!"

"ரயிலில் தானே வரவேண்டும்?"

"ரயிலில் முப்பது நாள்; கப்பலில் முப்பது நாள்!"

என்னால் தாங்கவே முடியவில்லை. அந்த இடத்தில் அவருடைய அபிப்பிராயத்தை எதிர்த்துச் சொன்னால், அந்த ஜனக்கூட்டம் முழுவதும் என்மேல் பாய்ந்துவிடும். எல்லோரும் மாமாவின் வாக்கை வேத வாக்காக ஏற்றுக்கொண்டிருந்தார்கள்.

அங்கே ஒரு அம்மாள் இடுப்பில் வைத்துக்கொண்டிருந்த ஒரு குழந்தையை வாங்கிக்கொண்டு அதனோடு இங்லீஷ்தானியில் பேச ஆரம்பித்துவிட்டார் மாமா. இதைப் பார்த்து மகிழ்ச்சிப் பெருக்குடன் எல்லோரும் சிரித்தார்கள்.

கிழவர் வாயைத் திறந்து, "பிட்டகாங்கு, சீமைக்கு அந்தப் பக்கமா? இந்தப் பக்கமா?" என்று தம் கடைசிச் சந்தேகத்தைக் கேட்டார்.

நான் குறுக்கே தலையிட்டு, "இந்தியாவில்தான் பிட்டகாங் இருக்கிறது" என்றேன்.

"போடா பூல்! இந்தியா எங்கே? பிட்டகாங் எங்கே? பி. ஏ. படித்துவிட்டானாம் பி. ஏ.! உன்னைப்போலப் படித்தவனெல்லாம் மிலிட்டரியில் ஆயிரம், இரண்டாயிரம் என்று சம்பளம் வாங்குகிறான்; நீ என்னடா என்றால் பட்டிக்காட்டில் உட்கார்ந்து வாயளப்பு அளந்து கொண்டிருக்கிறாய்!" என்றார்.

அத்தனை கூட்டமும் என்னை மிக ஏளனத்தோடு பார்த்தது. என் ஏன்சாணுடம்பு ஒரு சாணாகக் குறுகிவிட்டது. மூச்சுப் பேச்சில்லாமல் வீட்டுக்குள்ளே வந்துவிட்டேன்.

# இரண்டு ஆண்கள்

சிறிது நேரத்தில் என் தகப்பனார் தோட்டத்திலிருந்து வந்து சேர்ந்ததால் இந்த வேடிக்கைக் கூத்து முடிவடைந்தது. எல்லோரும் அவரவர் வீடுபோய்ச் சேர்ந்தனர். மாமா என் தகப்பனாருடன் ஏகதேசமாக இந்துஸ்தானியில் பேசத் தொடங்கினார். தகப்பனாருக்குக் கோபம் வந்து விடவே அவரைக் கொஞ்சம் மட்டம் தட்டிவிட்டார். அப்புறம்தான் மாமாவுக்குப் புத்தி வந்தது.

மாமா குளித்துச் சாப்பிட்டார். பிறகு என்னோடு வந்து வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு, ஆங்கில தினசரிப் பத்திரிகையை எடுத்துப் ‘படிக்க’ ஆரம்பித்தார்.

தகப்பனார் மாமாவை எரிச்சலோடு பார்த்தார். “ஐயா! முதலில் தமிழ்ப் பேப்பர் வாசிக்கப் படி! அப்புறம் இங்கிலீஷ் பேப்பர் வாசிக்கலாம்!” என்று ஒரு சூடுகொடுத்தார். மாமா பெட்டிப் பாம்பாக ஒடுங்கிவிட்டார். சிறிது நேரத்தில் அவருடைய பெற்றோர்கள் வந்து வற்புறுத்தி அழைத்ததன்பேரில் தம் வீட்டுக்குச் சென்றார் மாமா.

அன்று மாலை நாங்கள் இருவரும் உலாவக் கிளம்பினோம். மாமா தம் விகாரமான கிராப்பை மேலும் அதிகமாக விகாரப்படுத்தினார்; அதாவது தலை வாரினார். முன் பக்கத்தில் சாண் நீள மயிரும், பின் பக்கத்தில் முழு க்ஷவரமுமாகக் கத்திரித்து விடப்பட்ட அந்தக் கிராப்பும், அவர் வைத்திருந்த கில்லாடி மீசையும், இரண்டு காதுகளிலும் இரண்டு அரை ரூபாய் நாணயங்களைச் செருகி வைத்துக்கொண்டதும், வலது காதில் சிகரெட் கட்டையும், முகத்தில் துலாம்பரமாகத் தெரியும் பவுடருமாகப் பவனிகிளம்பினார் மாமா. எனக்கு அவர் கூடப் போகவே அவமானமாக இருந்தது. இருவரும் ஊர் மந்தையை நோக்கி நடந்தோம்.

எங்கள் ஊரில் உள்ள பெரிய மனிதர்கள், பஞ்சாயத்துக்காரர்கள், பணக்காரர்கள்—அத்தனை பேரும் மாமாவைப் பார்த்து மரியாதை செய்தனர். சில கல்யாணமான பெண்கள் ஏற்கனவே தமக்குக் கல்யாணமாகி விட்டதற்காக வருத்தப்படுகிறவர்கள் போல என் மாமாவிடம் நடந்து கொண்டார்கள். கல்யாணமாகாதவர்கள் அன்பு ததும்பப் பேசினார்கள். முன்னால் இவரைப் பார்த்து, ‘சீ சீ!’ ‘தூ தூ!’ என்றவர்களெல்லாம் இவருக்கு ராஜ மரியாதை கொடுத்தார்கள். இவையெல்லாம் எனக்கு நம்ப முடியாத அதிசயங்களாக இருந்தன.

ஊரைவிட்டுத் தனியாக ஓரிடத்தில் வந்து உட்கார்ந்தோம்.

“வேற்று ஆண்களோடு பேசியறியாத பெண்கள் கூட உங்களோடு பிரியமாகப் பேசுகிறார்களே!” என்றேன்.

"பூ, இது என்ன பிரமாதம்! சிட்டகாங்கில் ஆனைப்பட்ட வெள்ளைக்காரிகளெல்லாம் என் காலைக் கட்டிக்கொண்டு கிடப்பார்கள்; தெரியுமா?" என்றார் மாமா.

எனக்கு அவர்மீது உண்மையிலேயே வெறுப்பு உண்டாகிவிட்டது. அதற்கப்புறம் நான் அவரிடம் அதிகமாகப் பேசவில்லை. அரைமணி நேரத்துக்குள்ளேயே வீட்டுக்குத் திரும்பிவிட்டோம்.

4

மாமா ஊருக்கு வந்து பதினைந்து நாட்களாகி விட்டன. பழைய

படியும் சிட்டகாங்குக்குப் புறப்பட்டார். போகும்போது, எனக்கு ஒரு பெல்ட், ஒரு பவுடர் டப்பா, தந்தத்தினால் செய்த ஒரு சிகரெட் பெட்டி ஆகியவற்றைக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

இவர் விடுமுறையில் வந்துபோனது ஊருக்குள் சில மாறுதல்களை உண்டாக்கிவிட்டது. அவையாவன: எங்கள் ஊரில் மூன்று வாலிபர்கள் ஒரு சில நாட்களில் ராணுவத்தில் சேர்ந்துவிட்டார்கள். முன்னால் சண்டைக்கு வந்த ஆவுடையம்மாள் தன் மகளை என் மாமாவுக்கே கல்யாணம் செய்து கொடுக்க முயற்சி செய்துகொண்டிருந்தாள். எனக்கு ஊரிலுள்ள பெரியவர்கள் மீதும், பெண்கள் மீதும் இருந்த மதிப்பு அடியோடு போய்விட்டது.

ஒரு காலத்தில் ஊரோடு என் மாமாவைக் 'காலிப்பயல்' என்று பழிதூற்றிவிட்டு இன்று ஒவ்வொருவரும் அவரை மரியாதை செய்ததும், உத்தமமான குணம் படைத்த இளம்பெண்கள் கூட அவரை வளைய வளைய வந்ததும் எனக்கு விபரீதமாகத் தோன்றின. "காலித்தனமாக நடந்து கொள்கிறவனுக்குத்தான் காதலோ, கண்ணியமோ கிட்டும் போலிருக்கிறது" என்று கருதத் தலைப்பட்டேன். இதனால் என் மனப்போக்குத் தலைகீழாக மாறிவிட்டது.

5

சுமார் ஒரு மாதந்தான் கழிந்திருக்கும். என் புத்தியில் கறைபிடிக்க

ஆரம்பித்து விட்டது. நான் அப்போது இருபத்து நான்கு வயது வாலிபன். படித்துப் பட்டம் பெற்றவனானதால், கண்ணியமாக நடந்து கொள்ளுவேன். பெரிய மனிதர்களிடத்தான் பேச

வேன்; பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டேன். யார் வீட்டுக்காவது போனால், ஆண்களும் பெண்களும் படித்தவன் என்பதற்காக என்னை மரியாதையோடு வரவேற்பார்கள். நானும் அதற்குத் தக்கபடி நடந்து கொள்ளுவேன். ஆனால் மாமா வந்து சென்ற பிறகு என் பண்புகளை நானாகவே மாற்றிக்கொண்டேன்.

"மாமாவை விட நான் நல்லவன்; அவரை விட நான் அழகானவன்; அவர் படிக்காத மூட்டாள்; நான் பட்டதாரி. ஆனால் ஊரில் உள்ள அழகான பெண்கள் அவரைத்தான் காதலிக்க விரும்புகிறார்கள்; தாய்மார்கள் அவருக்குத்தான் பெண் கொடுக்க விரும்புகிறார்கள். நான் சொத்து சுகமுடையவன் என்பதையும், அவர் மாதம் பதினெட்டு ரூபாய் சம்பளக்காரன் என்பதையும் தெரிந்துகொண்டே பெண்கள் அவரை மோகிப்பது ஏன்? நான் கல்யாணம் செய்து கொள்ள விரும்பி, அந்தத் தெற்குத் தெருப் பெண்ணை நெடுநாள் நேசித்து வந்தும் அவள் என் காதலை இன்றுவரையிலும் பொருட்படுத்தாத காரணம் என்ன?"—இப்படியெல்லாம் யோசித்தேன். கடைசியில் 'நல்லவனுக்குக் காலமில்லை; நாமும் போக்கிரியைப் போல நடந்து கொள்ள வேண்டியதுதான்' என்று துணிந்தேன். அவ்வளவுதான்; அதன் பிறகு, என் மாமாவை அப்படியே பின்பற்ற ஆரம்பித்தேன். அவரைப் போல விகாரமாகக் கிராப்பைக் கத்திரித்துவிட்டு, அரை மீசையும் வைத்துக் கொண்டேன். சிகரெட் பிடிக்கப் பழகினேன். அவரைப் போலவே காலெடுத்து வைத்து நடக்கவும், அவரைப் போலவே வாயைக் கோணிக்கொண்டு பேசவும் தொடங்கினேன். காக்கி உடை ஒன்றைத் தவிர மற்ற அம்சங்களில் எனக்கும் மாமாவுக்கும் தோற்றத்தில் வித்தியாசமில்லை. ஆனால் அவரைப்போல ஊர்ப் பெண்களோடு பேசும் துணிவு மட்டும் எனக்கு ஏற்படவில்லை. இதற்காக நான் மிகவும் வருத்தப்பட்டேன்.

என் புதிய கோலத்தை என் தகப்பனார் வெறுத்தார்; ஊர்க்காரர்களும் வெறுத்தார்கள். நான் எதிர்பார்த்தது போல் அவர்கள் எனக்கு மரியாதை செய்யவில்லை. பெண்களும் என்னோடு பிரியமாகப் பேச வரவில்லை. அதற்குப் பதிலாக ஊருக்குள் கேலிசோதமான வரவேற்புத்தான் எனக்குக் கிடைத்தது.

சிலர் என்னைக் கூப்பிட்டுப் புத்திமதி சொன்னார்கள். உடனொத்த வாலிபர்கள் என்னைப் 'போக்கிரிப் பயல்' என்றார்கள். பெண்களோ என்னைப் பார்த்ததும், வேறுபுறமாகத் திரும்பிக் காறித் துப்பிவிட்டுச் சென்றார்கள். ஒரு சில தினங்களுக்குள்ளேயே இரண்டொருவர் என் தகப்பனாரைச் சந்தித்து, "பையனைக் கொஞ்

சம் கண்டித்துவையுங்கள். தங்கமான பிள்ளையாக இருந்தவன், இப்படிக் குட்டிச்சுவராகப் போய்விட்டான். காலாகாலத்தில் நாம் கண்டிக்காவிட்டால், பையன் காலிப்பயலாக மாறிவிடுவான்" என்று சொல்லிவிட்டுச் சென்றார்கள்.

ஒருநாள், ஒரு பெண்ணைப் பார்த்து, பணம் கொடுக்கல்வாங்கல் சம்பந்தமாக ஏதோ கேட்க வேண்டியிருந்தது; கேட்டேன். உடனே அவன் கடுங் கோபத்துடன், "போக்கிரிப் பயலே! கல்யாணமாகாத பெண்ணோடு உனக்கு என்னடா பேச்சு! இனிமேல் ஏதாவது பேசினால் நாக்கை ஒட்ட அறுத்துவிடுவேன்" என்று சீறினான். எனக்கு உயிரே போய்விட்டது. செத்த பிணம் போல வீடு வந்து சேர்ந்தேன். அன்றிரவு சாப்பிடவே முடியவில்லை. அவமானத்தினால் உறக்கமும் வரவில்லை. என் பரிதாப நிலைக்காக நான் கண்ணீர் சிந்தி அழுதுவிட்டேன். இப்படிப்பட்ட அவமானங்களைத் தாங்கிக் கொள்ளும் தனிப் பெரும் சக்தி இந்த உலகத்திலேயே என் மாமா ஒருவருக்குத்தான் உண்டு. நானோ ஊரை விட்டே கிளம்பத் திட்டமிட்டு விட்டேன்.

இரவெல்லாம் ஒரே மன உளைச்சல்; ஒரே சிந்தனை: 'இது என்ன புதிர் என்று புரியவில்லையே! மாமாவும் ஆண்தான்; நானும் ஆண்தான். ஆனால் அவருடைய அல்காத்தனத்தை போஷிக்கிறார்கள்! என் அல்காத்தனத்தை வெறுக்கிறார்கள்!' இவ்வாறு என்னென்னவோ யோசித்துக்கொண்டிருந்தேன். உறங்குவதற்கு முன்பு, "அல்காப் பேர்வழிகளைக் காதலிக்க விரும்பும் பெண்களும் கூட, நல்லவன் அல்காத்தனமாக மாறுவதை வெறுப்பார்கள் போலிருக்கிறது!' என்று நினைத்துக் கொண்டேன். உண்மையும் அதுதான் என்று பின்னால் விளங்கிவிட்டது.

அடுத்த நாள்முதல் அந்த ஊரிலேயே எனக்கு இருக்கப் பிடிக்கவில்லை. வெகு சீக்கிரத்தில் ராணுவத்தில் சேர்ந்துவிட்டேன். பெற்றோர்கள் தடுப்பார்கள் என்ற பயத்தினால் ஒருவரிடமும் சொல்லிக் கொள்ளாமல் போய் நல்ல உத்தியோகத்தில் சேர்ந்துகொண்டேன். ரயிலேறிய தினத்துக்கு முதல்நாள் இரவு என் தினசரிக் குறிப்புப் புத்தகத்தில் பின்வருமாறு எழுதி வைத்தேன்:

"நான் பிறந்த இந்த ஊரைவிட்டு நாளைக் காலையில் பிரியாத மனத்தோடு பிரியப்போகிறேன். எப்பேர்ப்பட்ட ஊர்! எவ்வளவு நல்ல மனிதர்கள்! நான் கெட்டுப் போகக் கூடாது என்பதில் இவர்களுக்கு எவ்வளவு அக்கறை! ஆனால், இந்தப் பெண்கள் எதற்காக என் மாமாவை நேசித்தார்கள்? காரணம் இதுவாகத்தான் இருக்க முடியும்: பிறந்த நாளிலிருந்து வெளியுலகத்தை அறியாத பெண்கள்

இவர்கள்; அத்துடன் ஆடம்பரச் செலவு செய்யவோ, ஆடம்பரக் கலைக் கண்ணாரக் காணவோ முடியாத ஏழைகள். இப்படிப்பட்ட வாழ்க்கை நிலையில் வளர்ந்தவர்களானதால், வெளியுலகத்திலிருந்து வந்து சேர்ந்த ஒரு சாதாரணப் பகட்டுக் கூட இவர்களின் புத்தியைப் பறிகொண்டுவிட்டது. நல்லொழுக்கத்தை உயிரைப்போலப் பாது காத்து வந்து, அடுத்தவளின் நல்லொழுக்கத்தில்கூடக் கண்ணும் கருத்துமாக இருந்த இந்த இளம் பெண்களின் தூய உள்ளம், கேவலம் ராணுவ உடைகளையும், சோப்பு பவுடரையும், காலிக்கு பிற மொழிச் சொற்களையும், ஒருவனுடைய வெடுக்குராயில் பிரயாணத்தையும் கண்டு மிரண்டுவிட்டது. அதனால்தான் போக்கிரியின் மீதுகூட இவர்களுக்கு மோகம் பிறந்தது. இந்தக் கிராமத்திலும், இதுபோன்ற லட்சக் கணக்கான கிராமங்களிலும் மனித வாழ்க்கை எவ்வளவு பரிதாபகரமாக இருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்று. இல்லையென்றால், அற்பமான பொருள்களும், அற்பத்தனமான ஆடம்பரமும் இவர்களின் உன்னதமான பண்புகளை, உயர்ந்த ஒழுக்கத்தை, இவ்வளவு எளிதில் தகர்த்திருக்க முடியுமா? பாவம்! அப்பாவிப் பெண்கள்! ஆனால், நல்ல பெண்கள்! ஆம், மிக மிக நல்ல பெண்கள்!"

# சாப்பிட்ட கடன்

கோமதிநாயகத்துக்கு வயது முப்பத்தைந்து. கல்யாணமாகி ஐந்து குழந்தைகளும் இருக்கிறார்கள். கோமதிநாயகத்தின் தகப்பனார் காலமாகி மூன்று ஆண்டுகள் ஆகின்றன. தகப்பனார் காலமானதும் குடும்பச் சொத்துக்குக் கோமதிநாயகமே முதலாளியாகிவிட்டான். அவனுக்கு உடன் பிறந்த தம்பியோ அண்ணனோ கிடையாது. சுமார் ஐம்பதினாயிரம் பெறுமதியுள்ள சொத்துக்கு இவன் அதிபதியானதும் தன் வாழ்வில் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்வதைக் கண்டான். முன்னால், 'என்னப்பா, கோமதிநாயகம்!' என்று சொல்லித் தோளில் கைபோட்டுப் பேசியவர்கள், இப்போது அவனை முதலாளி என்று கூப்பிட ஆரம்பித்தார்கள். வயது சென்ற கிழவர்கள் கூட ஏக வசனத்தில் பேசுவதை நிறுத்தி 'நீங்கள் நாங்கள்' என்று பேசினார்கள். ஏழை எளியவர்களும் நடுத்தர நிலையில் உள்ளவர்களும் என்றோ ஒருநாள் சகாயம் கிடைக்கும் என்று நம்பி அவனை மட்டற்ற மரியாதையோடு நடத்தினார்கள். வெற்றிலை பாக்குக் கடைக்காரன் வலியக்கூப்பிட்டு நுனி வெற்றிலை கொடுக்கத் தொடங்கினான். பலகாரக் கடைக்காரனோ, இப்பொழுது கடனுக்குப் பலகாரம் கொடுப்பதுடன், கொடுத்த கடனைக் கேட்பதும் இல்லை. 'முதலாளிபணம் கம்மபணம்; எந்த நேரத்தில் போய்க் கேட்டாலும் அட்டியில்லாமல் கிடைக்கும்' என்று பெருமையோடு சொல்லிக்கொண்டான். கிராமத்திலுள்ள அத்தனை பேரும் இப்படித் திடீரென்று மாறுதல் அடைந்ததை கோமதிநாயகம் நன்கு கவனித்துக் கொண்டான்.

குடும்பச் சொத்துக்கு ஏகசக்ராதிபதியான மறுவருஷம், கோமதிநாயகம் சுமார் முப்பது மைல் தூரமுள்ள ஒரு கிராமத்துக்கு

ஒரு காரியார்த்தமாய்ப் போயிருந்தான். அந்த ஊரில் உள்ள இரண்டொரு வீட்டுக்காரர்களுக்கும் கோமதிநாயகத்தின் தகப்பனுக்கும் சுமாரான அறிமுகம் உண்டு. உண்டென்றாலும் இதற்கு முன்னால் அவன் அந்த ஊருக்குப் போகும்போதெல்லாம் அவனை எங்காவது தெருவில் சந்தித்தால் 'வாருங்கள்' என்று அவர்கள் ஒரு தடவை உபசாரத்துக்குச் சொல்லிவிட்டுத் தங்கள் வேலையைக் கவனிக்கப் போய்விடுவார்கள். ஆனால், இந்தத் தடவை அவன் அங்கு போன போது, அந்த இரண்டுவீட்டுக்காரர்களும் போட்டிபோட்டு விருந்து வைத்தார்கள். தீபாவளி மாப்பிள்ளைமாதிரி சுமார் ஒருவாரம் நன்றாக இருந்து சாப்பிட்டான் கோமதிநாயகம். அப்புறம் தன் காரியத்தையும் கவனித்துக்கொண்டு ஊர் திரும்பினான்.

சொந்த ஊரிலும் ராஜமரியாதை; மூப்பனுடைமைக்கு அப்பால் உள்ள ஊரிலும் அதே ராஜமரியாதை. கோமதிநாயகத்துக்குச் சந்தோஷம் ஏற்படாமல் இருக்க முடியாது. சந்தோஷப்பட்டான். தான் ஒரு முதலாளி என்ற நினைப்பை மனத்துக்குள் பயிர்செய்து வளர்த்தான். அதற்குத் தக்கபடி நடந்துகொள்ளவும் ஆரம்பித்தான். முன்னால் 'நீங்கள்' என்று யாரைப்பார்த்துச் சொல்லுவானோ அவர்களை இப்போது 'நீர்' என்றும், 'நீர்' என்று சொன்னவர்களைப் பார்த்து 'நீ' என்றும் சொல்லத் தொடங்கினான்.

முதலாளியாகி ஒரு வருஷம் பூர்த்தியாகிவிட்டது. தனக்குப் புதிதாகச் செய்யப்படும் மரியாதைகளைத் தக்கமுறையில் பயன்படுத்தி, அந்த மரியாதைகள் நாளுக்குநாள் அதிகரிக்கும்படியான நிலையையும் சிருஷ்டிக்க வேண்டும் என்று விரும்பினான் கோமதிநாயகம். இந்த யோசனையைத் தீர்மானமாகவும், அப்புறம லட்சியமாகவும் உருவாக்கினான். அவ்வளவுதான், அப்புறம் உபசாரம் தன்னைத் தேடி வரவேண்டும் என்று காத்திராமல், தானே உபசாரத்தைத் தேடிப் போனான். யார் யார் தன்னைத் தெருவிலோ, வழியிலோ கண்டு அதிகமாக மரியாதை செய்கிறார்கள் என்று கவனித்துக்கொண்டான். அவர்கள் ஏழைகளாக இருந்தாலும், சுமாரான நிலையில் இருப்பவர்களாக இருந்தாலும் காப்பி சாப்பிடும் நேரத்தில் அவர்கள் வீடுகளுக்குப் போய் உட்கார்ந்துகொள்ளுவான். கிராமத்தில் காலையில் ஒன்பது மணிக்குத் தேநீர் போட்டுச் சாப்பிடுவார்கள். கோமதிநாயகத்தைக் காலை ஒன்பது மணிக்கு அவனுடைய வீட்டில் பார்க்கமுடியாது. அதேசமயத்தில் எந்த வீட்டில் இருப்பான் என்றும் சொல்ல முடியாது. ஆனால் யாரோ ஒருவர் வீட்டில் நிச்சயம் இருப்பான். எதிர்கால சகாயத்தை மனதில் வைத்துக்கொண்டு, யாராவது ஒருவர் கோமதிநாயகத்துக்கு, செய்யாத உபசாரம் செய்து பலகாரம் சாப்

பிடச் சொல்லுவார். அவன் அதே வீட்டுக்குத் தினந்தோறும் அதே நேரத்தில் போவான். தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாட்களில் காலைநேரத்தில் மட்டுமின்றி, மத்தியானச் சாப்பாட்டு நேரத்திலும் போவான். வராதிருந்து வந்துவிட்டது என்று மகிழ்ந்து சில வீட்டுக்காரர்கள், அவனைத் தாங்கித் தடுக்கிச் சாப்பிடச் செய்வார்கள். ஊரில் நால்வானி வீடுகளுக்கு மாப்பிள்ளை மாதிரி ஆகிவிட்டான் கோமதிநாயகம். சில ஏழைகள், காப்பியைத் தங்கள் குழந்தைகளுக்குக் கூடக் கொடுக்காமல், கோமதிநாயகத்துக்குக் கொடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு. இந்த விஷயம் அவனுக்கும் தெரியும். ஆனால் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல், யாதொரு தயக்கமும் இல்லாமல் ஏழைகளின் சாப்பாட்டைப் பங்கு போட்டுச் சாப்பிட்டுவந்தான். தாங்கள் பட்டினி கிடந்தாலும், தங்கள் குழந்தை குட்டிகள் ஏக்கத்தினால் முகம் வீங்கிச் செத்தாலும் அதற்காகக் கவலைப்படாமல், அவனை உபசரிப்பதை பூர்வ ஜன்ம புண்ணியத்தினால் கிடைத்த பாக்கியமாகச் சில ஏழைக் குடும்பஸ்தர்கள் கருதினார்கள். இப்படி யெல்லாம் இருந்தும், சம்பிரதாயத்தை முன்னிட்டுக்கூட கோமதிநாயகம் பிறர் பொருட்டுக் காலணா செலவழித்தது கிடையாது. 'வைத்தியக்காரர்கள் நமக்குச் செய்கிறமட்டும் செய்யட்டும்; செய்வதை நிறுத்திக்கொண்டால், நாம் அங்கு போவதை நிறுத்திக் கொள்ளலாம்' என்று மனதிற்குள்ளேயே திட்டம் செய்திருந்தான்.

இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, வைக்கோல் வாங்குவதற்காகத் தெற்கே வைத்தாரை அடுத்த தென்கலம் என்ற கிராமத்துக்குப் போனான் கோமதிநாயகம். கோமதிநாயகத்தின் ஊரில் பிறந்த ஒரு பெண் தென்கலத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தாள். அவள் கணவர் நல்ல சம்சாரி; நாணயஸ்தர். அவருடைய உதவியைக்கொண்டே மலிவான விலைக்குத் தனக்குத் தேவையான அளவு வைக்கோலை வாங்கிக்கொண்டான். போனதற்கு மறுநாளே காரியம் முடிந்துவிட்டது. ஆனாலும் தென்கலத்து ஆசாமி, தம் மனைவியின் மூலம் கோமதிநாயகத்தின் குடும்ப அந்தஸ்தைக் கேள்விப்பட்டு, அவனுக்கு விருந்துசெய்து அனுப்பவேண்டுமென்று தீர்மானித்தார். மூன்று நாட்களாவது இருந்துவிட்டுத்தான் போகவேண்டும் என்று அவர் கட்டாயப்படுத்தவே கோமதிநாயகமும் சம்மதித்தான். இருவருக்கும் முன்பின் அறிமுகம் கிடையாது. தம் மனைவியின் ஊரில் அவன் ஒரு பெரிய விவசாயி என்பதற்காகவே இத்தனை மரியாதைகளும் செய்தார் தென்கலத்து ஆசாமி.

ஒருநாளைக்கு இரண்டு வேளை வெந்நீர்க் குளிப்பு; தாகம் எடுக்கும்போது ஒவ்வொரு இளநீர்; தாகம் எடுக்காத போதும் ஒவ்வொரு

இளநீர். நாலுவகைக் கறியுடன் வகையான சாப்பாடு. வீட்டில் சாப்பிடும் பலகாரம் போதாதென்று கடைப் பலகாரம் வேறு. இலவசமாகக் கிடைக்கிறதென்பதற்காக எந்நேரமும் வெற்றிலை; வெற்றிலை போடாதபோது சிகரெட். குற்றேவல்களை நிறைவேற்ற எந்நேரமும் பக்கத்தில் ஓர் ஆள். இவ்விதமாக மூன்று நாட்கள் விருந்தாளியாக இருந்தான். நான்காவது நாள் கோமதிநாயகம் பிரியா விடை பெற்றுப் புறப்படும்போது தென்கலத்துத் தம்பதிகளைப் பார்த்து, "அண்ணாச்சி! நம்ம ஊருக்கு எப்பவாரீக? வந்து ஒரு பத்து நாளாவது நம்ம வீட்டிலே இருந்துட்டுத்தான் இங்கே வரணும். இல்லேன்னு உங்களை யார் விடுவா? தங்கச்சி! அப்போ நான் வரட்டுமா? போய்ட்டு வாரேன்" என்றெல்லாம் பல உபசார மொழிகளைச் சொல்லிவிட்டுக் கிளம்பினான். கைக்கோல் வண்டியில் ஒரு மூட்டை நெல்லிக்காயை இனாமாகப் போட்டு அனுப்பினார்கள் தென்கலத்துத் தம்பதிகள்.

தென்கலம் ஆசாமி, கோமதிநாயகத்தின் பேச்சையும், பாவனைகளையும் பார்த்து மயங்கி, "பெரிய வீட்டுப் பிள்ளை பெரியவீட்டுப் பிள்ளைதான்" என்று தம் மனைவியிடம் ஒரேயடியாகச் சிலாகித்துச் சொன்னார். மனைவியும், "எப்பேர்ப்பட்ட குடும்பம்! எங்க ஊரிலேயே அந்த வீடு ஒரு தினுசுதான்! அந்த வீட்டு ஆட்களும் ஒரு தினுசுதான்!" என்று பெருமையோடு சொன்னாள்.

சுமார் மூன்று மாதங்களுக்குப் பிறகு தென்கலம் சம்சாரி, கோமதி நாயகத்தின் ஊருக்கு வந்தார். அவர் வருவதற்குள்ளாக, இங்கே பல மாறுதல்கள் நடந்துவிட்டன. கோமதிநாயகத்திற்கு ஊர்க்காரர்கள் செய்யும் உபசாரம் வேறு உருவத்தை அடைந்துவிட்டது. பெரும்பாலான வீடுகளில், இவன் போகும் நேரத்தில் உபசரித்துக் காப்பி கொடுப்பது போய், அப்புறம் கேட்டால் மாத்திரம் கொடுப்பது என்று ஆகி, அதன்பின் கண்ணால் பார்த்துக்கொண்டால் மட்டும் கொடுப்பது என்று மாறி, கடைசியாகக் கண்ணாலும் பார்த்து, வாயாலும் பல முகஸ்துதிகள் செய்த பிறகே ஒரு சின்னஞ்சிறு தம்ளரில் காப்பி கொடுப்பது என்ற கட்டத்தை அடைந்துவிட்டது. இவனுடைய காலடி ஓசையைக் கேட்ட மாத்திரத்தில் அநேக வீடுகளில் வெண்கலபாத்திரங்கள் கலகலக்கும்; வீட்டுக்காரர்கள் அதிவேகமாகக் காப்பியையோ பலகாரங்களையோ மறைக்கும்போது ஏற்படும் ஓசைதான் அது. இதைக் கோமதி நாயகம் தெரிந்துகொள்ளாமல் இல்லை. இருந்தாலும் பலிக்கிற மட்டும் பலிக்கட்டும் என்று துணிந்து, "என்ன சித்தி? உன் பிள்ளைக்குக் காப்பி வச்சிருக்கையா, மறந்திட்டயா? பிள்ளைவாள் அம்மா செல்லக்

கல்லேன்னு வேறே யாரு நெனேப்பா?" என்றும், "என்ன மருமகப் பிள்ளே! மாமா வந்திருக்கிறுறனேங்கிற கெவனமே இல்லியே! 'மாமன் ஒருத்தன் வந்திருக்கிறனே, ஒரு காப்பி போட்டுக் குடுப்போம், ஒரு பலகாரத்தைச் சாப்பிடச் சொல்லுவோம், ஒருவெத்திலே பாக்கு போடச் சொல்லுவோம்' என்கிற நெனேப்பு இருக்கா?" என்றும் விளையாட்டாக ஆரம்பித்தான். இவனுடைய விளையாட்டு, வீட்டுக்காரருக்கு வினையாக மாறிக்கொண்டு வந்தது. ஆனால், 'நீ போ' என்று சொல்லும் துணிவு மட்டும் யாருக்கும் வரவில்லே. அதே நேரத்தில் அவனிடத்தில் மரியாதை காட்டுவதும், அவன் இல்லாத இடத்திலும்கூட அவனைப் பற்றிச் சிலாகித்துப் பேசிக் கொள்ளுவதும் நிற்கவில்லே. இதற்குக் காரணம் கோமதிநாயகம் சொத்து சுகமுள்ளவனாக இருந்ததுதான்.

வீடுகளில் பலகாரத்தையும், வெற்றிலே பாக்கையும் கண்ணிமைப் பொழுதிலே, கைசொடிப் பொழுதிலே ஒளித்துவிட சாத்தியம் உண்டு. ஆனால், கடைக்காரன் அப்படி ஒளித்தால் வியாபாரம் ஆகுமா? இதனால், கோமதிநாயகம் வந்து ஓசிவெற்றிலே கேட்கும் போது, என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தான் கடைக்காரன். கொடுக்க முடியாது என்று சொல்ல அவனால் முடியவில்லே. என்ன இருந்தாலும் கோமதிநாயகத்தின் தொடர்பு தேவை என்றே அவனுக்குப் பட்டது. காரணம் கோமதிநாயகத்தின் கையில் 'பசை' இருந்ததுதான்.

ஊருக்குள் இப்படிப்பட்ட சிக்கலான நிலே. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் தென்கலம் ஆசாமி வந்து சேர்ந்தார். தம் மாமனார் வீட்டுக்குப் போனார். மத்தியானப்போல கோமதிநாயகத்தின் வீட்டுக்கு 'மெள்ள' வந்தார். கோமதிநாயகமும் வரவேற்று இனியமொழிகள் பேசினான். பேச்சு நீண்டுகொண்டே போயிற்று. நடுவில் ஒருதம்ளர் காப்பியோ, ஒருசோத்து வெற்றிலேபாக்கோ வந்து தலைகாட்டவே இல்லே. மணி பன்னிரண்டுக்கு கோமதிநாயகத்தின் மகன் வந்து சாப்பிடக் கூப்பிட்டான். 'வருகிறேன்' என்று சொல்லி விட்டுப் பேச்சில் ஈடுபட்டான் கோமதிநாயகம். பன்னிரண்டரைக்கு, மகன் திரும்பவந்து அழைத்தான். 'போ, வருகிறேன்' என்று சொல்லிவிட்டுப் பேச்சிலேயே கவனம் செலுத்தினான். தென்கலத்துக்காரருக்கோ பசி. தம்முடைய மாமா வீட்டுக்கும் பசிநேரத்தில் போகமுடியவில்லேயே, பெரிய மனிதன் பேசிக்கொண்டிருக்கும் போது எப்படி நடுவில் எழுந்துபோவது என்று தத்தளித்துக்கொண்டிருந்தார். ஒருமணி சுமாருக்கு கோமதிநாயகத்தின் மனைவி வந்தாள். 'எப்போ சாப்பிட வரப்போறீக? வரவர நேரம் ஆனது

கூடத் தெரியாமல் போகுது. எந்திரிங்க' என்று கொஞ்சம் சடைவாகச் சொன்னான்.

"நீ போ! பேசிக்கிட்டிருக்கும்போது வந்து தொணதொணக்கிறியே! போ உள்ளே" என்று சீறினான் கோமதிநாயகம். மனைவி உள்ளே போய்விட்டாள்.

மணி ஒன்றரையாகிவிட்டது. தென்கலத்துக்காரரைத் தேடி ஆள் வந்தது. அவருடைய மாமனார் வீட்டு ஆள். இருவருக்கும் அவன் வந்ததனால் ஒரே மாதிரி ஆனந்தம்.

"அண்ணாச்சி! போய்ச் சாப்பிட்டு வந்திருங்க! அங்கேயும் காத்துக்கிட்டு இருக்கிறாங்களில்லே! போய்ச் சாப்பிட்டு வாங்க! பெறகு சாவகாசமாகப் பேசலாம்" என்று விடை கொடுத்தனுப்பினான் கோமதிநாயகம். தென்கலத்துக்காரருக்கு அப்பொழுதே இருளடித்து விட்டது. 'எமகாதகன், ஒரு வார்த்தை சாப்பிடுன்னு சொன்னானா?' என்று நினைத்துக்கொண்டார். மாமனார் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருக்கும் போது, கோமதிநாயகத்தைப் பற்றி விசாரித்தார் தென்கலம் மாப்பிள்ளை. மாமனார், மனப்பூர்வமாக அவனைப் பற்றிப் பெருமையாகவே சொன்னார். 'பெரிய வீட்டுப் பிள்ளை. தங்கமான குணம்' என்ற முறையிலேயே சொன்னார். 'அப்படியும் இருக்கலாம்; ஒரு மனிதனை ஒரு நாளில் அளந்துவிட முடியுமா?' என்று எண்ணிக்கொண்டார் தென்கலம் மாப்பிள்ளை.

மறுநாளும் அவர் அவன் வீட்டுக்குப் போனார். போகும்போது கோமதிநாயகம் காப்பி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். அவரைப் பார்த்தான். அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு, 'அண்ணாச்சி வாங்க, அண்ணாச்சி வாங்க, அப்படி உட்காருங்க' என்று கையைக் காட்டிவிட்டுக் காப்பியைச் சாப்பிட்டான். அப்புறம் அவரோடு உட்கார்ந்து பேசினான். பிறகு முதல்நாளைய கதைதான்! அன்று மாலை கோமதிநாயகம் தென்கலத்துக்காரருடைய மாமனாரைப் பார்த்து, "தென்கலம் அண்ணாச்சியைப் பார்த்துச் சாப்பிடச் சொல்லணும்னு நெனப்பு. ஆனா, அது அவ்வளவா எனக்குப் பிடிக்கல்லே. மாமனார் வீட்டுக்கு வந்த மாப்பிள்ளையை வழியை மறிச்சி நம்ம வீட்டுக்குக் கூப்பிடப்பிடாதுன்னு இருந்திட்டேன்" என்றான். அதை அவர் கல்மிஷமில்லாமல் ஆமோதித்தார்.

தென்கலம் ஆசாமி அதே சமயத்தில், அதே மாலை வேளையில், வெற்றிலைபாக்குக் கடையில் சுருட்டுப் பற்ற வைத்துக்கொண்டு நின்றார். அப்போது, மனம் பொறுக்காமல் கடைக்காரனைப் பார்த்து, "இந்த ஊர்க்காரங்க ரொம்பக் கெட்டிக்காரங்க ஐயா!

தவிச்சவாய்க்குத் தண்ணிகுடுக்காத ஊராவில்லே இருக்கு" என்று உள்ளக்கிடக்கையை வெளியிட்டு, கோமதிநாயகம் தம் வீட்டுக்கு வந்து விருந்தாடிவிட்டுப்போன செய்தியிலிருந்து சகல செய்திகளையும் சொல்லி விட்டார். கடைக்காரன் கோமதிநாயகத்துக்கு வழி கொடுத்து அடுத்த விபரங்களை வெளியே சொல்ல சந்தர்ப்பம் கிடைக்காமல் தவித்துக்கொண்டிருந்த சமயம் அது. உடனே, ‘சமயம் கிடைத்தது’ என்று ஒரே வெறியோடு எரிமலையைக் கக்க ஆரம்பித்தான். கோமதிநாயகம் ஊரை எத்திக்கொண்டு அலைவதைப் பற்றி சாங்கோபாங்கமாகக் கூறினன். அவன் பேசுவது சில சமயங்களில் தென்கலத்துக்காரனை அடிக்கப் போவது போலவும் தோன்றியது. நெடுநாளைய மனக்கொதிப்பு ஒரே சமயத்தில் வெளிப்படுகிறது அல்லவா ?

அப்புறம் தென்கலம்காரர் தென்கலத்துக்குப் போய்விட்டார். அதற்குமறுமாதத்தில் அவ்வூருக்கு—கோமதிநாயகத்தின் ஊருக்கு—வந்து சேர்ந்தான் காளியப்பன். காளியப்பனுக்குப் பூர்விகம் இந்தக் கிராமமே. ஆனால் சிறுவயதிலேயே தன் பெற்றோர்களுடன் பிழைப்புக்காகப் பர்மாவுக்குப் போய்விட்டான். யுத்தத்தின் காரணமாக, பர்மாவிலிருந்து கால்நடையாகச் சொந்த கிராமங்களுக்குவந்துசேர்ந்த பல குடும்பங்களில் காளியப்பன் குடும்பமும் ஒன்று. அவன், அவன் மனைவி, அவனுடைய பத்துவயதுப்பையன், அப்புறம் அவனுடைய தாயார்—இந்த நான்கு பேரும் தங்கள் பூர்விகக் கிராமத்துக்கு வந்து சேர்ந்தார்கள். கையில் கொண்டுவந்திருந்த சொற்பப் பணத்தை வைத்து ஒரு பலகாரக்கடை வைத்தான் காளியப்பன். அத்துடன் வெற்றிலை, பாக்கு, பீடி, சிகரெட் போன்ற சரக்குகளையும் சுருக்கமாக வாங்கிவைத்துக்கொண்டான். குடும்பச்செலவுக்குத் தேவையான வருமானம் கடையிலிருந்து கிடைத்துவந்தது. காளியப்பனோடு சிநேகம் பிடித்துவிட்டான் கோமதிநாயகம். ஊர்க்காரர்கள் எல்லோரும் இப்பொழுது விழித்துக்கொண்டார்கள். ஆனால் காளியப்பனுக்கு ஊர் புதிது ஆனதால், கோமதிநாயகத்தைப் பற்றிய விவரங்கள் தெரியாது. ஆகவே, அவனும் விழிப்படைகிறவரையில், தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளலாம் என்று தீர்மானித்த கோமதிநாயகம், மச்சான் முறை கொண்டாடிப் பழக ஆரம்பித்தான். இவன் ‘மச்சான்’ என்று அழைக்கவும், காளியப்பன் ‘அத்தான்’ என்று கூப்பிடவுமாக உறவு மிகவும் நெருக்கமாக இருந்துவந்தது.

புதியவனில், செயலான குடும்பத்தைச் சேர்ந்த கோமதிநாயகத்தின் பழக்கம் இருப்பது தனக்கு ஒரு பெரிய ஆதரவு, ஒரு பெரிய மதிப்பு என்று கருதிய காளியப்பன் அவ்வப்போது சிறிது சிறிது

கஷ்டத்திற்கு ஆளாகிவந்தான். இரண்டொரு மாதங்களுக்குப் பிறகு அவனுக்கும் சலிப்புத்தட்ட ஆரம்பித்தது. இருந்தாலும் அந்தரங்கத்தை வெளியே காட்டிக்கொள்ளப் பயந்து, மறைமுகமாக சிலபேரிடம் பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தான். ஆனால் ஒருவனாவது சோமநாயகத்தைப் பற்றிய உண்மைவிவரங்களை வெளியே சொல்லவில்லை. அதற்குப் பதிலாக ஒவ்வொருவனும் அவனைப் புகழவே செய்தான். காளியப்பனும் பேச்சு முடிவில், "ஆமா ஆமா, பெரிய வீட்டுப்பிள்ளை பெரிய வீட்டுப் பிள்ளைதான்!" என்று உண்மைக்கு மாறாக முத்தாய்ப்பு வைத்துக்கொண்டு வந்தான். ஆனாலும், வெற்றிலைபாக்குக் கடைக்காரன் மூலம் காளியப்பனுக்கு ஒருநாள் உண்மைவிவரம் தெரிந்துவிட்டது. அதே வெற்றிலை பாக்குக் கடைக்காரன்தான் தென்கலம் ஆசாமிக்கும் உண்மையைத் தெரிவித்தவன். காளியப்பன் உஷாராகிவிட்டான். வெற்றிலை பாக்குக் கடைக்காரனைப் பார்த்து, "அண்ணாச்சி! நான் பர்மாக்காரன். இந்த ஊர்க்காரங்களைப்போல நான் பயப்படக்கூடியவனில்லை. பர்மாவிலே பெரிய பெரிய போக்கிரிகளையெல்லாம் கண்ணிலே வெரலை விட்டு ஆட்டியிருக்கேன். என் பேரைச் சொன்னாலே பயக பயந்து சாவாங்க. இந்தச் சோமநாயகம் பயலையும் மடக்குறவிதமா மடக்குறேன். இவனை நடுத்தெருவிலே வச்சிச் செருப்பாலடிச்சிக் காட்டல்லேன்னா, என் பேரு காளியப்பனில்லை" என்று சபதம் போட்டுக்கொண்டு வீடு போய்ச் சேர்ந்தான்.

மறுநாளும் சோமநாயகம் வந்தான். "அத்தான் வாங்க! அத்தான் வாங்க!" என்று என்றுமில்லாத விதமாக உபசரித்து வரவேற்றான் காளியப்பன். சோமநாயகத்துக்கு இவ்வளவு சொன்னால் போதாதா? சம்மணம் போட்டு உட்கார்ந்து விட்டான்.

காளியப்பன் மகனைக் கூப்பிட்டு, "டேய்! என்னடா பேசாம இருக்கே? உங்க மாமா வந்திருக்காரு, பேசாம இருக்கயே! இட்டிலி கொண்டுவந்து வை" என்றான்.

மகன் ஆறு இட்டிலியைக் கொண்டுவந்து வைத்தான். அதைச் சாப்பிட்டு முடித்ததும், இரண்டு தோசையும், இரண்டு சுகியன்களும் கொண்டுவந்து வைத்தான் காளியப்பன். சோமநாயகம் என்றும் போல, "வேண்டாம், பசியில்லை" என்று சொல்லிக்கொண்டே அவ்வளவையும் சாப்பிட்டுத் தீர்த்தான். அவன் எழுந்திருந்து கையைக் கழுவியதும், அரை டஜன் கதலிப்பழங்களைப் பிய்த்துக் கொடுத்தான் காளியப்பன்.

"ஐயோ ஐயோ! என்ன மச்சான், வயிறு ஒண்ணுதானே இருக்கு? வேண்டாம்" என்று கையால் தடுத்தான் சோமநாயகம்.

"நல்லாச் சொன்னீங்க அத்தான்! இந்த வயசிலே கல்லைத் தின்னாலும் ஜீரணிச்சிருமே!" என்று கூறி பழங்களைக் கோமதி நாயகத்தின் கையில் திணித்தான் காளியப்பன். அவன் அதையும் வாங்கிச் சாப்பிட்டுவிட்டான். அப்புறம் வெற்றிலைபாக்கு மரியாதை. என்றுமில்லாதவாறு இன்று அதிகப்படியான உபசாரம் நடப்பதைப் பார்த்துக்கொண்டே நின்றான் காளியப்பனின் குமாரன். உடனே அவனைப் பார்த்துக் காளியப்பன் சிரித்துக்கொண்டே சொன்னான்: "ஏண்டா, மாமா எவ்வளவுக்குச் சாப்பிட்டார்னு கணக்குப் போட்டியா? பைத்தியாரப் பயல்! சீக்கிரம் கூட்டிப்பார்த்து எழுதேண்டா கணக்கை! அப்புறம் அதை மாமா தலையிலே கட்டு!"

இதைக் கேட்டுப் பூரிப்புடன் சிரித்தான் கோமதிநாயகம். "மருமகப்பிள்ளை மாமன் தலையிலே கட்டுவானா? என் மருமகன் எப்பேர்ப்பட்ட பிள்ளை!" என்றும் சொன்னான்.

இவ்வாறாக அன்றைய தினம் அஸ்தமித்தது. அதிலிருந்து, கோமதிநாயகம் அடிக்கடி அங்கு வர ஆரம்பித்தான். காளியப்பன், இட்லி யென்றும், தோசை யென்றும், பழமென்றும், காப்பியென்றும் படைத்து மரியாதை செய்தான். 'அகப்பட்டாண்டா பைத்தியக்காரன்' என்று எண்ணி மகிழ்ந்தான் கோமதி நாயகம். சிலநாட்கள் சென்றபின் காளியப்பன் அவனுக்குச் சாப்பாடும் போட்டான். அவன் தெருவழியே தன்பாட்டில் போய்க் கொண்டிருந்தாலும் வலிய அழைத்து விருந்து செய்தான். நல்ல நாட்களில் ஆள்விட்டு வரவழைத்தும் விருந்திட்டான். கோமதிநாயகம் வந்து சாப்பிடும் போதெல்லாம், காளியப்பன் தன் மகனைப் பார்த்து, "ஏண்டா, மாமன் சாப்பிடுகிறதைக் கவனி. கணக்கு தப்பில்லாம எழுதணும்" என்று தவறாமல் சொன்னான்; அப்புறம் சிரித்தான். கோமதிநாயகமும் சிரித்துக்கொண்டு, "மருமகனே! அப்பா கேலியாகச் சொல்றாரு. கணக்கு எழுதிராதே" என்று கூறினான். ஆனால் சிறுவனோ கோமதிநாயகம் சாப்பிடுவதை ஒன்று விடாமல் கணக்குப் பார்த்துச் சிட்டைப்புத்தகத்தில் பதிவு செய்து கொண்டே வந்தான். இப்படியாக ஒருமாதம் கழிந்தது. அப்புறம் ஒருநாள் கோமதிநாயகத்தைப் பார்த்துச் சிறுவன் பாக்கியைக் கேட்டான். கோமதிநாயகமோ வழக்கம்போலச் சிரித்தான். காளியப்பன் சிரித்துக் கொண்டே மகனைப் பார்த்து, "விடாதே! மாமாவை விடாதே! கழுத்திலே துண்டைப் போட்டுக் காசை வாங்கு" என்றான். கோமதிநாயகமும் சிரித்துக்கொண்டே பேசிவிட்டு வந்தான். பலநாட்கள் இப்படியே நடந்து வந்தது. பத்துப்பேர் முன்னிலையிலும் சிறுவன் பாக்கிகேட்கத் தயங்கவில்லை. இதைக் காளி

யப்பன் கொஞ்சம் கண்டிப்பான் என்று எதிர்பார்த்தான் கோமதிநாயகம். அவனே கண்டிப்பதற்குப் பதிலாகச் சிரித்துக்கொண்டே தூண்டிவிட்டுக்கொண்டிருந்தான். கோமதிநாயகத்துக்கு மிகவும் மனச் சங்கடம். 'பார்த்தால் நாலுபேர் என்ன நினைத்துக்கொள்ளுவார்கள்? நான் கடனுக்குச் சாப்பிட்டுவிட்டுப் பாக்கி கொடுக்காதது போல அல்லவா அவர்கள் நினைப்பார்கள்! உபசாரம் பண்ணுவதும் விருந்து செய்வதும் கேலி செய்வதும் சிநேகிதத்துக்குப் பொருத்தமான காரியங்கள்தான். ஆனால் கேலிசெய்வது பார்க்கிறவர்களுக்குத் தப்பாகத்தோன்றும் அளவுக்குப் போகலாமா?'—இவ்வாறு கோமதிநாயகம் சங்கடப்பட்டான். ஆனால், காளியப்பனே அவன் மகனே வழக்கம்போல விருந்து செய்யவும், வழக்கம்போல பாக்கி கேட்கவுமாக இருந்தார்கள். கோமதிநாயகத்துக்கு அவமானமாக இருந்தது. 'கேலி செய்வதற்கு நேரம் காலம் கிடையாதா?' என்று அலுத்துக்கொண்டு ஒருநாள் தன் வீட்டுக்குத் திரும்பினான். மறுநாளிலிருந்து காளியப்பனுடைய கடைக்குப் போவதை நிறுத்தினான்.

காளியப்பன் தக்க சமயத்தை எதிர் நோக்கிக் கொண்டிருந்தான். சுமார் பத்து நாட்கள் கழிந்திருக்கும். ஒருநாள் ஊர் மடத்தில் பத்துப் பெரிய மனிதர்களுடனும், பணக்காரர்களுடனும், இன்னும் குடிஜனங்களில் ஒரு ஐம்பதுபேருடனும் கோமதிநாயகம் உட்கார்ந்து கொண்டிருந்தான். ஏதோ பொதுவான ஒரு ஊர்க் காரியத்தைப்பற்றி எல்லோரும் கலந்து பேசிக்கொண்டிருந்தார்கள். வேண்டுமென்றே அந்தச் சமயம் பார்த்து அங்கு வந்தான் காளியப்பன். கூட்டத்தின் நடுவில் இருக்கும் கோமதிநாயகத்தைத் தனியே அழைத்து, பாக்கியைக் கேட்டான். இதைக் கேலி என்று நினைத்து, "என்ன மச்சான்! எப்போதும் விளையாட்டுத்தானா?" என்று கூறினான் கோமதிநாயகம்.

"விளையாட்டும் இல்லை, ஒன்றுமில்லை. பாக்கியைத்தான் கேக்கிறேன்."

"என்ன பாக்கி?"

"என்ன பாக்கியா? இன்னா பாக்கிதான்."

கோமதிநாயகம், "சரி சரி, அப்புறம் உக்கார்ந்து பேசுவோம். பெரிய மனுஷாளுக்கு மத்தியிலே நாம் விளையாடக் கூடாது" என்று சொல்லிவிட்டுக் கூட்டத்தில் வந்து உட்கார்ந்துகொண்டான். காளியப்பன் ஒரே வெறியுடன் பெரிய மனிதர்களின் பக்கம் போனான். அம்பலத்தில் முறையிட ஆரம்பித்தான்:

"என்ன ஐயா! பெரியமனுஷளுக்கு இது சரியா இருந்தாச் சரிதான். என் கடையிலே சாப்பிட்ட பாக்கியைக் கேட்டா, கோமதி நாயகம் தரமாட்டேங்கிறார். நான் கடனைக் கேட்டால் அவருக்குக் கேலியா இருக்காம். கடைக்கும் பத்துகாசா வர்ரதில்லை. இப்படிப் பட்ட ஆட்களே இப்படிச் செய்தா நான் எப்படிப் பொழைக்கிறது? நீங்களே சொல்லுங்க."

கோமதிநாயகம் திடுக்கிட்டு விட்டான்.

காளியப்பன் மேலும் சொன்னான்: "என் சக்திக்கு ரூ. 48-12-0 வரையிலும் கடன் குடுத்தாக் கட்டுமா? ஏதோ பெரியவீட்டுப் பிள்ளைன்னு குடுத்தேன்......"

கோமதிநாயகம் இடைமறித்து, "அப்போ நீங்க உபசாரம் பண்ணிப் பலகாரம் கொடுத்ததும், சாப்பாடு போட்டதும், விருந்து வச்சதும் கடனுக்கா?" என்று கேட்டான். பிறகு, "நல்லா இருந்ததைய்யா உங்க விருந்துபசாரம்!" என்று முடித்தான்.

"விருந்தா? விருந்து வைக்க என் கடையென்ன கல்யாண வீடாப்பா? இல்லே, நீங்க என் மகளைக் கட்டின மாப்பிள்ளையா? விருந்துன்னு சொல்லிப் பலகாரக்கடைக்காரன் வாயிலே மண்ணைப் போடலாம்னு நினைச்சீகளா? எந்த ஊரிலேப்பா பலகாரக்கடைக் காரன் வாடிக்கைக்காரங்களைக் கூப்பிட்டு விருந்து வச்சிருக்கான்?" என்று இரைச்சல்போட்டான்.

ஒரு பெரிய மனிதர் காளியப்பனை அமர்த்திவிட்டுக் கோமதி நாயகத்தைப் பார்த்து, "தம்பி! இவ்வளவு தூரத்துக்கு வச்சிக் கிடலாமா? என்ன பாக்கியுண்டோ, அதைக் கணக்குப் பார்த்துக் குடுத்திர வேண்டாமோ?" என்று புத்திமதி சொன்னார்.

"இல்லே பெரியப்பா! இது பெரிய மோசமாயிருக்கு! சிரிச்சிக் கிட்டே கழுத்தை அறுக்கிற கதையா வில்லே இருக்கு!" என்றான் கோமதிநாயகம்.

காளியப்பன் ஒரே வெறியோடு அலறினான்: "யார் கழுத்தை யார் அறுக்கிறா? மூளையிருந்தா இப்படிப் பேசுவீரா? சாப்பிட்ட கடனைக் கேட்டால், கழுத்தை அறுக்கிறேனாம்! இந்தப் பெரிய மனுஷளுக்காகப் பார்க்கிறேன். இல்லேன்னு நான் வசூல் பண்ற விதமா வசூல் பண்ணுவேன்."

அந்தக் கூட்டத்தில் கோமதிநாயகத்துக்கு விருந்திட்டு அலுத்து, கடுப்பேறிய பேர்வழிகள் சிலர் இருந்தனர். அவர்கள் காளியப்பன் கட்சியில் சேர்ந்தார்கள். ஒருவன், கோமதிநாயகத்துக்

ருப் பரிந்து பேசுகிறவனைப்போல, "கோமதிநாயகம்! உனக்கு இது அழகில்லை. நாப்பத்தெட்டேமுக்கால் தானே? கொண்டாந்து விட்டெறிஞ்சிடு. சீ, மானக்கேடு! பலகாரக் கடைக்காரன் வந்து இவ்வளவுதூரம் பேசும்படி நடந்துகொள்ளலாமா? போ, போய் ரூபாயைக் கொண்டுவா" என்றான். இப்படிச் சொன்னவன்மீது கோமதிநாயகத்துக்குக் கோபம் கோபமாக வந்தது. இருந்தாலும் ஒன்றும் செய்வதற்கில்லை.

காளியப்பன் கடைசி முழக்கமாக முழங்கினான்: "பெரிய மனுஷன் என்னை என்ன சொன்னாலும் சொல்லட்டும். அப்புறம் அவங்க காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கிறேன். இப்போ என் வயிறு எரியுது. கோமதிநாயகம்! உனக்கு மானமிருந்தா இப்பவே காசைக் கொண்டுவந்து இங்கே வை! இல்லே, சாப்பிடலே இல்லேன்னு ஒரு வார்த்தை சொல்லு. நான் எள்ளுந் தண்ணியும் இறைச்சிட்டுப் போயிடறேன். என்ன சொல்றே?"

அரைமணி நேரத்தில் ரூபாய் நாற்பத்தெட்டேமுக்காலும் வந்துவிட்டது. வெற்றிலைபாக்குக் கடைக்காரன் காளியப்பனைத் தனியாகச் சந்தித்து, "அண்ணாச்சி, பொல்லாத ஆளா இருக்கீயளே!" என்று மெச்சினான்.

"பிறகு என்ன தம்பி! நான் பர்மாக்காரன். இந்த ஊர்க்காரங்க மாதிரி பயந்து சாகமாட்டேன். பாருங்க, அந்தக் கோமதிநாயகம் பயல், இனிமே, கலியாணவீட்டிலே சாப்பிடக் கூப்பிட்டாலும் யோசனை பண்ணித்தான் போகணும்!" என்றான் காளியப்பன்.

# கல்யாணகிருஷ்ணன்

‘வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்’ என்ற பெரியவர்கள் வாக்கைப் பிரத்தியக்ஷமாக நிரூபித்துக் காட்டியவன் ஆர். எஸ். ஆர். கல்யாணகிருஷ்ணன் ஒருவன்தான். ஏனென்றால், நான் குடியிருந்த மாம்பலத்திலேயே என் கண்ணில் படாமல் அவன் மூன்று வருஷமும் ஏழுமாதமும் உலாவியிருக்கிறான். ஊரில் குடியிருந்து கொண்டே ஒருநாள் கூட எனக்குத் தட்டுப்படாமல் அவனால் எப்படி உலாவ முடிந்தது? என் கண்ணில் கோளாறா? இல்லை, திடீ சென்று மறையும் அபூர்வ சக்தி ஏதாவது கல்யாணகிருஷ்ணனிடம் இருந்ததா? அதை எல்லாம் யோசித்து இப்பொழுது மண்டையை உடைத்துக் கொள்ளுவானேன்?

ஒருகாலத்தில் நானும் மேற்படியானும் மாம்பலத்தில் எதிர் எதிர் வீட்டில் குடியிருந்து, பெரியோர் விதித்த நியமம் தவறாது கிருஹஸ்தாஸ்ரமத்தை நடத்தி வந்தோம். அப்போது ஒரு நாள் காலை ஏழுமணிக்கெல்லாம் என்னிடம் வந்து ஒரு முப்பத்தேழு ரூபாய் அவசரமாக வேண்டுமென்று கேட்டான்; மறுநாள் பிற்பகல் மூன்று மணிக்கே திருப்பித் தந்து விடுவதாகவும் சொன்னான்.

“நான் மூன்று மணிக்கு வீட்டில் இருக்கமாட்டேனே? ஆபீஸில் அல்லவா இருப்பேன்?” என்றேன்.

“அப்படியானால் ஆபீசுக்கு வந்து பணத்தைக் கொடுத்து விடுகிறேன்.”

“ஆபீசுக்கு வருவானேன்? ராத்திரி வீட்டிலேயே கொடுத்தால் போச்சு” என்று நான் சொன்னேன்.

"இல்லை மிஸ்டர். ஆபீசுக்கு வந்தே கொடுத்துவிடுகிறேன். கையில் பணம் கிடைத்தபிறகு, ஒரு நிமிஷம்கூடக் கடனை அடைக்காமல் என்னால் இருக்கமுடியாது. அதுமட்டுமில்லாமல் நான் மாலை ஆறுமணிக்கெல்லாம் குடும்பத்தோடு காஞ்சிபுரம் போகிறேன், கருட சேவை பார்க்க..."

"சரி, ஆபீசுக்கே வாருங்கள்" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள் போய்ப் பணத்தை எடுத்துக்கொண்டுவந்து கொடுத்தேன். 'எனக்கும் பணம் முடைதான். நாளைக்கே, நீங்கள் சொன்னது போலத் திருப்பிக் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும்' என்று நான் சொல்லவில்லை. கடனைத் திருப்பிக் கொடுப்பதில் இவ்வளவு அக்கறையோடு இருக்கும் ஒருவரைப் பார்த்து அப்படிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று நான் நினைத்துவிட்டேன்.

கல்யாணகிருஷ்ணன் பணத்தோடு போனார்........

## 2

கல்யாணகிருஷ்ணன் பணத்தைத் திருப்பிக் கொடுத்தாரா இல்லையா என்பதை அடுத்த வரியில் எழுதாமல் அடுத்த அத்தியாயத்தை ஆரம்பித்து எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. அதாவது அவன் மறுநாள் மூன்று மணிக்கு ஆபீசுக்கு வரவில்லை. இன்னும் வரவில்லை. நான் போய்ப் பார்க்கும்போது அவனும் வீட்டில் இல்லை; அவன் குடும்பமும் இல்லை; வீட்டுச் சாமான்களும் இல்லை...... கல்யாணகிருஷ்ணன் "கருட சேவை" பார்க்க, வீட்டில் உள்ள கரிக் கும்மட்டி உட்பட சகல தட்டுமுட்டுச் சாமான்களோடும் குடும்பத்தோடும் கிளம்பிவிட்டான். வீட்டுச் சொந்தக்காரரை விசாரித்தேன். ஆசாமி வீட்டைக் காலிபண்ணிவிட்டுப் போய்விட்டதாகச் சொன்னார்.

"காலிபண்ணிவிட்டு எங்கே போய்விட்டார்? புது வீடு ஏதாவது......"

"தங்கசாலைத் தெருவில் புது வீடு பிடித்திருக்கிறாராம்" என்றார் வீட்டுச் சொந்தக்காரர்.

'பயலுடைய அயோக்கியத்தனத்தைப் பாரேன்' என்று மனசுக்குள் சொல்லிக்கொண்டு என் வீட்டுக்கு வந்தேன். என் மனைவி என்னைக் கேலி செய்ததையும், கைபாண்டி செய்து ஆற்றியதையும் இங்கே எழுதி மாளாது.

என் ஆபீஸில் வேலை செய்யும் சகபாடிகளில் இருவர் தங்கசாலைத் தெரு வாசிகள். அவர்களைத் துப்பறியவிட்டுக் கல்யாண கிருஷ்ணனுடைய இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கவேண்டிய ஏற்பாடு களைச் செய்தேன். அவர்கள் துப்பறிந்துகொண்டிருந்தார்கள். ஒரு வருஷமாகிவிட்டது.

என் தங்கசாலைத் தெரு நண்பர்களில் ஒருவரைப் பார்த்து, "என்ன ஸார், இன்னுமா நீங்கள் கல்யாணகிருஷ்ணனின் இருப்பிடத்தைக் கண்டுபிடிக்கவில்லை? வருஷம் இந்தா அந்தா என்று ஒன்று ஆகிவிட்டதே!" என்று பரிகாசக் குரலில் சொன்னேன்.

அவர் என்னைப் பார்த்துச் சொன்னார்: "ஸார்! நாங்கள் தங்கசாலைத் தெருவில் ஏறக்குறைய ஒவ்வொரு வீடாகப் போய் விசாரித்தாகிவிட்டது. இப்படி விசாரிக்கும்போது எத்தனையோ கூத்துக்கள் நடைபெற்றிருக்கின்றன. நான்கு வீடுகள் காலியான விவரம் தெரியவந்து, அந்த வீடுகளில் எங்களுக்கு வேண்டியவர்களைக் குடியேற்றி யிருக்கிறோம். ஒரு வீட்டில் எங்களை மாறுவேஷம் போட்ட திருடர்கள் என்று சந்தேகித்திருக்கிறார்கள். தங்கசாலைத் தெருவில் கல்யாணராமன், கல்யாணசுந்தரம், கல்யாணம், மோகனகிருஷ்ணன், ராமகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன், கிருஷ்ணன் என்ற பெயருடையவர்களையெல்லாம் அனாவசியமாகப் பரிச்சயம் செய்து கொண்டுவிட்டோம். அத்துடன் உங்கள் நண்பர் கல்யாணகிருஷ்ணனைத் தேடும் இந்தச் சந்தர்ப்பத்தில்......"

"நண்பராவது மண்ணாங்கட்டியாவது!"

"இந்தச் சந்தர்ப்பத்தில் ஆசம் ஆசமாக இருக்கும் இரண்டு வீடுகளில் இரண்டு அழகான பெண்களை நானும் எனக்கு ஒத்தாசை செய்யும் என் நண்பரும் பார்க்கும்படி நேரிட்டது. என் நண்பர் பிரமச்சாரியானதால் இரண்டு பெண்களையுமே ஏககாலத்தில் காதலிக்க ஆரம்பித்துவிட்டார். முடிவில் யாரைக் கல்யாணம் செய்து கொள்ளுவது என்று அவர் நிர்மாணிக்க முடியாமல் கஷ்டப்பட்டார். இரண்டிடத்திலும் ஒரேமாதிரிக் காதல். இவர் ஒரு நிர்மாணத்திற்கு வருமுன் அந்த இரண்டு பெண்களுக்கும் வெவ்வேறு நல்ல இடங்களில் சுபமுகூர்த்தத்தில் கல்யாணங்கள் நடந்துவிட்டன. இவ்வளவு காரியங்களும் நடந்திருக்க வேண்டுமானால், நாங்கள் எவ்வளவு பிரயாசைப்பட்டிருக்க வேண்டுமென்று நீங்களே யூகித்துக்கொள்ளுங்கள்!" என்று சொல்லி முடித்தார் நண்பர்.

"ஸார்! விளையாடாதீர்கள்! உண்மையைச் சொல்லுங்கள்" என்று கெஞ்சினேன்.

அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

"என்ன ஸார்! நான் இவ்வளவு கஷ்டப்பட்டதற்கு வேறொரு மனுஷனானால் நன்றி செலுத்துவான். நீங்களோ என்னைப் பொய்யன் என்று நினைக்கிறீர்கள். எனக்கு இவ்வளவும் வேண்டும்! இதற்குமேலும் வேண்டும்!" என்று தலையிலடித்துக் கொண்டார்.

"ஸார், கோபித்துக் கொள்ளாதீர்கள்! நான்..."

"கோபமென்ன ஸார் கோபம்! எனக்கு இந்த உத்தியோகம் இவ்வளவோடு போதும். எனக்கு என் குடும்பத் தொல்லைகளைக் கவனிக்கவே நேரமில்லை" என்று சொல்லிவிட்டு அவர் அப்பால் போய்விட்டார்.

கல்யாண கிருஷ்ணன் தங்கசாலைத் தெருவில் இல்லை என்பது உறுதியாகிவிட்டது.

மறு வருஷம் பிறந்து விட்டது. என் பணத்தை இழந்து ஒரு வருஷம் பூர்த்தியாகிவிட்டது. கல்யாண கிருஷ்ணனுக்குக் கடன் கொடுத்த மளிகைக் கடைக்காரன், வெற்றிலை பாக்குக் கடைக்காரன், ஜவுளிக் கடைக்காரன், காய்கறிக் கூடைக்காரிகள், நெய் வியாபாரி, சென்ட் வியாபாரி, காபூலிக்காரன், தினசரிப் பத்திரிகை போடும் பையன் - இப்படி பற்பல வகையான பேர்வழிகள் என் வீட்டுக்குப் படையெடுப்பதை நிறுத்தினேன். அத்தனை பேரையும் ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று என் வீட்டில் ஒரு பிரகூட்டமாகக் கூட்டிவைத்து நான் சொன்னேன்:

"நீங்கள் கல்யாண கிருஷ்ணன் விஷயமாக என்னை இனி நம்பிக் கொண்டிருப்பதில் பயனில்லை. தங்கசாலைத் தெருவில் ஆசாமி இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகிவிட்டது. அவனைத் தேடும் முயற்சியில் எனக்கு ரூபாய் பத்து வரை செலவானது தான் மிச்சம். இனிமேல் நான் கஷ்டப்படத் தயாராக இல்லை. அக்கறை இருக்கும் பக்ஷத்தில் இனி அவரவர்களே தேடி ஆசாமியைக் கண்டு பிடித்துக் கொள்ள வேண்டியது. யார் கண்டு பிடித்தாலும், என் முப்பத்தேழு ரூபாயையும் வசூல்செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அதற்காக அந்தத் தொகையில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் இனாம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்..."

"இனாம் கொடுப்பானேன்? பணம் என்ன கொட்டியா கிடக்கிறது?" என்று என் மனைவி முணுமுணுத்தாள்.

"நீ வீட்டுக்குள்ளே போ" என்று அதட்டிவிட்டு கூட்டத்தைப் பார்த்துத் திரும்பினேன்.

"ஒரு விஷயத்தை இப்போது சொல்லப்போகிறேன். இதற்காக வருத்தப்படக்கூடாது என்று மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகி

றேன். அதாவது நீங்கள் இப்படி அடிக்கடி என் வீட்டுக்கு வரக் கூடாது. குறிப்பாகக் காபூலிக்காரன் வரவே கூடாது. வந்தால், என் காணபத்தைப்பற்றியே ஊருக்குள் சந்தேகம் கிளம்பிவிடும்" என்று சொல்லி எல்லோரையும் அனுப்பிவிட்டேன்.

கல்யாண கிருஷ்ணனிடம் பணத்தை வசூல்செய்து வருபவர்களுக்குத் தொகையில் எத்தனை சதவிகிதம் இனாம் கொடுப்பது என்பது சம்பந்தமாக அன்று முழுவதும் நானும் என் மனைவியும் சண்டை போட்டுக்கொண்டதைக் கண்ணால் பார்த்திருந்தால், இனாம் வாங்க வருபவன், இனாம் வேண்டாம் என்று சொல்லிவிட்டுத் தப்பி ஓடியிருப்பான் என்பது நிச்சயம்!

## 3

அத்தியாயம் மூன்று. வருஷங்களும் மூன்று. கல்யாண கிருஷ்ணன் என்ற அந்த ஆசாமி தட்டுப்படவே இல்லை. இந்த வருஷம் நான் குடும்பத்தோடு காஞ்சிபுரம் கருடசேவைக்குப் போயிருந்த போது ஒய்வுநேரத்தையெல்லாம் கல்யாண கிருஷ்ணனைத் தேடுவதிலேயே கழித்தேன். அவன் அன்றும் அகப்படவில்லை. எனக்கு அவமானமாக இருந்தது. இனிமேல் அவனைத் தேடுவதை நிறுத்திவிட வேண்டியதுதான் என்று அஷ்டகிக்ரஹ நிஷ்டபரிபாலரான ஸ்ரீ வரதராஜப் பெருமாள் சந்நிதியில் முடிவுபண்ணினேன். கல்யாண கிருஷ்ணனை மறந்துவிடவே முயன்றேன். அவன் ஞாபகம் வரும்போதெல்லாம், நான் ஏமாந்த சோணகிரி என்பது எனக்கு ஞாபகம் வந்துகொண்டே யிருந்தது.

கல்யாண கிருஷ்ணனை மறந்து விட்டேன்.

இந்த மகத்தான மூன்றாவது வருஷ முடிவில் ஒரு நாள் நான் அந்தக் காபூலிக்காரனைப் பார்த்தேன். கல்யாண கிருஷ்ணன் சம்பந்தமாக விசாரிக்க வேண்டும் என்று என் உள்ளம் துடித்தது. ஆனால் விசாரிக்கவில்லை. அதற்குப் பதிலாக அந்தக் காபூலிக்காரனே என்னிடம் வந்து ஏதாவது தகவல் தெரியுமா என்று கேட்டான்.

"இதே கேள்வியைத்தான் உன்னிடத்தில் கேட்க வேண்டுமென்று இருந்தேன். அதற்குள் நீ கேட்டுவிட்டாய்" என்றேன்.

அப்புறம் அவன் மூலமாகச் சில தகவல்கள் தெரிய வந்தன. எங்கள் கோஷ்டியைப் போன்று கடன் கொடுத்த கோஷ்டிகள் சென்னை மாநகரத்தில் மொத்தம் ஏழு இருப்பதாகவும், ஒவ்வொரு

வருமே கல்யாண கிருஷ்ணனைத் தேடுவதில் பத்துப் பன்னிரண்டு வருஷங்களாக ஈடுபட்டுச் சிலர் அதுவே தொழிலாக இருப்பதாகவும் அவன் சொன்னான். மேலும், ராவல்பிண்டியில் இவன் குடியிருந்த போது யாரோ ஒருவரிடம் பணம் வாங்கி ஏமாற்றிவிட்டதாகவும், நாகர் கோவிலிலும், நாகபுரிக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிறு கிராமத்திலும், கௌஹாத்தியிலும் இவனால் ஏமாற்றப்பட்டு சோணகிரிகளானவர்கள் சிலர் இன்னும் உயிரோடு இருப்பதாகவும் அவன் சொல்லவே நான் அதிர்ச்சி யடைந்தேன். தேசத்தின் நாலு திசைகளிலும் இவனுக்குக் கடன் கொடுத்தவர்கள் உண்டென்றும், இன்று இவனை ஒரு தேசமே தேடிக் கொண்டிருக்கிறது என்றும் நினைத்துக் கொண்டு, "அப்புறம் வேறு ஏதாவது தகவல்கள் உண்டா?" என்று காபூலிக்காரனைக் கேட்டேன். பிறகு அவன் சொன்ன விஷயம்தான் என்னைத் திடுக்கிட வைத்துவிட்டது. அதாவது இந்தக் கல்யாண கிருஷ்ணன் இதே மாம்பலத்தில்தான் போன மாதம் வரையிலும் குடியிருந்ததாகவும், மறுநாள் பிற்பகல் மூன்று மணிக்குத் திருப்பித் தருவதாகச் சொல்லி யாரிடத்திலோ கடன் வாங்கிக் கொண்டு, காஞ்சிபுரம் கருடசேவைக்குப் போவதாக வீட்டுக்காரனிடம் புளுகிவிட்டுப் போய்விட்டான் என்றும், அவன் போய் பதினேழு நாட்கள்தான் ஆகின்றன என்றும் சொன்னான் அந்த ஏமகாதகக் காபூலிக்காரன்.

அப்படியானால் மாம்பலத்தில்தான் இத்தனை நாட்களும் குடியிருந்தானா?

என் பிரமிப்பை நான் எவ்வாறு வர்ணிப்பேன்? இவனுக்கு ஏதோ ஒரு தெய்வத்தின் சகாயமோ அல்லது பூதத்தின் சகாயமோ நிச்சயம் இருக்கவேண்டும் என்று கருதினேன். மேலும், இனியும் அவனைத் தேட ஆரம்பித்தால் அவனுக்குச் சகாயம் புரியும் தெய்வமோ அல்லது பூதமோ என்னை என்றுவது ஒரே போடாக அறைந்து கொன்றுவிடக் கூடாதே என்றும் தமாஷாகச் சொல்லிக் கொண்டேன்.

## 4

மேற்கண்ட மூன்று அத்தியாயங்களிலும் கூறப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்து எவ்வளவோ காலமாகி விட்டது. கல்யாண கிருஷ்ணன் என்னிடம் "கடன்" வாங்கி ஏழு வருஷங்களாகி விட்டன. அவனுக்குக் கடன் கொடுத்த மயிலாப்பூர் கோஷ்டியில் இரண்டுபேர்

எனக்குச் சந்தர்ப்பவசமாக சிநேகம் ஆகிவிட்டார்கள். கல்யாண கிருஷ்ணன் என்று எண்ணி கல்யாணராமன் என்ற ஒரு நல்லமான ஆசாமியை வண்ணாரப்பேட்டையில் போலீஸார் வாரன்டு சகிதம் போய்ப் பிடித்து, பிறகு அது வேறு ஆசாமி என்று தெரிந்து, விட்டு விட்டார்கள்.

* * *

என்னைக் கல்கத்தாவுக்கு மாற்றி மூன்றரை வருஷங்களுக்கு மேலாகி விட்டது. அப்பொழுது அந்தமான் தீவுக்கு அகதிகளைக் குடியேற்றுவது சம்பந்தமாய் சில காரியங்களைக் கவனிப்பதற்காக மத்திய சர்க்கார் ஒரு உத்தியோகஸ்தர் குழுவை நியமித்தது. அந்தக் குழுவில் நான் ஒரு பிரதிநிதி. எங்கள் குழு அந்தமானுக்குப் போயிருந்தது. அங்கேஒரு நல்ல கட்டிடத்தில் எங்களுக்கு ஜாகை. அங்கே போனபோது, ஒரு சில தமிழ்க் குடும்பங்களும் அங்கே வியாபாரம் செய்து கொண்டு வசித்து வருவதாகக் கேள்விப்பட்டேன். எனக்குக் காரணமில்லாமல் ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. நம் நாட்டவர்களில் யாரையேனும் பார்க்கவேண்டுமென்றும், பார்த்துத் தமிழ் பாஷையில் சிறிது நேரம் பேச வேண்டுமென்றும் விரும்பினேன். போர்ட் பிளேர் நகரின் தென் கோடியில் மர வியாபாரம் செய்துவரும் ஒரு தமிழர் இருப்பதாக அறிந்து ஒருநாள் மாலையில் அங்கு சென்றேன். அப்பொழுது தமிழ் நாட்டு உடையில் தெரு வழியாக நடந்து சென்ற ஒருவரைப் பார்த்துக் கொண்டேன். அவரைக் கூப்பிட்டுத் தமிழிலேயே, "உங்கள் சொந்த ஊர் எது?" என்று கேட்டேன். நான் தமிழ் பேசியதைக் கண்டு வியந்த அந்த மனிதர், "திண்டுக்கல்" என்றார்.

அப்புறம் தாம் ஒரு குமாஸ்தா என்றும், தாம் வேலை செய்யும் மர வியாபாரக் கம்பெனி பத்து வீடுகள் தள்ளி யிருப்பதாகவும் சொன்னார்.

"கம்பெனியில் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்? எல்லோரும் தமிழர்கள்தானா?"

"எல்லோரும் தமிழர்களில்லை. தமிழர்கள் எட்டுப் பேர்தான். நான்கு பேர் கூலிகள். மீதி மூன்று பேர் கிளார்க்குகள்."

"அப்படியானால் மொத்தம் ஏழு பேர்தானே ஆகிறது?"

"இல்லையே! எட்டுப் பேர்."

"நீங்கள் என்ன இப்படிக் கணக்குப் போடுகிறீர்கள்? நான்கு கூலிகள், மூன்று கிளார்க்குகள்—மொத்தம் ஏழுதானே?" என்று சிரித்துக்கொண்டே சொன்னேன்.

அவரும் சிரித்துக் கொண்டே, "ஆம், மறந்துவிட்டேன். கிளார்க்குகள் மூன்றுபேர்தான். மானேஜர் கல்யாண கிருஷ்ணனை மறந்துவிட்டேன். அவரைச் சேர்த்து எட்டு" என்றார்.

கல்யாண கிருஷ்ணனா?

திகைப்பை வெளியே காட்டிக் கொள்ளாமல், "கல்யாண கிருஷ்ணனா?" என்று கேட்டேன்.

"ஆம். உங்களுக்குத் தெரியுமா அவர்?"

"எனக்கு அப்படி ஒரு சிநேகிதர் (!) உண்டு. அவர்தானா, இல்லை......இந்தக் கல்யாண கிருஷ்ணனின் விலாசம் என்ன?"

"ஆர். எஸ். ஆர். கல்யாணகிருஷ்ணன்."

"ஆர். எஸ். ஆர். கல்யாணகிருஷ்ணனா? நன்றாக ஞாபகப்படுத்திச் சொல்லுங்கள்."

"நீங்கள் என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? இது கூடவா மறந்துபோகும்?" என்று ஆச்சரியப்பட்டார் அந்த மனிதர்.

"நம் ஆசாமியும் ஆர். எஸ். ஆர். கல்யாணகிருஷ்ணன்தான். அப்படியானால் அவரைப் பார்க்க வேண்டுமே" என்றேன்.

அவர் என்னை கம்பெனி ஆபீசுக்கு அழைத்துச் சென்றார்.

நான் கம்பீரமாக நடந்து சென்றேன். 'கல்யாணகிருஷ்ணா! ஆர். எஸ். ஆர். கல்யாணகிருஷ்ணா! அந்தமான் தீவில் வந்துதான் என்னிடம் அகப்பட வேண்டுமென்று இருந்ததோ? எப்பொழுதும் தர்மத்துக்குத்தாண்டா வெற்றி! இனி நீ தப்பிக்க முடியாது. நீ கெஞ்சினாலும் விடமாட்டேன; கொஞ்சினாலும் விடமாட்டேன். உன்னிடத்தில் ரூபாய் முப்பத்தேழையும் வசூலித்து, இந்த முப்பத்தேழு ரூபாய்களும் போஸ்ட் கார்டுகள் வாங்கி உன் கடன்காரர்களுக்கெல்லாம் உன் விலாசத்தை எழுதிப் போட்டுவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன்.'—இப்படி மனதில் சபதம் செய்து கொண்டேன். அவனைச் சந்தித்ததும் எப்படி பயங்கரமாக நடந்து கொள்ள வேண்டும், எந்தமாதிரிக் குரலில் பேச வேண்டும், முகத்தை எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் மனதிற்குள் ஒத்திகை பார்த்துக் கொண்டேன். நாங்கள் வரவேண்டிய இடத்துக்கு வந்தாகிவிட்டது. என்னை அழைத்துச் சென்றவர் என்னை உட்காரவைத்துவிட்டு, மானேஜர் ஆர். எஸ். ஆர். கல்யாணகிருஷ்ணனிடம் அனுமதி வாங்கிவர அடுத்த அறைக்குள் சென்றார். ஐந்து நிமிஷத்திற்குள் என்னை வந்து அழைத்துச் சென்றார். போனேன். போய் கல்யாணகிருஷ்ணனைப் பார்த்தேன். ஆனால்......

இந்தக் கல்யாணகிருஷ்ணன் வேறு! அந்தக் கல்யாணகிருஷ்ணன் வேறு!

எனக்கு என்ன சொல்லுவதென்றே புரியவில்லை. கல்யாண கிருஷ்ணன் என்னிடம் அகப்பட்டுக்கொள்ளுவதற்குப் பதிலாக, நான் போய் அகப்பட்டுக்கொண்டுவிட்டேன். மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தம்பியை மீட்ட வேண்டியதுதான் என்று முடிவு செய்துகொண்டு,

"மன்னிக்க வேண்டும். என் நண்பர் கல்யாண கிருஷ்ணன் என்று நினைத்துவந்தேன்!...... ஹி....ஹி...ஹி......" என்று திணறிக் கொண்டிருக்கும் போதே, மானேஜரின் முகத்தில் ஆச்சரியக் குறி தென்பட்டது. புருவங்களை உயர்த்தி, கண்களை நன்றாக விழித்துப் பார்த்தார். உடனே படபடப்போடு,

"உங்கள் நண்பர் ஆர். என். ஆர். கல்யாணகிருஷ்ணனா!" என்றார். ஒரு நிமிஷம் கழித்து ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர் போல,

"அவனை எதற்காகப் பார்க்க வந்தீர்கள்?" என்று கேட்டார். அப்புறம் என் முகத்தை மிகவும் கவனமாகப் பார்த்தார். உண்மையைச் சொல்லிவிட வேண்டியதுதான் என்று, சிரிப்பும் பேச்சுமாக, "வேறொன்றுமில்லை. எனக்குக் கொஞ்சம் பணம் தரவேண்டும்" என்றேன்.

துள்ளி விழுந்தார் மானேஜர்.

"அட பாவி! எனக்கும் அவன் பணம் தரவேண்டும்."

"என்ன?" என்று வியப்போடு கேட்டேன்.

"ஆம். நூற்றி நாற்பது ரூபாய் தரவேண்டும். மறுநாள் பிற்பகல் மூன்று மணிக்குக் கொண்டு வந்து கொடுத்துவிடுவதாகச் சொன்னான். அந்தமான் தீவுக்கு வந்து நம் நாட்டு ஆள் ஒருவன் கஷ்டப்படலாமா, நாம் உதவி செய்யாவிட்டால் யார் செய்வார்கள் என்று நினைத்துக் கொடுத்தேன். ஆசாமி பணத்தை வாங்கிக் கொண்டு கப்பலேறிவிட்டான். வருஷம் இரண்டாகிவிட்டது."

# ஞாபகார்த்தம்

நிருபமா கோவிந்தராஜன் வீட்டுக்கு வரும்போது இரவு ஏழரை மணியிருக்கும். அப்பொழுது அவன், வாசல்பக்கமுள்ள அறையில் தாறுமாறாக இறைந்துகிடந்த புத்தகங்களை எடுத்து ஒழுங்காக அடுக்கிவைத்துக் கொண்டிருந்தான். கொஞ்சம் கச்சப்பிடித்த வேலையானதால், வெகு சீக்கிரத்திலேயே அவனுக்கு அலுப்புத் தட்டிவிட்டது. அதனால் உடம்பெல்லாம் வியர்வை. கழுத்துக்குக் கீழாக மார்பில் ஓடும் மூன்று செவ்விய ரேகைகள் வியர்வை கட்டிப்போய் மூன்று வெள்ளிக் கம்பிகளைப் போல விளக்கொளியில் மின்னிக் கொண்டிருந்தன.

சாளரத்தின் வழியாகச் சிறிதே பூங்காற்று வீசியது. அறையில் கொளுத்தி வைக்கப்பட்டிருந்த கஸ்தூரிபத்திகளின் புகைக்கொடிகளைச் 'ஊசலை' ஆட்டியது காற்று. புகைக்கொடிகளும் கூச்சம் பொறுக்க மாட்டாமல் ஒரு துள்ளுத் துள்ளிவிட்டு நாலாபக்கமும் அதிவேகமாகப் பாய்ந்து பரவின. கோவிந்தராஜனின் வியர்த்த உடம்புக்கும் அந்த மென்காற்று சுகம் கொடுத்தது. ஆனந்த பரவசத்துடன் ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தான். முற்றத்தில் 'வைப்பேறிய' பால் நிலவு. நிலவின் மயக்கத்தில் பவழ மல்லிகை மரங்கள் மூர்ச்சித்துக் கிடந்தன. அவ்வப்போது காற்றினால் மெய் சிலிர்க்கும் அந்த மரங்கள் சுகமணத்தோடு உயிர்த்துக்கொண்டிருந்தன.

'இந்த கச்சப்பிடித்த வேலையை விட்டுவிட்டு முற்றத்தில்போய், கட்டிலைப் போட்டுப் படுத்துக்கொண்டாலும் தேவலை' என்று நினைக்கும்போதுதான், சாம்பலுண்டுக் கதவைத் திறந்துகொண்டு நிருபமா உள்ளே வந்தாள். நிலவமிர்தம் அவளுடைய இளமேனியை

மஞ்சனமாட்டியது. உடம்பெல்லாம் பாலாக, பாற் கடலிலிருந்து எழுந்த லக்ஷ்மிதேவியைப் போலக் காட்சியளித்தாள் நிருபமா. அவளுடைய உடம்பே, ஏதோ மதுரமான ஒரு திரவபதார்த்தம் அப்பொழுதுதான் திட்டமடைந்து உருவாகச் சமைந்தது போலிருந்தது. அவளுடைய செறிந்திருண்ட அளகபாரத்தில் படிந்த நிலவின் பிரதிபலிப்பு, கருநிறக் கோப்பையில் பால் வார்த்து வைத்திருந்ததுபோல இருந்தது. யௌவனம் ததும்பும் மேனிவளத்தோடு, மெல்லென நடந்து வரும் அந்தக் கன்னிமகளின் திருக்கோலத்தில் கோவிந்தராஜனின் கண்கள் படிந்து அப்படியே போய் ஒட்டிக்கொண்டு விட்டன. இரு கண்களாலும் அந்த 'அமிழ்தின் இயன்ற' உடல்வளத்தைப் பருகத் துடித்தான் அவன்.

நிருபமா அவன் அறைக்குள் வந்துவிட்டாள். அவன் இடுப்பில் ஒரு வேஷ்டியை மட்டும் கட்டிக்கொண்டு வெற்றுடம்புடன் நின்றதும், அவன் உடம்பில் வியர்வை வழிந்துகொண்டிருந்ததும், அவனுடைய களைப்படைந்த முகத் தோற்றமும் சேர்ந்து, வெகு சோமாக அவன் ஏதோ ஒரு கஷ்டமான வேலையில் ஈடுபட்டிருக்கிறான் என்பதை அவளுக்குச் சுட்டிக்காட்டியது. மறுகணத்தில் அவன் செய்துகொண்டிருந்த வேலையை ஊகித்தறிந்துவிட்டாள்.

அவன் அவளைப் பார்த்து 'வா' என்று வரவேற்கவில்லை. ஒன்றும் பேசாமல் அவள் கண்களையே பார்த்துக்கொண்டு நின்றான். நிருபமாவின் விழிகள் கூசின. சூரியனைப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட மனிதனின் கண்களைப் பார்த்துக்கொண்டிருப்பது மிகவும் கஷ்டமான காரியம். முகத்தை வேறு பக்கமாகத் திருப்பினாள். அப்பொழுது அவளுக்கு வலதுகைப் புறமாக மேஜை மீதிருந்த ஒரு சின்னஞ்சிறு புத்தகம், காற்றடித்ததனால் 'சடசட' வென்று அடித்துக்கொண்டது. அதை எடுத்து வேறோரிடத்தில் வைத்துவிட்டு அவனை ஏறிட்டுப் பார்த்தாள். ஆனால் அந்தப் புத்தகம் பழையபடியும் காற்றினால் சலசலத்தது. நிருபமா உதடு அசையாத புன்னகையோடு, தன் உள்ளங்கையால் பொத்தி அந்தப் புத்தகத்தை வாயமர்த்தினாள்.

"உங்களிடம் ஒரு சாமான் இரவல் கேட்க வந்திருக்கிறேன். சிரமமில்லை யென்றால் கொடுக்கலாம்" என்றாள் நிருபமா. அவள் பேசிய தோரணை முன்னால் செய்த ஏதோ ஒரு குற்றத்துக்கு மன்னிப்பு கேட்பதுபோல் இருந்தது.

அதற்கு கோவிந்தராஜன் ஒருபதிலும் சொல்லாமல், அவள் கண்களையே பார்த்துக்கொண்டு நின்றான். அவனுடைய விழிகளில் மயக்கமும் கனவுகளும் தேங்கியிருந்தன. இதைக் கவனித்துக்

கொண்டாள் நிருபமா. அப்புறம் அவளால் தாராளமாகப் பேச முடியவில்லை. அவனுக்கு ஏற்பட்ட பரவசம் அவளையும் பற்றிக் கொண்டது. நிருபமாவின் உடம்பே நடுங்கத் தொடங்கிவிட்டது. புத்தகத்தின்மேல் ஊன்றியிருந்த அவளுடைய கை நடுங்குவதை அவன் பார்த்தான்.

'புத்தகத்தின் படபடப்பை உன் கை தீர்த்தது. உன் கையின் படபடப்பை......'—இவ்வாறு எண்ணிய அவன் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

கெஞ்சுவது போல, "கொடுக்க முடியுமா?" என்று தன் கோரிக்கையைத் தெரிவித்துக் கொண்டாள் நிருபமா.

"என்ன வேண்டும்?"

"உங்களிடமுள்ள புதுத் தோல்பையைக் கொஞ்சம் இரவலாகத் தர முடியுமா? நாளை நாங்கள் உல்லாசப் பிரயாணம் போகிறோம். அதற்கு வேண்டியிருக்கிறது. மூன்றே நாட்களில் பத்திரமாகத் திருப்பித் தந்து விடுகிறேன்."

"யார் யார் போகிறீர்கள்?"

"எங்கள் வீட்டில், எங்கள் பாட்டியைத் தவிர எல்லோரும் போகிறோம். இதற்கென்றே திருச்சியிலிருந்து எங்கள் பந்துக்கள் சிலர் வந்திருக்கிறார்கள்."

"ஆமாம், நான்கூட காலையில் அந்த வழியாக வரும்போது பார்த்தேன். உங்கள் வீட்டு வாசலில் சில புது ஆட்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்."

"தர முடியுமா?"

நிருபமா அவசரப்பட்டாள். அவளால் சமாளித்துக் கொண்டு அங்கே நிற்க முடியவில்லை.

கோவிந்தராஜன் அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக, "எந்த ஊருக்கு உல்லாசப் பிரயாணம்?" என்று கேட்டான்.

"மஹாபலிபுரத்துக்குப் போகிறோம். அப்புறம் காஞ்சீபுரம்."

"எனக்குக்கூட காஞ்சீபுரத்துக்குப் போய் வரவேண்டுமென்று ஆசைதான். ஆனால் அதற்கெல்லாம்...."

"வீட்டில் தேடுவார்கள். நான் போகவேண்டும்."

"காஞ்சீபுரம் அழகான ஊர் என்று அம்மா அடிக்கடி சொல்லுவாள்..."

"அம்மா எங்கே போயிருக்கிறார்கள்? வீட்டில் ஒருவரும் இல்லை போலிருக்கிறதே!"

"எல்லோரும் சினிமாவுக்குப் போய்விட்டார்கள். அத்தைதான் சமையல் கூடத்தில் சாமான்களை எடுத்து ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறாள்."

வீட்டில் முக்கியஸ்தர்கள் யாருமே இல்லை என்று தெரிந்ததும், நிருபமா பயந்துவிட்டாள். "ஏன் வந்தோம்?" என்றுகூட இருந்தது. உடனே, "நான் அவசரமாகப் போக வேண்டும்; நீங்களோ வேலையாக இருக்கிறீர்கள். நாளைக்காலையில் வந்து வாங்கிக்கொள்ளுகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டாள்.

"இல்லை இல்லை. கொஞ்சம் இருங்கள். இப்பொழுதே எடுத்துத் தருகிறேன். இவ்வளவு நேரம் தாமதிக்க வைத்ததற்கு மன்னியுங்கள்" என்று சொல்லிவிட்டு, அவளுடைய கண்களைத் திரும்பவும் கூர்ந்து பார்த்தான். இலேசாகச் சிரித்துக்கொண்டே வீட்டுக்குள்ளே சென்றான்.

நிருபமாவுக்கு ஒவ்வொரு விநாடியும் ஒரு புதிய பாரம்போல உள்ளத்தை அழுத்தியது. காலம் உடம்பை உரசிக்கொண்டு நகர்ந்தது. கடிகாரத்தை எட்டிப் பார்த்தாள். மணி ஏழே முக்காலாகியிருந்தது. "நான் வந்து பத்து நிமிஷத்திற்கு மேலாகிவிட்டதா!... இவர் வேண்டுமென்றே பேச்சை வளர்க்கிறார்! இவருக்கு இந்தத் துணிவு எங்கிருந்து வந்தது?" என்று தனக்குள்ளாக ஆச்சரியத்துடன் சொல்லிக்கொண்டாள்.

உள்ளே சென்ற கோவிந்தராஜன் பையை எடுத்து சுத்தமாகத் துடைத்தான். அப்புறம் அவனுக்கு என்ன தோன்றிற்றோ, அதை அப்படியே வைத்துவிட்டு, பின் வாசல் பக்கம் சென்று, துளசிமாடத்தின் அருகில் உள்ள முல்லைச் செடியில் சிறிது நேரத்துக்குமுன் பூத்திருந்த முல்லைப் பூக்களைக் கை நிறையப் பறித்து எடுத்துக்கொண்டு வீட்டுக்குள்ளே ஓடிவந்தான். பைக்குள்ளே அத்தனை பூக்களையும் போட்டு மூடினான். பையை எடுத்துக்கொண்டு வெளி அறைக்கு வந்து அவள் கையில் கொடுத்தான்.

கொடுக்கும்போது அவன் கைகள் நடுங்கின; வாங்கும்போது அவள் கைகள் நடுங்கின.

"மூன்று நாளில் தந்துவிடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே அதிவேகமாகப் புறப்பட்டுப் போனாள் நிருபமா.

"எப்பொழுது வேண்டுமானாலும் தரலாம்." இந்தப் பதிலைக் கூறிவிட்டு, அவள் நடந்து சென்றதைப் பார்த்துக்கொண்டே நின்றான் கோவிந்தராஜன். கண் பார்வையிலிருந்து அவள் மறைந்ததும், ஒரு பெருமூச்சுடன் அறைக்குள் நுழைந்தான். முன்னால் செய்த வேலையை அவன் இப்போது தொடர்ந்து செய்ய முற்படவில்லை.

அதற்குப் பதிலாக ஈஸிச் சேரை எடுத்துக் கொண்டு வந்து முற்றத்தில் போட்டுச் சாய்ந்து கொண்டான்.

'இன்று இம்மட்டாவது எனக்குத் துணிச்சல் பிறந்ததே!' என்று தனக்குள் ஒரு முறை சொல்லிக் கொண்டான். தன் துணிச்சலை நினைக்க நினைக்க அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. உள்ளம் தன்னை மறந்து களிக்கூத்தாடியது.

'நான் உண்மையில் ஒரு கோழைதான். என்னைப்போன்ற ஒரு வாலிபன், நிருபமாவைப் போன்று பழகும் ஒரு பெண்ணிடம் தன் அந்தரங்க அபிலாஷைகளைத் தெரிவிக்க இப்படித் தயங்கியிருக்க மாட்டான்; இவ்வளவு காலம் தாமதித்திருக்கவும் மாட்டான். என் பயந்தாங்கொள்ளித்தனத்தால், எத்தனையோ அருமையான சந்தர்ப்பங்கள் பாழாகிவிட்டன......

'இன்று அவளுக்குக் கொடுத்த தோல்பையில் புஷ்பங்களைப் பதித்துப் போட்டுக் கொடுத்தனுப்பியது, உலகத்திற்குப் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றலாம். ஆனால், எனக்கு இது ஒரு பராக்கிரம சாதனை; இது என் புருஷத்துவத்தின் முதல் சின்னம். இந்த அளவில் எனக்குத் தைரியம் வந்தது எப்படி என்று எனக்கே தெரியவில்லை...'

இந்த எண்ணங்களின் முடிவில், நிருபமா தன்னிடம் வந்து திரும்பும் வரையில் என்னென்ன சொன்னாள், எப்படி எப்படி நடந்து கொண்டாள், பேசும்போது உதடுகள் எப்படி அசைந்தன, அவசரப்படும்போது புருவங்களில் எப்படிச் சுருக்கம் விழுந்தது என்றெல்லாம் திரும்பத் திரும்ப மனதில் கற்பனை செய்து பார்த்துக்கொண்டிருந்தான்.

சிறிது நேரம் ஆயிற்று. திடீரென்று சந்தோஷப் பரபரப்பெல்லாம் மறைந்து, அவன் உள்ளத்தில் கலவரம் குடிகொண்டு விட்டது. தோல்பைக்குள் கிடக்கும் புஷ்பங்களை நிருபமாவைத் தவிர வேறு யாராவது பார்த்துவிட்டால்? பார்த்தவர்கள் அதற்கு என்ன அர்த்தம் செய்துகொள்ளுவார்கள்? ஏன், நிருபமாவே என்ன நினைப்பாள்? என் குறும்புத்தனத்தைப் பார்த்துச் சிரிப்பாளா? இல்லை, என்னைக் கெட்டவன் என்று தன் பெற்றோரிடம் சொல்லுவாளா? அப்படி அவள் சொல்லிவிட்டால்? நான் என்ன காரணத்தைச் சொல்லியும் இந்தக் குற்றத்திலிருந்து தப்பிக்க முடியாது. சந்தர்ப்பவசமாக எப்போதோ வாசனைக்காகப் போட்டுவைத்த புஷ்பங்கள் அவை, என்று சொல்லவும் இயலாது. எல்லாம் அப்பொழுதுதான் பதித்தவை என்பது பார்த்தமாத்திரத்திலேயே தெரிந்துவிடும்........'

இருக்க இருக்க அவனுக்குப் பயம் அதிகமாகிவிட்டது. அதனால் வேறுமாதிரியான சில காட்சிகள் அவன் மனக்கண்முன் வந்து நின்றன......

நிருபமாவின் தகப்பனார் தன் வீட்டு வாசலில் வந்து நிற்கிறார். அவர் தோல் பையைக் கொண்டுவந்து வீசி எறிந்துவிட்டு, "பெரிய மனிதர்கள், நல்லமனிதர்கள் என்று மதித்து சகஜமாய்ப் பழகுவதற்கு எங்களுக்கு நல்ல பாடம் கற்பித்து விட்டீர்கள். வாலிபப் பெண்ணுக்குப் புஷ்பங்களைக் கொடுத்தால் என்ன அர்த்தம்? இப்படிப்பட்ட எண்ணம் படைத்தவர்கள் என்று எனக்கு அப்பொழுதே தெரியாமல் போய்விட்டது! நல்ல வேளையாக வேறு எதுவும் செய்து என் வீட்டு மானத்தை வாங்காமல் இம்மட்டில் நிறுத்திக் கொண்டீர்களே, இதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்படுகிறார்.

தன் பெற்றோர்கள் தன்னைத் திட்டுகிறார்கள்; கண்டிக்கிறார்கள். அதேசமயத்தில், நிருபமாவின் வீட்டிலிருந்து அவளுடைய தாயாரின் கூக்குரல் கேட்கிறது. சுற்றிச் சூழ வசிப்பவர்கள் என்ன ஏதென்று தெரியாமல் தங்கள் தங்கள் வீட்டு வாசலில் நின்று பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்......

கோவிந்தராஜனைப் பயம் ஒரேயடியாக உலுக்கிவிட்டது. நிருபமாவின் பெற்றோர்கள் தன்னிடம் உரிமையோடு, அருமை பெருமையோடு, பழகிய நாட்களை யெல்லாம் நினைத்துப் பார்த்தான். அவள் தாயாரும், தன் தாயாரும் ஒன்றாகவே பாட்டுக் கச்சேரிக்கும், கதாகாலக்ஷேபத்திற்கும் போய்வந்ததை எண்ணிப்பார்த்தான். இரண்டு வீடுகளும் பரஸ்பரம் பால், மோர் கொடுத்து உதவிக்கொள்ளுவது, பண்டிகைநாட்களில் பக்ஷணங்களை அனுப்பிக்கொள்ளுவது—இப்படி ஒவ்வொன்றும் அவன் ஞாபகத்திற்கு வந்து அவனுக்குப் பீதியை உண்டாக்கியது.

சிறிது நேரம் சென்றபின் அவனுடைய அத்தை வந்து வாசற்படியில் உட்கார்ந்தாள். உட்காரும்போதே, "ஏண்டா, செங்கல்பட்டு வரதாச்சாரி பிள்ளைக்கு இந்த ஆவணியில் கல்யாணமாமே. உனக்குத் தெரியுமோ? பூந்தமல்லியிலிருந்து காலையில் விஜயராகவன் வந்திருந்தான்; சொன்னான்..." என்று ஏதோ ஊர்ப்பேச்சைப் பேச ஆரம்பித்தாள்.

கோவிந்தராஜனுக்கும் தன் மன அவஸ்தையை மறக்க ஒரு மருந்து வேண்டியிருந்தது. அதனால் எப்போதும் ஊர் சமாச்

சாரங்களைப் பேசாதவன்கூட, அப்போது, "ஆனால் பெண் கொஞ்சம் கறுப்பாம்...." என்று பேச்சில் கலந்துகொண்டான்.

இவர்களுடைய பேச்சு முடிவதற்குள் சினிமாவுக்குப் போனவர்கள் வந்து விட்டார்கள். எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். அப்புறம் அவரவர்கள் தங்கள் தங்கள் படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டார்கள்.

கோவிந்தராஜன் அதே அறையில்தான் படுத்துக்கொண்டான். அவனுடைய மனவாதை வீட்டில் யாருக்குமே தெரியாது. யாருடைய ஆறுதலையும் பெற இயலாதவனாகத் தனியே படுத்துக்கொண்டு வெகுநேரம் தத்தளித்தான். கண்ணீர்விருக்கும், தனக்குள் பரிதாப கரமாய்ப் பின்வருமாறு சொல்லிக்கொண்டான் :

'நிருபமா! கடந்த ஒரு வருஷ காலமாக உன்னை எனக்குத் தெரியும். பார்த்த நாளிலேயே என்னை உனக்கு அர்ப்பணித்து விட்டேன். சில மாதங்களுக்குப் பின் நம் வீடுகளுக்கிடையே நெருங்கிய நட்புறவு ஏற்பட்டது. நீயும் எங்கள் வீட்டுக் குழந்தையைப்போல இங்கு பழகினாய். எனக்காக எத்தனை தடவை நீ பக்ஷணங்களைச் சுமந்து வந்திருக்கிறாய்! என் தாயாருடன் தனியாகப் பேசிக்கொண்டிருக்கும் போது எத்தனை தடவை என்னைப் பரிகாசம் பண்ணியிருக்கிறாய்! என்னைப் பார்க்கும் போதெல்லாம் உன் முகம் நாணத்தினால் சிவப்பதையும் நான் பார்த்திருக்கிறேன்.

'நான் ஏதாவது கேட்டால், நீ கட்டிப்போன குரலில் நடுக்கத்துடன் பதில் சொல்லுவாய். கடைசியில் வீட்டுக்குச் செல்லும் போது ஒரு தடவையாவது என்னைத் திரும்பிப் பார்க்காமல் போக மாட்டாய். இதையெல்லாம் பார்த்தபின் நான் உனக்கு அடிமையானேன். உனக்காக நான் எந்தத் தியாகமும் செய்யத் தயாரானேன். உன் காதலுக்குப் பாத்திரமானாலும் சரி, உன் சாபத்துக்கு இலக்கானாலும் சரி, எனக்கு இரண்டுமே சுவர்க்கபோகங்களைப் போலத்தான். உனக்காக இத்தனை தியாகம் செய்ததற்கு நான் உன்னிடம் எதிர் பார்ப்பது ஒன்றே ஒன்றுதான். நீ என்னிடம் அன்போடு இருந்தாலும் இல்லாவிட்டாலும், நான் உன்னிடம் அன்பு கொள்ள எனக்கு அனுமதி தரவேண்டும். இன்று நான் உனக்கு மலர்களைக் கொடுத்ததும் கூட, என் பரிசுத்தமான அன்பைத் தெரிவிக்கத்தான். முல்லைமலர்களைப் போல என் அன்பும் பரிசுத்தமானது; முல்லை மலர்களைப் போல என் உள்ளமும் அவ்வளவு மெல்லியது. இந்த மெல்லிய இதய மலரை நீ கசக்கி எறிந்துவிடாதே! மலரைச் சூடிக்கொள்ள மனமில்லையென்றால், செடியில் இருக்கும்படியாவது விட்டு வைத்துவிடு, நிருபமா! அதைக் கசக்கி எறிய வேண்டாம்.'

## 2

மறுநாள் உரிய காலத்தில் தன் வீட்டாருடனும் பந்துக்களுடனும்
மஹாபலிபுரத்துக்குப் போய்விட்டாள் கிருபமா. அவள் புறப்பட்டுப் போவதைத் தன் வீட்டு முற்றத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்தான் கோவிந்தராஜன். முதலில் அவளும், அவளுடைய தாயாரும் கோவிந்தராஜன் வீட்டுக்கு வந்தார்கள். அவனுடைய பெற்றோர்களிடமும் அவனிடமும் சிரித்த முகத்தோடு விடை பெற்றுக் கொண்டார்கள். அவன் கிருபமாவையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவள் முகம் சூதுவாதின்றி கலகலப்பாக இருந்தது. வீட்டுக்குப் போகும்போது அவள் ஒரு முறை இலேசாகத் திரும்பிப்பார்த்தாள். ஆனால், கோவிந்தராஜன் நிற்கும் திசைவரையில் அவளால் முகத்தைத் திருப்ப முடியவில்லை. ஆகவே, அவனைப் பார்க்காமலேயே தன் வீட்டுக்குப் போய் காரில் ஏறிக்கொண்டுவிட்டாள். கார் தெரு மூலை திரும்பியது.

கோவிந்தராஜனின் பயம் நீங்கிவிட்டது; அத்துடன் உள்ளத்தில் மட்டற்ற மகிழ்ச்சியும் பொங்கிவிட்டது. 'என் கிருபமா என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. என் அன்புப் பரிசை ஏற்றுக் கொண்டு விட்டாள். ஒருவேளை நேற்றிரவு அந்தப் புஷ்பங்களைத் தன் தலையில் சூடிக் கொண்டே படுத்து உறங்கியிருக்கக் கூடும்; இல்லை என்றால் தன் பெட்டிக்குள் அந்தரங்கமாக ஓரிடத்தில் போட்டு மூடி வைத்திருக்கக் கூடும். என்ன செய்திருந்தாலும், அந்தப் பூவின் காரணமாக அவள் என்னைக் கோபிக்கவில்லை; என்னை வெறுக்கவில்லை. இது நிச்சயம், கிருபமாதேவி! அந்த மலர்கள் உன் தலையலங்காரத்துக்குக் கொடுத்த பரிசல்ல; உன் பாதசேவைக்காகச் சமர்ப்பித்த காணிக்கை. அந்த மலர்களோடு என் உள்ளமும், என் வாழ்க்கையும், என் இன்ப துன்பங்களும், நான் வாழ்ந்த பலனும், வாழவேண்டிய காரணமும் இரண்டறக் கலந்து ஒட்டிக் கொண்டிருக்கின்றன, கிருபமா!'

அன்று முழுவதும் இப்படியே மானஸீகமாக கிருபமாவுடன் என்னென்னவோ பேசினான். மணிக்கணக்கில் அவள் நினைவில் ஆழ்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தான். இந்த மானஸ சல்லாபம் அவனுடைய ஊணுறக்கத்தைக் கூட மறக்கடித்து விட்டது. அன்று இரவு படுத்துறங்கு முன், 'நான் செய்த காரியம் என் புருஷத்துவத்தின் முதல்முயற்சி மட்டுமல்ல; முதல் வெற்றியுங்கூட. பெண்ணுக்கு அவளையறியாமல் புஷ்பங்களைக் கொடுத்தது கோபத்தைச் சிருஷ்டிக்க

வேண்டும்; இல்லை என்றால் காதலைத்தான் சிருஷ்டிக்கவேண்டும். இந்த இரண்டுக்கும் இடையில் வேறு எதையும் சிருஷ்டிக்க முடியாது. இன்று நிருபமா கோபப்படவில்லை. சிரித்த முகத்தோடு வந்தாள்; சிரித்த முகத்தோடு போனாள். அப்படியென்றால் இது என் புருஷத்துவத்தின் முதல் வெற்றி என்று நான் தாத்பர்யம் செய்துகொள்ளுவதில் தவறு ஒன்றும் இல்லையே!' என்று உறுதியோடு சொல்லிக் கொண்டான்.

அதற்கு அடுத்த தினத்தன்று கோவிந்தராஜனுக்குப் பிரிவு வேதனையே உண்டாகிவிட்டது. அவளுடைய வரவுக்காக அவன் மனம் ஏங்கியது. அன்று அவனுக்கு உண்மையிலேயே சாப்பிட முடியவில்லை. ஆயிரம் தடவைகள் நிருபமாவின் வீட்டு வாசல் வழியாகத் தெருவோடு நடந்து சென்றிருப்பான். அவளுடைய பிரிவைப் பற்றி யாரிடமாவது ஏதேனும் வாய்விட்டுச் சொன்னாலொழிய, அடுத்த வினாடியைத் தள்ளுவது சாத்தியமில்லை என்றாகிவிட்டது. தன் தாயாரிடமே வந்து சொன்னான் :

“ அம்மா, நிருபமாவின் வீட்டில் ஒருவருமே இல்லாதது, இந்த ஊரே குடிபோனது போலிருக்கிறது!” என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

“ ஆமாம், வீடு நிறைய ஆட்கள் இருந்துவிட்டு, இன்று திடீரென்று வெளியூருக்குப் போய்விட்டால் ‘ வெறிச் ’சென்றுதான் இருக்கும் ” என்று சாதாரணமாகப் பதில் சொல்லிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கலானாள் அவன் தாயார்.

அன்று கோவிந்தராஜனின் முகத்தில் உயிர்க்களையே இல்லை. பயந்தவனைப்போல அரண்டுபோயிருந்தான். பேசினால், குரல் அடித்தொண்டையிலிருந்து கிளம்பியது. இந்தப் பலவீனங்களை வெளிக்குத் தெரியாமல் மறைக்க விரும்பி, கொஞ்சம் சிரிக்க முயன்றாலும், கொஞ்சம் வேகமாக நடக்க முயன்றாலும் அவன் உடம்பெல்லாம் வேதனைக்குள்ளானது. சுமக்க முடியாத பாராங்கல்லை ஒரு கோபாலி தூக்க முயன்றால் எப்படிக் கஷ்டப்படுவானோ, அப்படிக் கஷ்டப்பட்டான் கோவிந்தராஜன்.

மூன்றாம் நாள். அன்று அவன் உள்ள நிலை வேறு மாதிரியாக மாறிவிட்டது. அன்று பிரிவின் வேதனை இல்லை. ‘ நாளை வந்து விடுவாள் ’ என்ற துணிவு அன்று காலையிலேயே அவனுக்கு உண்டாகி விட்டது. அவள் வந்தபிறகு அவளிடம் நடந்துகொள்ள வேண்டிய முறையைப் பற்றி அவன் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். அன்றோடு தன் கோழைத்தனத்தை அடியோடு ஒழித்து விடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டான். ஏதாவது

ஒரு சந்தர்ப்பத்தை உண்டுபண்ணி, தன் காதலை அவளுக்கு எந்த விதத்திலாவது தெரிவித்து விடவேண்டுமென்று விரதம் பூண்டு விட்டான்.

'நாளை இரவே பையைத் திருப்பிக் கொடுக்க வருவாள். ஒரு பெண் இரவு நேரத்தில் கூட என்னிடம் தைரியமாக வருகிறாள். ஊரார் அவதூறு சொல்லுவார்கள் என்ற எண்ணம் கூட அவளுக்கு உண்டாகவில்லை. அப்படிப்பட்ட ஒரு துணிவு எனக்கு ஏற்படாதது வெட்கப்படத்தக்க விஷயம். அதிலும் வீடுதேடி வந்து இன்முகத்தோடு பேசும் ஒரு யுவதியிடம், தன் அந்தரங்கக் காதலை வெளியிடத் திராணியில்லாதவன், அப்புறம் வாழ்க்கையில் இன்பத்தை அடைய ஆசைப்படுவதில் அர்த்தம் உண்டா?' இவ்வாறு நினைத்த கோவிந்தராஜன் தன்னைத் தானே கண்டித்துக் கொண்டான்.

## 3

கோவிந்தராஜன் எதிர்பார்த்த தினத்தன்று கிருபமா வந்தது உண்மைதான். ஆனால் அவள் இரவில் வரவில்லை; பகலில் தான் வந்தாள்.

"சுற்றுப் பிரயாண முக"த்தோடு காலை பத்துமணிக் கெல்லாம் காரில் வந்து இறங்கினாள் கிருபமா. உடம்பில் பிரயாணத்தின் காரணமாகச் சிறிதே சிறுவேற்றுமையும் வாட்டமும் காணப்பட்டன. முகமும் கறுத்திருந்தது. வீட்டுக்கு வந்து குளித்து, உடைமாற்றி, வேண்டிய அலங்காரங்கள் செய்துகொண்டபோதிலும், பிரயாணக் களை மட்டும் அப்படியே மேனியில் படிந்திருந்தது.

அன்று விடுமுறை தினமாதலால் மத்தியானம் ஒரு மணிக்குக் கோவிந்தராஜன் வீட்டில் எல்லோரும் படுத்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். கோவிந்தராஜன் மட்டும் தூங்கவில்லை. வாசல் பக்கமுள்ள அந்த அறையில் உட்கார்ந்து கொண்டு நிமிஷத்துக்கு ஒரு தடவை வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தான். கிருபமா இரவில்தான் வருவாள் என்பது அவனுடைய காரணமில்லாத யூகம். ஆனாலும், வெளியே எட்டி எட்டிப் பார்ப்பதில் காரணமில்லாத ஒரு நம்பிக்கை.

வீட்டு முற்றத்தில் அன்று போல இப்பொழுது நிலவு சிந்திக் கிடக்கவில்லை. அதற்குப் பதிலாகச் சுட்டுப் பொசுக்கும் வெயில். மரம் மட்டைகளெல்லாம் துவண்டுபோய்க் கிடந்தன. அந்த உயி

சற்ற சூழ்நிலையில், பவழமல்லிகை மரம் ஒன்றில் உட்கார்ந்து ஒரு காகம் கூவிக் கொண்டிருந்ததுதான் உள்ளத்துக்கு நம்பிக்கையையும் உயிர்த்தன்மையையும் கொடுத்துக் கொண்டிருந்தது.

எப்படியோ நிருபமா வந்துவிட்டாள். 'என்னைத் தேடி இல்லிலும் வருவாள்; வெளியிலும் வருவாள்!' என்று தனக்குள் உற்சாகமாகச் சொல்லிக்கொண்டான். 'விறு விறு' என்று எழுந்து வந்து வாசல் அறையைத் திறந்தான். இவன் ஆவலோடு ஓடிவந்து எதிர் கொண்டழைப்பதைப் பார்த்த நிருபமாவுக்கு மேற்கொண்டு அடியெடுத்து வைக்கச் சக்தியில்லை. தன்னைச் சமாளித்துக் கொள்ளுவதற்காக, "அம்மா எங்கே?" என்று பயந்துபோன குரலில் கேட்டாள்.

"எல்லோரும் தூங்குகிறார்கள். இப்பொழுதுதான் தூங்கினார்கள். உள்ளே வாயேன்......வாருங்களேன்" என்றான் கோவிந்தராஜன்.

அவள் ஒன்றும் சொல்லாமல் படியேறி அந்த அறைப் பக்கம் போனாள்.

"என் முகமெல்லாம் இப்படிக் கருத்துப் போய்விட்டது?"

"வெளியூர் போய் வந்தது........"

அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை.

"அதுதான் காரணமாக இருக்கமுடியும். மற்றப்படி உன் பொன்னிறத்தைத் திருடவா முடியும்?"

வாழ்க்கையிலேயே அவன் இப்பொழுதுதான் இந்தமாதிரி வாசகத்தை இவ்வளவு துணிவோடு சொல்லிவிட்டுச் சிரித்திருக்கிறான். அவன் துணிவை அவளால் தாங்கமுடியவில்லை.

"இந்தாருங்கள், ரொம்பவும் உதவியாக இருந்தது. தேங்க்ஸ்!" என்று அதிவேகமாகச் சொல்லிக்கொண்டே, பையைத் திருப்பிக் கொடுத்துவிட்டு ஓடினாள். அவள் படியை விட்டு இறங்குவதற்குள், "நிருபமா! வந்ததும் அம்மாவைத் தேடினாய், இப்பொழுது பார்க்காமலே போகிறாயே? கொஞ்சம் இரேன், அம்மாவை எழுப்புகிறேன்" என்றான் அவன்.

நிருபமா மிகவும் பயந்துபோய், "ஐயோ! வேண்டவே வேண்டாம். நான் போகிறேன்" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டாள். கோவிந்தராஜனுக்கு அன்று ஏற்பட்டது போன்ற துணிச்சல் என்றும் ஏற்பட்டதில்லை; நிருபமாவுக்கு அன்று ஏற்பட்டது போன்ற பயம் என்றும் ஏற்பட்டதில்லை.

"நிருபமா என் கைக்கு அகப்படாமல் ஓடிவிட்டாள்!" என்று வருத்தத்துடன் சொல்லிக் கொண்டு, தன் அறைக்கு வந்தான். கதவைச் சாத்திக்கொண்டு, பையை அவசர அவசரமாகத் திறந்து பார்த்தான். அவன் ஆசை ஏமாற்றம் அடையவில்லை. பையின் ஒரு மூலையில் ஒரு காகிதத் துண்டு, எட்டாக மடிக்கப்பட்டு, வியர்வையினால் நனைந்து பதமாகிக்கிடந்தது. அதை எடுத்து வாசிக்கத் தொடங்கு முன்பே அவன் இருதயம் 'பட பட' வென்று அடிக்கத் தொடங்கிவிட்டது. மறுகணம் இருதயத் துடிப்பே நின்றுவிட்டது போலவும் தோன்றியது. ஒரே திகைப்பு; ஒரே ஆச்சரியம். கடிதத்தை மற்றொரு முறை படித்துவிட்டு, அவசரமாக அலமாரியைப் போய்த் திறந்தான். பெர்னார்ட் ஷாவின் நாடகத் தொகுதியை எடுத்து உதறினான்; ஒவ்வொரு ஏடாகத் திருப்பிப் பார்த்தான்; கடைசியில் புத்தகத்தை விரித்து இரண்டு அட்டைகளையும் பிடித்துக் கொண்டு உதறினான். அவன் தேடிய வஸ்து புத்தகத்தில் இல்லை. எப்படி இருக்க முடியும்? அந்தப் புத்தகத்தை அதற்கப்புறம் எத்தனையோ பேர் இரவல் வாங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள். அது யார் கையிலாவது அகப்பட்டிருக்க வேண்டும். இல்லையென்றால் எங்காவது தவறி விழுந்திருக்கவேண்டும். கோவிந்தராஜுலுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்துக்கு அளவே இல்லை. வேறு வழியில்லாமல் திரும்பி வந்து உட்கார்ந்து, அதே கடிதத்தைப் பலமுறை திருப்பித் திருப்பிப் படித்தான். கண்ணில் ஒற்றிக்கொண்டான்; மார்பில் வைத்து அழுத்திக்கொண்டான். சந்தோஷ மிகுதியினால், என்னதான் செய்வது என்று தெரியாமல் தத்தளித்தான். ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு புது இன்பம் பிறந்தது. அந்த இன்பத்தை அந்தக் கணத்திலேயே மனம் மறந்து கொண்டும் இருந்தது. இன்பத்தின் மிகுதியானது, நினைவு, மறதி என்ற சிறு விவகாரங்களையெல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் ஓட்டிவிட்டது. கடிதத்தில் எழுதப்பட்டிருந்த விஷயம் இதுதான்:

"நீங்கள் கொடுத்த புஷ்பங்களை எடுத்து வைத்துக்கொண்டேன். மிகவும் நன்றி. ஊர்ப்பிரயாணத்துக்குப் போகிறவர்களுக்கு வெற்றிலை பாக்கும் பணமும் கொடுப்பதுதான் வழக்கம். ஆனால் உங்கள் வழக்கமே ஒரு தனி தினுசுதானே? நீங்கள் கொடுத்த புஷ்பங்கள் வாடிச் சருகாகிற வரையிலும் நன்றாக மணம் கொடுத்துக்கொண்டிருந்தன.

"நீங்கள் அனாவசியமாகப் பயங்கொள்ளுகிறவர்கள் என்று நான் சொன்னால் கோபித்துக் கொள்ளமாட்டீர்களே! ஆனால் இப்பொழுது நீங்கள் உங்கள் பயத்தை உதறிவிட்டீர்கள். இதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆச்சரியமும் கொள்ளு

கிறேன். ஒரு நல்லாளின், அழகான கைக்குட்டை ஒன்றைப் பரிசளித்ததற்கு நன்றி தெரிவிக்கக்கூடப் பயந்துகொண்டிருந்த இவர் தானா, அன்று மலர்களைக் கொடுத்தார் என்று நான் ஆச்சரியப்படுகிறேன். உங்களுக்கு ஞாபகம் இருக்குமோ என்னவோ? மூன்று மாதங்களுக்கு முன் உங்கள் மாமாபிள்ளையிடம் உங்களுடைய புத்தகம் ஒன்றைத் திருப்பிக் கொடுத்தனுப்பினேன். பெர்னார்ட்ஷாவின் நாடகத் தொகுதி அது. அதில்தான் 'பொங்கல் பரிசு' என்று தைத்து அழகாகப் பின்னல் வேலை செய்த பட்டுக் கைக்குட்டை ஒன்றை வைத்துக் கொடுத்தனுப்பினேன். அன்று மாலையில் உங்கள் வீட்டுக்கு நான் வந்தேன். நீங்கள் எனக்கு நன்றி கூறுவதோடு மட்டுமல்லாமல், என் எதிரிலேயே வரவில்லை. இதெல்லாம் உங்களுக்கு ஞாபகமில்லாமல் இராது.

"மறுபடியும் என் சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இனிமேல் அப்படிப் பயப்படமாட்டீர்களே!"

மனத்தின் படபடப்பு சற்று தணிந்ததும், 'கைக்குட்டை யார் கையில் அகப்பட்டுக்கொண்டதோ? அது திரும்பக் கிடைப்பதானால் என்ன விலைகொடுத்தும் வாங்கிக் கொள்ளுவேன்' என்று எண்ணி எண்ணி மறுகினான். மிக மிக வருத்தத்துடன், "என் வாழ்நாள் முழுவதும் என்னிடம் விலை மதிப்பைக் கடந்த ஞாபகார்த்தமாக இருக்க வேண்டிய வஸ்து எங்கே போய் விட்டதோ?" என்று சொல்லிச் சொல்லிப் பரிதவித்தான்.

அன்று நிருபமா அவன் வீட்டுக்கு வரவில்லை. மறுநாளும் மூன்றாம் நாளும் கூட வரவில்லை. நான்காம் நாள் வந்திருந்தபோது அவளைத் தனிமையில் சந்திக்க அவனுக்கு ஏழு நிமிஷ அவகாசம் தான் கிடைத்தது. அப்பொழுது அவசர அவசரமாகக் கண்ணீர் ததும்பக் குமுறிக்குமுறிப் பின் வரும் வார்த்தைகளைச் சொன்னான் கோவிந்தராஜன்:

"நிருபமா! வீடெல்லாம் தேடி விட்டேன். அந்தக் கைக்குட்டையைக் காணவில்லை. அது என் துர்ப்பாக்கியம். ஒரு அபூர்வமான ஞாபகார்த்த வஸ்து தொலைந்து போய் விட்டது.......... போகட்டும்.........உன் ஞாபகார்த்தமாக எனக்கு நீயே இருக்கிறாய், நிருபமா! உன் நினைவைப்பெறுவதற்கு உன்னைவிடச் சிறந்த ஒன்று உலகத்தில் இருக்க முடியுமா?"

நிருபமாவின் கண்களிலும் கண்ணீர் பொங்கியது. இருவரும் கண்ணீர் சிந்தினர்—புன்னகை செய்து கொண்டே கண்ணீர் சிந்தினர்.

# அழகம்மாள்

அழகம்மாள் இரண்டாவது தடவையாக இலையில் சாதத்தை வைப் பதற்காகக் குனிந்தாள். ஆனால், அதற்குள்ளாகக் கிருஷ்ணக் கோனார், "போதும்" என்று கையால் தடுத்துவிட்டு எழுந்து விட்டார்.

"இது என்ன, ஒரு உருண்டைச் சாதம்கூடச் சரியாகச் சாப்பி டல்லியே. அதுக்குள்ளே எழுந்திட்டீங்க!" என்று சொல்லி உண்மை யாகவே அங்கலாய்த்தாள் அழகம்மாள். கோனார் அன்று வழக்கம் போலத்தான் சாப்பிட்டு எழுந்தார். ஆனால், அது அழகம்மா ளுக்கு ஓர் உருண்டையாகப் பட்டது; அத்தோடு நாலைந்து நாட்களா கவே கோனார் சரியாகச் சாப்பிடவில்லை என்று அவளுடைய எண் ணம்; ஒன்றும் தோன்றாமல் சாதத்தைக் கையில் ஏந்தியவாறு நின்றாள்.

"கை கழுவத் தண்ணி கொண்டா" என்று சொல்லிவிட்டு இடது கையைப் பக்கத்திலிருந்த கதவில் ஊன்றிக்கொண்டு நின்றார் கிருஷ்ணக்கோனார். அழகம்மாள் மௌனமாகத் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

"உடம்புக்கு ஏதாச்சனும் செய்தாச் சொல்லுங்களேன்" என்று சொல்லிவிட்டுக் கவலையோடு அவருடைய முகத்தைப் பார்த் தாள். கோனார், "உடம்புக்கு என்ன? ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டு இடதுகையால் தண்ணீரை வாங்கிக்கொண்டு வெளியே வந்து கையைக் கழுவினார்.

கோனார் வாசல் திண்ணையில் போய்ப் படுப்பதற்காகப் பாயை விரித்தார். மிகவும் அலுப்போடு ஒரு பழைய தலையணையை எடுத்துப்

போட்டுக்கொண்டு சாய்ந்தார். 'எம்பெருமானே' என்று தீனமான குரலில் சொல்லிவிட்டு, தலையணையைச் சரிப்படுத்தித் தலைக்குத் தாங்கிக்கொண்டார். பகலில் உடம்பை முறித்து வேலைசெய்த களைப்பு கண்ணிமைகளை மூடியது. உடம்பு வலி தாங்காமல் காலையும் கையையும் உதறிக்கொண்டு கிடந்தார் கோனார். இந்தச் சமயத்தில் உள்ளேயிருந்து, "கொஞ்சம் இஞ்சிச்சாறு சாப்பிட்டுவிட்டுப் படுக்கிறீர்களா? உடம்பு வலிக்குத் தேவலை" என்று அழகம்மாள் பரிவோடு கேட்டாள்.

"கொஞ்சம் சீக்கிரம் போட்டுக் கொண்டா. தூக்கம் கண்ணைச் சொக்குது" என்று சொல்லிவிட்டுப் புரண்டு படுத்தார் கோனார்.

அன்றிரவு இஞ்சிச் சாற்றைக் கோனார் சாப்பிட்டபின்தான் அழகம்மாள் சாப்பிட உட்கார்ந்தாள். அவளுக்கு அன்று சாப்பாட்டில் கவனமில்லை. "வயசாகுது. மனுஷன் உடம்பு வேலைக்குத் தாங்கல்லே. அதிலும் சாப்பிடாமே இப்படிக் கிடந்தா உடம்பு என்னத்துக்காகும்?" என்ற சிந்தனையிலே மனசை அலட்டிக்கொண்டிருந்தாள் அழகம்மாள். ஏதோ இரண்டு கவளம் சோற்றை வாயில் போட்டுக்கொண்டு, முந்தானையை விரித்துப் படுத்துவிட்டாள்.

•  •  •

அழகம்மாள் படுத்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் வீட்டுக் கதவை யாரோ தட்டுவது கேட்டது. வாசல் திண்ணையில் படுத்திருந்த கோனார் தூங்கிப் போய்விட்டார். அதனால், அழகம்மாள் யாரென்று கேட்டுக்கொண்டே வெளியே நடைவந்து கதவைத் திறந்தாள். திறந்ததும், கோபால் உள்ளே நுழைந்தான். "என்ன கோபாலு, இப்போதான் வர்றயா?" என்று ஆவலோடு கேட்டுக்கொண்டு அவனது வலது கையிலிருந்த பையை வாங்கினாள் அழகம்மாள்.

கோபால், "ஒன்பதரைப் பஸ்ஸுக்கு வர்றேன். என்ன அதுக்குள்ளே கதவையடைச்சுத் தூங்கிட்டீங்களே?" என்றான்.

"இப்போதுதான் கொஞ்சம் கண் அசந்தேன். சாப்பிட்டாச்சு, வேறேவேலை என்ன, தூங்காமே?" என்று சொல்லிவிட்டு வீட்டுக்குள்ளே வந்து விளக்கேற்றினாள் அழகம்மாள்.

கோபால் இந்தத் தம்பதிகளின் ஏகபுத்திரன். வயது இருபதாகிறது. மதுரை காலேஜிலிருந்து கிறிஸ்துமஸ் லீவுக்காக ஊருக்கு அன்று வந்திருக்கிறான்.

அவன் கோனாருடைய எதிர்கால நம்பிக்கைக்கு ஒரு சின்னமாக இருந்தான். தாயினுடைய வாழ்க்கையிலும் அவனால் ஏற்பட்ட

மாறுதல்கள் பல. இருவருக்கும் பையன்மேல் இருந்த பாசம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லுவதற்கில்லை. அவன் சென்ற தசரா விடுமுறையில் ஊருக்கே வராமல் இருந்துவிட்டான். ஏன் வரவில்லை என்பதற்குக் கடிதம்கூடப் போடவில்லை. இப்போது அநேக நாட்கள் கழித்து மகனைத் தாய் பார்த்துக்கொள்ளுவதும், தாயைத் தனயன் பார்த்துக்கொள்ளுவதும் உருக்கமாக இருந்தன.

"அப்பாவை எழுப்பட்டுமா? கல்லாத் தூங்குறாப்போலே இருக்கு. இப்போதான் தூங்கினாரா அம்மா?" என்று சொல்லிக் கொண்டே, "அப்பா அப்பா" என்று தட்டி எழுப்பினான் கோபால்.

அயர்ந்து உறங்கிய கிருஷ்ணக்கோனார் மிரண்டுபோய் எழுந்து உட்கார்ந்தார். அதற்குள், "என்ன, தூக்கமா?" என்று கோபால் சிரித்துக்கொண்டே கேட்டான். கோனார் கண்களைத் துடைத்துக் கொண்டே, "கோபாலு" என்ற ஒரே வார்த்தையைச் சொன்னார். அதற்குள் அவர் தொண்டை அடைத்துக்கொண்டது. தகப்பனாரின் பக்கத்திலே கோபால் உட்கார்ந்தான். இதற்குள் வீட்டுக்குள் போன அழகம்மாள் விளக்கெண்ணெய் விளக்கைக் காற்றில் அணைந்துவிடாதபடி முந்தானையால் மறைத்து எடுத்துக் கொண்டு வாசல் திண்ணைக்கு வந்தாள்.

வெளிச்சம் முகத்தில் பட்டதும் கோனார், முகத்தை வேறுபக்கமாகத் திருப்பிக்கொண்டார். கோபாலும் அழகம்மாளும் ஒன்றும் புரியாமல் திகைத்தார்கள். சிறிது நேரத்தில் கோனாரின் உடல் விம்மிவிம்மித் துடித்தது. முகத்தைத் திருப்பி அவர் அழுதுகொண்டிருந்தார். கோபால் திடுக்கிட்டு, "அப்பா, என்ன?" என்று கேட்டுக்கொண்டு அவருடைய முதுகைத் தொட்டான். கோனார் ஒன்றும் சொல்லாமல் ஏங்கி ஏங்கி அழுதார். அழகம்மாள் கண் கலங்க நின்றுகொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் கோனார் முகத்தைத் துடைத்துக்கொண்டு கோபாலைப் பார்த்து, "ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டார். அவர் கண்ணில் ரத்தம் கொதிப்பது போல ஒரே சிவப்பு.

அவர் அழுத காரணத்தை மேலும்மேலும் கேட்கும் பிரயோஜனம் இல்லாமல் போய்விட்டது. அழகம்மாள் தனக்குத் தெரிந்த ஒரு காரணத்தை வேண்டுமென்றே சிருஷ்டித்துக்கொண்டு, "கோபால், நீ இத்தனை நாளாகக் காயிதம்கூடப் போடாமல் இருக்கலாமா? என்னமோ ஏதோன்னு நாங்கள் தூக்கமில்லாமல் இங்கே கிடக்கிறோம்" என்று சொல்லி வைத்தாள். இதைக்கேட்டதும், 'ஊஹூம்' என்று செருமினார் கோனார். கோபாலும் அழுகைக்குக் காரணமாக ஏதோ ஒன்றை ஊகித்துக்கொண்டான்.

மூன்று பேரும் சேர்ந்து மூன்று பேருக்கும் தெரிந்த ஒன்றை ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் மறைத்துக் கொண்டு ஏதேதோ பேசினார்கள். மறைந்து நிற்கும் ரகசியம் மூன்று பேரையும் பேச்சுக்கு நடுவிலே வந்து முள்ளைப் போல குத்திக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில், தூங்கப்போகிற சாக்கில் மூவருமே எழுந்தனர். கோபாலன் கொண்டு வந்த மலைப்பழங்களில் ஆளுக்கு இரண்டை வாயில் போட்டுக் கொண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் போய்ப் படுத்தார்கள்.

அந்த இரவு மிகவும் விசித்திரமான இரவு. தனித் தனியாகப் பிறரை நோகாத நிலையில் வேதனைப்படும் மூன்று ஜீவன்கள், படுக்கையில் புரண்டு கொண்டிருந்தன. மூவரும் செய்யாது மூவராலும் உண்டான ஒரு நினைவு அந்த மூவரை மாத்திரம் நெஞ்சைப் பிசைந்து கொண்டிருந்தது. யார் யாரை, எப்போது எப்போது தூக்கம் தழுவியதோ அன்று?

படுக்கையில் படுத்த கோபாலுக்கு, 'இப்போதும் கூட ஏன் ஊருக்கு வந்தோம்? தசரா விடுமுறையின் போது பெரியப்பா வீட்டிலேயே மதுரையில் இருந்துவிட்டது போல, ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி ஊருக்குக் கடிதம் எழுதிவிட்டு இப்போதும் இருந்துவிட்டிருக்கக் கூடாதா?' என்று இருந்தது. போன முறை அவன் வராமல் இருந்ததற்கு, இன்று போலவே அன்றும் வேதனை தரும் காரணம் இருந்தது. சென்ற இரண்டு வருஷங்களில் அவன் ஊருக்கு வரும்போதெல்லாம் தன் பெற்றோர்கள் நடந்துகொள்ளும் சுபாவம் அவனுக்குச் சகிக்கக்கூடாமல் இருந்தது. கோனார் மீது அழகம்மாள் எரிந்து எரிந்து விழுவாள். சாந்தமாக இருந்த அவள் எதற்கு இப்படிச் சீறுகிறாள் என்று வருந்துவான் கோபால். அம்மாவை இரண்டொரு தடவை மறைமுகமாகக் கண்டித்தும் பார்த்தான். ஆனால் இவனுடைய கண்டிப்புக்களால் அவளுடைய கோபம் இரட்டிப்பாகிக் கொண்டு தான் வருமே ஒழியத் தணியாது.

ஒரு தடவை கோபால் சற்று கோபம் வரும்படியாகவே கடிந்து கொண்டான். ஒரு மகன் சொல்ல வேண்டிய முறையில் இல்லாமல் சற்றுக் காரமாகவே இருந்தது அவன் சொன்னது. தன் தாயாரைப் பார்த்து, "இப்படி அவர்மேலே வெறுப்பு இருக்குமானால் அந்தக் காலத்திலேயே அவருக்குத் தாலிகட்டத் தலையைச் சாய்த்திருக்க வேண்டாமே?" என்று கேட்டுவிட்டான். அவ்வளவுதான். அன்றும் அதற்கு மறுநாளும் சாப்பிடாமல் இருந்து அழுதாள்; வெறும் மண் தரையில் படுத்துக்கொண்டு பகலையும் இரவையும் கழித்தாள் அழகம்மாள். 'நீயும் கூடவா இப்படி என்னைக் கேட்கணும்?' என்பது

தான், அவனுக்கு அவள் மனம் கொதித்துச் சொன்ன பதில். அவனாலும் தன் அபாரத்துக்கு ஓர் எல்லை காண முடியவில்லையே என்ற ஏமாற்றம் அவள் கண்களில் பெருக்கெடுத்ததே ஒழிய, அவன் கேட்டுவிட்டானே என்ற ரோஷத்தின் கண்ணீரல்ல அவள் பெருக்கியது. பாவம், அந்த வார்த்தையைச் சொல்லிவிட்டு கோபால் தனியே போய் அழுதது அழகம்மாளுக்குத் தெரியுமா?

அதற்குப் பிறகு, அவன் அப்படிப்பட்ட—ஏன் இலேசான அபிப்பிராய வேற்றுமைக்குக் காரணமான சொற்களைக் கூடச் சொன்னதே இல்லை. ஒன்றையும் கவனியாமல், லீவில் ஊருக்கு வந்தால் தாயையும் தந்தையையும் வளைய வளைய வருவான். வீட்டிலே பெற்றோர்களோடு கொஞ்ச, அந்த இருபது வயதுக் குழந்தையைத் தவிர வேறு யாருமில்லை. மதுரையிலே, எத்தனையோ புதுப் புதுப் பெயர்களைக் கொண்ட பட்சணங்களைத் தின்று தெவிட்டிய குழந்தைக்கு, பொரியுருண்டையையும், பணியாரத்தையும் அபூர்வமாகச் செய்து கொடுப்பாள் அழகம்மாள். அப்போது சமையலுக்கு ஒத்தாசை செய்யும் கிருஷ்ணக் கோனாரின் முகத்தில் ஸ்ரீதேவி தாண்டவமாடுவாள்.

இப்படிச் சந்தோஷமாக இருக்கும்போதே, அழகம்மாளுக்குக் கோனார்மேல் ஒருசிறிய தவறுதலுக்குங்கூடப் பிரமாதமான கோபம் வந்துவிடும். பணியாரத்துக்கு மாவைச் சரியாகத் தட்டி வைத்திருக்கமாட்டார் கோனார். கோபம் அவள் முகத்தில் செக்கர் வர்ணத்தைத் தீட்டும். எரித்து விடுபவள்போல் புருஷனை ஒரு பார்வை பார்த்துவிட்டு, கோபால் வீட்டிலிருப்பதால் அவர்மேல் சீறி விழுவதற்கு அஞ்சி, "போதும் வேலைசெய்தது, எந்திரியுங்கள்" என்று சொல்லிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொள்வாள். கிருஷ்ணக் கோனார் மாவைத் தட்டிவைக்கும் முறத்தை அவள் 'சட்' என்று தன்பக்கம் இழுத்துக்கொண்ட பிறகு அவருக்கு அங்கு வேறு என்ன வேலை? பேசாமல் எழுந்திருப்பார். அடிபட்டு வரும் அவமானத்தினால் அவர் மனம் கலங்கும்.

சீறிக் கனல் கக்கும் எரிமலை இப்போது உள்ளேயே பயங்கரமாகப் புகைந்து வந்தது கோபாலுக்குத் தெரிந்தது. 'தகப்பனார் மேல் இப்படி என்ன வெறுப்பு அம்மாவுக்கு? இவர்கள் எப்படிக் காலமெல்லாம் ஒரு வீட்டில் இருக்கிறார்கள்? அதுவும் சமீபத்தில் தானே இந்தச் 'சனியன்' குடும்பத்துள் நுழைந்திருக்கிறது. இதற்குக் காரணம்?" என்று கோபால் யோசித்து யோசித்து மனம் உடைந்துபோய் விட்டான். நாளாவட்டத்தில் அவன் உள்ளத்தில் ஒரு பயமும் குடிகொண்டு விட்டது. என்றைக்காவது தன்

மன வெறுப்பினால் அழகம்மாள் கோனாருக்குச் சாப்பாட்டிலே விஷம் வைத்தாலும் வைத்துவிடுவாள் என்று பயந்தான். அல்லது அவளே கிணற்றிலோ, குளத்திலோ விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டால்?

கடந்த இரண்டு வருஷங்களாக இந்தத் துன்பானுபவம் அவன் எங்கிருந்தாலும் அவனை வதைக்கத் தவறவில்லை. 'அம்மாவின் எரிமலை என்று எந்தச் சந்தர்ப்பத்தில் எப்படி வெடிக்கப் போகிறதோ? யார் யார் அந்தத் தீக்குழம்பில் பலியாகவேண்டி இருக்கிறதோ?' என்று ஒவ்வொரு சமயத்தில் அவன் 'சடக்' என்று நின்று சிறிது யோசிப்பான். ஆனால் கூடவரும் கூட்டாளிகளுக்குத் தன் மன விசாரங்களைக் காட்டிக் கொள்ளாமல் மேலே நடந்து செல்வான்.

போன கோடைவிடுமுறைக்கு அவன் தன் நண்பனோடு ஊருக்கு வந்தது தான், அப்புறம் இந்தக் கிறிஸ்துமஸுக்குத்தான் வந்திருக்கிறான். முன்னால் அவனோடு விடுமுறைக்கு ஊருக்கு வந்து, சிலநாட்கள் அவனோடு தங்கியிருந்தவன் ஒரு ஜமீன்தார் வீட்டுப் பையன்.

தூக்கம் வராதது கோபாலுக்குச் சிரமமாகவே இருந்தது. பக்கத்தில் அலுத்து உறங்கும் கோனாரின் குறட்டைச் சப்தம் கேட்டது. புஜத்திலே முகத்தைத் தேய்த்துக் கொண்டே கோபால் என்னென்னவோ மன உளைச்சலில் வாதைப்பட்டுக் கொண்டிருந்தான் அன்றிரவு.

விடிந்தது. வழக்கம்போல அதிகாலையிலேயே எழுந்துவிட்டார் கோனார். பிறருடைய பண்ணையில் கூலிக்கு உழைக்கும் மனிதனுடைய நித்திய நியமங்களின்படி, கோனாருடைய காலைக் கருமங்கள் நிறைவேறின. வீட்டுக்குத் தெற்கே பருத்தி மார் படலின் மறைவிலுள்ள தண்ணீர்க் குடங்களின் பக்கமாகப் போய், ஒரு செங்கல் துண்டைக் 'கரக' என்று கல்லில் தேய்த்துக் காடு முரடான தூளைக் கொண்டு பல்லில் இரண்டு இழுப்பு இழுத்து வாயைக் கொப்பளித்தார். வீட்டிலே உள்ள பழைய சாதத்தை வாயில் போட்டுக் கொண்டு, கொஞ்சம் சாதத்தை ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு தள்ளாடிக்கொண்டே போனார். பழுதுபட்ட யந்திரம் வேலை செய்யாமல் கிடக்கையில், பழுதுபார்ப்பவன் அதை வந்து தட்டிப்பார்க்கும் போது மூலைக்கு ஓர் இடத்தில் இலேசாக அசைவது போல இருந்தது கோனாரின் நடை. நாற்பத்தைந்து வயதில் அதற்கு இரட்டிப்பு வயதின் பலஹீனம் ஏற்பட்டிருந்தது.

நேரங்கழித்துப் படுக்கையை விட்டு எழுந்தான் கோபால். இரவு நேரத்தில் நடந்ததைக் கோபாலும் பிறரும் மறந்துவிட்டார்கள். வேண்டுமானால் மறதி அபாத்திற்குத் தற்காலிகமாகத் திரைபோடுமே ஒழிய, அடியோடு மாசு தெரியாமல் அதை அழித்துவிடுமா? அபாத்தின் பின்னணியிலேயே தாயும் மகனும் பரஸ்பரம் உற்சாகத்தை கடித்துக் கொண்டிருந்தனர்.

எட்டு மாதங்களாக வராமல், கடிதம்கூடப் போடாமல் இருந்த மகன் இப்போது வந்திருக்கும்போது தாயின் மனம் கொள்ளும் பெருமகிழ்ச்சிக்கு எல்லை ஏது? அழகம்மாள் கூலி வேலை செய்து தன் கையில் சேர்த்து வைத்திருந்த காசுகளை அன்று தான் அவிழ்த்தாள். அந்த சொற்பக்காசுகள் மகனுடைய உபசார விருந்துக்குச் சரியாய்ப் போகும். வருஷத்துக்கு ஒரு தடவை தானே விருந்து செய்யப் போகிறாள்!

அழகம்மாள் ஏதோ "அபூர்வமான" பலகாரங்களைத் தயார் செய்து கொண்டிருந்தாள். கோபால் ஸ்நானம் செய்து விட்டு அழகான உடைகளை எடுத்து அணிந்து கொண்டான். தலையை நன்றாக வாரிவிட்டுக் கொண்டு, வாசல் திண்ணையில் பாயை விரித்து உட்கார்ந்து ஒரு புஸ்தகத்தைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

வெளியூரில் மேல்படிப்புப் படிக்கும் இளைஞர்கள் கிராமத்துக்கு வரும்போது அவர்களுக்குக் கிராமத்திலுள்ள இரண்டொரு படிப்பாளிகள், சோதிடர்கள், வைத்தியர்கள் முதலிய எல்லோரிடத்திலும் ஒரு சிநேகிதம் ஏற்படாமல் தீராது. எல்லோரும் வந்து தங்கள் தங்கள் சந்தேகங்களைக் கேட்பார்கள். "பேப்பர் சமாச்சாரம் எப்படி இருக்கிறது?" "கம்பராமாயணப் பாட்டு வில்லி பாரதத்தை விட நயமில்லையா, ஐயா?" "மதுரையில் சோதிட அலங்காரம் கிடைக்குமா?"—இப்படிக் கதம்பக் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் யோக்கியதை யில்லாதவர்கள் சர்வகலாசாலைக்குப் பட்டதாரிகளானாலும், கிராமத்திலே படித்தவன் என்ற பெயர் வாங்க முடியாது. கோபால் உண்மையிலேயே ஒரு 'கிராமத்துப் பட்டதாரி' தான். அத்தோடு அவன்மேல் ஊராருக்கும் நல்ல பிரியம்.

அன்று அவன் உட்கார்ந்து படித்துக் கொண்டிருக்கும்போது அந்த ஊர்ப் பெரிய பண்ணையாரே வந்து விட்டார். அந்தப் பண்ணையாரின் தம்பி வீட்டிலேதான் கிருஷ்ணக் கோனார் வேலை செய்கிறார். சட்டபூர்வமான அதிகாரமில்லாமல், சட்டபூர்வமான அதிகாரங்களை விட அதிக அதிகாரத்துடன் ஊரைப் பரிபாலனம் செய்யும் ஒரு பெரியவர், ஏழைக் குடிசையில் அன்று அடியெடுத்து

வைத்தது கோபாலுக்கே ஆச்சரியமாக இருந்தது. வந்தவர், தம் மகனை மதுரையில் படிக்க அனுப்பும் விஷயமாகக் கோபாலுடைய ஆலோசனையைக் கேட்கலானார். பேச்சு அவ்வளவில் நிற்காமல் இருவரும் உலக சமாச்சாரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். இதை வீட்டுக்குள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்த அழகம்மாளின் மனம் சந்தோஷத்தினால் பூரித்தது. இந்த இரண்டு குடும்பங்களின் அந்தஸ்துகளுக்கு நடுவே உள்ளது எட்டாத பெருந்தூரம். கோனாரின் குடும்பத்தை விடத் தாழ்ந்த குடும்பமோ, பண்ணையாரைவிட உயர்ந்தவர்களோ அந்த ஊரில் இல்லை.

மகனுடைய படிப்பு எவ்வளவு பெரிய சௌஜன்யவைபவத்துடன் தன் வீட்டில் கால் வைத்திருக்கிறது என்பதை அழகம்மாள் இரண்டு வருஷங்களுக்கு முன்னாலேயே அறிந்துகொண்டாள். அவள் அறிந்து கொண்டதனால்தான்........

*     *     *

கிருஷ்ணக் கோனாருடைய வாலிபப் பருவத்தின் கட்டித்தனங்களில் ஒன்றுகூட இப்போது எஞ்சவில்லை என்பது உண்மைதான். ஆனால் அந்தப் பருவத்தில் இரும்புப் பாதத்தால் மிதிபட்டு அவருடைய சதையும் எலும்பும் நொறுங்கி, மனசோடு உடைந்து போன காட்சி இன்றும் மாறவில்லை. அப்போது, அந்த இருபத்து நாலு இருபத்து ஐந்தாவது வயதில், அவருடைய சகவாசங்களும், ஆட்டபாட்டங்களும் எவருடைய சாம பேத தான தண்டங்களுக்கும் அடங்காமல் தறிகெட்டுக் கூத்தாடின. நான்கு தடவைகள் வீட்டிலிருந்து பணத்தைத் திருடிக் கொண்டு போயிருக்கிறார். ஆயிரக் கணக்கான ரூபாய் வெள்ளத்தில் போனது போல, அவரால் இரண்டு வருஷங்களுக்குள்ளாகக் குடும்பத்தில் பெருத்த நஷ்டம் ஏற்பட்டது. ஒரு சமயம் அவர் மதுரையில் ஒரு தாசி வீட்டின் வாசல் படியிலேயே, சூரியோதயம் ஆகி வெயிலடிப்பதுகூடத் தெரியாமல் படுத்துக் கிடந்தார். அதற்கு மறுநாளே குடும்பத்தில் பாகப் பிரிவினை செய்யும்படி ஏற்பட்டது. கிருஷ்ணக்கோனாருக்கு ஒரே தமையன். இருக்கிற பூர்வீகச் சொத்தும், வயிற்றுப் பாட்டுக்கே போதாமல் இருந்தது. வரவும் செலவும் ஒன்றை மற்றொன்று விழுங்கிக் கொண்டிருக்கும் அற்ப ஆஸ்திதான். அதிலே கிருஷ்ணக்கோனாரால் ஏற்பட்ட கடனை அவரே பொறுக்க வேண்டியது என்றும் ஏற்பட்டது. பாகப் பிரிவினையானதும் மூத்தவர் தம் சொத்துக்களையெல்லாம் விற்று விட்டு, மதுரைக்குப் போய் விட்டார். அதற்கு அப்புறமும் கிருஷ்ணக்கோனார் வழிக்கு வந்தாரில்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில் கிருஷ்ணக் கோனாரை நல்லவனாக்குவதற்கென்று, கல்யாண உபாயத்தைக் கண்டு பிடித்தார்கள். ஆனால் ஒரு பெரிய பிரச்னை குறுக்கிட்டது. அதாவது அவருக்கு யாரும் பெண் கொடுக்கத் தயாரில்லை. காரணம், மனுஷனின் நிலைமை ஆட்டத்தில் இருக்கிறது என்பதோடு மட்டுமல்ல; அவருக்கு வலது கண் ஊனம்; சிறு வயதில் அம்மை வார்த்ததன் ஞாபகக்குறி அது.

பெரியவர்கள் கஷ்டப்பட்டார்கள். இந்தச் சமயத்திலே கிருஷ்ணக்கோனாரின் தகப்பனாருடன் பிறந்த அம்மாளின் இளைய மகளை—அழகம்மாளை—'முறை' கொண்டாடி மணம் முடிக்க வேண்டியதாய் விட்டது. அழகம்மாளுக்கு அப்போது வயது பதினாறு இருக்கும். அவளுடைய குடும்பம் சுமாராகப் பிழைத்து வந்தது. அவளுடைய தமக்கை பக்கத்து ஊரில் தான் ஒரு நல்ல குடும்பத்தில் வாழ்க்கைப்பட்டிருந்தாள். இவளுக்கும் எதிர் காலம் ஒரு நல்ல இடத்தைத் தேடிக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஏனென்றால், அழகம்மாள் பெயருக்கு ஏற்றபடி அப்படி அழகாக இருந்தாள்.

ஆனால், அவளுடைய தலை விதி வேறுவிதமாக இருந்தது. அவளைப் பிற்காலத்தில் அந்த இரண்டுங் கெட்டான் நிலையில் நிறுத்தியவை, அவளுடைய இளகிய மனமும், படித்தவர்கள் சொல்லுகிற அந்தத் தியாக புத்தியும் தான். கிருஷ்ணக்கோனாரின் மானம் ஊரறிய அம்பலத்தில் இழுபடுவது அந்த ஊரைவிட்டுப் பக்கத்து ஊரிலிருந்த அவள் வீட்டையும், அதோடு அவளையும்கூடப் பிடித்து அசைத்து விட்டது. வெளியே தலைகாட்ட முடியாது கஷ்டப்படும் அதே சமயத்தில் அழகம்மாளுக்குக் கோனாரின் மேல் ஓர் இரக்கம் கூடப் பிறந்தது. காரணம் அவருடைய கண்ணின் ஊனம்தான். அவருக்காக, இத்தனை குறைகளோடு இருக்கும் அந்த ஊதாரிக்காக, எவனும் பெண் கொடுக்கமாட்டான் என்பதை அவள் மன உருக்கத்துடன் எண்ணிப் பார்த்தாள். பரம்பரையாகக் கௌரவத்துடன் இருந்த ஒரு குடும்பத்தின் மானத்தைக் காக்க அன்று யாராவது ஒருவர் தங்களைக் களப்பலி கொடுக்காமல் தீராது என்று நிச்சயிப்பதற்கு, அழகம்மாளுக்குக் கடைசிச் சமயத்தில் வந்து ஒத்தாசையும் செய்தாள் அவள் தாயார். துரதிர்ஷ்டச்சீட்டு அழகம்மாள் பேருக்கே விழுந்தது. அவள்தான் அந்தச் சீட்டை உருவிக் கொண்டாள். அவளுடைய இரக்கப்பட்ட உள்ளம் தியாகத்தின் ஊர்பாரத்தை அன்று தாங்கிக் கொள்ள முடியும் என்று நினைத்தது. கல்யாணத்துக்குச் சம்மதித்தாள். கல்யாணமும் நடந்தது.

* * *

# அழகம்மாள்

அழகம்மாள் கிருஷ்ணக் கோனாரின் வீட்டுக்கு வந்து விளக்கேற்றும்போது வீட்டில் சூனியம்தான் பரவிக் கிடந்தது. குடும்ப வாழ்வின் லக்ஷ்மீகரம் எங்கோ குடிபோய்விட்டது. அழகம்மாளின் உருவில்தான் அந்த வீட்டில் உயிர்க் களை இன்னும் அங்கும் அலையடித்துக் கொண்டிருந்தது. சிறிது நாட்களின் ஜீவனுஞ்சத்துக்களை எல்லாமே அவளுடைய வீட்டிலிருந்துதான் வந்ததாக வேண்டியிருந்தது. ஆனால், வருஷம் தவறாமல் பெய்யும் மழையும் தினசரி பெய்வது கிடையாதே!

கோனாரின் ஆட்ட பாட்டம் அடங்கி ஓய்ந்தது. உயிரோடு நின்ற சந்தன மரம் ஒடிந்து விழுந்த கட்டையானாலும் சந்தனத்தின் வாசம் போகாததுபோல, கிருஷ்ணக்கோனாரிடத்திலே கொஞ்சம் உயிரும் மனுஷத் தன்மையும் எஞ்சியிருந்தன. அவற்றைக் கொண்டு வாழ்க்கையில் பழையபடியும் துளிர்த்து மலர அவர் ஆசைப்படவில்லை. அழகம்மாளும் அவரும் ஒடிந்து விழுந்த சந்தனக் கட்டை காலத்தினால் உளுத்துப் போகாமல் இருக்க மட்டுமே பிரார்த்தித்தார்கள்.

அழகம்மாள் அதிகமாகப் படித்தவள் அல்ல, தியாகத்தின் பெருமையை நினைத்து நினைத்துப் புளகிப்பதற்கு. அவள் தியாகத்தின் பெருமையையும் மறந்தாள்; துயரத்தையும் மறந்துவிட்டாள். "சொத்துச் சுகமிழந்த கூலிக்கார மனிதனும், அவனுக்குச் சமைத்துப் போடும் மனைவியும்."—இப்படிச் சாதாரணமான ஒரு கதையிருந்தால் எப்படியிருக்கும்? அந்தக் கதைதான் அவர்களுடைய வாழ்க்கையும். ஆனால், சம்சாரப்பாதையில் அவ்வப்போது குத்தும் முட்களை அழகம்மாள் வேதனையோடு பிடுங்கி எறிந்திருக்கிறாள். அந்தப் பாதையில் செல்லும்போது, கோனாரைக் கோபித்த நாட்களும் இல்லாமல் இல்லை.

கல்யாணமான மறு வருஷத்தில்தான் கோபால் பிறந்தான். அவன் பிறந்ததும், தகர்ந்து போன கோட்டையில் குடியிருக்கும் அவளுடைய ஏழை ஆத்மா தன் எல்லையில் பழுத்துக் குலுங்கப் போகும் ஒரு பழச்செடி முளைவிட்டதைக் கண்டு தன் வாழ்க்கையையே அந்தச் செடியின்மேல் பாரமாகப் போட்டுவிட்டது. அவன் பிறந்த நாளன்றுதான் அழகம்மாள், உலகத்திலே பெண்கள் கல்யாணத்தில் பெறும் இன்பத்தைப் பெற்றாள்.

இவர்களுடைய நம்பிக்கை கோபால் உருவில் வளர்ந்தது. 'வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள் மேலும்' பையன் வளர்ந்து வந்தான். கிராமத்திலே கொஞ்சம் படித்தான். அந்தச்

சமயத்தில் மதுரையில் பிள்ளையில்லாமல் இருக்கும் அவனுடைய பெரியப்பா வந்து அவனைத் தம்மோடு அழைத்துக் கொண்டு போனார். யார் யாரையோ பிடித்து, அவன் இனாமாகப் படிக்க 'ஸ்காலர்ஷிப்' வாங்கிக் கொடுத்தார். ஹோட்டல்களுக்கு வாடிக்கைப் பால் விட்டு வரும் சொற்ப வரும்படியைக் கொண்டு கோபாலுக்குச் செய்யாததெல்லாம் செய்தார்.

அப்படிப் படித்த கோபால் இந்த வருஷம் பி. ஏ. வகுப்புக்கு வந்திருக்கிறான். அவனுடைய சுபாவமும் ஞானமும் சாந்தமும் எல்லோரையும் வசீகரித்தன. பையன் தன் தாயை ஒட்டி, பார்ப்பதற்குக்கூட நன்றாக இருந்தான்.

அவன் ஊருக்கு வரும்போதெல்லாம் அந்தஸ்திலுள்ளவர்கள் கோபாலைப் பார்ப்பதற்காக வருவார்கள். ஒருநாள் ஒரு ஜமீன்தார் வீட்டுப் பையனும் வந்திருந்தான். 'சமூகத்தில் இப்படி உயர்ந்த அந்தஸ்துள்ளவர்கள் தன் வீட்டுக்கு வருகிறார்கள், அவர்களுக் கேற்றபடி நடந்துகொள்ள வேண்டுமே' என்ற எண்ணத்துடன்தான் அழகம்மாள் சென்ற ஒரு வருஷமாகக் கன்னிப் பெண்ணைப் போலத் தன்னை யலங்கரித்துக் கொண்டு அழகு பார்த்துக் கொண்டிருந்தாள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஏதோ அவளைத் தூண்டியது. அவள் செய்தாள். அவ்வளவுதான். கோபாலுக்குக் கூட அழகம்மாளின் நடவடிக்கையில் ஏற்பட்ட இந்த மாறுதல் அதிசயத்தைக் கொடுத்தது. அப்படியிருக்க ஊராருக்குச் சொல்ல வேண்டுமா?

கல்யாணத்துக்கு முன்பிருந்த அழகம்மாள், இருபது வருஷங்களுக்குப் பிறகு அதே சரீரத்தில் புனர் ஜன்மம் எடுத்ததுபோலக் காணப்பட்டாள். இலையுதிர் காலத்துக்குப் பின் பிறந்த வசந்தத்தின் சோலைபோலக் காணப்பட்டன அவளுடைய உடை அலங்காரங்கள். அவள் ஒரு மனிதனுக்காகத் தன வாழ்க்கையைத் தியாகம் செய்தவள். ஆனால் அவளால் அந்தத் தியாகத்தைத் தாங்கமுடியவில்லை. நல் வாழ்க்கையை இழந்த அவளுக்கு இப்பொழுது வாழ்க்கையின்மீது திடீரென்று ஆசை பிறந்தது. பாவம், அந்த வாழ்வாசையினால்தான் தன் புருஷனது கஷ்ட ஜீவனத்தையும் பொருட்படுத்தாது, சாதாரணமாக வாங்குவதைவிட இரட்டிப்புப் பங்கு விலையுள்ள புடவைகளை வாங்குவாள். இப்போது அவற்றை மாசுபடாமல் உடுத்திக் கொள்வது வழக்கம். இருபது வருஷமாகப் புழுதியில், தூசி தும்பில், நடமாடிக் கூலிக்காரியாக வாழ்ந்தவள் நிமிஷத்துக்கு ஒருதடவை தன் ஆடையில் ஒட்டிய

மாசை இரண்டு விரல்களால் சுண்டித் தட்டிவிட்டுக் கொள்ளுவது ஊர்ப் பெண்களின் கண்களுக்குப் படாமல் போகவில்லை. முகத்தைக் கழுவுவது ஒரு நாளைக்கு இத்தனை தடவையென்றில்லை. வெற்றிலை, வெற்றிலை—ஓயாமல் வெற்றிலைதான். சிவந்த வாயில் அனாயாசமாக வெற்றிலை மெல்லும் தோற்றம் கவர்ச்சியளிக்கத்தான் செய்யும் என்றாலும் இப்போது அவளுக்குப் பிராயம் தவறி விட்டது. ஆனால், அழகு செய்து கொள்ளவேண்டுமென்று நினைக்கும்போது சரீர லக்ஷணங்களை யார்தான் கவனிக்கிறார்கள்? இவளுடைய புதிய போக்கைச் சூழ்ந்து அபவாதத்தைச் சிருஷ்டிக்க முயன்ற ஊர்ப் பெண்களின் வாயை, அழகம்மாளின் பரிசுத்தமான நடத்தை மூடி விட்டது. ஆனால், ஒரு நாள் மதுரையிலிருந்து வந்த கோபாலின் கண்களுக்கு இந்தத் தோற்றம் எப்படியோதான் இருந்தது. இருந்தாலும் தன் சவுகரியமான நிலைக்கேற்பத் தாயும் தன்னைத் திருத்திக்கொண்டால் அதில் என்ன குற்றம் என்று சமாதானம் செய்து கொண்டான்.

* * *

ஒருநாள் வீட்டுக்கு ஒரு புடவை வியாபாரி வந்தான். விலை உயர்ந்த புடவைகள். கோபாலும் அப்போது ஊருக்கு வந்திருந்தான். அழகம்மாளின் குடும்ப நிலைக்கு அப்படிப்பட்ட சேலைகளை வாங்கக் கனவுகூடக் காணமுடியாது. ஆனால் அவற்றை வாங்கத்தான் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள், விவரம் அறியாத சிறு பெண் மாதிரி. கோபாலுக்கு என்னவென்றே புரியவில்லை. புடவை வியாபாரியின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த கோபாலை வீட்டுக்குள்ளே வரும்படி அழைத்தாள் அழகம்மாள். கோபால் போய் நின்றதும் அழகம்மாள் மிகவும் ரகசியம் போலவும், பரிதாபகரமான குரலிலும், "கோபால், அவர் வேஷ்டி எடுக்க வேண்டுமென்று நாலு ரூபாய் வச்சிருந்தார். அதை எடுத்துக் கிட்டேன். என் கிட்டே மூணேகால் ரூபாய் இருக்கும், சேலைக்கு இன்னும் அஞ்சு ரூபாய் வேணும். உன் கிட்டே இருக்கா?" என்றாள்.

கோபாலுக்குத் திடுக்கிட்டு விட்டது. இதுவரைக்கும் தாயார் தன்னிடம் பணம் கேட்டதே இல்லை. தவிரவும், அவன் சம்பாதிக்கிறது என்ன? அதுமட்டுமின்றி கந்தலை உடுத்திக் கொண்டிருக்கும் கோனாரைக் கவனியாமல், போனமாதத்தில்தான் ஒரு விலையுயர்ந்த புடவையை எடுத்துவிட்டு, இப்பொழுது திரும்பவும்

எடுக்கவேண்டும் என்று கேட்டால் அதற்கு என்ன அர்த்தம்? அத்தோடு விலை குறைந்த புடைவைகள் இருந்தும் இப்படி பணத்தைக் கரியாக்க நினைப்பானேன்?

"என் கிட்டே ஏதம்மா பணம்?" என்றான் கோபால்.

"இல்லையாக்கும். உன் கிட்டே இல்லாவிட்டால் பண்ணையாரிடத்தில் கேளேன். அவர்தான் உன்னிடத்திலே, பார்த்த இடத்திலெல்லாம் பிரியமாயிருக்கிறார் என்று ஊரெல்லாம் சொல்லுகிறார்களே" என்றாள்.

கோபால் உண்மையிலேயே அதிர்ச்சி யடைந்தான். 'பண்ணையாரிடம் கடன் கேட்கவா? இவ்வளவு மதிப்புக்குறைந்த காரியத்தைச் செய்ய அழகம்மாளும் தூண்டி விடுவதா?' என்று நினைத்துத் திகைத்தான். யாரிடத்திலும் எந்தத் தயவையும் எதிர்பாராது மானத்துடன் வாழவேண்டுமென்று எத்தனையோ கஷ்டமான சந்தர்ப்பங்களிலும் சமாளித்த அழகம்மாள் இப்போது தன்னைப் பண்ணையார் வீட்டில் கடன் கேட்கத் தூண்டுவதா? கோபாலுக்குக் கோபம்கூட வந்தது. உடனே, "போனமாதம் தானே ஒரு சேலை எடுத்தாற்போலிருக்கிறது. அதற்குள் என்ன? அப்பாவின் வேஷ்டியைப் பார்த்தாயா?" என்றான். அவ்வளவுதான், அழகம்மாள் அழுது விட்டாள். அவளுடைய விம்மலும் பெருமூச்சும் வீட்டு வாசலுக்குக் கேட்டன. நெஞ்சிலே பற்றி எரியும் நெருப்பை இந்தப் பெருமூச்சு ஒன்றே பக்குவமாக ஊதிவிட்டது.

அழகம்மாள், தன் நல்வாழ்வுக்குக் கிருஷ்ணக் கோனார் தடங்கலாக நின்றார் என்பதை எண்ணிச் சில சந்தர்ப்பங்களில் மனத்துக்குள்ளேயே வருந்தியதுண்டு. ஆனால் அழவில்லை. இன்றுதான் முதல் முதலாக அழுதாள். ஒரு பெரிய பந்தலைச் சாய்க்க ஒரு தூணைச் சாய்த்தாலே போதும். இந்தப் புடவை விஷயம், வருஷக் கணக்காகத் தெரியாமல் அடங்கியிருந்த அவள் துயரம், அழுகை மூலம் வெளிப்படக் காரண பூதமாயிருந்தது.

என்ன தேறுதல் மொழிகளைச் சொல்லுவதென்றே கோபாலுக்குத் தோன்றவில்லை. கண்ணில் கலங்கிய கண்ணீர் கீழே உருண்டு விழாதபடி முகத்தை மேல் நோக்கித் திருப்பிக்கொண்டான். அன்று புடவை வியாபாரியைப் போகச் சொல்லிவிட்டு கோபாலும் வெளியே போய்விட்டான். அதே அலங்காரப் பைத்தியம் இன்று விடுமுறையில் கோபால் வந்திருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலும் தலைவிரித்தாடத் தொடங்கிவிட்டது.

## 2

பண்ணையார் விடைபெற்றுக்கொண்டு வெளியே போய்விட்டார்.

கோபால் வீட்டுக்குள்ளே வரும்போது அழகம்மாள் வாரி முடித்த தலையுடன் தண்ணீர்ப் பானையில் முகத்தைப் பார்த்துக் கொண்டு குங்குமத்தை அழித்து அழித்து வைத்துக்கொண்டிருந்தாள். கோபால் உள்ளே போனதும், திரும்பிப் பார்த்தபோது அழகம்மாள் முகத்தில் காலணா அகலத்தில் இருந்தது குங்குமம்; உதடோ ரத்தச் சிவப்பு—வெற்றிலைக் காவியினால். பக்கத்தில் உள்ள பாதரசத் துளிகள் சிறிதே தொட்ட மாத்திரத்தில் பளிச்சென்று ஒன்றாகக் கலந்து விடுவதைப்போல, இந்த இரண்டு சிவப்புக்களும் எட்டிப் போய் ஒன்றாகக் கலந்து முகமெங்கும் சிவப்பு வண்ணம் ஆகும்படி செய்து விட்டன. கோபாலுக்கு வெட்கமாகக் கூட இருந்தது. என்ன சொல்லுவது ?

மாலைக் கருக்கலில் ஓய்ந்து போய்த் தள்ளாடிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார் கோனார். அவர் குளிப்பதற்காகத் தினந்தோறும் வெந்நீர் போட்டுத் தயாராக வைத்திருக்கும் அழகம்மாள் அன்று தன் அலங்காரத்திலேயே நேரத்தைப் போக்கிவிட்டாள்.

அதனால், கோனார், “ வெந்நீர் இருக்கா ?” என்று கேட்டதற்கு வெடுக்கென்று, “என்னாலே ஒண்ணும் ஆகல்லே ஐயா... எல்லா வேலையையும் செய்துட்டு வெந்நீரையும் போட்டு வைக்க எனக்கு நாலு கையில்லே ” என்றாள்.

கோனாருக்கு இந்த வர்ம - அடிகள் சகஜம்தான். ஆனால் கோபால் வரும்போதுதான் தனக்கு இந்த அவஸ்தை யென்பது அவருக்குத் தெளிவாகத் தெரிந்த விஷயம். நேற்று இஞ்சிச் சாறு சாப்பிடச் சொல்லிப் பரிவோடு சொன்ன அதே வாயில்தான் இந்தக் கடுசொற்களும் விளம்பின. அப்படியே பருத்திமாரப் படலின் மறைவில் ஜில்லிட்டுக் கிடக்கும் மண்பானைத் தண்ணீரை எடுத்து உடம்பில் கொட்டிக் கொண்டார்.

கோபால் ஒன்றையும் கவனியாதவன்போல இருந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் தன் கோழிக் குஞ்சைக் காணோம் என்று தேடிக் கொண்டு வந்த பக்கத்து வீட்டு அம்மாள் கோபாலிடம் ஏதோ பேச்சுக் கொடுத்தாள். அப்போது அவள் வெளியே வந்த அழகம்மாளையும் அவளுடைய ‘அலங்கார’த்தையும் பார்த்து, “ மகன் வரப்போதெல்லாம் அம்மாவுக்குச் சந்தோஷம் பொறுக்க முடியல்லே.

நேத்தெல்லாம்—எதுக்கு—இந்த ஒரு வருஷமா அவனுடைய கும்மாளமும் வெத்திலையும் எங்கே போச்சோ? இப்போ மகன் வந்ததும் எல்லாம் வந்துவிட்டது!" என்று சொல்லிச் சிரித்தாள். கோனாரைத் தவிர்த்து மற்ற இருவரும் சிரித்துக் கொண்டார்கள். ஆனால் கோனார் சிரிக்காததற்கும், அழகம்மாளும் கோபாலும் சிரித்ததற்கும் பொருள் ஒன்றுதான்.

* * *

இரவு தகப்பனும் மகனும் பக்கத்தில் உட்கார்ந்து சாப்பிட்டார்கள். சாப்பாட்டின் நடுவே, "கோபாலு, கொஞ்சம் கறி விட்டுச் சாப்பிடேன்" என்றார் கோனார். இதைக் காதில் கேட்டதும் அழகம்மாள், "அவனுக்குக் கறி விடுவதற்கு எனக்குத் தெரியாதா? நீங்க சொல்லித்தான் அவனை இதுவரைக்கும் நான் வளர்த்தேனு?" என்றாள். ஆனால், அத்தோடு நிறுத்தவில்லை. அதற்கு மேலாகவும் போய், "நான் செய்ததும் செய்யாததும் அந்த அவிஞ்ச கண்ணுக்குத் தெரியப் போகுதா?" என்றும் சொல்லி விட்டாள்.

எல்லா விஷயங்களுமே இன்றுதான் உச்சத்தில் வந்து நின்றன. சாப்பாட்டை அப்படியே வைத்துவிட்டு எழுந்து வாசலுக்குப் போய் விட்டார் கோனார். அழகம்மாள் இதைச் சட்டை செய்யவே இல்லை. திகைத்துப் போய் உட்கார்ந்திருக்கும் கோபாலின் எச்சிற் கையில் சாதம் உலர்ந்து பிசு பிசுத்தது.

கோனாரின் அழுகையொலி திடீரென்று வாள் உரசுவது போல ஒரே தடவைதான் கேட்டது. அதற்குமேல் சத்தம் கேளாமல் அழுகையை அடக்கிக் கொண்டார். கோபால் எழுந்து வாசலுக்கு வந்தான். அவன் எவ்வளவு தேற்றியும் அவர் அழுகை நிற்கவே இல்லை.

இந்தத் துயர நாடகம் நாளுக்கு நாள் சோகத்தை அதிகரித்துக் கொண்டு போனால் அதன் முடிவுதான் என்ன? கோபால் மனம் கலங்கினான். தான் வரும்போது மட்டும் தாயார் அவரிடம் இவ்வளவு மூர்க்கமாக நடந்துகொள்ளவும், அத்தோடு அதிசயமாக அலங்காரம் செய்து கொள்ளவும் காரணம்? குடும்பத்தின் கஷ்டநஷ்டங்களைக் கவனியாமல், ஈவிரக்கமற்ற ராக்ஷஸியைப் போலிருந்தாள் அழகம்மாள். 'இப்போதும் என் மதுரையை விட்டு வந்தோம்' என்ற ஒரே உணர்ச்சிதான் அவனுக்கு ஏற்பட்டது. கடைசியில்

கோனாரை ஒருவாறு தேற்றிவிட்டுப் படுத்தான். முந்தின நாள் இரவைவிட இந்த இரவு மகா கொடூரமாக இருந்தது. கோபால் முன்றில்தான் புரண்டான் அன்று.

நடுராத்திரி ஆகிவிட்டது. கோனாரின் குறட்டைச் சப்தம் கேட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில், கொஞ்ச நேரத்துக்கு முன்புதான் கண்ணயர்ந்த கோபால் எப்படியோ தூக்கம் கலைந்து எழுந்தான். வீட்டுக்குப் பின்னால் சில்வண்டுகள் இரைந்து கொண்டிருந்தன. அதே சுருதியில் வீட்டுக்குள்ளிருந்து அழகம்மாள் அழுவதும் ஈனஸ்வரத்தில் கேட்டது.

இந்த மெல்லொலிகளின் மூலம் இரவு பயங்கரமாக மாறியது. மெல்ல எழுந்தான். நெஞ்சு ‘திக் திக்’ கென்று அடிக்கொள்ள, கோபால் கதவின் பக்கமாக வந்து இடுக்கு வழியே உள்ளே பார்த்த போது ‘மினுக் மினுக்’ கென்று எரியும் அகல் விளக்கின் மங்கிய ஒளியில் விரித்த கூந்தல் கன்னங்களை மறைக்கும்படியாகக் குனிந்து கொண்டு அழகம்மாள் ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தாள். குளறுகின்ற சொல்லில்,

“சேலை நனத்தோடே—உன்னை
சேர்ந்திருக்கக் கிட்டலையே...”

என்று மாறி மாறிச் சொல்லிக் கொண்டிருந்தாள். பைத்தியம் தான் பிடித்துவிட்டதா அழகம்மாளுக்கு? கோபால் பயந்தே போய் விட்டான். அவன் உடம்பு நடுங்கியது. கதவை ஓங்கி ஒரு குத்துக் குத்தி, “அம்மா!” என்று அலறினான். அவ்வளவுதான், உடனே எழுந்துவந்து கதவைத் திறந்தாள் அழகம்மாள். “அம்மா, என்ன அம்மா?” என்று அவன் கைகளைப் பிடித்தான். பயத்தினால் கோபாலின் விழிகள் வெளியே பிதுங்கியிருந்தன. அழகம்மாளின் முகத்தையே கூர்ந்து பார்த்தான். சிறிது நேரம் கழித்து அவள் தன் கண்களைத் துடைத்துவிட்டு, “ஒன்றுமில்லை, எங்க அப்பா நினைவு வந்தது. அவரை நினைச்சு அழுதேன், கோபாலு” என்றாள்.

“பத்து வருஷங்களுக்கு முன்னாலே செத்தவருக்கு இப்போ என்ன அழுகை—இந்த ராத்திரியில்?” என்று சொல்லிவிட்டுத் தாயின் பதிலை எதிர்பார்த்தான் கோபால். அவள் பேசாமல் நின்றாள்.

"அவளை நினைக்க அழுகிறேன்" என்று பழையபடியும் சொன்னான்.

அழகம்மாள் உண்மையைச் சொல்ல மாட்டாள், சொல்லவும் இல்லை என்பது கோபாலுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவனுக்கு ஒன்றுமே புரியாமல், உடலும் மனமும் புழுவாகத் துடித்துக் கொண்டிருந்தான். மிகவும் கோப வெறியோடு, "எதற்கம்மா இப்படி எல்லோரையும் சித்திரவதை செய்றே? எதுக்குத்தான் அழுறே?" என்று வீடே கிடுகிடுக்கும்படி கேட்டுவிட்டுத் திடீரென்று குரலைத் தாழ்த்தி ரகசியத் தொனியில், "அம்மா, ஏன் அழுறே? சொல்லு" என்றான்.

"சேலை..." என்ற ஒரே ஒரு சொல் மட்டும் அழகம்மாள் வாயிலிருந்து வெளியே வந்தது.

'அம்மாவுக்குப் பைத்தியமா, என்ன? சேலைக்குத்தானா இப்படி ஒப்பாரி வைத்து அழுகிறாள்? உண்மையில் சேலைக்குத்தானா இது?'—கோபால் தத்தளித்தான். அம்மாவுக்குப் பைத்தியம்தான் பிடித்து விட்டது என்று நினைத்து வாசல் திண்ணைக்கு ஓடிக் கோனாரை எழுப்பப் போனான்.

கோனார் இவன் எழுப்பும் வரை காத்திருக்கவில்லை. எழுந்துதான் இருந்தார். எழுந்து, உட்கார்ந்து, முகத்தில் துணியைப் போட்டு மூடிக்கொண்டு 'மூஸ் மூஸ்' என்று பெரு மூச்சோடு கேவிக் கேவி அழுதுகொண்டிருந்தார். கோபாலுக்கு இரண்டு பக்கத்திலுமே கொள்ளிதான் சுடர் விட்டு எரிந்து கொண்டிருந்தது!

அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால், தெய்வாதீனமாக, இவர்களுடைய பரபரப்பும் கூச்சலும் ஊரை எழுப்பி விட்டன. பக்கத்து வீட்டார்கள் எழுந்து வந்து விட்டார்கள். ஊர்க் கூட்டமாக ஜனங்கள் கூடிவிட்டார்கள். அழகம்மாளின் பைத்தியம் ஊர்க் கூட்டத்தைக் கண்டதும், சிறிது மட்டுப்பட்டது. அழகம்மாள், வெட்க மேலீட்டால், பழைய அழகம்மாளானாள். ஆனால் ஊர் ஜனங்களின் புலன் விசாரணைக்குப் பதில் சொல்லியாக வேண்டுமே!

கோபால் இடிந்துபோய் உட்கார்ந்து விட்டான். ஏறக்குறைய இதே நிலையில் தான் கோனாரும், அழகம்மாளும் ஆளுக்கு ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

சந்தடிகளெல்லாம் சிறிது சிறிதாகக் குறைந்து மட்டுப்படவே பக்கத்து வீட்டு அம்மாள்—முதல் நாளும், அன்றும் அழகம்மாளுக்

கும் கோனூருக்கும் இடையே நிகழ்ந்த இந்தப் பிணக்கின் இரண்டொரு வெளிப்பாட்டங்களைச் சாடையாகப் பார்த்தவள்—" என்னவோ, புருஷன் பெண்டாட்டிக் குள்ளே கொஞ்சம் மனச் சடைவு. நேத்திலிருந்தே ஒரு மாதிரியா இருக்கிறாக. நேத்துக்கூட அழகம்மாள் பணியாரம் சுட்டுக் கொண்டிருந்தாள். அப்போது கோனூர் அண்ணாச்சியைப் பார்த்து அழகம்மாள் எதுக்கோ வெடுக்கென்று சொன்னது கேட்டது. என்னவோ ஏதோ என்று நானும் பேசாமலிருந்து விட்டேன் " என்று விஸ்தாரமாக விளக்கினாள் ஊர் ஜனங்களுக்கு. இப்போதுதான் விஷயம் என்னவென்று புரிந்தது. கோனூருக்கும் அழகம்மாளுக்கும் கோபாலுக்கும் கூட இப்போது தான் விஷயம் என்னவென்று புரிந்தது போல் இருந்தது.

பழையபடியும் கோனூருக்கும் அழகம்மாளுக்கும் ஒவ்வாமல் போய் விட்டது என்ற அதே காரணம் தான், நீரில் மூழ்கி வெளியே தலைகாட்டும் தெப்பத்தைப்போல வெளியே தெரிந்தது.

ஊரார் இரு சாரிலும் சமாதானப் படுத்திவிட்டுப் போய்விட்டார்கள்.

• • •

கடிகாரப்படி, விடிவதற்கு இன்னும் ஒரு சில மணிகள்தான் இருந்தன. ஆனால் கோபாலுக்கு எத்தனையோ சதுர் யுகங்களைக் கடக்க வேண்டும் போல இருந்தது.

விடிவதற்கு முன்பாகவே……

'படிப்பை இம்மட்டில் நிறுத்திவிட்டு அம்மாவை மதுரைக்கு அழைத்துக் கொண்டுபோய், தான் ஏதாவது ஒரு உத்தியோகத்துக்கு வழிதேட வேண்டியதுதான்; பெரியப்பா ஒரு சில மாதங்களுக்குத் தன் தாயாரைப் பராமரிக்கச் சம்மதித்தால் பி. ஏ. பரீக்ஷை முடியும் வரை படிக்கலாம். கிருஷ்ணக்கோனாரோ, கிராமத்திலேயே இருந்து தம் வாழ்நாளைக் கழிக்க வேண்டியதுதான்!' என்று திட்டமிட்டான் கோபால்.

'தகப்பனார் ஊரில் தங்கி விட்டால் அவருக்குச் சமைத்துப் போடுவது யார்? இந்த வயோதிகத்தில் அவர் தனியே எப்படிக் காலம் தள்ளுவார்?....'

சிக்கல் அவிழும்போதே, புதிய சிக்கல் விழுந்ததுபோல் இருந்தது அவனுக்கு. மனத்தில் சமாதானம் ஏற்படாமல் தூங்குவது

எப்படி? காலை விடிந்தால் அந்தத் தேதியிலிருந்து தொடங்கும் எதிர்காலத்தில் வாழ்க்கை நடத்துவதுதான் எப்படி?

கடைசியில் கோபாலுக்கு ஒரு யோசனை உதயமானது. அதன்படி நடக்குமா நடக்காதா என்றாலும், மனோசாத்யம் மனச்சாந்திக்கு வழிகாட்டத்தான் செய்தது.

தன் பாட்டியின் ஊருக்கு—அழகம்மாளின் பிறந்தகத்துக்கு—அப்பாவை அனுப்பி விடுவது; அங்கே அவர் நிலபுலன்களைக் கண்காணித்துக் கொள்ளவும், வேண்டிய வேலைகளைச் செய்யவும் மாட்டாரா? நல்லகாலம் பிறந்த அன்றைக்குத் தகப்பனாரைத் தன்னிடம் அழைத்துக்கொள்ளுவது...

இருபது வருஷகாலத்துக்குப் பிறகு தலைவிரித்தாடிய பிசாசு அலுத்துப்போன பாவனையில், மூவரும் அன்று படுத்திருந்தார்கள். ஆனால் தூங்கவில்லை; விழித்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

# திரிவேணி

அயோத்தி நகரம். இந்த அயோத்தி கோசல நாட்டின் தலைநகரும் அல்ல; சரயு நதி தீரத்தை மாடகூடங்களுடன் அலங்கரிக்கும் ராஜதானிப் பட்டணமும் அல்ல. இங்கே ராமன் இருக்கிறான்; இந்த இடம் அயோத்தியாக இருக்கிறது.

ராவண வதம் முடிந்து எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்து விட்டன. ஆனால், இன்றும் ராமன் கட்டுறுதி கொண்ட வாலிபனாக இங்கே வீற்றிருக்கிறான்; அவன் புஜங்களில் கைகளைக் கோத்து, பிரிய வசனங்கள் பேசி விளையாடும் ஜானகி, யௌவனம் ததும்பும் இளவயது மங்கையாக இலங்குகிறாள். அன்னத்தின் நடையோடு அவளுடைய நடையை ஒப்பிட்டும், மதயானையின் கம்பீர நடையோடு ராமனுடைய நடையை ஒப்பிட்டும் இருவரும் தங்களுக்குள் புன்னகை செய்துகொள்ளும் வாலிபம் இன்றும் சிம்மாசனத்தில் அமர்ந்து அரசு செலுத்துகிறது. பழைய நிகழ்ச்சிகள், யுகக் கணக்கில் கடந்து போன காலத்துக்கு முன்னே என்றென்றோ நடந்த நிகழ்ச்சிகள், தம்முள் வேற்றுமை தெரியாமல் ஒரு நிகழ்ச்சியாக, ஒரு பிண்டமாகத் திரண்டுவிட்டனபோலத் தோன்றுகின்றன. காலம் என்ற பனி மூட்டம் நடுவே கவிந்திருக்கிறது. இதை இருவருடைய கண்களும் ஊடுருவிப் பார்க்கின்றன. மூட்டத்திற்கு அப்பால் தென்படும் அகலிகையின் விமோசனமும், வில்லிறுத்த போராண்மையும், தாதை சொல் கொண்டு கானக வாழ்க்கையை மேற்கொண்டதும், குகனுடைய வரவேற்பும், பரதன் பாதுகை சுமந்து சென்ற கோலமும், அப்புறம் மரவுரி தரித்து பர்ணசாலை முற்றத்தில் ஆடிய விளையாட்டுக்களும், இருவரும் பிரிந்து தனிவாழ்வு வாழ்ந்ததும், ஜடாயுவின் தெய்வ மரணமும், இலங்கை யுத்தம், கும்பகர்ணனின் மறக்க முடியாத அந்திம காலம், ராவணனின் வெற்பெடுத்த இரு

மேனி மண்ணில் சாய்ந்ததைக் கண்ணீர் ததும்பப் பார்த்து நின்றது, இறைமீட்டி, சபரியின் கனிவிருந்து முதலியவையும் ஒன்றாகி ஒரு நிகழ்ச்சி யாகிவிட்டன. இந்த நிகழ்ச்சியால் மோதுண்ட இருவரின் உள்ளமும் புதுவளர்ச்சி பெற்றுக் களித்திருக்கிறது. இந்த உள்ளத் தில், இந்த உள்ளப் பரப்பில், இன்று வர்ண ஜாலங்கள் இல்லை; ஸ்வர பேதங்கள் இல்லை. பழைய நிகழ்ச்சிகள் ஒன்றானதுபோல, இந்த மன உணர்ச்சிகளும் ஒன்றாகிவிட்டன. சகலமும் ஏகமாகி நின்ற இந்த விசித்திரமான பருவத்திலும் கூட மிதிலையிலும் அயோத்தி யிலும் சிறு பிராயத்தில் ஊசலாடியும், கிளி வளர்த்தும், நிலா முற்றத்தில் அமர்ந்து யாழிசையை அனுபவித்தும் வந்த பழைய விளையாட்டுகளை அவர்கள் மறக்கவில்லை. அந்த நாளும், இந்த நாளும் ஒரே ஒரு வேற்றுமையுடன்தான் வேறுபட்டு நின்றன. முன் னாளில் விளையாட்டு இன்ப வேட்கையில் பிறந்தது; விளையாட்டைத் தாண்டி வேறு எதுவும் இல்லை; இன்றோ விளையாட்டில் மற்றொரு விளையாட்டு பிறந்தது. விளையாடவேண்டும் என்பது ஆசையாக இல்லாமல் வேறொரு விளையாட்டாகவே இருந்தது. இந்த இரண்டா வது விளையாட்டில் அவர்கள் சுவர்க்கானுபவத்தைக் கண்டார்கள்; விளையாடினார்கள். சீதை, யானையின் நடையைக் கண்டு புதியதோர் முறுவல் செய்தாள்; ராமனும் அன்னத்தின் நடையைப் பார்த்துப் புன்னகை பூத்தான். முன்பு குகனுடைய வாசஸ்தலத்தில் புல்லின் மேல் படுத்திருந்ததுபோல், இன்றும் புல்லின்மேல் படுத்துறங்கினர். முன்போலவே இன்றும் ராமனைப் பார்த்து, 'புருஷ ரூபம் கொண்ட பெண்' என்று கேலி செய்தாள் சீதை.

ஆனால்... இப்படிப்பட்ட ஒரு தனி விசேஷம் நிறைந்த பிராயத் திலும், தனி விசேஷம் நிறைந்த மனப் பக்குவத்திலும், அவ்வப் போது சில சலனங்கள் ஏற்படாமல் இல்லை. பழைய நினைவுகள் ஒரு நினைவாகிவிட்டாலும், சில விஷயங்கள் அவற்றை இவர்கள் மனக் கண்முன் பாகுபடுத்தித் தனியாக்கிக் காட்டின. 'சபரியின் பாக்கியம் எவ்வளவு என்று நான் வர்ணிப்பேன்' என்று தொடங்கும் ஒரு இசைப்பாட்டு செவியில் விழுந்தால், இருவருக்கும் மேனி புள கிக்கும்; ஊமைகளைப் போல ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த வண்ணம் உட்கார்ந்து விடுவார்கள். பழைய நினைவுகள் யாவும் கை கோர்த்துக்கொண்டு வலம் வரும். ராமனின் கண்களில் கண்ணீர் பொங்கும்; அதைக் கண்டதும் திடீரென்று சீதை 'கலகல' என்று சிரித்துவிடுவாள். ராமனும் சிரிப்பான். இருவரும் அவ்விடத்தி லிருந்து எழுந்து வேறிடத்தில் போய் உட்காருவார்கள்.

“சபரியை ஞாபகம் இருக்கிறதா, சீதை?” என்று சிரித்துக் கொண்டே கேட்பான் ராமன்.

சீதை பதில் சொல்லமாட்டாள். அப்பொழுது அவளுடைய கண்களில் கண்ணீர் பொங்கும்; கண்ணீரே பதில் சொல்லும். ராமன் மௌனத்தில் ஆழ்ந்துவிடுவான்.

இந்த அயோத்தியின் பக்கத்திலுள்ள சாட்டாறுதான் இப்போது சரயு. இவர்கள் வாசம் செய்யும் மாளிகை, ரகு வம்சத்தின் குலக் கொடி கொழுந்தோடிப் படருகிற அரண்மனையாகிவிட்டது. வயதில் பெரியவர்களை தசரதனுகவும், கோசலையாகவும் எண்ணுகிறார்கள்; நடக்காரர்கள் எல்லோருமே குகனின் திருவுருவங்கள்; குழந்தைகளெல்லாம் லவ குசர்கள். வாணிபர்களை உடன் பிறந்த பரத லக்ஷ்மணர்கள். இங்கே இருக்கிறான் ராமன்; இங்கே வீற்றிருக்கிறாள் ஜானகி.

இரவு நேரம்; நிலா புறப்பட்டுவிட்டது. மாளிகையின் பின்புறத்திலே, ஆம்பல் இதழ் அவிழ்ந்த தடாகத்தின் ஓரத்திலே ஒரு பொன்னூசல். மலர்மாலைகளால் சுற்றப்பட்ட பொற்கயிறுகளில் இணைத்த பலகை, நவரத்தினங்கள் இழைத்த ஸ்வர்ண பீடமாகத் திகழ்கிறது. அசைவது தெரியாமல் அசைந்து ஆடும் அந்தப் பொன்னூசலில், இந்த யுகம் கண்ட தம்பதிகள் ஆடிக் களிக்கிறார்கள். எங்கிருந்தோ ஒரு இன்னிசை கேட்கிறது. இரண்டு பேர் பாடுகிறார்கள். ஒன்று ஆண் குரல்; மற்றொன்று பெண் குரல். இரண்டும், தம்புராவின் சுருதி ஒலியில் இழைகின்றன; மூன்று ஒலிகளும் ஒன்றுகின்றன. மூவிழைகளால் திரித்த மங்கலநாண் போல இருக்கிறது இசை. பாடுகின்ற குரல்கள் மட்டுமா ஒன்றுபோல இருக்கின்றன? பாடுகின்றவர்களின் உள்ளங்கள், பாடுகின்றவர்களின் அபிலாஷைகள், பாடுகின்றவர்களின் சகலமுமே ஒன்று போலத்தான் இருக்கின்றன.

பொன்னூசல் அசைவின்றி நிற்கிறது; இன்னிசையின் நடுவே மதுரம் ஊறிப் பழுத்த சொற்கள் தவழுகின்றன; சுருட்டி ராகம் சொற்களை உச்சிமுகர்ந்து தழுவுகிறது:

> பதிகி ஹாரதீரே—ஸீதா[1]
> பதிகி ஹாரதீரே—ஸீதா (பதிகி)

பாட்டும் இசையும் பொருந்தியது, இந்தத் தம்பதிகளின் ஐக்கியத்துக்கு ஏற்ற உவமையாக விளங்குகிறது. பாட்டு தொடருகிறது;

"மிகவும் மிருதுவான, உண்மையான மொழிகளைப் பேசுகிறவனுக்கு, (அந்த) சர்வலோக நாயகனுக்கு ஆரத்தி எடுங்கள்."

---

[1] சீதையின் நாயகனுக்கு ஆரத்தி எடுங்கள்.

ஒன்றும் தோன்றாமல் "நன்றாக இருக்கிறது" என்றுமட்டும் சொல்லுகிறாள் சீதை.

"எது?" என்று அவசியமில்லாமலே கேட்கிறான் ராமன்.

"எல்லாம்" என்று தன்னை மறந்த பதில் வருகிறது.

பாட்டு தொடர்ந்து கேட்கிறது:

"பொன்னிறமான பாம்பணையில் வீற்றிருந்து, மின்னலைப் போலப் பிரகாசிக்கும் தன்னுடைய மனையாட்டியாகிய சீதையுடன் பேசிக்கொண்டிருக்கிறான்; உள்ளம் பூரிக்கிறான். அவனுக்கு ஆரத்தி எடுங்கள்."

இசை சிறிது சிறிதாக மௌனத்தில் கலக்கிறது; இசை வந்த பாதையில் மௌனம் வருகிறது. பொன்னூசல் சற்றே அசையத் தொடங்கியது.

"இப்போது நீங்கள் பாம்பணையில் இல்லை" என்று சொல்லி மகிழ்ச்சியுடன் சிரிக்கிறாள் சீதை. அவளுடைய சொற்களில் ஒலிக்கும் பேதைமை ராமனை ஆட்கொண்டு விட்டது. சீதையால் எதுவும் பேச முடியவில்லை என்பதைக் கண்டான் ராமன். இன்பக் கடலில் ஆழ்ந்து செயலற்றுப்போன அவர்கள் வேறு ஏதேனும் காரியத்தில் ஈடுபட்டு, நிலைமையைச் சமாளிக்க வேண்டும் என்று துடித்தார்கள். அப்பொழுது அவர்களுக்குக் கை கொடுக்க வந்ததுபோல வந்தது மற்றொரு இசைப் பாட்டு:

விடமு ஜேயவே—நன்னு
விட நாடகுவே (விடமு)[1]

பழையபடியும் ஊசல் நின்றுவிட்டது.

கரஹரப்பிரிய ராகத்தில் இசைக்கப்பட்ட அந்தக் கிருதியின் பொருள் விசேஷம், இருவருடைய மயக்க நிலையை மாற்றி விளையாட்டு உணர்ச்சியை ஊட்டிவிட்டது.

"பூமியின் புதல்வியாகிய ஜானகி, தன் கையால் கொடுத்த புனிதமான வெற்றிலைச் சுருள்கள் என்று எண்ணிக்கொண்டு, எண்ணிக்கொண்டு, தாம்பூலம் தரித்துக்கொள்.

"தேவ தேவா! அரசர்களின் நன்மதிப்பைப்பெற்ற லக்ஷ்மணன், ரத்தினங்கள் இழைத்த தாம்பூலப் படிக்கத்தைக் கையில் பிடித்துக் கொண்டு நிற்கிறான். ராஜாதி ராஜனே! ஜாதிக்காய், ஏலம், ஜாதிப் பத்திரி, பாக்கு, வெற்றிலை இத்தனையும் கலந்து, தியாகராஜன் உனக்கு மிகவும் பிரியத்துடன் சமர்ப்பிக்கும் தாம்பூலம் தரித்துக்கொள்"

பாட்டு முடிந்ததும் நிலவொளி பாயும் வெளிப்பகுதி வரையி லும் வந்து பொன்னூசல் ஆடுகிறது. நிலவு ராமனுடைய முகத்தில்

[1]தாம்பூலம் தரித்துக்கொள்—என்னைக்
கைவிட்டு விடாதே (தாம்)

படிகிறது; சீதையின் வதனத்தையும் சந்திரிகை சீராட்டுகிறது. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் நன்கு பார்த்துக் கொண்டனர். இரண்டுபேரின் உதடுகளிலும் புதிதாக வெற்றிலைச் சாற்றின் சிவப்பு படிந்திருக்கிறது.

ராமன் சிரிக்கிறான். பிறகு சொல்லுகிறான்: "திருவையாறுக்கு நாம் போகவில்லை; போகாமலே எத்தனை உபசாரங்கள்!"

## 2

உஷாகாலம். ஒவ்வொரு ஜீவனுக்கும் காவேரி இரண்டாவது தாயாக இருக்கும் சோழவள நாடு. வானப்பரப்பில் முகில் கூட்டங்கள் பிரமாண்டமான மத்த கஜங்களைப் போலக் கம்பீரமாக இயங்குகின்றன. சூரியனின் பொன்னிறக் கதிர்கள், முகில் கூட்டத்தால் மறைக்கப்பட்டு விட்டதால் கீழ்வானம் மட்டும் வெளுத்திருக்கிறது. வெகு நாட்களாக மழை முகத்தைக் காணாத பயிர் பச்சைகளும், மாந்தர்களும் எல்லையில்லாத பெருமகிழ்ச்சியோடு இருக்கின்றனர். பட்டமரங்களின் மேற்பட்டைகளை, வெளி உலகத்தைக் காணத் துடிக்கும் தளிர்கள் சமிக்ஞையோடு வருடுகின்றன. பாசி படர்ந்த அல்லிக் குளங்களில், ஏதோ தெய்வ சங்கேதத்தை எதிர்பார்த்து மலரக் காத்திருப்பதுபோல, தாமரையும் குவளையும் காத்துக்கொண்டிருக்கின்றன. அவ்வப்போது வீசும் ஆரவாரமான ஈரக்காற்று, சகல உயிர் வர்க்கத்துக்கும் பிராணவாயுவாக வீசுகிறது. செடிகளும் மரங்களும் ஆடிக் குலுங்குகின்றன; பறவை இனங்கள் கூண்டுக்குள் இருந்து கொஞ்சாடுகின்றன.

சிறிது நேரத்தில் மழை பெய்யத் தொடங்கியது. மக்களின் மகிழ்ச்சி சக்கரவாகங்களின் ஆனந்தத்தை வென்று கொண்டது. ஆனால், பெய்த மழை பெருமழை அல்ல. ஒருசில தூற்றலோடு நின்றுவிட்டது. ஆயினும், சில விநாடிகளில் பெருமழை பெய்து உலகம் செழிக்கப்போகிறது என்ற நம்பிக்கைக்கு அபாயம் ஏற்படவில்லை. ஊருக்குள்ளே ஜனங்கள், எந்த சோமபதன் மழையோடு நம்மூரை நோக்கி நடந்து வருகிறானோ என்று பேசிக்கொண்டிருந்தார்கள். ஆனால் வந்தவன் சோமபதன் அல்ல.

காவேரியின் கரையை ஒட்டி, காட்டு வழியாக நடந்து வருகிறான் ராமன்; அவனைப் பின்தொடர்ந்து ஜானகி நடந்து வருகிறாள். அவள் சிரித்தால் முத்து உதிர்கிறது; நடந்தால் அங்கே செந்நெல் விளைகிறது. இருவரும் நடந்து வரும்போது மண்ணில் விழும் தடம், பூதேவியின் உள்ளங்கையில் அதிர்ஷ்ட ரேகை ஓடுவதுபோல இருக்கிறது.

திருவையாறு க்ஷேத்திரத்தினுள் இருவரும் பிரவேசிக்கின்றனர். வரும் வழியில் தெருக்களில் பற்பல காட்சிகளைத் தானும் கண்ணுற்று, தன் அன்புக்கினியாளுக்கும் ராமன் காட்டிக்கொண்டு வருகிறான். ஒரு வீட்டில் தன் குழந்தையை ஒரு தாய் தாலாட்டுகிறாள். தியாகராஜ கீர்த்தனம் ஒன்றே தாலாட்டாக மாறிவிட்டது. தன் அருமைக் குழந்தையை ஆசையுடன் பார்த்து, " எங்கிருந்து புறப்பட்டாயோ ? எந்த ஊரோ ? இப்பொழுதாவது தெரிவிப்பாய் ஐயனே !"[3] என்னும் பொருள்படும் பாட்டைக் கொஞ்சிக் கொஞ்சிப் பாடுகிறாள். சிறிது தூரம் சென்றதும் ஒரு வீட்டில் ஒரு கிழவர் தம் பேரனுக்கும் பேத்திக்கும் ஒரு கீர்த்தனத்தைக் கற்றுக் கொடுப்பது இந்த வாலிபத் தம்பதிகளின் காதில் விழுகிறது. கிழவர், " யாருக்காக இந்த அவதாரத்தை எடுத்தாயோ ? இந்த மண்ணுலகத்துக்கு உன்னை வரவழைத்த மகாராஜன் எவரோ, அவரை நான் வணங்குகிறேன் "[4] என்ற அர்த்தம் தொனிக்கும் பாடலைத் தம் தளர்ந்துபோன சரீரத்தால் உருக்கமாகப் பாடுகிறார். பாடலைக் கேட்டு வாலிபத் தம்பதிகளின் கண்கள் ஆனந்த பாஷ்பம் சொரிகின்றன.

தெருவோடு வரும்போது நிகழ்ந்த சகல சம்பவங்களும் அவனையும் அவன் மனைவியையும், அந்த ஊரிலேயே பிறந்துவளர்ந்த பிரஜைகளாக்கி விட்டன. இந்த மாறுதலை ஞாபகார்த்தமாக வைத்துக் காப்பதற்காகவோ என்னவோ, கல் தடுக்கி ராமனின் கால்விரலில் ரத்தம் வழிந்தது. அதைத் துடைத்துக் கொண்டு நடக்கிறான் ராமன்.

இருவரும் தியாகையர் வீட்டினுள் செல்கின்றனர். அப்போது அவரும் அவர் மனைவியும் ராமனின் பூஜா விக்கிரஹத்தைப் பார்த்து ஸ்தோத்திரப் பாடலைப் பாடிக்கொண்டிருக்கின்றனர். ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போல இருக்கும் இந்தத் தம்பதிகள் இவ்வீட்டுக்குள் நுழையும் அதிசயக் காட்சியைப் பார்த்த ஒரு மாட்டுக்காரப் பையன் இந்தச் செய்தியைத் தெரிவிக்கத் தன் வீட்டுக்கு ஓடுகிறான். தியாகையரின் சீடர்களில் ஒருவன் அப்போது அங்கே சந்தர்ப்பவசமாக வந்து இவர்களைப் பார்த்துக்கொண்டான். உடனே தெரிந்தவர்கள் வீடுகளுக்குப்போய், " ராமன் வந்துவிட்டான் " என்று பறை சாற்றுகிறான்.

தியாகையரும் மனைவியும் வரவேற்பு கீதத்தைப் பாடினார்களே ஒழிய, வரவேற்பதற்காக எழுந்திருக்கவில்லை. வாலிபத் தம்பதிகள் வந்ததையே அவர்கள் பார்க்கவில்லை. ஆனாலும், " பிரகாசிக்கும் தங்கப் பீதாம்பரம் உடுத்திக்கொண்டு மெதுவாய் வருவாயடா ராமா !

[3] எம்துண்டி வெடலிதிவோ ? ஏவூரோ ? தெலிய -
இப்புடைன தெலுப வய்ய ! (தர்பார் ராகம்)

[4] எவரிகை அவதார மெத்திதிவோ ? (தேவமனோஹரி ராகம்)

பசும்பொன்னால் செய்த ஆபரணங்கள் அசையும்படி வாடா"[5] என்று பாடுவதின் மூலம் அவர்கள் திரும்பத் திரும்ப ராமனை அழைத்துக் கொண்டுதான் இருந்தார்கள்.

இருவரும் திடுக்கிட்டுப் போய்த் திரும்பிப் பார்த்தார்கள். திருமணம் முடிந்து, மிதிலையிலிருந்து அயோத்தி வந்திறங்கிய வதுவரர்களைப் போல, இன்னும் மஞ்சள் காப்புக்கூட அவிழ்க்காத மணமக்களைப் போல, ராமனும் சீதையும் வந்து நின்றார்கள். கௌசல்யா தேவியைப் போலப் போய், சீதையை "அம்மா" என்று கட்டி அணைத்துக் கொண்டாள் தியாகையரின் பத்தினி.

ராமன் தியாகையரை நமஸ்கரித்துக்கொண்டு கைகூப்பி வணங்கப் போனான். திடுக்கிட்டுப்போய், "அபசாரம் அபசாரம்" என்று காலில் விழுந்தார் தியாகையர்.

ராமன், "என் தம்பி குகனைத் தொழுதான்; நான்..." என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே அம்மாதிரி வார்த்தைகளைச் சொல்லக்கூடாது என்பதுபோல 'ராம ராம' என்று சொல்லிய வண்ணம் அவனுடைய பாத கமலங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் தியாகையர்.

"நான் சங்கு சக்ரதாரியாக, உலகளந்த சொரூபத்தில் வரவில்லையே! தசரதனுடைய குமாரனாக, மண்ணுலகத்து மனிதருள் ஒருவனாகத்தான் வந்திருக்கிறேன்" என்று அவரைத் தன் கரங்களால் தொட்டு எழுப்புகிறான்.

"மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று தெருவோடு பாடிக்கொண்டு செல்லும் ஒரு யாசகனின் பாட்டுக்கு இன்று வேறு தாத்பர்யம் பிறக்கிறது. 'தெய்வங்கள் மனிதர்களாக வேண்டும்; மனிதப் பிறவி அவ்வளவு மகத்துவம் பொருந்தியது' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுகிறான் ராமன்.

இதற்குள் ஊர் ஜனங்கள் வந்து கூடிவிட்டார்கள். ஆகவே வீட்டினுள் இருந்தவர்கள் வெளியே வருகிறார்கள். தெருப் பிடிக்காத பெருங் கூட்டம். வயல் வெளிகளில் வேலை செய்பவர்கள்கூட ஓடி வந்துவிட்டார்கள். கூட்டத்தில் தன் தாயைத் தவறவிட்ட ஒரு சின்னஞ்சிறு குழந்தை வேகமாக ஓடிவந்து சீதையைக் கட்டிக் கொண்டு 'அம்மா' என்று அழுகிறது. "நான் உன் அம்மா இல்லை, கண்ணு" என்று சொல்லுவது போலச் சிரித்துக்கொண்டு அவள் அந்தக் குழந்தையை எடுத்து வைத்துக் கொள்ளுகிறாள். குழந்தை

[5]மெருகு சேலமு கட்டுகொனி
மெல்லரார ராம
கரகு பங்காரு சொம்முலு
தலுக ராரா (ஆனந்த பைரவி ராகம்)

அழுகையை நிறுத்திச் சீதையின் கன்னத்தோடு தன் கன்னத்தைக் கொண்டுபோய் ஒட்டிக் கொள்ளுகிறது.

திண்ணையின்மேல் ராமனும் சீதையும் நிற்கிறார்கள். வாசல் படியில் பக்க வாட்டில் நின்று தொழுகிறார்கள் தியாகையரும் அவர் பத்தினியும். முன் பக்கத்தில் கூப்பிய கரங்களுடன் ஜனத் திரள் நிற்கிறது. மனிதர்களைச் சுற்றிப் பசுக்களும், மற்றும் கன்று காலிகளும் வந்து ஏறிட்டுப் பார்த்துக்கொண்டு நிற்கின்றன. மரங்களில் இலை தவறாமல் பறவைகள். இத்தனை உயிர் ராசிகளும் ராம தரிசனத்திலேயே மெய் மறந்து நிற்கின்றன. மனிதர்கள் பேச வில்லை; பறவைகள் பாடவில்லை. மரங்களில் இலைகள்கூட அசைய வில்லை. இந்த அமைதிக்கு, முன்னெல்லை பின்னெல்லை எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை.

தெய்வாம்சம் மனித நிலைக்கு வந்தது; மனிதாம்சம் தெய்வ நிலையை எட்டியது. இந்த நிலைமாற்றம் இரண்டு அம்சங்களுக்குமே பெருமையை அளித்தது. இரண்டும் சந்தித்துக்கொண்டே மத்திய உலகமும், தெய்வ உலகமும், மனித உலகமும் ஒன்றாகிவிட்டன. எப்பேர்ப்பட்ட திரிவேணி சங்கமம்! இந்த சங்கமத்தில் தெய்வமும், மனிதனும் மட்டுமல்ல, விலங்கினங்களும், தாவரங்களுமே வந்து கலந்து விட்டன.

அப்போது அமைதியைக் குலைத்துக்கொண்டு, சீதையின் கையிலிருக்கும் சிறு குழந்தை தன் தாயார் தனக்குக் கற்றுக்கொடுத்த, 'என்னைக் காப்பாற்ற, நடந்து வந்தாயோ?'[5] என்ற பாட்டைத் தன் மழலை மொழியால் திக்கித் திக்கிப் பாட ஆரம்பித்துவிட்டது! ராமனின் முகத்தில் புதியதோர் பிரகாசம் சுடர்விட்டது. இதைப் பார்த்த ஒரு வயதான கிழவி அவனிடம் நெருங்கிவந்தாள்; எதையோ சொல்லவந்தாள்; ஆனால் நினைத்ததை மறந்துவிட்டாள் போலிருக்கிறது; சிரித்துக் கொண்டே மறந்ததை ஞாபகப்படுத்திப் பார்த்தாள். எல்லோரும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தனர். யாரும் எதிர் பாராத ஒரு நேரத்தில் அவள் ராமனைப் பார்த்து, மிகமிக வாஞ்சையுடனும், வாத்ஸல்யத்துடனும், "ராமா! நீ எங்கள் வீட்டிலேயே இருந்துவிடேன்" என்றாள்.

ராமன் சிரித்தான்.

"பாட்டி! இங்கே எனக்குப் பதிலாக நீ இருக்கிறாய் அல்லவா? நான் இருந்தாலும் ஒன்றுதான்; நீ இருந்தாலும் ஒன்றுதான் பாட்டி" என்றான் ராமன்.

அப்போது பூவுலகின் நாற்றிசைகளிலும் பெருமழை காலூன்றிப் பெய்ய ஆரம்பித்தது.

---

[5]நன்னு பாலிம்ப, நடசி வச்சிதிவோ? (மோஹன ராகம்)